

# காதலின் தீபம் - II

Ramya Rajan

ரம்யா ராஜன்

2013

15

**விழா முடிந்த மறுநாள் ஞாயிற்றுகிழமை விடுமுறை நாள் என்பதால் கௌதம், முரளி மற்றும் கார்த்திக் குடும்பத்தினர் சேர்ந்து மதியம் கார்த்திக் வீட்டில் ஒரு கெட் டு கெதர் பார்ட்டிக்கு ஏற்பாடு செய்தனர்.**

**ரொம்ப நாளாகவே கார்த்திக்கின் பெற்றோர்கள், தங்கள் வீட்டில் மற்ற இரு குடும்பத்தையும் விருந்துக்கு கூப்பிட்டு கொண்டிருந்தனர். ஆனால்.... அவர்கள் இருவரும் வேலைக்கு செல்பவர்கள், ஞாயிறு ஒரு நாள் தான் அவர்களுக்கு ஓய்வு... அன்றும் வேலை செய்யவேண்டுமா என்று மற்றவர்கள் யோசிக்க,கௌதம் தான் இந்த யோசனை சொன்னான் "அவங்க ரொம்ப நாளா கூப்பிடுறாங்க, போகலைனா நல்லா இருக்காது, வேணா ஆளுக்கு ரெண்டு ஐட்டம் செஞ்சு கொண்டு வாங்க" என்றான். அவன் சொன்னபடியே மூன்று பேர் வீட்டிலும் ஆளுக்கு இரண்டு ஐட்டம் சமைப்பது என்று முடிவு செய்தனர்.**

**ஞாயிறு அன்று காலையிலேயே மிருதுள்ளா ஷ்ருதியின் வீட்டுக்கு வந்துவிட்டாள். அவளை முன் தினம் விழாவில் பார்த்த சாருமதி "நீ ஏன் எங்க வீட்டுக்கே வர மாட்டேன்கிற, நாளை சண்டே தானே நீ கண்டிப்பா எங்க வீட்டுக்கு காலை டிபனுக்கே வரணும்" என்று**

அழைத்திருந்தார், அவர் ரொம்ப கூப்பிட்டதால் மிருதுள்ளாவும் வந்திருந்தாள்.

முதலில் இளையவர்கள் கிளம்பி கார்த்திக் வீட்டுக்கு செல்வது என்றும் பின் பெரியவர்கள் மதிய உணவு நேரத்திற்கு வருவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அதனால் ப்ரியாவும், முரளியும் காலை 10 மணிக்கே கௌதம் வீட்டுக்கு கிளம்பி வந்தனர். கார்த்திக் இவர்கள் எல்லோரையும் அழைத்து செல்ல கௌதம் வீட்டுக்கு வந்திருந்தான்.

மிருதுள்ளா இவர்கள் அனைவரும் கார்த்திக் வீட்டுக்கு போவதை அறிந்து "நான் ஹாஸ்டலுக்கு போறேன்" என்றாள். சாருமதி "கார்த்திக் எங்க குடும்பத்துல ஒருத்தன் மாதிரி அதனால நீயும் அவங்களோட போ... ஏன் ஹாஸ்டல் ரூம்லேயே அடைஞ்சு கிடக்கிற" என்றார், மிருதுள்ளா கார்த்திக்கை பார்க்க அவன் "நீங்களும் வாங்க" என்றான். முரளியை கௌதம் தாங்கள் கட்டும் புது வீட்டுக்கு அழைத்து சென்றிருந்தான் அதனால் அவர்களுக்காக மற்றவர்கள் காத்திருந்தனர்.

மிருதுள்ளா சாருமதியிடம் "நான் உங்களை எப்படி கூப்பிடனும் அத்தையா, பெரியம்மாவா" என்று கேட்க, சாருமதி பதில் சொல்லும் முன் ப்ரியா முந்திக்கொண்டு "பெரியம்மான்னு கூப்பிடு, எங்க அம்மா தான் உனக்கு அத்தை" என்று சொல்ல, அவள் எதற்கு சொல்கிறாள் என்று புரிந்து கொண்ட சாருமதி "இல்ல மிருதுள்ளா.... நான் தான் உனக்கு அத்தை முறை அதனால நீ என்னை அத்தைனே கூப்பிடு, கௌதமை அத்தான்னு கூப்பிடு, ஷ்ருதியும் நீயும் ஒரே வயசு அதனால அவளை பேரை சொல்லி

***கூப்பிடு" என்றவர் ப்ரியா முகத்தை பார்க்க, அவள் முகம் வாடிவிட்டது.***

***"இந்த காலத்துல போய் அத்தான்னு யாரவது கூப்பிடுவாங்களா" என்று ப்ரியா கேட்க, "ஏன் ? எந்த காலமா இருந்தாலும் அத்தை பையன அத்தான்னு தான் கூப்பிடனும்" என்றார் சாருமதி. இவர்கள் வாக்குவாதத்தை ஷ்ருதியும், மிருதுள்ளாவும் சுவாரசியமாக பார்க்க, கார்த்திக் ப்ரியாவை இவ எப்ப பொங்கி எழ போறாளோ என்று பயத்துடன் பார்த்து கொண்டிருந்தான்.***

***ப்ரியா ஹாலில் சென்று அமர்ந்தவள், பேப்பர் படிப்பது போல் முகத்தை மறைத்து கொண்டு அமர்ந்திருந்தாள். எல்லோரும் அவள் அழுகிறாள் என்று நினைத்தனர். ஷ்ருதி "ஏன்மா ? அவளை வம்பு இழுக்கறீங்க" என்றாள். "இருடி என்ன தான் பண்றான்னு பார்க்கலாம்" என்றவர் "மிருதுள்ளா... இப்ப கௌதம் வந்ததும், நீ அவனை அத்தான்னு கூப்பிடு சரியா" என்றதும், "அவள் எனக்கு பயம்மா இருக்கு" என்றாள். அதெல்லாம் ஒன்னும் ஆகாது நீ தைரியமா கூப்பிடு நான் இருக்கேன் என்றார் சாருமதி.***

***கௌதமும், முரளியும் வீட்டிற்குள் வந்ததும் கார்த்திக் கிளம்பலாமா என்று கேட்க, சாருமதி இருங்க ஜூஸ் தரேன் குடிச்சிட்டு போங்க என்றார். அப்போது ப்ரியா சத்தமாக "கௌதம் அத்தான்.... இங்க வாங்களேன்" என்று கூப்பிட, தண்ணீர் குடித்து கொண்டிருந்த கௌதமிற்கு புறை ஏறியது. முரளி ப்ரியாவை ஆச்சிர்யமாக பார்க்க, கௌதம் "இப்ப நீ என்னை என்ன சொல்லி... கூப்பிட்ட..." என்று தான் சரியாக தான் கேட்டோமா என்ற சந்தேகத்தில் கேட்க, ஷ்ருதியும், கார்த்திக்கும் 'இன்னொரு முறை சொல்லுங்க' என்று***

கோரசாக பாட,

ப்ரியா "கௌதம் அத்தான்னு கூப்பிட்டேன் என்றவள், அத்தை தான் மிருதுள்ளாகிட்ட சொன்னாங்க, அத்தை பையனை அத்தான்னு கூப்பிடனும்ன்னு, எனக்கும் தானே நீங்க அத்தை பையன். அப்ப நானும் உங்களை அத்தான்னு தானே கூப்பிடனும்" என்றவள் சாருமதியை ஒரு வெற்றி பார்வை பார்த்துவிட்டு, ஷ்ருதியிடம் "நீயும் இனிமே எங்க அண்ணனை அத்தான்னு கூப்பிடு" என்றாள். சாருமதி தன் மருமகளின் சாமர்த்தியத்தை மனதில் மெச்சியவர், கௌதமை பார்க்க அவன் இது உங்க வேலையா என்பது போல் அவரை பார்த்து கொண்டிருந்தான். அனைவரும் கிளம்பி கார்த்திக் வீட்டுக்கு சென்றனர்.

மிருதுள்ளா யாருடைய வண்டியில் வந்தாலும் பிரச்சினை வரும் என்று உணர்ந்த கார்த்திக், அவளை தன் வண்டியில் ஏற்றி கொள்ள, முரளியும், ப்ரியாவும் ஒரு வண்டியிலும்... கௌதமும், ஷ்ருதியும் ஒரு வண்டியிலும்மாக கிளம்பி சென்றனர்.

போகும் வழியில் கார்த்திக் மிருதுள்ளாவிடம் "உனக்கு இப்ப எதுவும் பிரச்சினை இருக்கா" என்று கேட்க, "இல்லை ஆனா... அன்னைக்கு நீங்க மட்டும் வரலைனா... என்னுடைய நிலைமை என்ன ஆகி இருக்குமோ தேங்க்ஸ் கார்த்திக்" என்றதும். "எத்தன தடவை தேங்க்ஸ் சொல்வ, அன்னைக்கு நான் மட்டும் இல்ல, கௌதமும் தான் உனக்கு உதவி செஞ்சான். ஆனா அவனுக்கு அந்த பொண்ணு நீதான்னு தெரியாது" என்ற கார்த்திக் "கௌதமும், ப்ரியாவும் லவ்வர்ஸ் வீட்டுக்கு தெரியாது, நீ எதுவும் அவங்ககிட்ட தெரிஞ்ச மாதிரி காமிச்சிக்காத, இனிமே நீ விளையாட்டுக்கு அவங்க

***அம்மா எதாவது சொன்னாலும் செய்யாத, இன்னைக்கு மட்டும் நீ கௌதம அத்தான்னு கூப்பிட்டிருக்கனும் அப்புறம் தெரிஞ்சிருக்கும் கதை" என்று சிரிக்க, மிருதுள்ளாவும் சிரித்தவள் "அவங்க ரெண்டு பேரையும் பார்க்கும் போதே தெரியுது ரொம்ப பொறுத்தமான ஜோடி" என்றாள்.***

***பைக்ல் பின்னாடி உட்கார்ந்து சென்ற ப்ரியாவும், ஷ்ருதியும் கார்த்திக்கும் மிருதுள்ளாவும் பேசி கொண்டே வருவதை பார்த்து குழம்பியவர்கள், ஒருவரை ஒருவர் பார்த்து ஜாடையில் பேசி கொண்டு வந்தனர்.***

***மிருதுள்ளா "நீங்க அவங்ககிட்ட என்னை பத்தி சொல்லலையா" என்று கேட்க, "சொல்லலை சொல்லவும் மாட்டேன்" என்றான் கார்த்திக்.***

***மிருதுள்ளா "உங்ககிட்ட ஒன்னு கேட்பேன் தப்பா நினைக்காதீங்க என்றவள், நீங்க யாரையாவது லவ் பண்றீங்களா" என்று கேட்க, கார்த்திக்கின் மனதில் காவ்யாவின் முகம் வந்து போனது "தெரியல, எனக்கு ஒரு பொண்ண பிடிச்சிருக்கு ஆனா... அது லவ்வான்னு இன்னும் தெரியல" என்றவன் அவன் வீட்டின் முன் வண்டியை நிறுத்தினான்.***

***கார்த்திக்கின் வீடு மூன்று அறைகள் கொண்ட தனி வீடு, வீடு கட்டி ரொம்ப வருஷம் ஆகிறது. வீட்டை சுற்றி தோட்டம் இருப்பதால் வீடு பார்க்க நன்றாக இருக்கும். பைக்கில் இருந்து இறங்கியதும் ப்ரியாவும் ஷ்ருதியும் முண்டி அடித்து கொண்டு வீட்டிற்க்குள்***

Ramya Rajan

சாவிமா... என்று கத்திகொண்டே ஓடினார்கள்.

கார்த்திக்கின் பெற்றோருக்கு பெண் குழந்தை இல்லாததால் அவர்கள் ஷ்ருதி, ப்ரியா இருவரின் மீதும் மிகவும் அன்பாக இருப்பார்கள்.... அதுவும் அங்கே ஷ்ருதி அடிக்கடி வருவதால் அவள் அவர்களுக்கு செல்ல பெண்.

உள்ளே நுழைந்தவர்களை வரவேற்க வந்த கார்த்திக்கின் அப்பா அங்கே கார்த்திக், மிருதுள்ளாவுடன் உள்ளே நுழைவதை பார்த்தும் "சாவித்திரி... இங்கே பாரு உன் பையன் மருமகளோடு வர்றான்" என்றதும் எல்லோரும் திரும்பி வாயிலை பார்க்க, இவரு யார சொல்றாரு என்று நினைத்த கார்த்திக்கும் திரும்பி வாசலை பார்க்க, கார்த்திக்கின் அப்பா "டேய்... பக்கத்திலேயே மருமகள வச்சிக்கிட்டு, எங்கடா பார்க்கிற" என்று கேட்க, அப்போது தான் அவர் மிருதுள்ளாவை சொல்கிறார் என்று புரிந்து கொண்டவன் "அப்பா......... " என்று பல்லை கடிக்க மற்ற அனைவரும் சிரித்தனர்.

கார்த்திக்கின் அப்பா ரவிச்சந்திரன் கவர்மெண்ட் கம்பெனியில் உயர்ந்த பதவியில் இருக்கிறர், அவரது மனைவி சாவித்திரி பேங்க்ல் வேலை பார்க்கிறார். அளவான குடும்பம் வளமான வாழ்வு. கார்த்திக்கின் அப்பா எப்போதும் நகைச்சுவையாக பேசுவார், எதையும் எளிதாக ஏற்று கொள்வார். ஆனால்... சாவித்திரி அமைதியான சுபாவம் உள்ளவர்... எதையும் யோசித்தே செய்பவர், அவர்களின் மகன் கார்த்திக் இருவரையும் குணத்தில் கொண்டு பிறந்திருந்தான்.



Ramya Rajan

***"இவ மிருதுள்ளா எங்க சொந்தகார பொண்ணு" என்று ஷ்ருதி மிருதுள்ளாவை அறிமுகபடுத்த, மிருதுள்ளாவிற்கு மிகவும் வெட்கமாக இருந்தது, இது என்ன இவர் இப்படி பேசுறார் என்று நினைத்தாள்.அவள் சங்கடத்தை உணர்ந்து கொண்ட சாவித்திரி "நீ எதுவும் தப்பா எடுத்துக்காத மிருதுள்ளா, அவரு ரொம்ப நாளா.... அவரு பையன் லவ் பண்ண மாட்றான்னு ரொம்ப கவலையா இருந்தாரு, இன்னைக்கு உன்ன அவனோட பார்த்ததும், இவராவே கற்பனை பண்ணி பேசுறாரு"***

***என்றதும்.***

***ரவிச்சந்திரன் "அப்ப நீ என் பையன லவ் பண்ணலியா" என்று கேட்க மிருதுள்ளா இல்லை என்று மெதுவாக தலை ஆட்ட, அவர் திரும்பி கார்த்திக்கிடம் "டேய்... நீ இந்த பொண்ண லவ் பண்ணலை" என்று கேட்க, அவன் அவரை பார்த்து முறைத்து கொண்டே இல்லை என்றான்.***

***" டேய் நல்லா யோசிச்சு சொல்லுடா நிஜமாவே நீ இந்த பொண்ண லவ் பண்ணலியா, ரொம்ப அழகா இருக்காடா, இந்த மாதிரி அழகான பொண்ணுங்க எல்லாம் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு தேடும் போது கிடைக்காது, அப்புறம் வேற வழி இல்லாம கிடச்ச பொண்ண கல்யாணம் பண்ணிக்கணும்" என்று அவர் மனைவி சாவித்ரியை பார்த்து கொண்டே சொல்ல, சாவித்திரி பதிலுக்கு அவரை பார்த்து முறைக்க. கார்த்திக் "அதே காரணத்துனால தான்ப்பா என்னோட அம்மாவும் வேற வழி இல்லாம உங்களை கல்யாணம் பண்ணாங்க" என்றான். உடனே ஷ்ருதி "இது உங்களுக்கு தேவையா ரவிப்பா" என்றதும் அனைவரும் சிரித்தனர்.***

***ரவிச்சந்திரன் சிரித்து கொண்டே முரளியை வரவேற்றவர் "சாரி முரளி உங்களை ரொம்ப நேரம் நிக்க வச்சிட்டேன்" என்றார், "அதனால என்னப்பா பரவாயில்லை" என்றவன் அங்கிருந்த சோபாவில் அமர, கௌதமும் கார்த்திக்கும் அவனுடன் அமர்ந்தனர். எல்லோரும் சேர்ந்து பேசி கொண்டிருந்தனர்.***

***பெண்கள் அனைவரும் சமையல் ரூமிற்கு செல்ல, ப்ரியா எதாவது வேலை இருந்தா கொடுங்க சாவிமா நாங்க பண்றோம் என்றாள். "ஒரு வேலையும் இல்ல... சாதம் மட்டும் தான் வைக்கணும், அது சூடா சாப்பிடும் போது வச்சிக்கலாம். இப்ப எல்லோரும் கொஞ்சம் ஜூஸ் குடிங்க" என்றவர், அவர்களுக்கு ஜூஸ் கொடுத்துவிட்டு.... இன்னும் நாலு கிளாஸ் ஜூஸ் எடுத்துக்கொண்டு ஹாலுக்கு சென்றார்.***

***ஷ்ருதி.... ப்ரியாவையும், மிருதுள்ளாவையும் அழைத்து கொண்டு தோட்டத்திற்கு சென்றாள். அங்கே இருந்த கொய்யா மரத்தில் இருந்த காயை ஆளுக்கு ஒன்று பறித்து கொண்டு, அங்கே இருந்த சிமெண்ட் பெஞ்சில் மூன்று பேரும் சென்று அமர்ந்தனர். ஷ்ருதி "உன்ன மிருதுள்ளான்னு கூப்பிட கஷ்ட்டமா இருக்கு, இனிமே நான் உன்ன மிதுன்னு கூப்பிடுறேன் சரியா" என்று கேட்க ( நாமளும் இனிமே மிதுன்னே கூப்பிடுவோம்) மிதுவும் சரி என்றாள்.***

***மிது "நீ உன்ன பத்தி சொல்லு" என்று ஷ்ருதி கேட்க,***

***"என்னை பத்தி சொல்ல பெருசா ஒன்னும் இல்ல, என்னோட அம்மா,அப்பா ஊர்ல இருக்காங்க, ஒரு அண்ணன் இருக்கார்***

Ramya Rajan

வெளிநாட்ல வேலை பார்கிறார், நான் 12 th வர எங்க ஊரிலேயே படிச்சேன். அங்க இன்ஜினியரிங் காலேஜ் இல்லாததுனால, இங்க சேர்ந்து ஹாஸ்டல்ல தங்கி படிக்கிறேன்" என்றாள் மிது.

ப்ரியா மெதுவாக "ஏன் மிது உனக்கு கார்த்திக் அண்ணாவ முன்னாடியே தெரியுமா" என்று கேட்க... மிதுவின் முகம் சட்டென்று மாறிவிட்டது, "தெரியாதே ஏன் கேட்கிற..." என்று மிது தடுமாற "இல்லை சும்மாதான் கேட்டேன்" என்ற ப்ரியா ஷ்ருதியை பார்க்க, அவள் உதட்டை பிதுக்கினாள்.

எங்க இவங்களை காணோம் என்று கௌதம், முரளி மற்றும் கார்த்திக் இவர்களை தேடிக்கொண்டு தோட்டத்திற்கு வர, அங்கே மூன்று பேரும் உட்கார்ந்து இருப்பதை பார்த்து, அவர்கள் எதிரில் சென்று நின்றனர். கார்த்திக் முரளிக்கும்,கௌதமுக்கும் கொய்யாக்காய் பறித்து கொடுத்தவன் அவனுக்கும் ஒன்றை எடுத்துக்கொண்டான்.

எல்லோரும் சேர்ந்து கொஞ்ச நேரம் அரட்டை அடிக்க, கௌதம் ப்ரியாவிடம் மாடியை காட்டி வா என்று கூப்பிட, அவள் வர மாட்டேன் என்று தலை ஆட்டினாள். இருடி உன்ன எப்படி வழிக்கு கொண்டு வர்றதுன்னு தெரியும் என்று நினைத்தவன், மிருதுள்ளா... என்று கூப்பிட வேகமாக எழுந்த ப்ரியா உள்ளே சென்றுவிட்டாள், கௌதம் சிரித்து கொண்டே "நீங்க எல்லாம் பேசிட்டு இருங்க, எனக்கு ஒரு போன் பண்ணனும் பண்ணிட்டு வரேன்" என்று உள்ளே சென்றவன், முன் பக்க வாசல் வழியாக மொட்டை மாடிக்கு வந்தான், அங்கே ஏற்கனவே ப்ரியா நின்று கொண்டிருந்தாள்.

Ramya Rajan

***முரளியும், ஷ்ருதியும் தனியாக பேசட்டும் என்று நினைத்த கார்த்திக் எதோ வேலை இருப்பது போல் வீட்டிற்க்குள் சென்றவன், மிதுவை பார்த்து உள்ளே வரும்படி ஜாடை காட்டிவிட்டு சென்றான், மிதுவுக்கு ஒன்றும் புரியவில்லை அதனால் அங்கேயே உட்கார்ந்து இருந்தாள். பின் வாசல் வரை சென்ற கார்த்திக் மறுபடியும் திரும்பி மிதுவை பார்த்து வா... என்று அழைக்க, மிதுவும் உள்ளே சென்றாள்.***

***மிது உள்ளே சென்றதும் ஷ்ருதியின் அருகே பெஞ்சில் அமர்ந்த முரளி "எப்படா உன்கிட்ட தனியா பேசுவேன்னு நினைச்சேன், நல்லவேளை எல்லோரும் போய்ட்டாங்க" என்றான். முரளி ஷ்ருதியின் கையை எடுத்து தன் கைகளுக்குள் வைத்து கொண்டவன், அவள் முகத்தை பார்த்து "அப்புறம் மேடம்" சொல்லுங்க என்றான்.***

***உள்ளே வந்த மிது கார்த்திக்கை பார்த்து "எதுக்கு கூப்பிட்டீங்க" என்று கேட்க, "சும்மாதான் வா டிவி பார்க்கலாம்" என்று ஹாலுக்கு அழைத்து சென்றான், அங்கே ஏற்கனவே உட்கார்ந்து டிவி பார்த்து கொண்டிருந்த ரவியுடன் இவர்களும் சென்று அமர்ந்தனர். டிவி பார்த்து கொண்டிருந்த ரவி "மொட்டைமாடி, மொட்டைமாடி ஒரு லவ் ஜோடி லவ் ஜோடி, வீட்டுக்கு பின்னாடி பின்னாடி இன்னொரு லவ் ஜோடி லவ் ஜோடி"***

***என்று பாட, கார்த்திக் அவரை பார்த்து முறைத்தவன் "உங்ககிட்ட போய் சொன்னேன் பாருங்க, என்னை...." என்றதும், ரவி "எல்லார் வீட்லையும் மகன் காதலிச்சா எதிர்ப்பாங்க, என்னால தான் லவ் பண்ண முடியல... என் பையனாவது லவ் பண்ணி... கல்யாணம் பண்ணிக்கட்டும்ன்னு நினைச்சா, நீ ஏன்டா சாமியார் மாதிரி இருக்க"***

என்று கேட்க, கார்த்திக் "அம்மா...ஆஆஆஅ..." என்று கத்த, ரவி எழுந்து உள்ளே ஓடிவிட்டார். மிருதுள்ளா அப்பாவிற்கும் மகனுக்கும் நடந்த உரையாடலை பார்த்து அடக்க முடியாமல் சிரித்தாள்.

மதியம் அனைவரும் மகிழ்ச்சியாக பேசி கொண்டே பப்பே முறையில் உணவு அருந்தினார்கள். மதிய உணவிற்கு பிறகு சிறிது நேரம் கழித்து எல்லோரும் அவரவர் வீட்டுக்கு கிளம்ப, மிதுவ்வை பஸ் ஸ்டாண்டில் கொண்டுவிட கார்த்திக் கிளம்பினான். சாருமதியும், ஜானகியும் மிதுவை தங்கள் வீடுகளுக்கு அடிக்கடி வரும்படி சொல்லி அனுப்பினார்கள்.

பைக்ல் போய் கொண்டிருக்கும் போது கார்த்திக்கிடம் "உங்க குடும்பம் மாதிரி ஜாலியான குடும்பத்த, நான் இதுக்கு முன்னாடி பார்த்ததே இல்ல" என்றாள் மிது. அவள் சொன்னதை கேட்டவன் "எப்பவும் எங்க அப்பா சிரிச்சிட்டே இருப்பாருன்னு நினைக்காத, அவருக்கு இன்னொரு முகம் இருக்கு" என்று பாட்ஷா ரஜினி மாதிரி கார்த்திக் சொல்ல, ப்ரியா குலுங்கி சிரித்ததில் வண்டி ஆடியது ,விழுந்து விடுவோமோ என்ற பயத்தில் கார்த்திக்கின் தோளை பிடித்தாள் மிது. "அம்மா தாயே... என்னை கீழ தள்ளிடாத" என்றவன் பஸ் ஸ்டாண்டில் வண்டியை நிறுத்த, வண்டியில் இருந்து இறங்கியவள் இன்னைக்கு மாதிரி நான் சிரிச்சு ரொம்ப நாள் ஆகிடுச்சு என்றாள். எப்படி இப்படி வண்டியில் இருந்து கீழ விழற மாதிரியா என்று கார்த்திக் கேட்க, மறுபடியும் மிது சிரித்தாள்.

கார்த்திக் எதேட்சையாக எதிர்புறம் பார்க்க அங்கே காவ்யா தனது குடும்பத்துடன் நின்று கொண்டிருந்தாள், அவளும் இவர்களை தான்

பார்த்து கொண்டிருந்தாள், அவள் முகம் கோபத்தில் சிவந்து இருந்தது, கார்த்திக் ஐயோ.... இப்ப போய்யா இவ என்னை பார்க்கணும் என்று நினைத்து கொண்டான். காவ்யா அவர்களது காரில் ஏறி சென்றுவிட கார்த்திக் முகம் மாறினான், அதை கவனிக்காத மிது "கார்த்திக்... நீங்க கௌதமும், ப்ரியாவும் லவ் பண்றத பத்தி மட்டும் தான் சொன்னீங்க, முரளியும்,ஷ்ருதியும் லவ் பண்றாங்கன்னு சொல்லலை, ஆனா உங்க அப்பா பேசினதுல இருந்து அவங்களும் லவ் பண்றாங்கன்னு தெரியுது, ரெண்டுமே க்யூட் கப்ல்ஸ் இல்லை, அவங்களை பார்க்கும் போதே" என்று அவள் பேசிக்கொண்டிருக்கும் போதே "என்ன உனக்கும் மறுபடியும் லவ் பண்ண தோணுதா, ஒரு தடவை பட்டது போதாதா" என்று சுள்ளென்று கார்த்திக் கேட்க, அவனின் வார்த்தைகள் மிதுவின் நெஞ்சில் ஈட்டியாக குத்த.. துடித்துவிட்டாள் மிது.

மிதுவின் கண்கள் கலங்க, அழுகையில் உதடு துடிக்க நிற்ப்பதை பார்த்ததும் தான் என்ன சொன்னோம் என்று உணர்ந்த கார்த்திக் தன்னையே நொந்தவன், தான்னா இப்படி ஒரு சின்ன பெண்ணை பார்த்து இப்படி கேட்டோம் என்று தன் மீதே எழுந்த ஆத்திரத்தில் கையை ஓங்கி வண்டியில் குத்தினான், தான் மன்னிக்கும் படியான வார்த்தையை பேசவில்லை என்பதை அவன் உணர்ந்ததால்,அவனால் அவளிடம் மன்னிப்பு கூட கேட்க முடியவில்லை. அவனின் முகத்தை பார்த்தே அவனின் வேதனையை உணர்ந்த மிது தன்னை கட்டுபடுத்தியவள் "பரவாயில்லை கார்த்திக்... அன்னைக்கு நீங்க மட்டும் சரியான நேரத்திற்கு வந்திருக்களைன்னா... என்னை பார்த்து எல்லாரும் எனென்னவோ சொல்லி இருப்பாங்க, உங்களாலதான் நான் தப்பிச்சேன், அதனால... நீங்க என்னை சொன்னதை, நான் என் தப்புக்கு தண்டனையா நினைச்சிக்கிறேன், நீங்க வருத்தபடாதீங்க" என்றவள் வந்த பஸ்சில் ஏறி சென்றுவிட்டாள். கார்த்திக் கலங்கிய கண்களுடன் அவள் போவதையே பார்த்து கொண்டு நின்றான்.

கார்த்திக் வீட்டிலிருந்து தங்கள் வீட்டுக்கு போவதற்கு முன் முரளியும், ப்ரியாவும் ஷ்ருதி வீட்டுக்கு சென்றனர். முரளி ப்ரியாவிற்கும், ஷ்ருதிக்கும் டெல்லியில் இருந்து உடை வாங்கி வந்திருந்தான். அப்போது மிதுவும் ஷ்ருதி வீட்டில் இருந்ததால், இவர்களுக்கு மட்டும் கொடுத்தால் நன்றாக இருக்காது அப்புறம் தருவோம் என்று ஷ்ருதி வீட்டிலேயே வைத்துவிட்டான்.

நேற்றே ப்ரியாவை அதில் ஒரு உடையை எடுத்து கொள்ள சொன்னான், ஆனால் அவள் ஷ்ருதிக்கு பிடித்ததை அவள் எடுத்ததும் தான் மற்றதை எடுத்து கொள்வதாக சொன்னதால், இரண்டு உடையையும் இங்கே கொண்டு வந்திருந்தனர்.

கௌதமும்,கிருஷ்ணகுமாரும் அவர்களுக்கு கட்டும் வீட்டிற்க்கு சென்றிருந்ததால் வீட்டில் சாருமதியும், ஷ்ருதியும் மட்டும் தான் இருந்தனர்.

ஷ்ருதியின் வீட்டுக்கு வந்ததும் ப்ரியா ஒரு கவரை எடுத்து முரளி கையில் கொடுக்க... அவன் நீயே கொடு என்றான். அவன் ஷ்ருதிக்காக ஆசையாக வாங்கி வந்திருக்கிறான், அதனால்... அவன் கொடுத்தால் தான் நன்றாக இருக்கும் என்று நினைத்த ப்ரியா " நீங்க தானே வாங்கிட்டு வந்தீங்க, நீங்களே கொடுங்க" என்றாள். முரளி கவரை ஷ்ருதியிடம் கொடுத்தவன் "இதுல உனக்கு பிடிச்ச டிரஸ் எடுத்திட்டு, இன்னொண்ண ப்ரியாவுக்கு கொடு" என்று கொடுக்க, ஷ்ருதி "இல்ல ப்ரியா... நீ உனக்கு பிடிச்சத எடுத்திட்டு கொடு" என்றாள். ஆனால் ப்ரியா "எனக்கு ரெண்டு கலரும் பிடிச்சிருக்கு அதனால எதுனாலும் பரவாயில்லை, நீ உனக்கு பிடிச்சத எடுத்திட்டு குடு ஷ்ருதி" என்று சொல்ல, ஷ்ருதியும் சரி என்று வாங்கி பார்க்க, அந்த கவரில் அழகான இரண்டு காக்ரா சோல்லிகள் இருந்தது.

Ramya Rajan

***ரெண்டு கலரும் அழகாக இருக்க ஷ்ருதிக்கு எதை எடுப்பது என்றே தெரியவில்லை, அவள் இரண்டையும் அவள் மேல் போட்டு கண்ணாடி முன் நின்று பார்த்தவள், பிங்க் கலர் டிரஸ் அவளுக்கு நன்றாக இருப்பதாக தோன்றவும் அதை அவளுக்கு எடுத்து கொண்டு, பர்பிள் கலரை ப்ரியாவுக்கு கொடுத்தாள்.சிறிது நேரத்தில் ப்ரியாவிடம் இருந்த பர்பிள் கலர் அழகாக இருப்பதாக தோன்றவும், ப்ரியாவிடம் இருந்து அதை வாங்கிகொண்டு பிங்க் கலரை அவளுக்கு கொடுத்தாள்.***

***அவள் அடிக்கும் கூத்தை பார்த்து கொண்ருந்த சாருமதிக்கு கோபம் வந்துவிட்டது "இங்க பாரு ஒழுங்கா ஒன்ன எடு, நானும் அப்பதுல இருந்து பார்கிறேன், நீ பண்ற அட்டகாசம் தாங்க முடியல, முரளி உன்ன பத்தி என்ன நினைப்பான்" என்றார். அவர் சொன்னதை கேட்டதும் ஷ்ருதிக்கு கோபம் வந்துவிட்டது "அதெல்லாம் ஒன்னும் நினைக்க மாட்டார், நான் தான் அவரிடம் காக்ரா சோல்லி டெல்லில இருந்து வாங்கிட்டு வர சொன்னேன்" என்று கோபத்தில் ஷ்ருதி உளற, சாருமதி முரளி முன்பு என்ன சொல்வது என்று தெரியாமல் எழுந்து உள்ளே செல்ல, ப்ரியாவும் அவருடன் உள்ளே சென்றாள்.***

***ப்ரியா சுடிதார், தாவணி தவிர வேறு உடைகள் போட்டது இல்லை, அவளுக்கு காக்ரா சோல்லியை பார்த்ததும் தெரிந்துவிட்டது, அவளது அண்ணன் ஷ்ருதிக்காக வாங்கி வந்திருக்கிறான் என்று அதனால் தான் முதலில் ஷ்ருதிக்கு பிடித்ததை எடுத்து கொள்ளட்டும் என்று இரண்டு உடைகளையும் இங்கே கொண்டு வந்தாள், இந்த ஷ்ருதி இப்படி அத்தை முன்னாடி உளறிவிட்டாலே என்று நினைத்தாள். .***

Ramya Rajan

***சாருமதியும், ப்ரியாவும் உள்ளே சென்றதும் ஷ்ருதி முரளியின் முகத்தை பார்க்க அவன் முகத்தில் கோபம் தெரிந்தது, ஷ்ருதி மெதுவாக "சாரி..." என்றாள், முரளி ஷ்ருதியிடம் "சரி இப்ப உனக்கு எந்த கலர் வேணும் சீக்கிரமா எடு" என்றதும்,, ஷ்ருதி "நீங்க கோபமா கொடுத்தா எனக்கு ஒன்னும் வேணாம், ரெண்டையும் ப்ரியாவுக்கே குடுங்க" என்றாள்.***

***"வேண்டாம் ஷ்ருதி என் பொறுமைய சோதிக்காத...."***

***ஷ்ருதி "இப்ப நீங்க டென்ஷன் ஆக இதுல என்ன இருக்கு..."***

***"ப்ரியா... என்னை பத்தி என்ன நினைப்பா... நான் அவளுக்கு டிரஸ் வாங்கும் போது... சேர்த்து உனக்கும் வாங்கின மாதிரி அவகிட்ட சொன்னேன், ஆனா... இப்ப அவளுக்கு நல்லா தெரிஞ்சிருக்கும், நான் நீ சொல்லித்தான் இந்த டிரஸ் வாங்கினேன்னு..."***

***"அப்ப உங்க தங்கச்சிக்கு வாங்கினாத்தான், எனக்கு டிரஸ் வாங்குவீங்களா..."***

***"அது அப்படி இல்ல... நாம லவ் பன்றோம்ன்னு ப்ரியாவுக்கு தெரியாதுல... அப்ப அவ என்னை தப்பா தானே நினைப்பா, ஆனா... அவளுக்கு நம்மளை பத்தி தெரிஞ்சிருக்கு அதனால தான் நீ***

Ramya Rajan

எடுத்ததும் எடுத்துகிறேன்னு சொல்லி இருக்கா, சரி விடு பரவாயில்லை ப்ரியா புரிஞ்சிப்பா, நான் உனக்கு பிங்க்கும், அவளுக்கு பர்பிள் கலரும் எடுத்தேன்."

அவன் சொன்ன கலரையே எடுத்து கொண்டவள், மட்டொன்றை கவரில் வைத்து முரளியிடம் ஷ்ருதி கொடுக்க.... அதை வாங்கி கொண்ட முரளி ஷ்ருதியிடம் "நான் இன்னைக்கு நைட் கிளம்பறேன், நைட் போய் சேர லேட் ஆகும், அதனால நாளைக்கு காலையில உனக்கு போன் பண்றேன் சரியா" என்றதும் ஷ்ருதி சரி என்று தலை ஆட்டினாள், அவளிடம் "கோபமா... சாரி ஷ்ருதி கொஞ்சம் டென்ஷன் ஆகிட்டேன்" என்றான் முரளி.

அவன் வறுத்தபடுவதை பொறுக்க முடியாத ஷ்ருதி "அதெல்லாம் ஒன்னும் இல்லை, நீங்க கவலைபடாம போயிட்டுவாங்க" என்று சிரித்து கொண்டே சொல்ல, முரளி நிம்மதியாக கிளம்பினான்.

முரளி ஊருக்கு கிளம்பும் முன் ப்ரியாவிடம் வந்தவன், அவளிடம் கொஞ்சம் பணம் கொடுத்து "ப்ரியா... நீ உனக்கு பிடிச்ச டிரஸ் எடுத்துக்கோ" என்றான்.

"எதுக்கு அண்ணா... நீங்க தான் எனக்கு டிரஸ் வாங்கிட்டு வந்திருக்கீங்களே, எனக்கு அதே போதும்."

"இல்ல ப்ரியா... நான் உனக்கு சுடிதார் வாங்கனும்ன்னு தான் நினைச்சேன், ஆனா... ஷ்ருதி காக்ரா சோல்லி வாங்கிட்டு வர சொன்னாளா... அதனால உனக்கும் அதே வாங்கிட்டேன்."

Ramya Rajan

"பரவாயில்லை அண்ணா எனக்கு நீங்க வாங்கிட்டு வந்த டிரஸ் பிடிச்சிருக்கு, நீங்க வாங்கி கொடுத்ததுனால அம்மா என்னை அந்த டிரஸ் போடவிடுவாங்க, அதனால எனக்கு அந்த டிரஸ்சே போதும்."

ஆனால் முரளி கேட்கவில்லை ப்ரியாவிடம் பணம் கொடுத்துவிட்டே சென்றான். அவன் நிம்மதிக்காக ப்ரியாவும் வாங்கி கொண்டாள்.

16

மாலை கௌதம் வீட்டிற்க்கு வந்த போது சாருமதியின் கண்கள் டிவியை பார்த்து கொண்டு இருக்க, ஆனால் அவர் சிந்தனை வேறு எங்கோ இருந்தது. அவர் வேறு எதையோ யோசித்து கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்த கௌதம் அவர் அருகில் சென்று அமர்ந்தவன் "என்ன அம்மா... எப்படி ப்ரியாவ அடுத்த அட்டாக் பண்ணலாம்ன்னு யோசிகிறீங்களா" என்று கிண்டலாக கேட்க,

"மாமியார்னா சும்மாவா.... நானும் கொஞ்சம் மாமியார் கொடுமை எல்லாம் பண்ணனும்ல" என்று சாருமதியும் பதில் கொடுக்க,

"கௌதம் வேண்டாம்.. அது பாவம்... சின்ன புள்ள... அழுதிடும்..." என்று வடிவேலு பாணியில் சொல்ல,

" யாரு ப்ரியாவா நல்லா அழுவாளே என்று சொல்லிக்கொண்டே சமையல் அறைக்கு" சாருமதி சென்றார்.

**கௌதமும் அவருடன் சென்றவன் அவர் டி போட, கௌதம் அங்கேயே சமையல் மேடை மீது ஏறி அமர்ந்தவன் "சரி... இப்ப சொல்லுங்க மனசுல எதபோட்டு குழப்பறீங்க" என்று நேரடியாக கேட்டான்.**

**சாருமதி சிறிது நேரம் அமைதியாக இருந்தவர் "ஷ்ருதி லவ் பண்றான்னு நினைக்கிறேன்" என்றார், அவர் அப்படி சொன்னதும் கௌதம் திடுகிட்டவன் "என்னமா சொல்றீங்க, தெளிவா சொல்லுங்க..."**

**"இல்ல நானும் நேத்துல இருந்து பார்கிறேன், ஷ்ருதி முரளியோட ரொம்ப பேசுறா..., நேத்து ப்ரோக்ராம் நடக்கும் போதும் ரெண்டு பேரும் பேசிட்டே இருந்தாங்க, இன்னைக்கு முரளி இங்க வந்திருந்த போதும் ஷ்ருதி முரளிகிட்ட ரொம்ப உரிமையோட பேசினா..."**

**முரளி என்றதும் நிம்மதி அடைந்த கௌதம் "இதுல கவலைப்பட என்னமா இருக்கு, யாரோ தெரியாதவங்களா நீங்க பயப்படுறதுல நியாயம் இருக்கு, நம்ம முரளி தானேமா எனக்கு ரொம்ப சந்தோஷம்."**

**"தெரியாம பேசாத கௌதம், முரளி டாக்டர்.... அவனுக்கு நம்ம ஷ்ருதிய செய்வாங்களா... எதாவது டாக்டர் பொண்ணு தான் பார்ப்பாங்க, அதுவும் இல்லாம முரளிக்கு அவங்க அத்தை பொண்ண கல்யாணம் பண்ண போறதா... அவங்க பாட்டி**

**என்கிட்டே சொல்லி இருக்காங்க, இந்த ஷ்ருதி மனசுல ஆசைய வளர்த்திட்டு கஷ்ட்டப்பட போறோன்னு கவலையா இருக்கு...."**

**கௌதம் அமைதியாக இருக்க, சாருமதி "நான் ஷ்ருதிகிட்ட சொல்ல போறேன், அந்த மாதிரி ஆசை இருந்தா விட்டுடுன்னு..."**

**"அம்மா... அவசரபடாதீங்க, அவளுக்கு அவளோட லைப் பார்ட்னர் செலக்ட் பண்ண உரிமை இருக்கு, அவ லவ் பண்றவன் நல்லவன் இல்லை, மேலும் அவன் குடும்பம் சரி இல்லைனா நாம மறுக்கலாம், ஆனா... அவ நல்லவன தானேமா விரும்புறா, அப்புறம் நாம தடுக்கிறது நியாயம் இல்லை, மேலும் முரளி ஒன்னும் விவரம் தெரியாத சின்ன பையன் இல்லை, அவர் ஷ்ருதிய லவ் பண்ணா... அப்ப அவருக்கு அவங்க அம்மா அப்பா சம்மதத்தோட ஷ்ருதிய கல்யாணம் பண்ணவும் தெரியும், அவர் எதுவும் யோசிக்காம செய்ற ஆள் இல்லை...."**

**"ஜானகி... என்கிட்ட இப்பவே முரளிக்கு டாக்டர் பொண்ணுங்க வரனா வருதுன்னு சொல்லி இருக்காங்க, அப்படி இருக்கும் போது, நம்ம ஷ்ருதிய முரளிக்கு செய்வாங்களா, அப்படியே அவங்க ஒத்துகிட்டாலும் முரளியோட பாட்டி இதுக்கு ஒத்துக்குவாங்களா... இதுல இன்னொரு விஷயமும் இருக்கு, உனக்கும் ப்ரியாவுக்கும் வேற கல்யாணம் பண்ண நினச்சிருக்கோம், ஒரே வீட்ல ரெண்டு சம்பந்தம் பண்ண அவங்களுக்கு விருப்பம் இல்லைனா" என்றார் சாருமதி கவலையாக...**

**கௌதம் "நம்ம ஷ்ருதிக்கு என்னமா குறைச்சல் அழகு இல்லையா....**

Ramya Rajan

***படிப்பு இல்லையா, அப்புறம் முரளிக்கு பெரிய எடத்தில கல்யாணம் செஞ்சா... என்ன செய்வாங்களோ... அதை நாமளும் செய்வோம், இனிமே நானும் சம்பாதிக்க போறேன் அதனால நீங்க கவலைபடாதீங்க, ஷ்ருதிகிட்ட நீங்க எதுவும் தெரிஞ்ச மாதிரி காமிச்சிகாதீங்க, நான் பார்த்துகிறேன் சரியா" என்றவன் சாருமதியின் இரண்டு கன்னத்தையும் பிடித்து ஆட்ட, சாருமதியும் சமாதானம் ஆனவர் கௌதமிடம் டீயை கொடுத்தார்.***

***சாருமதி கொடுத்த டீயை குடித்து கொண்டே கௌதம் "ஒரே வீட்ல பொண்ணு குடுத்து பொண்ணு எடுக்கிறது ரொம்ப நல்லது தெரியுமா, முரளி என் தங்கச்சிய அடிச்சா, நான் பதிலுக்கு அவர் தங்கச்சிய அடிப்பேன், அதே மாதிரி நான் அவர் தங்கச்சிய அடிச்சா.... பதிலுக்கு அவர் என் தங்கச்சிய அடிப்பார். அதனால எங்க தங்கச்சிங்க அடிவாங்க கூடாதுன்னு, நாங்க ரெண்டு பேரும் எங்க பொண்டாட்டிய அடிக்கவே மாட்டோம்" என்று வீரமாக சொல்ல,***

***சத்தமாக சிரித்த சாருமதி "மாத்தி சொல்ற கௌதம், நீ எந்த காலத்துல இருக்க இப்ப எல்லாம் பொண்ணுங்க தாண்டா பையனுங்கள மொத்துறாங்க, நீங்க ரெண்டு பேரும் ப்ரியாகிட்டையும், ஷ்ருதிகிட்டையும் அடிவாங்காம இருந்தா பத்தாம இருக்கு" என்றவர் வெளியே செல்ல, கௌதம் மனதிற்குள் 'ஆமால..' என்றான்.***

***கார்த்திக் மிது சென்றவுடன் வீட்டுக்கு வந்தவன், நேராக சென்று அவன் அறையில் படுத்துவிட்டான். அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை, நேற்று விழாவிற்கும், இன்று வீட்டில்***

Ramya Rajan

***விருந்துக்கும் பார்த்த அதிகபடியான வேலையில் ஏற்பட்ட அலுப்பின் காரணமாக தன்னையும் மீறி மாலை ஆறு மணி வரை தூங்கியவன், தூங்கி எழுந்தவுடன் ப்ரியாவை செல்லில் அழைத்தான்.***

***" ஹாய் கார்த்திக் அண்ணா, எதுக்கு போன் பண்ணீங்க" என்று ப்ரியா கேட்டதும், என்ன சொல்வது என்று தடுமாறியவன் "மிதுவோட செல் நம்பர் இருக்கா" என்று கேட்க, "இருக்கு கார்த்தி அண்ணா, இன்னைக்கு தான் வாங்கினேன்... உங்களுக்கு sms பண்றேன், வேற ஒன்னும் இல்லைல வச்சிடவா" என்று கேட்க, "ப்ரியா... காவ்யாவோட நம்பரையும் sms பண்ணு" என்றான் கார்த்திக், அவன் சொன்னத்தை கேட்டு அதிர்ச்சி அடைந்த ப்ரியா சரி என்று போன்னை வைத்தவள், இந்த கார்த்திக் அண்ணா யார தான் லவ் பண்றாங்க, மிது நம்பரும் கேட்கிறாங்க, காவ்யா நம்பரும் கேட்கிறாங்க என்று குழம்பினாள்.***

***கார்த்திக் முதலில் காவ்யாவை அழைத்தான், போன்னை எடுத்த காவ்யா புது நம்பர் என்றதும் தயக்கத்துடன் "யார்..?" என்று கேட்க,***

***"நான் தான் காவ்யா கார்த்திக்."***

***"நீங்களா... உங்களுக்கு எப்படி என் நம்பர் தெரிஞ்சது, உங்களை யாரு போன் பண்ண சொன்னா இனிமே போன் பண்ணாதீங்க, எங்க அப்பாவுக்கு தெரிஞ்சா கொன்னுடுவாரு" என்றவள் போன்னை வைத்துவிட்டாள்.***

Ramya Rajan

கார்த்திக் அடுத்து மிதுவை அழைத்தான். அவளிடம் மன்னிப்பு கேட்டாதான் நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தான். மிது போன்னில் "ஹலோ யாரு..." என்று கேட்க,

"நான் தான் மிது கார்த்திக்."

"ம்ம்.. சொல்லுங்க"

கார்த்திக் "சாரி மிது, வேற எதோ நினைச்சிட்டு இருந்தேனா... நீ அப்படி சொன்னதும் பட்டுன்னு என்னையும் அறியாம சொல்லிட்டேன்"

"பரவாயில்லை கார்த்திக்... உங்க மேல எனக்கு எதுவும் கோபம் இல்லை, தப்பு என் மேல தான், நான் உங்களுக்கு நல்லவிதமா அறிமுகம் ஆகலை அதனால்.... உங்களுக்கு என்னை பார்த்தா அப்படி தான் தோணும்" என்றாள் அழுகையை அடக்கிய குரலில்.

அவள் சொன்னதை கேட்டு அதிர்ந்த கார்த்திக் "என்ன மிது என்னென்னமோ சொல்லற, நான் அப்படியெல்லாம் உன்ன பத்தி நினைக்கல, நான் அப்படி நினைச்சிருந்தா உன்கிட்ட நான் பேசி இருக்கவே மாட்டேன்"

"ஆமா... என்கூட பேச இஷ்ட்டபட்டு பேசினீங்க, இத என்னை நம்ப சொல்றீங்க, உங்க தங்கசிங்களுக்கு நான் எடஞ்சலா இருக்க கூடாதுன்னு என்னை தனியா பிடிச்சு வைக்க என்கூட பேசினீங்க, அது எனக்கு தெரியாதுன்னு நினைச்சீங்களா. நானும் நடந்தத எல்லாம் பார்த்திட்டு தான் இருந்தேன்" என்றவள் "இனிமே நான் அங்க வரவே மாட்டேன், என்னை பத்தி கவலைபடாம நிம்மதியா இருங்க" என்றவள் போன்னை வைத்துவிட்டாள்.கார்த்திக் தலையை பிடித்தபடி அமர்ந்துவிட்டான்.

அன்று இரவு ஷ்ருதியும், கௌதமும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டு கொண்டிருந்தனர், அப்போது கௌதம் சாருமதியிடம் கண்ணை காண்பித்தவன் "அம்மா.... எனக்கு எப்ப அம்மா கல்யாணம் பண்ணுவீங்க" என்று கேட்க,

"இப்ப இந்த கேள்வி ரொம்ப அவசியம்" என்றவர் "முரளிக்கு இப்பவே நிறைய டாக்டர் வரனுங்க வருது அதனால முதல்ல முரளிக்கு, அப்புறம் நம்ம ஷ்ருதிக்கு, எப்படியும் ப்ரியா படிப்ப முடிக்கணுமே" அதனால் உங்களுக்கு கடைசியில என்றவர் ஓரக்கண்ணால் ஷ்ருதியை பார்க்க, அவள் முகம் இருண்டுவிட்டது.

கௌதம் "இப்படி தெரிஞ்சிருந்தா நம்ம ஆள B.A இல்லைனா B .Com படிக்க சொல்லி இருக்கலாமே, மூன்னு வருஷத்துல முடிஞ்சிருக்குமே" என்றவன் தொடர்ந்து "இன்னைக்கு நானும் முரளியும் காலையில நம்ம வீட்டுக்கு போய் இருந்தோம்ல, அப்ப முரளி... அவர் கூட படிக்கிற பொண்ண பத்தி ரொம்ப பெருமையா பேசினாரு, ஒருவேளை அவரு அந்த பொண்ண விரும்புராரோ" என்று இழுக்க,

ஷ்ருதி வெடுக்கென்று "இங்க பாரு நீயா எதாவது சொல்லாத, அவர் உன்கிட்ட அந்த பொண்ண லவ் பண்றேன்னு சொன்னாரா" என்று கேட்க,

"விரும்புறேன்னு சொல்லலை, ஆனா... ஒரு டாக்டர் இன்னொரு டாக்டர கல்யாணம் பண்ண நினைக்கிறது சாதரணமா நடக்கிறது தான்" என்ற கௌதம் "நீங்க என்னமா சொல்றீங்க" என்று சாருமதியை கேட்க, அவர் "ஆமாம்... லவ் பண்றேன்னு நேரடியவா சொல்லுவான், இப்படி தான் மறைமுகமா சொல்லுவான். நாம தான் புரிஞ்சிக்கணும், நான் ஜானகிகிட்ட மெதுவா சொல்றேன்" என்றதும்,

ஷ்ருதி "நீங்க ஒன்னும் சொல்லவேண்டாம், அவர் லவ் பண்ணா அவரே சொல்லுவார். இதுல நீங்க தலையிட்டா நான் சும்மா இருக்க மாட்டேன்" என்று பொங்கி எழ,

கௌதம் "ஆமா... இதுல நீ டென்ஷன் ஆக என்ன இருக்கு" என்று கேட்க,

ஷ்ருதி எதோ சொல்ல வந்தவள், சொல்லாமல் வேகமாக அவள் அறைக்கு சென்றுவிட்டாள். கௌதமும் சாருமதியும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்து கொண்டனர்.

சாருமதி கௌதமிடம் "எதுக்குடா அப்படி சொன்னே" என்றதும், "பயப்படாதீங்க உங்க மருமகன் ஊருக்கு போய்ட்டார், அதனாலா அடி வாங்க முடியாது... போன்ல தான் அவர்கிட்ட கத்துவா, எதோ என்னால முடிஞ்ச உதவி முரளிக்கு" என்றவன் எழுந்து கை கழுவ செல்ல, ஷ்ருதி தூங்காமல் முரளியிடம் பேசுவதற்காக காத்திருந்தாள்.

Ramya Rajan

முரளி டெல்லி விமான நிலையத்தில் இரவு 11 மணிக்கு வந்து இறங்கியவன், அங்கிருந்து தான் தங்கி இருக்கும் இடத்திற்கு வர 11.30 ஆனது, களைப்பாக இருந்ததால் நேராக படுக்க சென்றான்.அப்போது அவன் செல் அழைக்க, யாரு இந்த நேரத்தில் என்று நினைத்துக்கொண்டே செல்லை எடுத்து பார்க்க, அழைப்பது ஷ்ருதி என்று தெரிந்ததும்

"ஹாய் ஷ்ருதி, நான் தான் காலையில போன் பண்றேன்னு சொன்னேன்ல அப்புறமும் ஏன் இவ்வளவு நேரம் தூங்காம இருக்க, நான் பத்திரமா வந்துட்டேன் செல்லம் ,நீ போய் தூங்கு" என்று முரளி பேசிக்கொண்டிருக்கும் போதே இடையில் பேச ஆரம்பித்த ஷ்ருதி

"ஹலோ கொஞ்சம் நிறுத்துறீங்களா ,இப்ப நான் உங்க நலம் விசாரிக்க ஒன்னும் போன் பண்ணலை..."

அவளின் குரலில் இருந்த கோபத்தை உணர்ந்த முரளி, படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவன் "என்ன ஷ்ருதி ? அப்புறம் வேற எதுக்கு போன் பண்ண ? " என்று கேட்க,

சிறிது நேரம் மௌனமாக இருந்த ஷ்ருதி "இன்னைக்கு காலையில எங்க அண்ணன்கிட்ட என்ன பேசினீங்க..."

என்ன பேசினேன் என்று யோசித்தவன் "ஹான்.. வீட்ட பத்தி தான் பேசினேன்."

"நான் அத கேட்கல, அவன்கிட்ட உங்க கூட படிக்கிற பொண்ண பத்தி என்ன சொன்னீங்க, அத மட்டும் சொல்லுங்க..."

"எந்த பொண்ணு ? நான் எந்த பொண்ணு பத்தியும் கௌதம்கிட்ட பேசலியே, உனக்கு யார் சொன்னா...."

"என்ன விளையாடறீங்களா... நீங்க பேசாம தான் அவன் சொன்னானா, அவன் எதுக்கு பொய் சொல்லணும் ஒழுங்கா உண்மைய சொல்லுங்க" என்று ஷ்ருதி மிரட்ட,

"இங்க பாரு நீ மட்டும் நேர்ல இருந்தேன்னு வச்சிக்க, இழுத்து நாலு அறை வச்சிடுவேன், நடுராத்திரில போன் பண்ணிட்டு மிரட்டுது லூசு புரியற மாதிரி சொல்லறதுன்னா சொல்லு, இல்லைனா போன்ன வை, எனக்கு தூக்கம் வருது, நான் நாளைக்கு சீக்கிரம் ஹாஸ்பிடல் போகணும்" என்று முரளி எரிந்து விழ, ஷ்ருதி அழ தொடங்கினாள்.

பெருமுச்சை விட்ட முரளி "அம்மா ஷ்ருதி... என்ன நடந்துச்சுன்னு சொல்லுமா, என் தங்கம்" என்று கொஞ்சிய பின்பே, இன்று வீட்டில் கௌதமும், சாருமதியும் பேசியதை சொன்னாள் ஷ்ருதி. அவள் சொன்னத்தை கேட்ட முரளி யோசிக்க அவன் மூலையில் ஒரு ஓரமாக பல்பு எரிந்தது.

**"ஹே ஷ்ருதி, உங்க அண்ணனுக்கு நம்ம விஷயம் தெரிஞ்சிடுச்சு அதனால தான் உன்கிட்ட வாய்ய பிடிங்கிருக்கான், நீயும் உளறிட்ட…"**

**"நான் உங்களை லவ் பண்றேன்னு சொல்லலை… அப்புறம் அவனுக்கு எப்படி தெரியும்" என்று ஷ்ருதி அசட்டு தனமான கேள்வி ஒன்றை கேட்க,**

**பொறுமை இழந்த முரளி "ஷ்ருதி குட்டி… உனக்கு இப்ப விளக்கி கிளாஸ் எடுக்க எல்லாம் எனக்கு டைம் இல்ல, நீ என்னை லவ் பண்ணலைனா உனக்கு எதுக்கு என்னோட லவ் பத்தி பேசினாலோ இல்ல கல்யாணத்தை பத்தி பேசினாலோ கோபம் வருது, இத உங்க அண்ணன் யோசிக்க மாட்டானா நீயே சொல்லு, அவன் என்ன அவ்வளவு முட்டாளா, கௌதம் இனிமே இன்னும் கிளறுவான் ஜாக்கிருதை bye, குட் நைட்" என்று முரளி போன்னை வைத்துவிட்டான்.**

**மறுநாள் காலை ஷ்ருதியை கௌதமே வந்து வம்பு இழுத்த போதும், வாயை திறக்காமல் ஷ்ருதி கிளாஸ்க்கு கிளம்பி சென்றாள், கௌதம் மேடம் ரொம்ப அலெர்டா இருக்காங்களே, சரி விட்டு பிடிக்கலாம் என்று நினைத்தவன் வெளியே கிளம்பினான்.**

17

***மறுநாள் கல்லூரிக்கு செல்லும் போது காவ்யா முன் தினம் கார்த்திக் போன் பண்ணதையும் தான் அதற்க்கு பதில் சொன்னதையும் சொன்னவள் "நீ ஏன் அவங்ககிட்ட என் போன் நம்பர் குடுத்த ?" என்று ப்ரியாவை கேட்க,***

***ப்ரியா அவளை முறைத்தவள் "யாரோ ரோட்ல போறவங்களுக்கு குடுத்த மாதிரி சொல்ற, உனக்கு கார்த்திக் அண்ணாவ தெரியும் தானே, அவங்க போன் பண்ணா எதுக்கு போன் பண்ணாங்கன்னு கேட்காம கத்திட்டு வச்சிருக்க, உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா" என்று கோபபட,***

***உடனே காவ்யா "உனக்கு எங்க அப்பா பத்தி தெரியும்ல, அவருக்கு நான் ஒரு பையன்கிட்ட பேசினேன்னு தெரிஞ்சா... என்ன காலேஜ் விட்டே நிறுத்திடுவார், அதனால தான் பேசாம வச்சிட்டேன்."***

***"உன் போன்ல பேசும் போது அந்த பக்கம் பேசுறவங்க மூஞ்சியா தெரிய போது, அவங்க என்ன சொல்ல வந்தாங்கன்னு கேட்டுட்டு, அப்புறம் நீ உன் நிலைமைய சொல்லி இருக்கலாம், கார்த்திக் அண்ணா சொன்னா புரிஞ்சிக்குவாங்க, பாவம் நேத்தெல்லாம் எப்படி பீல் பண்ணாங்களோ" என்று ப்ரியா வருத்தபட்டவள்,***

***கார்த்திக் அண்ணா உனக்கு திடிர்ன்னு எதுக்கு போன் பண்ணனும் என்று யோசித்த ப்ரியா "மரியாதையா சொல்லு எதோ நடந்திருக்கு, இல்லைனா கார்த்திக் அண்ணா போன் பண்ண மாட்டாங்க"***

என்றதும்,

காவ்யா முன் தினம் கார்த்திக்கை பஸ் ஸ்டாண்டில் ஒரு பெண்ணுடன் பார்த்துவிட்டு தான் முறைத்ததை சொல்ல,

"அப்படிவா வழிக்கு நீ எங்க அவங்கள தப்பா நினைச்சிட்டியோன்னு தான் போன் பண்ணி இருக்காங்க. நீ தப்பா நினைகிறத பத்தி அவங்க ஏன் கவலைபடனும், ஒரு வேலை அவங்க உன்ன லவ் பண்றாங்களோ" என்று ப்ரியா சொல்ல,

அவள் சொன்னதை கேட்ட காவ்யாவின் முகம் மலர, அதை பார்த்த ப்ரியா "காவ்யா நான் உனக்கு ஒன்னு சொல்றேன் நல்லா கேட்டுக்கோ... லவ் பண்றது சும்மா டைம்பாஸுக்கு இல்ல, லவ் பண்றவங்கள கல்யாணம் பண்ணிகிறதா இருந்தா தான் லவ் பண்ண ஒத்துக்கணும், நீ ஒரு போன் பேசவே உங்க அப்பாவுக்கு பயப்படும் போது, நாளைக்கு அவர்கிட்ட கார்த்திக் அண்ணாவ லவ் பண்றேன்னு போய் சொல்வியா, இன்னைக்கு நீ கார்த்திக் அண்ணாவ லவ் பண்றேன்னு சொல்லிட்டு, நாளைக்கு உங்க அப்பாவுக்கு பயந்து வேண்டாம்ன்னு சொல்லிடீனா, கார்த்திக் அண்ணா தாங்கமாட்டாங்க. அதுக்கு நீ இப்பவே வேண்டாம்ன்னு சொல்லிட்டா பரவாயில்லை, நல்லா யோசிச்சு முடிவு எடு... அவசரப்பட்டு எதாவது பண்ணி, உங்க ரெண்டு பேருக்கும் பிரச்சனை ஆக்கிடாத" என்றாள்.

ப்ரியா சொன்னதை கேட்ட காவ்யாவின் கண்களில் இருந்து கண்ணீர் வடிய அதை பார்த்து ப்ரியாவும் கண் கலங்கினாள் "நான் இப்படி

**பேசுறேன்னு தப்பா நினைக்காத காவ்யா, நானும் ஷ்ருதியும் ரொம்ப ஆசையா இருந்தோம், நீயும் கார்த்திக் அண்ணாவும் சேரனும்ன்னு ஆனா... நானே இப்ப சொல்றேன், லவ் பண்றேன்னு சொல்லிட்டு கார்த்திக் அண்ணாவ ஏமாத்திடாத ப்ளீஸ்... உன்னோட காதல்ல உறிதியா இருப்ப, எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் கல்யாணம் பண்ணிப்பேன்னா மட்டும் ஒகே சொல்லு சரியா" என்று கேட்க....**

**காவ்யா சரி என்று தலை ஆட்டினாள். அவளது கையை ஆதரவாக பற்றிய ப்ரியா "சாரி காவ்யா" என்றாள்.**

**அன்று மாலை கல்லூரி முதல்வர் விழா நிகழ்ச்சியில், கலந்து கொண்ட அனைவரையும் ஆடிட்டோரியத்துக்கு வர சொல்ல, அனைவரும் ஆடிட்டோரியத்துக்கு வந்திருந்தனர். முதல்வர் அநாதை இல்லத்துக்கு பெரிய தொகை கிடைத்திருப்பதாகவும் அதற்க்கு பாடுபட்ட அனைவருக்கும் நன்றி சொன்னவர், அவர்கள் அனைவரையும் இருந்து மாலை சிற்றூண்டி அருந்திவிட்டு செல்லும்படி கேட்டுக்கொண்டார்.**

**ப்ளேட்டில் சிற்றுண்டியை எடுத்து கொண்டு கௌதம், கார்த்திக், ப்ரியா மற்றும் காவ்யா ஒரமாக சென்று நின்றனர், அப்போது அங்கே வினோத்தும் வர அனைவரும் ஒன்றாக நின்று பேசிக்கொண்டே சாப்பிட்டனர். கார்த்திக்கின் முகம் வாடி இருப்பதை பார்த்த ப்ரியா காவ்யாவிடம் கண்ஜாடை காட்டிவிட்டு கௌதம் மற்றும் வினோத்தோடு பேச தொடங்கினாள்.**

**காவ்யா கார்த்திக்கிடம் "நேத்து நீங்க போன் பண்ணும் போது, எங்க**



Ramya Rajan

**அப்பா வீட்ல இருந்தாரு அதனால தான் நான் பேசல சாரி தப்பா நினைச்சுக்காதீங்க, எங்க அப்பாவுக்கு நானும் எங்க அக்காவும் எந்த பையனுங்களோட பேசினாலும் பிடிக்காது, ரொம்ப ஸ்ட்ரிக்ட். நாங்க எதாவது தப்பு பண்ணாலும் எங்க அம்மாவைதான் போட்டு திட்டுவாரு எங்கள ஒழுங்கா வளர்கலைன்னு, அதனால தான் நான் அன்னைக்கு காலேஜ் விழாவுக்கு வந்த என்னோட அப்பா அம்மாவை உங்களுக்கு அறிமுகபடுத்தல, அவரால நம்மளோட நட்ப புரிஞ்சிக்க முடியாது" என்று சொல்ல,**

**கார்த்திக்கின் முகம் மாறியது "ஒரு நிமிஷம் இங்க வா" என்று அவளை தள்ளி அழைத்து சென்றவன் "நமக்குள்ள வெறும் பிரின்ட்ஷிப்பா, உங்க ஊர்ல ப்ரண்ட் தான் ஆள முழுங்குற மாதிரி பார்பீங்களா, நேத்து என்ன ஒரு பொண்ணு கூட பார்த்ததும் ஏன் நீ கோபப்பட்ட..." என்று கார்த்திக் கோபமாக கேட்க,**

**"நான் உங்களை சாதரணமா தான் பார்த்தேன், நேத்து பார்த்த பொண்ணு முகம் சரியா தெரியல அதனால கொஞ்சம் உத்து பார்த்தேன், அது உங்களுக்கு கோபமா பார்த்த மாதிரி இருந்திருக்கு போல..."**

**கார்த்திக் "தூங்குகிறவங்களை எழுப்பலாம் காவ்யா ஆனா... தூங்குற மாதிரி நடிக்கிறவங்கள எழுப்ப முடியாது."**

**காவ்யா "ஆமா... நேத்து எதுக்கு போன் பண்ணீங்க" என்று ஒன்றும் தெரியாதது போல் கேட்க,**

Ramya Rajan

இனிமே அத சொல்றதுனால எதாவது மாறப்போதா என்று நினைத்த கார்த்திக் "ம்ம்.. நேத்து நீ என்கூட ஒரு பொண்ண பார்த்தல, நான் அந்த பொண்ண தான் லவ் பண்றேன், நல்லா இருக்காளான்னு கேட்க தான் போன் பண்ணேன்" என்றவன் திரும்பி கௌதமிடம் சென்றான்.

பஸ்ஸில் வீட்டுக்கு செல்லும்போது ப்ரியாவின் மடியில் படுத்திருந்த காவ்யா அழுது கொண்டே வர, அவளை சாமாதானம் செய்த ப்ரியா "அழாத காவ்யா.... கார்த்திக் அண்ணாவோட அப்பா வந்து உங்க அப்பாகிட்ட பொண்ணு கேட்டா, உங்க அப்பா ஒத்துக்குவார...." என்று கேட்க,

" இல்லை ப்ரியா ஒத்துக்க மாட்டார். நீ சொன்னது நால மட்டும் நான் கார்த்திக்கிட்ட அப்படி பேசல. எங்க அக்காவும் ஒருத்தர லவ் பண்ணா, எங்க அக்கா பயந்திட்டு எங்க அப்பாகிட்ட சொல்லலை, அவ லவ் பண்ண பையன் வீட்ல இருந்து வந்து பொண்ணு கேட்டாங்க, எங்க அப்பா அவங்ககிட்ட யோசிச்சு சொல்றேன்னு சொல்லி அனுப்பிட்டு, அன்னைக்கு ராத்திரி எங்க அம்மாவை போட்டு அடி அடின்னு அடிச்சிட்டாரு, அதுலேயே எங்க அக்கா பயந்து அவ லவ் பண்ண பையன்கிட்ட அவனை வேண்டாம்ன்னு அவளே சொல்லிட்டு வந்துட்டா பாவம், இப்ப எங்க அப்பா வேற இடத்தில அவளுக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கார், ரொம்ப பெரிய இடம். எங்க அப்பா எங்கள ராணி மாதிரி தான் வச்சிருக்கார் ஆனா... நாங்க எதாவது அவருக்கு பிடிக்காதது பண்ணா, எங்க அம்மாவ தான் போட்டு சித்ரவதை செய்வார்... அப்புறம் எங்களுக்கு எப்படி தைரியம் வரும் சொல்லு. நானும் எங்க அக்கா மாதிரி லவ்

***பண்றேன்னு சொல்லிட்டு பின்னாடி அவதி படறதுக்கு, நான் என் தலை விதிய நினைச்சி இன்னையோட அழுது முடிச்சிக்கிறேன்" என்றாள் காவ்யா.***

***கார்த்திக் வீட்டுக்கு போக பிடிக்காமல் அவர்களின் ஆபீஸ் முன்பு வண்டியை நிறுத்தியவன் நேராக அதன் மாடியில் சென்று படுத்துவிட்டான். இரவு ஒன்பது மணி ஆகியும் கார்த்திக் வரவில்லை என்றதும் அவனின் அம்மா அவனுக்கு போன் செய்ய அது சுவிட்ச் ஆப் என்றது, அவர் கௌதமை போன்னில் அழைத்தவர் கார்த்திக்கை பற்றி கேட்க, திடிகிட்ட கௌதம் "அவன் வண்டி ஓடிட்டு இருக்கான்மா, நாங்க வெளிய சாப்பிட போறோம், அதனால அவன் வர லேட் ஆகும்" என்று சொல்லி போன்னை வைத்தவன், அவரிடம் அவன் இங்கே இல்லை என்று சொன்னால் பயப்படுவார்கள் என்று நினைத்து பொய்யை சொன்னான்.***

***கௌதம் தனது பைக்கில் கார்த்திக்கை தேடி சென்றவன், இவன் எங்க போனான் என்று யோசித்து கொண்டே வண்டியை ஓட்ட, அவர்கள் ஆபீஸ் முன்பு நின்ற கார்த்திக்கின் வண்டியை பார்த்ததும், கௌதமிற்கு தெரிந்துவிட்டது அவன் மாடியில் இருக்கிறான் என்று.***

***வண்டியை நிறுத்திவிட்டு மாடிக்கு சென்ற கௌதம், அங்கே கார்த்திக் மல்லாக்க படுத்து கொண்டு நிலவை பார்த்து கொண்டிருப்பதை பார்த்து... "டேய் கார்த்திக், இப்ப என்ன தாண்டா உனக்கு பிரச்சனை, சாவிமா எனக்கு போன் பண்ணி நீ எங்கன்னு கேட்கிறாங்க " என்று கேட்டவன், கார்த்திக் அருகில் சென்று அவனும் படுத்து கொண்டான்.***

சிறிது நேரம் கார்த்திக் பதிலுக்காக கௌதம் காத்திருக்க அவன் எதுவும் பேசவில்லை என்றதும் "சரி நான் வீட்டுக்கு போறேன்" என்று கிளம்பினான்.

"கௌதம்" என்று கார்த்திக் அழைத்ததும், அவன் அருகில் சென்று அமர்ந்தவன் "இங்க பாரு என்கிட்டே சொல்ல இஷ்டம் இல்லைனா சொல்ல வேண்டாம்" என்றதும்,

"அப்படி இல்லைடா உன்கிட்ட சொல்ல எனக்கு எந்த தயக்கமும் இல்ல, எனக்கே சரியா தெரியாம இருந்தது அதனால தான் உன்கிட்ட சொல்லலை" என்றவன் தனக்கும் காவ்யாவிற்கும் முதலில் அரம்பித்த மோதலில் இருந்து.... இப்போது சில நாட்களாக அவளை விரும்புவதாகவும், இன்று அவள் தன்னிடம் பேசியதையும் சொன்னான் கார்த்திக்.

கார்த்திக் சொன்னதை கவனமாக கேட்ட கௌதம் "நீ சொல்றதுல இருந்து காவ்யாவுக்கு விருப்பம்ன்னு தான் தெரியுது, ஆனா அவ அவங்க அப்பாவுக்கு பயப்படுறா, நாம காவ்யாகிட்ட பேசி பார்க்கலாம் கவலைபடாத" என்றவன், கார்த்திக்கை அவனது வீட்டுக்கு அனுப்பிவிட்டு அவனும் அவன் வீட்டுக்கு சென்றான்.

காவ்யா அன்று இரவு தூங்கி கொண்டிருந்தாள். அழுகை சத்தத்தில் கண் விழித்தவள் திரும்பி பார்க்க.... அங்கே அவள் அக்கா ஓவியா அழுது கொண்டிருந்தாள். காவ்யா எழுந்து அவள் அக்காவின் அருகே சென்றவள் ஆறுதலாக அவளை அனைத்து கொள்ள... அவள் அக்கா இன்னும் சத்தமாக அழுதவள் "என்னால முடியல

காவ்யா" என்றாள்.

"உனக்கு தான் நம்ம வீட்ட பத்தி தெரியும் இல்ல, அப்புறம் ஏன் ஒவியா லவ் பண்ண....?"

"நான் வேண்டாம்ன்னு தான் சொன்னேன்... சுரேஷ் தான் கேட்கல, நாலு வருஷத்துக்கு முன்னாடி காதல் மட்டும் தான் முக்கியம்ன்னு தோனுச்சு அப்ப யோசிக்கல.... இதெல்லாம் நமக்கு ஒத்து வருமான்னு... ஆனா... இப்ப ரொம்ப கஷ்ட்டமா இருக்கு" என்று மீண்டும் அழுதாள்.

தன் அக்காவின் துன்பத்தை பார்த்த காவ்யா கார்த்திக் விஷயத்தில் தான் எடுத்த முடிவு சரி ஆனது தான் என்ற முடிவுக்கு வந்தவள். தான் எடுத்த முடிவில் உறுதியாகவும் இருந்தாள்.

மறு நாள் வழக்கம் போல் கல்லூரிக்கு வந்த காவ்யாவிடம் ப்ரியா "உங்க அப்பாவுக்கு இப்படி பயப்படுற நீ, அன்னைக்கு எப்படி கௌதம் வீட்டுக்கு மட்டும் வந்த" என்று கேட்க,

காவ்யா "நான் அங்க வந்தது அவருக்கு தெரியாது, ப்ரியா இனிமே நாம இத பத்தி பேசவேண்டாம். இனிமே என்கிட்டே நீ எப்பவும் கார்த்திக் பத்தி பேசாத ப்ளீஸ்..." என்றாள்.

Ramya Rajan

அன்றிலிருந்து காவ்யா கார்த்திக்கை பார்த்தாலும் பார்க்காத மாதிரி போய் விடுவாள். மாலையில் கௌதமும், கார்த்திக்கும் பஸ் ஸ்டாண்டில் நிற்கும் போது காவ்யா அந்த பக்கம் பார்க்கவே மாட்டாள்.

கௌதம் சில நாட்கள் பார்த்தவன் கார்த்திக்கிடம் "நான் காவ்யாவிடம் பேசி பார்க்கட்டுமா" என்று கேட்க, "விருப்பம் இல்லைதவளை வற்புறுத்த வேண்டாம்" என்று கார்த்திக் உறுதியாக சொல்லி விட்டதால் கௌதமிற்கு அதற்க்கு மேல் என்ன செய்வதென்று தெரியவில்லை.

கௌதம் ப்ரியாவிற்கு போன் செய்து கார்த்திக் காவ்யா பற்றி பேச, ப்ரியா "காவ்யாவுக்கு விருப்பம் இல்லைனா விட்டுடுங்க கௌதம்" என்றதும்,

"நீ என்ன ப்ரியா இப்படி சொல்ற அவளுக்கு இஷ்ட்டம் தான், அவங்க அப்பாவுக்கு பயந்திட்டு சொல்றான்னு நினைக்கிறன். நீ கொஞ்சம் அவகிட்ட பேசேன்..."

"என்ன பேச சொல்றீங்க... இன்னைக்கு நாம சொல்றோம்ன்னு ஒத்துகிட்டு, நாளைக்கு அவங்க அப்பாவுக்கு பயந்திட்டு கார்த்திக் அண்ணா வேண்டாம்ன்னு சொன்னா... கார்த்திக் அண்ணாவால தாங்க முடியுமா, அவங்க காதலிக்க ஆரம்பிச்சா.... அவங்களுக்கு நடுவுல தூது போலாம், ஆனா காதலீங்கன்னு எல்லாம் நாம சொல்ல கூடாது. காவ்யாவுக்கு கார்த்திக் அண்ணன் மேல காதல்ன்னு உறுதியா தெரிஞ்சா... அவளே கண்டிப்பா கார்த்திக் அண்ணாகிட்ட

சொல்லுவா...." என்று ப்ரியா விளக்கமாக பேச,

கௌதம் "ஹே... ப்ரியா உனக்கு இப்படி எல்லாம் பேச தெரியுமா" என்றான் ஆச்சர்யமாக,

கௌதம் தாங்கள் கட்டும் புது வீட்டு வேலையை முழுதும், அவன் தான் பார்த்து கொள்கிறான். கிருஷ்ணகுமார் அவனது விருப்பத்திற்கே விட்டுவிட்டார். கௌதம் தனது திறமையை இந்த வீட்டின் மூலம் மற்றவர்களுக்கு காட்ட நினைத்ததால், அவன் அங்கே அதிகமான நேரம் செலவழித்தான். மாலையில் வேலை ஆட்கள் செல்லும் முன் அவன் அங்கே செல்ல வேண்டியது இருந்தது, அதனால் அவனால் எப்போதும் வழக்கமாக நிற்கும் பஸ்ஸ்டாண்டில் மாலையில் நிற்க முடியாது. அதை ப்ரியாவிடம் சொன்னவன் "நாம இனிமே தினமும் பார்க்க முடியாது, அதனால டெய்லி போன் மட்டும் பண்றேன்" என்று சொல்லிவிட்டு போன்னை வைத்துவிட்டான்.

நாட்கள் வேகமாக சென்றது,கார்த்திக் இப்போது முன்பு இருந்த மாதிரி இயல்பாக இருந்தான். ப்ரியாவும்... காவ்யாவும் வரப்போகும் தங்கள் முதல் வருட தேர்விற்காக படித்து கொண்டிருந்தனர். ஷ்ருதிக்கும் தேர்வுகள் நெருங்கி கொண்டிருந்ததால், அவளும் அதற்க்கு தயார் ஆகி கொண்டிருந்தாள். அவளுக்கு கார்த்திக்... காவ்யா நடுவில் நடந்தது எதுவும் தெரியாது.

மிது அதற்க்கு பிறகு ஷ்ருதி வீட்டுக்கோ, ப்ரியா வீட்டுக்கோ வரவில்லை. இவர்கள் யாரவது போன் செய்து அழைத்தாலும்... வர

முடியாததற்கு எதாவது காரணம் சொன்னாள்.

கௌதமின் புது வீட்டில் கட்டிடம் கட்டும் பனி முடிந்து மற்ற மேல் வேலைகள் நடந்து கொண்டிருந்தது. கௌதம் தங்கள் கட்டும் வீட்டிற்கு சிமெண்ட் ப்ளாக் கற்களை அவனே ஆட்கள் கொண்டு செய்ய வைத்தான். அதனால் ஒவ்வொரு கல்லும் உறுதியாகவும், ஒரே அளவில் சிறு பிசிறும் இல்லாமல் பார்க்க நன்றாக இருந்தது. அவர்கள் வீட்டின் கட்டிட வேலைகள் நடக்கும் போதே நிறைய பேர் அந்த கற்களை பார்த்துவிட்டு அது மாதிரி தங்களுக்கும் செய்து தர முடியுமா என்று கேட்டனர்.

கௌதம் தங்களின் ஆபீஸ்ல் ராமமூர்த்தி மற்றும் கிருஷ்ணகுமாரிடம் தான் கார்த்திக்குடன் பார்ட்னர்ஷிப்பில் தரமான, அதிக விலை கொண்ட சிமெண்ட் ப்ளாக் கற்கள் மட்டும் தயாரிக்கும் தொழிற்ச்சாலை ஒன்று ஆரம்பிக்கலாம் என்று நினைத்திருப்பதாகவும், பணத்திற்க்கு தாங்கள் இருவருமே பட்டதாரி என்பதால்.... வங்கியில் லோன் கிடைக்கும் அதை வைத்து ஆரம்பிக்கலாம் என்றவன் அதை பற்றி அவர்களிடம் ஆலோசனை கேட்க,

கிருஷ்ணகுமார் "நமக்கு ஏற்கனவே நிறைய வேலை இருக்கு.... இதுல புதுசா இன்னொரு தொழில் தேவையா" என்று கேட்க,

கௌதம் "இது ஆளுங்க போட்டு செய்ய போற வேலைப்பா.... நிர்வாகம் மட்டும் நாம பார்த்தா போதும், நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து செய்ய போறதால சமாளிச்சிடலாம்" என்றதும்.

Ramya Rajan

**ராமமூர்த்தி கிருஷ்ணகுமாரிடம் "அவன் எல்லாத்தையும் தெளிவா யோசிச்சு வச்சிருக்கான், நாமளும் ஒரே வேலைய செய்யாம.... புது முயற்சி செய்து பார்க்கிறது நம்ம கம்பெனி வளர்ச்சிக்கு நல்லது தான்" என்றவர் கம்பெனி ஆரம்பிக்க தேவையான இடத்தை தாங்களே தருவதாக சொல்ல,**

**சற்று தயங்கிய கௌதம் "ஐந்து வருட லீஸ் அக்ரீமெண்ட் போட்டு, பணம் வாங்கி கொண்டால் தான் எடுத்து கொள்வதாக" சொல்ல,**

**அவன் சுயமாக இந்த தொழில் தொடங்க நினைக்கிறான் என்பதை உணர்ந்த ராமமுர்த்தியும், கிருஷ்ணகுமாரும் கௌதம் சொன்னதற்க்கு ஒத்து கொண்டனர்.**

18

**அன்று கடைசி பரிட்ச்சை முடிந்து ப்ரியா மட்டும் தனியாக கல்லூரியில் நடந்து வந்து கொண்டிருந்தாள், காவ்யாவிற்கு ஏற்கனவே பரிட்ச்சை முடிந்துவிட்டது அதனால் அவள் வரவில்லை. அப்போது வர்ஷா தனது தோழிகளுடன் நின்று கொண்டிருந்தவள், ப்ரியா வருவதை பார்த்ததும் சத்தமாக "உனக்கு ஒரு விஷயம் தெரியுமா சுபா, நம்ம காலேஜ்ல படிக்கிற கௌதமும், ப்ரியாவும் லவ்**

**பண்றாங்க" என்று சொன்னவள் ப்ரியாவையே பார்க்க... ப்ரியா சிரித்து கொண்டே சென்றுவிட்டாள்.**

**வர்ஷாவுக்கு உண்மைலேயே அவர்கள் இருவரும் விரும்புவது தெரியாது, அவள் சும்மா ப்ரியாவை வம்பிலுக்கவே அப்படி சொன்னாள் ஆனால் அவள் ப்ரியா கோபப்படுவாள் அல்லது அழுவாள் என்று எதிர்பார்க்க, ப்ரியா சிரித்துக்கொண்டே சென்றதும் குழம்பினாள்.**

**கௌதமிற்கும் அன்று பரிட்ச்சை இருந்ததால் அவனும் கல்லூரிக்கு வந்திருந்தான். ப்ரியா எதிரில் வந்த கௌதம் அவள் சிரித்து கொண்டே வருவதை பார்த்து "என்ன மேடம் ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க போல என்ன விஷயம் சொன்னா நானும் சிரிப்பேன்ல" என்று சொல்ல,**

**ப்ரியா "நம்ம காலேஜ் அழகி இப்ப ஒரு ஜோக் சொல்லுச்சு... அது தான் சிரிச்சேன்" என்றதும்,**

**"யாரு வர்ஷாவா... என்ன சொன்னா..." என்று கௌதம் ஆர்வமாக கேட்க,**

**"நீங்களும் நானும் லவ் பண்றோம்மாம் அத எதோ பெரிய ரகசியம் மாதிரி சொல்றா... அஞ்சு வருஷமா நடக்கிறத, எதோ இப்ப அஞ்சு நிமிஷம் முன்னாடி நடந்த மாதிரி சொல்ல.... இவளால தான் முடியும்**

***என்றவள், இவ ரொம்ப ஸ்லோ... நமக்கு குழந்தை பிறந்த பிறகு தான் கல்யாணம் ஆச்சுன்னே சொல்வா போலிருக்கு" என்று ஒரு பலோவில் ப்ரியா பேச,***

***அதை கேட்டு கொண்டிருந்த கௌதமின் பார்வை மாறியவுடன் தான் என்ன சொன்னோம் என்று உணர்ந்த ப்ரியா முகம் சிவந்தவள், அதை மறைக்க வேறு பக்கம் திரும்பினாள்.***

***கௌதம் ப்ரியாவின் முகத்தை பற்றி திருப்பியவன் "ப்ரியா... நீ சொன்ன ரெண்டு விஷயத்துல ஒன்னு நடக்க லேட் ஆகும்ன்னு... எங்க அம்மா சொல்லிட்டாங்க, அடுத்ததுக்கு வேணா முயற்சி பண்ணலாமா.... எனக்கு உன்ன மாதிரியே ஒரு பெண் குழந்தை ரொம்ப சீக்கிரமா வேண்ணும்" என்றதும்,***

***ப்ரியா கையெடுத்து கும்பிட்டவள் "போதும் தெரியாம சொல்லிட்டேன் ஆளவிடுங்க, உங்ககிட்ட பேசும் போது ரொம்ப உஷாரா இருக்கணும், சரி இப்ப என்னை கொண்டு போய் எங்க வீட்ல விடுங்க" என்றாள்.***

***ப்ரியாவை அழைத்து கொண்டு தனது பைக்ல் சென்ற கௌதம் "காவ்யா என்ன சொன்னா" என்று கேட்க***

***"அவ என்கிட்டே கார்த்திக் அண்ணா பத்தி எதுவும் பேசுறது இல்ல கௌதம்" என்றவள், ஆரம்பத்தில் தனக்கும் காவ்யாவிற்கும் நடுவே நடந்த பேச்சு வார்த்தையை சொல்ல,***



Ramya Rajan

***"நீ ஏன் ப்ரியா அப்படி சொன்ன, ஒருவேளை அவளுக்கு பின்னாடி தைரியம் வந்து அவங்க அப்பாகிட்ட கார்த்திக் பத்தி சொல்லலாம்ல" என்று கௌதம் இழுக்க,***

***"அதெல்லாம் அவளுக்கு அவங்க அப்பாகிட்டே பேச எப்பவும் தைரியம் வரவே வராது, கௌதம் எனக்கு அவல சின்ன வயசுல இருந்தே தெரியும்",***

***கௌதம், ப்ரியாவிடம் "அப்படியே பிரச்சனை வந்தாலும், நாம எல்லாம் சும்மா விட்டுருவோமா என்ன ? "என்றதும்***

***"நீங்க என்ன சொல்லவரீங்கன்னு எனக்கு புரியுது, அவ தைரியமா வீட்டவிட்டு எல்லாம் வரமாட்டா, அவ வராம நீங்க எப்படி கல்யாணம் செஞ்சு வைப்பீங்க" என்ற ப்ரியா "கௌதம் ப்ளீஸ்... இத இதோட விட்ருங்க" என்றவள்.***

***"ஒரு பக்கம் காவ்யாவை நினைச்சு கஷ்ட்டமா இருந்தாலும், இன்னொரு பக்கம் பெருமையாவே இருக்கு... அவளுக்கு கார்த்திக் அண்ணாவ பிடிச்சிருந்தும், தன்னோட நிலைமை தெரிஞ்சு விலகிட்டா.... நீங்களே பார்த்தீங்கள ஒரு மாசம் காவ்யவோட பழகினதுக்கே கார்த்திக் அண்ணா எவ்வளவு பீல் பண்ணாங்க, இப்ப தான் கொஞ்சம் பழைய மாதிரி இருக்காங்க, உண்மையா இல்லையா நீங்களே சொல்லுங்க" என்று ப்ரியா கௌதமை கேட்க,***

***"உண்மைதான், ஆமா... நான் உனக்கு மாமா பையன் இல்லைனா... நமக்கும் இதே நிலைமை தான, அப்ப நீ என்ன பண்ணியிருப்ப" என்று கௌதம் கேட்டதும்,***

***ப்ரியா சற்றும் யோசிக்காமல் "எனக்கும் தைரியம் இல்லை, நானும் உங்களை லவ் பண்ணியிருக்க மாட்டேன் என்றவள், உங்களை நான் சாரு அத்த பையன்னு தான் பார்த்தேன், இல்லைனா யாரு உங்களை பார்ப்பா" என்று கௌதமை சீண்ட,***

***"எனக்கு ரொம்ப தேவை தான்" என்ற கௌதம் "ஆனா... நான் நீ என் மாமா பொண்ணா இல்லைனாலும் லவ் பண்ணியிருப்பேன், நீ ஒத்துக்கலைனாலும் நான் விட்டிருக்க மாட்டேன்...அதே மாதிரி யார் தடுத்தாலும்... உன்னை கடத்திட்டு போயாவது கல்யாணம் பண்ணுவேன்" என்றதும்,***

***"அது தான் தெரியுமே... நீங்க ரௌடின்னு, அதனால தான் நானே விட்டாலும், நீங்க என்னை விட மாட்டீங்கன்னு நம்பிக்கையில் தான் ஒத்துக்கிட்டேன்" என்ற ப்ரியாவிற்கு தெரியவில்லை இதே கௌதம் தான் தன்னை நீ எனக்கு வேண்டாம் என்று சொல்ல போகிறான் என்று.***

***ப்ரியாவோடு வீட்டுக்கு வந்த கௌதமை ராமமூர்த்தி சாப்பிட்டு தான் போக வேண்டும் என்று சொன்னதால் அவனும் சரி என்று அவருடன் பேசிக்கொண்டிருந்தான்.***

கௌதம் வந்திருப்பதால் ஜானகி இன்னும் கொஞ்சம் சாதம் வைக்க சமையல் அறை செல்ல, அவர் பின்னாடியே வந்த ப்ரியா நான் சாதம் வைக்கிறேன் என்றதும் சரி என்ற ஜானகி, கௌதமிற்கு குடிக்க மோர் எடுத்துக்கொண்டு சென்றார். மோரை கொடுத்துவிட்டு அவர் அங்கேயே அமர, ராமமூர்த்தி அவரை கேள்வியாக பார்க்கவும் "உங்க பொண்ணு பண்றா" என்றதும், ராமமூர்த்தி தனக்குள் புன்கைத்தார்.

ப்ரியா சாப்பாடு பாத்திரங்களை திறந்து பார்க்க, அதில் சாம்பார், ரசம் பீன்ஸ் பொரியல், கோஸ் பொரியல் என்று இருந்ததை பார்த்ததும், என்ன எல்லாமே சப்புன்னு இருக்குமே, இத போய் கௌதம் எப்படி சாப்பிடுவாங்க என்று நினைத்தவள் .

முட்டையை எடுத்து ஆம்லெட் போட்டு விட்டு, அப்பளம்.... வடகம்.... வத்தல் போன்றவற்றை வறுத்து வைத்தாள். கொஞ்சம் பாயசம் செஞ்சா நல்லா இருக்கும் என்று நினைத்தவள், சேமியா பாயாசத்தை செய்ய தொடங்கினாள். சமையல் அறையில் இருந்து வந்த வாசத்தில் இருந்தே ப்ரியா என்ன செய்கிறாள் என்பது ஜானகிக்கு தெரிந்தது.

ராமமூர்த்தியும், கௌதமும் சாப்பிட அமர ப்ரியா "நீங்களும் உட்காருங்க அம்மா, நான் சாப்பாடு போடறேன்" என்றதும் ஜானகியும் சரி என்று அவர்களுடன் அமர்ந்தார். ப்ரியா அனைவருக்கும் பரிமாறியவள், கௌதமிற்கு ரொம்ப பார்த்து பார்த்து பரிமாறினாள். அவள் செய்வதை எல்லாம் ராமமூர்த்தியும், ஜானகியும் கவனித்து கொண்டு தான் இருந்தனர்.

கௌதம் ப்ரியா சாப்பிட்டு முடித்து வந்ததும் நான் கிளம்பறேன் என்றான்.

ப்ரியா "நீங்க இன்னும் பாயசம் சாப்பிடலையே" என்றதும்,

"இப்ப தானே சாப்பாடு சாப்பிட்டேன், உடனே பாயசம் குடிக்க முடியாது ப்ரியா, பரவாயில்லை இருக்கட்டும் நான் கிளம்பறேன்" என்றான் கௌதம்.

ப்ரியா "உங்களை யாரு இப்பவே குடிக்க சொன்னா... இன்னும் கொஞ்சம் நேரம் கழிச்சு குடிங்க" என்றாள்.

கௌதம் "இல்ல ப்ரியா நான் போகணும்" என்றதும்,

"நான் உங்களுக்கு என்னோட சின்ன வயசு போட்டோஸ் காட்டலாம்ன்னு நினைச்சேன்" என்று ப்ரியா இழுக்க,

கௌதம் என்ன செய்வது என்று தெரியாமல் ராமமூர்த்தியை பார்க்க,

அவர் " வெளிய ரொம்ப வெயில் அடிக்குது சாயங்காலமா போ" என்றதும், சரி என்றான் கௌதம்.

Ramya Rajan

***ராமமூர்த்தி உள்ளே சென்று படுக்க, ஜானகி ஹாலில் இருந்த திவானில் சென்று படுத்தார். ப்ரியா அவளது போட்டோ ஆல்பத்தை கொண்டு வந்தவள், சோபாவில் கௌதம் அருகில் சென்று அமர்ந்தாள்.***

***ப்ரியா ஒவ்வொரு போட்டோவாக காட்டி விளக்கி கொண்டே வர, கௌதம் பார்த்து கொண்டிருந்தான். அந்த ஆல்பத்தில் ப்ரியாவின் குழந்தை பருவத்தில் இருந்து, இப்போது வரை உள்ள போட்டோஸ் இருந்தது.***

***ப்ரியாவின் அம்மா தூங்கி விட்டார்கள் என்று உறுதியாக தெரிந்ததும் கௌதம் "எதுக்குடி என்ன போகவிடாம வீம்பு பண்ற, உங்க அம்மா அப்பா முன்னாடி இப்படியா பண்ணுவ" என்று கேட்க,***

***ப்ரியாவின் கண்கள் கண்ணீரால் நிறைந்தது, அதை பார்த்த கௌதம் "இப்ப எதுக்கு டாம ஓபன் பண்ற" என்றான்.***

***"உங்களை நான் பார்த்து எத்தனை நாள் ஆகுது, உங்களுக்கு இப்பவெல்லாம் வேலை தான் முக்கியமா போய்டுச்சு, இன்னைக்கு விட்டா அப்புறம் எப்ப பார்க்க போறோமோ... அதனால் தான்" என்றாள் ப்ரியா.***

***ப்ரியா சொன்னது உண்மை தான், கௌதம் ப்ரியாவை பார்த்து ரொம்ப நாள் ஆகிறது, வேலை இருப்பது ஒருபுறம், அவன் நினைத்தால் அவனால் வாரத்தில் ஒருநாள் கண்டிப்பாக ப்ரியாவை***

***பார்க்க முடியும். ஆனால் கார்த்திக்கும் கூட வருவான், அவனுக்கு காவ்யாவை பார்க்கும் போது கஷ்ட்டமாக இருக்கும் என்று தான் கௌதமும், ப்ரியாவிடம் இருந்து விலகி இருந்தான். அதை ப்ரியாவிடம் சொல்ல,***

***ப்ரியா "நானும் அதனால தான் உங்களை பார்க்கனும்ன்னு இவ்வளவு நாள் சொல்லலை... ஆனால் இன்னைக்கு நீங்க எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க, இப்பவும் போறேன் போறேன்னா என்ன அர்த்தம் ?"என்று கேட்க,***

***"சரிமா தாயே அழாத... நான் போகலை... இனிமே லீவ் தான... நாம அடிக்கடி பார்க்கலாம்" என்ற கௌதம் மாலை வரை அவளுடன் இருந்து, ப்ரியா கொடுத்த பாயசத்தை குடித்துவிட்டு கிளம்பினான்.***

***ப்ரியா கௌதமிடம் நடந்து கொள்ளும் முறையில் இருந்தே... அவள் அவனை விரும்புகிறாள் என்று ராமமூர்த்திக்கும், ஜானகிக்கும் தெளிவாக தெரிந்தது.***

***விடுமுறையிலேயே கௌதம் தானும், கார்த்திக்கும் சேர்ந்து நடத்த போகும் சிமெண்ட் ப்ளாக் தொழிற்ச்சாலையை தொடங்கினான்.***

***அவன் கட்டிட துறையில் இருந்த நிறைய பேரை தொடக்க விழாவுக்கு அழைத்திருந்தான். அதன் மூலம் நிறைய பேருக்கு அவர்களது தொழிற்ச்சாலையை பற்றி தெரிய வரும் அதனால் நிறைய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள் என்று நினைத்தான்.***

Ramya Rajan

கௌதம் நினைத்த படியே அவர்களது தொடக்க நாள் அன்றே நிறைய பேர்... அவர்கள் தயாரிக்கும் கற்களுக்கு ஆர்டர் குடுத்துவிட்டு சென்றனர்.

எல்லோரும் சந்தோஷமாக இருக்க ஷ்ருதியும், ப்ரியாவும் கௌதம் தங்களை அந்த விழாவிற்கு அழைக்கவில்லை என்று கோபமாக இருந்தனர்.

தொடக்க நாளுக்கு நிறைய ஆண் விருந்தினர்களே வருவார்கள் என்று கௌதம் ஷ்ருதியையும், ப்ரியாவையும் வர வேண்டாம் என்று சொல்லிவிட்டான். அதனால் இருவரும் அவன் மேல் கோபமாக இருக்க, கௌதம் அவர்கள் இருவரையும் தனியாக ஒரு நாள் அழைத்து செல்வதாக சொல்லி இருவரையும் சமாதானம் செய்ததும் ஷ்ருதியும், ப்ரியாவும் சரி என்றனர்.

ஒரு நாள் மிதுவின் அப்பா ராகவன் R.K .கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் வந்திருந்தார்,

அவரை கிருஷ்ணகுமார் எங்கள் வீடு பக்கத்தில் தான் இருக்கு வாங்க என்று அவரை வீட்டுக்கு அழைத்து கொண்டு சென்றார். அவர்கள் இருவரும் வீட்டுக்கு வந்த போது கௌதமும், கார்த்திக்கும் மதியம் வீட்டிற்க்கு சாப்பிட வந்திருந்தனர்.

சாருமதி ராகவனை சாப்பிட சொல்லி உணவு பரிமாறியவர் என்ன வேலையாக சென்னைக்கு வந்தார் என்று கேட்க,

ராகவன் மிதுவுக்கு கல்லூரி திறந்து விட்டதால் அவளை கொண்டு வந்து விட வந்ததாக சொன்னார்.

சாருமதி "நாங்களும் மிதுவ எவ்ளோ தடவை சண்டே இங்க வான்னு கூப்பிடுரோம் வர மாட்றா" என்று வருத்தப்பட,

ராகவன் "அவ கிராமத்தில வளர்ந்தது நால அப்படி இருக்கா... இப்போ எவ்வளவோ பரவாயில்லை... முதல் வருஷம் காலேஜ் படிக்கும் போது திடிர்ன்னு கிளம்பி ஊருக்கு வந்தவ... நான் இனி காலேஜ் போக மாட்டேன்னு சொல்லி ஒரே அழுகை, அப்புறம் ரொம்ப சமாதனம் செஞ்சு கொண்டு வந்து விட்டேன். நல்லா படிக்கிறா ஆனா முன்ன இருந்த மாதிரி கலகலப்பா இருக்க மாட்றா.... உங்க வீட்டுக்கு எல்லாம் அடிகடி வந்தா... அவளுக்கும் நல்லா இருக்கும். நான் சொல்றேன் இனிமே உங்க வீட்டுக்கு அடிக்கடி வர சொல்லி" என்றவர் சாப்பிட்டதும் விடைபெற்று சென்றார்.

ராகவன் சொன்னதை கேட்ட கார்த்திக்கு அவள் தன்னால் தான் இங்கு வர மாற்றாலோ என்ற குற்ற உணர்வு தோன்ற, அன்று இரவு தன் அறையில் இருந்து மிதுவை செல்லில் அழைத்தான்.

மிது கார்த்திக்கின் நம்பரை அவளது செல்லில் பதிந்து வைத்துருந்ததால் எடுத்ததும் "சொல்லுங்க கார்த்திக்" என்றாள்.

"என்ன என் மேல இருந்த கோபம் போயிடுச்சா ?..."

"உங்க மேல என்ன கோபம், நீங்க என்ன பொய்யா சொன்னீங்க..."

"நீ இத விடவே மாட்டியா மிது, அந்த விஷயம் நடந்து இப்ப ரெண்டு வருஷம் ஆக போகுது, அப்ப நீ சின்ன பொண்ணு... கிராமத்தில இருந்து வந்தவ... இங்க சிட்டி லைப் எப்படி இருக்கும்ன்னு தெரியாம வந்து மாட்டிகிட பார்த்த... நல்ல வேளை அதை என்னால தடுக்க முடிஞ்சிது, அதோட அந்த விஷயமும் முடிஞ்சிடுச்சு. நான் அன்னைக்கு உன்ன குத்தி காட்டணும்ன்னு சொல்லலை... நீ திரும்பவும் மாடிக்க கூடாதுன்னு தான் சொன்னேன், ஆனா நான் கொஞ்சம் கோபமா சொன்னேன்... அது தப்பு தான் சாரி" என்று கார்த்திக் விளக்க,

"பரவாயில்லை விடுங்க... இப்ப எதுக்கு போன் பண்ணீங்க ?.."

"நீ ஏன் மிது இப்பெல்லாம் கௌதம் வீட்டுக்கு வர மாட்டேன்கிற ?..."

"நான் வந்தா உங்க தங்கச்சிங்களுக்கு எடஞ்சல், அவங்களுக்காக நீங்க என் கூட இருக்க வேண்டியது வரும், அதனால தான் வரலை" என்ற மிதுவின் குரல் அழுகையில் தேய,

"உன்ன அன்னைக்கு ப்ரியாகிட்ட அடி வாங்குன்னு... நான் பேசாம இருந்திருக்கணும், அப்ப தெரிஞ்சிருக்கும்" என்றான் கார்த்திக்.

மிது அவன் சொன்னத்தை கேட்டு திடுக்கிட்டவள் "என்ன சொன்னீங்க என்று இழுக்க....

"ப்ரியா கௌதம் விஷயத்துல ரொம்ப பொசெஸ்சீவ். பாவம் சின்ன பொண்ணு தெரியாம வந்து நடுவுல மாட்டி... மொத்து வாங்க... போகுது காப்பாத்தலாம்ன்னு நினைச்சு சொன்னா... நீ வேற அர்த்தம் எடுத்துக்கிற...சரி விடு நல்லதுக்கே காலம் இல்லை" என்று கார்த்திக் சொன்னதை கேட்டு மிதுவின் மனது லேசாக வாய்விட்டு சிரித்தவள் "தேங்க்ஸ்" என்றாள்.

"தேங்க்ஸ் சொல்றது இருக்கட்டும்... எப்ப வீட்டுக்கு வர..."

"மிது கௌதம் வீட்டுக்கா" என்றதும், "இல்ல என்னோட வீட்டுக்கு" என்று கார்த்திக் சொன்னதை கேட்டு, மிது திகைத்து "உங்க வீட்டுக்கா என்னை கூப்பிடுறீங்க" என்றாள் சந்தேகமாக,

"எதுக்கு இழுக்குற எங்க வீட்டுக்குத்தான். நீ இப்படியே தனியா இருந்தா எதாவது தேவை இல்லாதத நினைச்சிட்டே இருப்ப, கௌதம் வீட்ல சண்டே கூட ஷ்ருதிக்கு கிளாஸ் இருக்கு... அவ அதுக்கு போய்டுவா அதனால உனக்கு அங்க போர் அடிக்கும், எங்க வீடுன்னா என்னோட அப்பா இருப்பாரே அவர் கூட நீ கொஞ்சம் நேரம் பேசிட்டு இருந்தா உனக்கும் நல்லா இருக்கும், அதோட நானும் எங்க அம்மாவும் அவர் தொல்லை இல்லாம நிம்மதியா

***இருப்போம் வரியா மிது" என்று கார்த்திக் கேட்க,***

***மிதுவுக்கும் கார்த்திக்கின் அம்மா அப்பாவை பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருந்ததால் சரி என்றவள் "நான் எப்படி உங்க வீட்டுக்கு வர்றது, ஷ்ருதி வீட்டுக்கு, ப்ரியா வீட்டுக்கு போறதுனா பரவாயில்லை உங்க வீட்டுக்கு எப்படி வர்றது" என்றாள் கவலையாக.***

***மிது சொன்னதை கேட்டு யோசித்த கார்த்திக்" நான் உன்ன கூடிட்டு போன்னா பல பேருக்கு பதில் சொல்ல வேண்டியது வரும், அதுவும் எங்க அப்பாவ சமாளிகிறது கஷ்ட்டம், நீ எங்க அப்பா முலமா எங்க வீட்டுக்கு வர்றது தான் பெட்டெர்..."***

***"உங்க அப்பா கூட நான் எப்படி வர முடியும்..."***

***"எங்க அப்பா வார வாரம் சண்டே அன்னைக்கு காலையில பத்து மணிக்கு தாம்பரம் சிவன் கோவிலுக்கு போவாரு, நீயும் அங்க வந்திடு மத்ததெல்லாம் எங்க அப்பா பார்த்துக்குவாறு சரியா..."***

***"உங்க அப்பா என்னை வீட்டுக்கு கூப்பிடலைனா..."***

***"அதெல்லாம் கூப்பிடுவாரு... அவரு உன்னோட தீவிர ரசிகர் அதனால கண்டிப்பா கூப்பிடுவாரு" என்ற கார்த்திக் மறந்திடாத***

***சண்டே பத்து மணி, சிவன் கோவில் என்று சொல்லிவிட்டு போன்னை வைத்துவிட்டான்.***

***மிது கார்த்திக்கை பற்றி நினைக்கும் போது எவ்வளவு நல்லவன் மத்தவங்களுக்காக எவ்ளோ யோசிக்கிறான், யாரையோ லவ் பண்ணறேன்னு சொன்னானே, அந்த பொண்ணு ரொம்ப லக்கி என்று நினைத்தாள்.***

19

***ஞாயிற்றுகிழமை காலை வழக்கம் போல் கோவிலுக்கு சென்ற கார்த்திக்கின் அப்பா ரவி, சாமி கும்பிட்டுவிட்டு கோவிலை சுற்றும் போது, அங்கே கோவில் பிரகார தூனில் சாய்ந்து உட்கார்ந்து இருந்த மிதுவை பார்த்துவிட்டு,***

***"ஹாய் மிது, நீ எங்க இங்க கோவிலுக்கு வந்தியா" என்று கேட்க***

***ஹப்பா… இப்பவாவது பார்த்தாரே என்று நினைத்த மிது "ஆமா அங்கிள்" என்றாள்.***



Ramya Rajan

"நான் உன்ன இதுக்கு முன்னாடி இங்க பார்த்தது இல்லையே, நீ இதுக்கு முன்னாடி இங்க வந்திருக்கியா..."

"இல்லை வந்தது இல்ல... இன்னைக்கு ஹாஸ்டல்ல ரொம்ப போர் அடிச்சுது... அதனால வெளிய கொஞ்சம் ஷாப்பிங் பன்னலாம்ன்னு வந்தேன், வழியில இந்த கோவில பார்த்ததும் சாமி கும்பிட்டு

போகலாம்ன்னு நினைச்சு வந்தேன்" என்று மிது நீளமாக விளக்கம் கொடுக்க,

ரவி கார்த்திக் சொன்னது போல் மிதுவை "எங்க வீட்டுக்கு வா..." என்று அழைத்தார்.

மிது "இருக்கட்டும் அங்கிள் இன்னொரு நாள் வரேன்" என்று சொன்னாலும், மனதிற்குள் சரி என்று சொல்லிவிடுவாரோ என்று பயந்தாள்.

ஆனால் ரவி அவள் பயந்தது போல் இல்லாமல் "இன்னொரு நாள் வர்றத பத்தி அப்ப யோசிக்கலாம், நீ இப்ப என்கூட வீட்டுக்கு வா" என்று மிதுவையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு சென்றார்.

ரவியுடன் மிது வீட்டுக்கு வந்த போது கார்த்திக் காலை டிபன் சாப்பிட்டு கொண்டிருந்தவன், எதுவும் தெரியாதது போல் மிதுவை பார்த்து வா மிது என்றான். மிதுவுக்கு கார்த்திக்கை பார்த்ததும்

துள்ளிய மனதை கட்டுபடுத்தியவள் அமைதியாக அவனிடம் நலம் விசாரிக்க, அவனும் பதிலுக்கு அவளை விசாரித்தான். சாவித்திரி மிதுவை சந்தோஷமாக வரவேற்றார்.

ரவி "சாவித்ரியிடம் மிதுவுக்கும் டிபன் குடு" என்று சொல்ல, மிது மறுத்தும் கேளாமல் அவளையும் டிபன் சாப்பிட வைத்தனர்.

மிதுவிடம் ரவி அவளது ஊரை பற்றி கேட்க, மிதுவும் அவர் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லி கொண்டிருந்தாள்.

ரவி மிதுவிடம் "உங்க அப்பா என்ன வேலை செய்கிறார் ?"என்று கேட்க,

மிது "எங்க அப்பா ஊர்ல விவசாயம் பண்றாங்க, அது தவிர இன்னும் வேற சில பிசினஸ்ம் பண்றாங்க" என்றாள்.

"அப்பனா உங்க அப்பா ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா இருப்பாரா..."

"இல்லை... அவர் ரொம்ப சாப்ட் டைப். அவர் தான் நான் இன்ஜினியரிங் படிக்கனும்ன்னு ரொம்ப ஆசை பட்டு, இங்க கொண்டு வந்து சேர்த்தார், அவருக்கு நானும் எங்க அண்ணனும் வெளிநாட்ல செட்டில் ஆகனும்ன்னு ஆசை, எங்க அண்ணனும் அவர் விருப்பபட்ட மாதிரி வெளிநாட்ல படிச்சு, இப்ப அங்கேயே வேலை பார்க்கிறாங்க."

"பரவாயில்லை மிது... உங்க அப்பா ரொம்ப அட்வான்ஸ்ஸா



Ramya Rajan

**யோசிக்கிறார், அப்புறம் உங்க ஊர் பக்கம் நாட்டு கோழி குழம்பு வைப்பாங்களே... உங்க வீட்ல வைப்பாங்களா ?..."**

**"எங்க வீட்ல அந்த குழம்பு தான் அடிக்கடி செய்வாங்க..."**

**ரவி "எனக்கு ரொம்ப பிடிக்கும் ஆனா... உங்க ஆன்டிக்கு வைக்க தெரியாது உனக்கு வைக்க தெரியுமா" என்று கேட்டதும்,**

**மிது "தெரியும், நீங்க வேணா இன்னைக்கு நாட்டு கோழி வாங்கிட்டு வாங்க... நான் வைக்கிறேன்" என்றாள்.**

**ரவி "நிஜமாவே நான் வாங்கிட்டு வந்துடுவேன்" என்றார்,**

**அதற்கு மிது "அதுதான் நானும் சொல்றேன், வாங்கிட்டு வாங்க நான் வைக்கிறேன்" என்றவள் எழுந்து தோட்டத்து பக்கம் செல்ல,**

**சாவித்திரி "ஏன் இப்படி வீட்டுக்கு விருந்தாளியா வந்த பொண்ண வேலை பார்க்க சொல்றீங்க" என்றார், அதற்க்கு கார்த்திக் "அவ வேலை செய்யட்டும் மா... நாம விருந்தாளி மாதிரி நடத்தினா... அவளுக்கு நம்ம வீட்டுக்கு வர சங்கடமா இருக்கும், அதனால செய்யட்டும்" என்றான்.**

**அவன் சொன்னதை கேட்டு ரவியும், சாவித்ரியும் ஆச்சர்யமாக**

கார்த்திக்கை பார்க்க, அதை கவனித்தவன் ராகவன் போன வாரம் கௌதம் வீட்டில் மிதுவை பற்றி சொன்னதை சொல்லி, அவள் இங்க ப்ரீயா இருக்கட்டும் என்றான்.

கார்த்திக் தோட்டத்திற்கு வந்த போது.... அங்கே மிது செல்லில் அவளது அம்மாவிடம் நாட்டு கோழி குழம்பு வைப்பது பற்றி கேட்டு ஒரு பேப்பரில் எழுதி கொண்டிருந்தாள்.

கார்த்திக் அங்கேயே நின்று அவளை பார்த்து கொண்டிருந்தான். மிது அவளது அம்மாவிடம் பேசிவிட்டு திரும்பியவள் அங்கே நின்ற கார்த்திக்கை பார்த்து புன்னகைக்க.

"என்ன பிட்டு ரெடி பண்ணிட்டியா, நீ எப்ப படிச்சு.... எப்ப சமையல் செஞ்சு... எங்க அப்பா எப்ப சாப்பிட போறாரோ, ரொம்ப ஆசையா கோழி வாங்க கடைக்கு போறாரு.... அவர் வர்றதுக்குள்ள படிச்சிடு சரியா..."

"அதெல்லாம் எனக்கு தெரியும் இருந்தாலும் ரொம்ப நாள் ஆச்சா... அது தான் ஒரு தடவை கேட்டு சரி பார்த்தேன், நீங்க சாப்ட்டுட்டு சொல்லுங்க" என்றவள் உள்ளே செல்ல,

அவளோடு உள்ளே வந்த கார்த்திக் "அது மதியம் எங்க அப்பா சாப்பிட்டு அவருக்கு எதுவும் ஆகலைனா அப்புறம் நான் சாப்பிடறத பத்தி யோசிக்கிறேன்" என்றான்.

***"நீங்க கொடுத்து வச்சது அவ்வளவு தான், உங்க அப்பா சாப்பிட்டதுக்கு அப்புறம் உங்களுக்கு எதுவும் மிச்சம் இருக்காது" என்று தன் சமையல் திறமையில் நம்பிக்கை வைத்து மிது சொல்ல,***

***"ஹலோ.. மேடம். ஓவர் காண்பிடன்ஸ் நல்லது இல்ல பார்த்துக்கோங்க" என்றான் கார்த்திக் சிரித்து கொண்டே,***

***அவன் சிரிப்பில் மயங்கி, மிது ஒரு நிமிடம் அவனையே பார்த்து கொண்டு நின்றவள்... பின் சுதாரித்து "தேங்க்ஸ் உங்க அட்வைஸ்க்கு" என்று சாவித்ரியிடம் செல்ல, கார்த்திக் கௌதமை பார்க்க கிளம்பி சென்றான்.***

***சாவித்திரி சாதமும், ரசமும் செய்ய, மிது அவருடன் பேசி கொண்டிருந்தாள். ரவி கோழி வாங்கி வந்ததும், மிது மசாலா அரைக்க ரவி கோழியை சுத்தம் செய்து கொடுத்தார்.***

***மிதுவுக்கு கார்த்திக்கின் அப்பாவை பார்க்கும் போது ஆச்சர்யமாக இருந்தது. அவளுடைய அப்பாவிற்கு சமையல் அறை எந்த திசையில் இருக்கு என்று கூட தெரியாது. அவருக்கு தண்ணீர் வேண்டும் என்றாலும் அவளது அம்மாவோ இல்லை வேறு யாரோ தான் எடுத்து தர வேண்டும், அவராக சென்று குடிக்க மாட்டார். அதனால் அவள் ரவியை எதோ உலக அதிசயம் மாதிரி பார்த்தாள்.***

Ramya Rajan

***மிதுவின் பார்வையில் இருந்தே அவள் என்ன நினைக்கிறாள் என்று புரிந்து கொண்ட சாவித்திரி "ரொம்ப உங்க அங்கிள் வேலை செய்யறதா நினைச்சு உருகாத, இன்னைக்கு தான் அவர் வேலை பார்கிறார். அதுவும் அவருக்கு பிடிச்ச நாட்டு கோழி செய்யறதால தான்" என்றார் கேலியாக.***

***அதற்க்கு ரவி "சாவித்திரி உனக்கு நான் எவ்வளவு வேலை செஞ்சு குடுத்திருக்கேன், அதெல்லாம் மறந்திட்டு பேசுறியே" என்றார்.***

***அவர் சொன்னதை கேட்ட மிது சிரித்து கொண்டே சமையல் செய்தாள்.***

***மதியம் கார்த்திக் வீட்டுக்கு வந்த போது வீடே அமைதியாக இருந்தது. அவனுக்கு செம்ம பசி நேராக சென்று சாப்பிட அமர்ந்தவன், சாதம் போட்டுகொண்டு அதில் குழம்பை ஊற்றி.... சாப்பிட ஆரம்பித்தான். குழம்பு மிகவும் ருசியாக இருந்ததால் அதிகமாக குழம்பு ஊற்றி கொண்டு சாப்பிடும் போது தான், அவனுக்கு நினைவு வந்தது இன்னைக்கு மிது தானே சமையல் செய்தாள், நிஜமாவே சூப்பரா செஞ்சிருக்கா" என்று நினைத்து கொண்டே சாப்பிட்டான்.***

***கார்த்திக் சாப்பிட்டதும் மிதுவை தேடியவன் அவனது அம்மாவின் அறைக்கு சென்று பார்க்க, அங்கே அவனது அம்மா படுத்திருந்தார்.***

***கார்த்திக்கை பாத்ததும் "வா கார்த்திக் சாப்பிட்டியா",***

கார்த்திக் "சாப்பிட்டேன் மா... எங்க அப்பாவும், மிதுவும் ஆள காணோம்",

"ரெண்டு பேரும் ஷாப்பிங் போய் இருக்காங்க, மிதுவால இன்னைக்கு நான் தப்பிச்சேன். இல்லைனா உங்க அப்பா என்னை கூட வான்னு சொல்லுவாரு. வீட்டுக்கு தேவையான மளிகை சாமான், அடுத்த வாரத்துக்கு தேவையான காய்கறி, எல்லாம் வாங்கிட்டு வரேன்னு போய் இருக்கார்",

"அப்பாக்கு ஒரு அடிமை சிக்கி ஆச்சா... பாவம் மிது" என்று கார்த்திக் சிரிக்க,சாவித்ரியும் அவனுடன் சேர்ந்து சிரித்தவர் "இன்னைக்கு மிது வச்ச கோழி குழம்ப சாப்டுட்டு, அவளை புகழ்ந்து தள்ளிட்டாரு. அவங்க அம்மா மாதிரி சமைகிறாலாம், அவளுக்கு எதாவது பரிசு குடுக்கணும்ன்னு சொன்னாரு. என்ன வாங்கி தர போறாரோ தெரியல..."

கார்த்திக் மனது நிம்மதியானது பரவாயில்லை, மிதுவ அம்மாவுக்கும், அப்பாவுக்கும் பிடிச்சிருக்கு இனி அவ இங்க அடிக்கடி வந்து போனா... அவளும் பழச மறந்து நார்மல் ஆகிடுவா என்று நினைத்தான்.

மாலை வீட்டுக்கு ரவி மட்டும் தனியாக வந்தவர் "மிதுவுக்கு 6 மணிக்குள்ள ஹஸ்டல்ல இருக்கனுமாம், அதனால கடையில இருந்து அப்படியே கிளம்பி போய்ட்டா" என்றார்.



Ramya Rajan

இரவு உணவுக்கு இட்லி அவித்து, தொட்டுக்க மிது வைத்த கோழி குழம்போடு கொஞ்சம் சட்னி அரைத்து வைத்திருந்தார் சாவித்திரி.

கார்த்திக் கோழி குழம்பை தன் பக்கம் இழுத்து கொண்டு, சட்னியை ரவி பக்கம் தள்ள, அவர் குழம்பை தன் பக்கம் இழுத்து கொண்டு சட்டினியை அவனிடம் தள்ளினார்.

கார்த்திக் "அப்பா உங்களுக்கு வயசு ஆகிடுச்சு... நீங்க இனிமே டயட் இருக்கணும், இப்படி நைட்டும் கோழி குழம்பு சாப்பிட கூடாது" என்று குழம்பை எடுத்து அவன் ஊற்றி கொண்டு சாப்பிட ஆரம்பித்தான்.

ரவி "உனக்கு யாரு சொன்னா எனக்கு வயசாகிடுச்சுன்னு, அதெல்லாம் நான் இன்னும் யங்காதான் இருக்கேன். நீ அத பற்றி கவலைபடாதே" என்று கோழி குழம்பை எடுத்து தனக்கும் ஊற்றி கொண்டவர் "நானே ரொம்ப வருஷத்துக்கு அப்புறம் எங்க அம்மா சமையல் மாதிரி இருகிறத சாப்பிடுறேன், அத கேட்கிறான் என்றவர், நீ உங்க அம்மா செஞ்சத சாப்பிடு" என்றார்.

கார்த்திக் "ஏன் நீங்க உங்க பொண்டாட்டி செஞ்சத சாப்பிட வேண்டியது தானே" என்றவன் அவனது அம்மாவை பார்த்து..." நீங்க என்ன ஒன்னும் சொல்ல மாட்றீங்க" என்று கேட்க,

***சாவித்திரி "நாளைல இருந்து... நீங்க ரெண்டு பேரும் என்னோட சமையல தான் சாப்பிடனும், நியாபகம் வச்சிக்கோங்க" என்றார்.***

***அவர் சொன்னதை கேட்டு உஷாரான கார்த்திக் "அம்மா நீங்க செய்யறது சிட்டி சமையல் மா..., மிது செஞ்சது கிராமத்து விருந்து. அவ சமையல் நல்லா இருக்குன்னு சொன்னா... உங்க சமையல் நல்லா இல்லைன்னு அர்த்தமா" என்று கேட்டு கொண்டே மீதி இருந்த குழம்பை எல்லாம் அவனே ஊற்றி கொண்டான்.***

***ரவி மகனே நீ பொழைச்சிக்குவே டா என்று நினைத்தவர் "ஆமா சாவித்திரி, நீயும் நல்லா தான் சமையல் செய்வே... யாரு இல்லைன்னு சொன்னா" என்றவர் கோழி குழம்பை கார்த்திக் ஊற்றி கொண்டதால் வேறு வழியில்லாமல் சட்னி ஊற்றி சாப்பிட்டார்.***

***இரவு படுப்பதற்கு முன் மிதுவுக்கு போன் செய்த கார்த்திக் "மிது நீ குழம்புல என்ன போட்ட, எனக்கு ரொம்ப வயிறு வலிக்குது" என்று கார்த்திக் கேட்க,***

***"அது அதனால வலிச்சிருக்காது, உங்க அப்பாவுக்கு குடுக்காம பிடிங்கி சாப்பிட்டதால வலிச்சிருக்கும். எனக்கு எல்லாம் தெரியும் சும்மா கதை விடாதீங்க, கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் அங்கிள் போன் பண்ணி... நீங்க அவங்களுக்கு தராம பிடிங்கி சாப்பிட்டதா சொன்னாங்க" என்று மிது சிரிப்பை அடக்கி கொண்டு பேச,***



Ramya Rajan

"சொல்லிட்டாரா... இதெல்லாம் கரெக்டா பண்ணுவாரே, மிது நிஜமாவே... நீ சூப்பரா குழம்பு வச்சிருந்த, தேங்க்ஸ்..."

"நான் தான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணும். நான் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தேன். எங்க வீட்ல நான் இருக்குற மாதிரி பீல் பண்ணேன்..."

"நீ சந்தோஷமா இருந்தா சரி தான், அடிக்கடி வீட்டுக்கு வா" என்று சொல்லிவிட்டு கார்த்திக் போன்னை வைத்தான்.

மிது அன்றிலிருந்து இரண்டு வாரத்திற்கு ஒரு முறை யாரவது ஒருவர் வீட்டுக்கு சென்றாள். ஒரு முறை ப்ரியா வீட்டுக்கு சென்றால், ஒரு முறை ஷ்ருதி வீட்டுக்கும் இன்னொரு முறை கார்த்திக் வீட்டுக்கு என்று சென்றாள். மூன்று பேர் வீட்டிலும் அவள் ஒரே மாதிரி நடந்து கொண்டாள். சாவித்ரிக்கு உதவியது போல் சாருமதிக்கு, ஜானகிக்கும் சமையலில் உதவி செய்தாள். ப்ரியாவிடம் ஷ்ருதிடம் நன்றாக பழகினாள் அதனால் அவர்களும் இவளுடன் நன்றாக பழகினார்கள்.

இப்படியே ஆறு மாதங்கள் கடந்த நிலையில் முரளி டெல்லியில் இருந்து வந்ததும், கௌதமும், கார்த்திக்கும் சேர்ந்து ஆரம்பித்த சிமெண்ட் ப்ளாக் தொழிற்சாலைக்கு இளையவர்கள் அனைவரும் அங்கே பிக்னிக் செல்வது மாதிரி காரில் கிளம்பி சென்றனர். அவர்களுடன் மிதுவையும் அழைத்து சென்றனர்.

காரில் இடம் பத்தாததால் கார்த்திக் பைக்கில் வருகிறேன் என்றான். ஆனால் ஷ்ருதி "நீங்களும் எங்களோட கார்ல வாங்க, அட்ஜஸ்ட் பண்ணி போகலாம்" என்றவள் பின் சீட்டில் கௌதம் மடியில் அமர்ந்து கொண்டாள், அவர்களுக்கு அடுத்து ப்ரியாவும் அடுத்து மிதுவும் அமர்ந்து கொள்ள, முன்னாடி முரளி காரை ஓட்ட அருகில் கார்த்திக் அமர்ந்திருந்தான்.

ப்ரியா பல முறை ஷ்ருதியை சீட்ல உட்காரு இடம் பத்தும் என்று சொல்லியும் கேட்காமல் ஷ்ருதி கௌதம் மடியிலேயே அமர்ந்திருந்தாள். ப்ரியா கௌதமை பார்த்து முறைத்து விட்டு முகத்தை திருப்பி கொண்டாள். அவள் முகத்தில் கோபம் வெளிப்படையாக தெரிய எதற்கு என்று குழம்பிய மிது கார்த்திக்கை பார்க்க, அவன் கௌதமை நோக்கி கண்ணை காட்டினான். அப்போது தான் மிதுவுக்கு ப்ரியாவின் கோபத்திற்கு காரணம் புரிந்தது, புரிந்ததும் வந்த சிரிப்பை அடக்கி கொண்டு அமர்ந்திருந்தாள்.

கௌதம் ஷ்ருதியிடம் "ஏய்... புளி மூட்ட மாதிரி கனமா இருந்திட்டு ஏண்டி இப்படி மடியில உட்கார்ந்து அழிச்சாட்டியம் பண்ற, உனக்கே இது நியாயமா" என்று மெதுவாக கேட்க,

"உன் ஆளு கோபமா இருக்கும் போது பார்க்க ரொம்ப அழகா இருக்கா அதுக்குதான் பிரதர்" என்றாள் ஷ்ருதி.

"வேண்டாம் ஷ்ருதி அவளை பகைச்சிக்காத, இன்னும் உங்க விஷயம் வீட்ல ஓகே ஆகலை அவ தயவு உனக்கு தேவைபடும்"

Ramya Rajan

என்றதும் யோசித்த ஷ்ருதி உடனே வேகமாக எழுந்து சீட்ல் அமர்ந்தவள், ப்ரியாவிடம் பேச அவள் கண்டு கொள்ளாமல் அமர்ந்திருந்தாள்.

ஷ்ருதிக்கு பொறுமை போய் ப்ரியாவிடம் "என்ன நான் பேசிட்டே இருக்கேன், நீ கண்டுக்கவே மாட்ற" என்று சண்டைக்கு செல்ல,

பதிலுக்கு ப்ரியா "நீ என்கிட்டே பேசுறேன்னு எனக்கு எப்படி தெரியும், நான் நீ உங்க அண்ணன்கிட்ட பேசுறேன்னு நினைச்சேன்" என்றாள்.

ஷ்ருதி "நீ பேசுறது கொஞ்சம் கூட சரி இல்ல ப்ரியா உனக்கு எதுக்கு நான் எங்க அண்ணன் மடியில உட்கார்ந்து வந்தா கோபம் வருது, நான் எங்க அண்ணன் மடியில தானே உட்கார்ந்தேன், உங்க அண்ணன் மடியிலா உட்கார்ந்தேன்" என்று தனது ஆசையை சொன்னவள் முரளியை ஏக்கமாக பார்க்க,

பொங்கி எழுந்த ப்ரியா "நீ உங்க அண்ணன் மடியில உட்கார்ந்தா எனக்கு என்ன.... இல்ல அவங்க தலையில உட்கார்ந்தா தான் எனக்கு என்ன.... நீ இப்ப எதுக்கு எங்க அண்ணன வம்புக்கு இழுக்குற ? என்று கோபமாக கேட்க,

பதிலுக்கு ஸ்ருதியும் பேச... கார் நின்றது கூட தெரியாமல் இப்படி இவர்கள் இருவரும் மாற்றி மாற்றி பேசி சண்டை போட கார்த்திக்கும், மிதுவும் சுவாரசியமாக வேடிக்கை பார்க்க, முரளியும்,

கௌதமும் காரில் இருந்து இறங்கி உள்ளே சென்று விட்டனர். அவர்கள் இருவருக்கும் தெரியும் ஒருத்திக்கு சப்போர்ட் செஞ்சா... அடுத்தவளிடம் நாம் தொலைந்தோம் என்று அதனால் அவர்களே சமாதானம் ஆகட்டும் என்று இருவரும் நினைத்தனர்.

ஒரு வழியாக சண்டை முடிந்து காரில் இருந்து இறங்கிய ப்ரியாவும், ஷ்ருதியும் உள்ளே செல்ல, மிது கார்த்திக்கிடம் "நீங்க ஏன் அவங்களை கூடிட்டு வரலை" என்று கேட்க, "எவங்களை" என்று திரும்பி கார்த்திக் மிதுவை கேட்க, "அது தான் நீங்க ஒரு பொண்ண லவ் பண்றேன்னு சொன்னீங்களே" என்று மிது இழுத்தாள்.

அவள் சொன்னதை கேட்டு சிறிது நேரம் அமைதியாக இருந்த கார்த்திக்

"இல்ல மிது அந்த பொண்ணுக்கு என் மேல விருப்பம் இல்லை" என்றான்.

"உங்களை போய் யாரவது வேண்டாம்ன்னு சொல்வாங்களா" என்று மிது ஆச்சர்யபட்டவள், நீங்க திரும்பி கேட்டு பாருங்க என்றாள்.

"அவ முதல்ல நான் சொல்றத கேட்கவே தயாரா இல்ல... அதுவும் இல்லாம காதல் எல்லாம் தானா வரணும்... போர்ஸ் பண்ண கூடாது... அவளுக்கு எதாவது பிரச்சனை இருக்கலாம், அதனால அவ அப்படி சொல்லி இருக்கலாம். எப்படியோ எங்களுக்குள்ள ஆரம்பத்திலேயே சரியா ஒத்து வரலை, சரி இனிமே இத பத்தி நாம பேச வேண்டாம். நான் இந்த விஷயத்த பத்தி இதுவரை

***ப்ரியாவிடமோ, ஷ்ருதியிடமோ கூட பேசினது இல்ல, உன்கிட்ட தான் எல்லாத்தையும் சொல்றேன். எனக்கே ஏன்னு புரியல" என்றதும் மிதுவின் முகம் மலர்ந்து பின் வாடியது.***

***கார்த்திக்குடன் உள்ளே சென்ற மிது அவன் சொன்னதையே நினைத்து கொண்டிருந்தாள்.***

20

***அனைவரும் சேர்ந்து சிமெண்ட் ப்ளாக் தயாரிக்கும் இடத்தை சுற்றி பார்த்தனர். கௌதம் அவர்களுக்கு தயாரிக்கும் முறை பற்றி விளக்கினான். தொழிற்ச்சாலை கட்டிடம் இருக்கும் இடம் ஊருக்கு வெளியே இருப்பதால்.... சுற்றி காலி இடமே இருந்தது. அன்று ஞாயிற்று கிழமை என்பதால் வேலை பார்ப்பவர்கள் யாரும் இல்லை.***

***சென்னை ட்ராபிக்கில் நெருக்கடியான இடத்தில் இருந்து வந்தவர்களுக்கு, சுற்றி மலையும்... சற்று தொலைவில் சிறு ஏரியுடன் யாருமே இல்லாத, அந்த இடம் பார்க்க மிகவும் அழகாகவும், இனிமையாகவும் இருந்தது.***

Ramya Rajan

அது மழைக்காலம் என்பதால் வெயில் இல்லாமல் குளிர்காற்று வீசியது. எல்லோரும் கட்டிடத்திற்கு வெளியே பாய் விரித்து அதில் அமர்ந்து பேசி கொண்டிருந்தனர். அவர்கள் வரும்போதே மதிய உணவை கொண்டு வந்திருந்ததால் அதை அனைவரும் பேசி கொண்டே சாப்பிட்டனர்.

சாப்பிட்டு முடித்ததும் முரளி கார்ல ஒரு டிரைவ் போனா நல்லாருக்கும் என்றான். எல்லோரும் அமைதியாக இருக்க ஷ்ருதி மட்டும் "ஆமா... நல்லா இருக்கும்" என்றதும், முரளி "சரி வா நாம போகலாம்" என்று கூப்பிட, ஷ்ருதி மற்றவர்களை பார்க்க... அவர்கள் எல்லோரும் வேறு எங்கோ பார்த்தனர்.

முரளியும், ஷ்ருதியும் கொஞ்ச நேரத்தில வந்திடுறோம் என்று கிளம்பி செல்ல, கௌதமும், கார்த்திக்கும் சிரித்தனர்

.

கௌதம் கார்த்திக்கிடம் "முரளியும், ஷ்ருதியும் லவ் பண்றாங்க தெரியுமா, உனக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்" என்றான்.

கார்த்திக் "ஆமா கௌதம், எனக்கு தெரியும். ஆனா ஷ்ருதியே உன்கிட்ட சொல்லட்டும்ன்னு நினைச்சேன், உனக்கு எப்படி தெரியும் ஷ்ருதி சொன்னாளா" என்று கேட்க

"இல்ல அவ சொல்லலை, அம்மா சந்தேகப்பட்டு என்கிட்டே

***சொன்னாங்க. அப்புறம் நான் வழக்கமா பண்ற மாதிரி அவகிட்ட போட்டு வாங்கினேன், எனக்கு புரியுது அவளால லவ் பண்றேன்னு என்கிட்டே வந்து சொல்ல முடியாது இல்லையா" என்ற கௌதம் ப்ரியாவிடம் உனக்கு ஷ்ருதி சொன்னாளா என்று கேட்க,***

***"இல்லை என்று தலை ஆட்டின ப்ரியா ஆனா எனக்கு தெரியும்" என்று சிரிக்க,***

***கார்த்திக் "ப்ரியா மறைமுகமா அவங்க ரெண்டு பேருக்கும் சப்போர்ட் தெரியுமா கௌதம்" என்றதும்,***

***"அப்படியா ! நீ ஏன் ப்ரியா என்கிட்டே சொல்லலை ? என்று கௌதம் கேட்டதும்.***

***"நான் எப்படி சொல்ல முடியும், அது ஷ்ருதியோட விஷயம் அவ தான் சொல்லணும்" என்றாள் ப்ரியா.***

***கௌதம் சரி தான் என்பது போல் தலை அசைக்க, கார்த்திக் மிதுவிடம் "வரியா மிது, இங்க பக்கத்தில ஒரு ஏரி இருக்கு பார்த்திட்டு வரலாம்" என்று கூப்பிட,***

***அவன் எதற்கு தன்னை அழைக்கிறான் என்று புரிந்த மிதுவும் அவனுடன் சென்றாள்.***



Ramya Rajan

**அவர்கள் இருவரும் கண்ணை விட்டு மறைந்ததும், கௌதம் ப்ரியாவின் மடியில் படுத்து கொண்டான். ப்ரியா அவனது தலை கோத, கௌதம் ப்ரியாவின் வயிற்றின் புறம் தலையை திருப்ப, கொன்னுடுவேன் ஒழுங்கா நேரா படுங்க" என்றதும், கௌதம் நேராக படுத்தவன் "முன்னேரலாம்ன்னு பார்த்தா விடமாட்டியே" என்று அலுத்துக்கொள்ள, ப்ரியா அவன் கன்னத்தை பிடித்து கிள்ளினாள்.**

**முரளி காரை மெதுவாக ஓட்ட... ஷ்ருதி அவன் தோளில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். காரில் மெலடி லவ் சாங்க்ஸ் ஓடிக்கொண்டிருந்தது. இருவரும் மௌனமாக தங்களின் தனிமையை ரசித்து கொண்டிருந்தனர்.**

**முரளி ஷ்ருதியிடம் "இந்த தடவை அப்பா, அம்மாட்ட நம்ம விஷயத்த பத்தி பேசிடலாம்ன்னு இருக்கேன்" என்றதும் ஷ்ருதி நிமிர்ந்து அமர்ந்தாள். முரளி காரை ஓரமாக நிறுத்தியவன் "எனக்கு இந்த வருஷம் படிப்பு முடிஞ்சிடும், நான் சென்னைக்கு வந்துடலாம்ன்னு இருக்கேன், அதுவும் இல்லாம எங்க பாட்டி லண்டன்ல இருந்து அடுத்த மாசம் வராங்க.... அவங்க வர்றதுக்குள்ள நான் நம்ம விஷயத்தை வீட்ல சொல்லிடறது நல்லது" என்றான்.**

**அவன் சொன்னதை கேட்ட ஷ்ருதியின் முகத்தில் தோன்றிய பயத்தை பார்த்து முரளி "ஹே... பயப்படாத ஷ்ருதி, எங்க அப்பா, அம்மா ஒதுக்குவாங்க" என்றவன் அவளை மென்மையாக அனைத்து முத்தமிட்டான்.**

Ramya Rajan

கார்த்திக்கும் மிதுவும் ஏரிக்கரை ஓரம் பேசிக்கொண்டே நடந்தனர். மிது கார்த்திக்கிடம் "எங்க ஊர்ல நான் இப்படி தான் என்னோட ப்ரண்ட்ஸ் கூட ஆத்தங்கரைக்கு போய்... அங்க இப்படி தான்.... நாங்க நடப்போம்" என்று பேசிக்கொண்டே... இருவரும் உள்ளே இறங்கி நடக்க, அங்கே ஒரே சகதியாக இருந்தது.

கார்த்திக் "வா மிது.. நாம அந்த பக்கம் போய்டலாம்" என்று சொல்லி கொண்டிருக்கும் போதே... மிதுவின் கால் செருப்பு சேற்றில் மாட்டி கொண்டது. மிதுவால் காலை எடுக்க முடியவில்லை. அவள் அருகில் வந்த கார்த்திக், அவளது கையை பிடித்து கொண்டு வேகமா இழு என்று சொல்ல, மிதுவும் அவன் சொன்னபடியே இழுக்க கால்... செருப்பு பிய்ந்து மிது வழுக்கி விழ... அவளோடு சேர்ந்து கார்த்திக்கும் அவள் மேல் விழுந்தான்.

மிது சேற்றில் விழ... அவள் மேல் கார்த்திக்கும் விழ... கார்த்திக்கின் முகம் மிதுவின் கழுத்தில் அழுந்த பதிந்தது. பதறிய இருவரும் வேகமாக எழ பார்க்க... சேற்றில் கையூன்றி கார்த்திக்கால் எழுந்திருக்கு முடியவில்லை. அவன் கைவழுக்கி மீண்டும் மிது மேல் விழுந்தான், சேற்றில் விழுந்ததால் காலையும் ஊன முடியவில்லை.

கார்த்திக் மிதுவின் கழுத்து வளைவில் முகம் பதித்து இருந்தவன் மெதுவாக முகத்தை நிமிர்த்தி.... மிது முகத்தை பார்க்க, அவள் முகத்தில் தெரிந்த வலியை பார்த்து "ரொம்ப வெயிட்டா... இருக்கேன்னா" என்று கேட்க,

மிது கார்த்திக்கை பார்த்து முறைத்தவள் "இப்ப இந்த கேள்வி ரொம்ப அவசியம், முதல்ல எந்திரீங்க" என்றாள்.

"எந்திரிக்க முடிஞ்சா... எந்திரிக்க மாட்டமா... ஏன் என்ன சொல்றல நீ எந்திரிக்க வேண்டியது தான ?" என்று கார்த்திக் கேட்க,

"நீங்க என் மேல படுத்திருக்கும் போது... நான் எப்படி எந்திரிக்க முடியும், சீக்கிரம் எந்திரீங்க ப்ளீஸ்" என்று மிது அழாத குறையாக சொல்ல,

கார்த்திக் கையை அழுந்த ஊன்றி மறுபடியும் எழுந்திருக்க பார்க்க, கை மறுபடியும் வழுக்க... அவனுக்கு புரிந்தது எழுந்திருக்க முடியாது என்று, ஒரு பக்கமாக உருள பார்த்தவன், இடது கையை அழுந்த ஊன்றி மெதுவாக புரள... கை ரொம்ப வலித்தது, வலி தாங்க முடியாமல் அவன் கத்துவதை பார்த்து பயந்த மிது, அவனால் எந்திரிக்க முடியவில்லை என்பதை உணர்ந்து... அவனை அனைத்து மெதுவாக புரண்டாள்.

இப்போது மிது கார்த்திக்கின் மேல் படுத்திருந்தாள். பின் அவன் மார்பில் கை ஊன்றி மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். கார்த்திக் இன்னும் வலியில் துடிப்பதை பார்த்து பயந்து போன மிது அவனது வலது கையை பிடித்து அவனை உட்கார வைத்தாள்.

கார்த்திக் கண்களில் இருந்து கண்ணீர் வழிவதை வைத்தே

***அவனுக்கு ரொம்ப வலிக்கிறது என்று உணர்ந்த மிது, அவளும் அழ... அப்போது தான் கார்த்திக் மிதுவை பார்த்தவன் "ஏன் அழற உனக்கும் வலிக்குதா ?" என்றான்.***

***மிது இல்லை என்று தலை ஆட்ட, தான் அழுவதால் தான் அவளும் அழுகிறாள் என்று புரிந்த கார்த்திக், கண்களை துடைத்து விட்டு எழுந்து நிற்க முயற்சி செய்ய, மிது அவனுக்கு உதவி செய்தாள். கார்த்திக்கால் இடது கையை கிழே போட முடியவில்லை, கையை தூக்கி கொண்டே நடந்த கார்த்திக், ஏரிக்கரையின் மீது அமர்ந்தவன் "கொஞ்சம் நேரம் ரெஸ்ட் எடுத்திட்டு போலாம்" என்றதும் மிதுவும் அவன் பக்கத்தில் அமர்ந்தாள். அப்போது மழை தூர தொடங்கியது.***

***மழைத்தூரல் விழ தொடங்கியதும் கௌதமும், ப்ரியாவும் எழுந்து கட்டிடத்திற்குள் சென்றனர். கௌதம் அங்கிருந்த சுழல் நாற்காலியில் சென்று அமர்ந்து ப்ரியாவை வா என்று அழைக்க, அவன் அருகில் சென்றவளை இழுத்து... தனது மடியில் அமர வைத்த கௌதம்***

***"இதுக்கு தான நீ ஷ்ருதிகிட்ட சண்டைக்கு போன" என்று கேட்டு அவளது தோள்வளைவில் முத்தம் வைத்தான்.***

***அவனது முத்தத்தில் சிலிர்த்த ப்ரியா "அவ ஏன் உங்க மடியில உட்கார்ந்தா ?..." என்று கேட்க,***

Ramya Rajan

***"அவ என்னோட தங்கச்சி, அதனால உட்கார்ந்தா. சரி நாளைக்கு நம்ம பொண்ணு என் மடியில உட்காருவாளே... அப்ப என்ன பண்ணுவ" என்று கௌதம் கேட்க,***

***உடனே ப்ரியா "நானும் சேர்ந்து உங்க மடியில உட்காருவேன்" என்றதும்,***

***"அதுதானே... பெத்த பொண்ணா இருந்தாலும் விட்டுகுடுக்க மாட்ட... ஆனா நான் உன்ன மாதிரி இல்ல, நம்ம பையன் உன் மடியில உட்கார்ந்தா... நான் கோபபட மாட்டேன் ஏன் தெரியுமா ? நாங்க ரெண்டு பேரும் ஒரு டீலிங் போட்டுக்குவோம். பகல்ல நீ உங்க அம்மாவை வச்சிக்கோ... நைட் நான் வச்சுகிறேன்னு, எப்படி ஐடியா" என்ற கௌதம் கண் சிமிட்ட,***

***ப்ரியா எழுந்து நின்று அவனை அடிக்க தொடங்கினாள், அவளது கை பற்றி தடுத்து அவளை இழுத்து மடியில் படுக்க வைத்த கௌதம், அவள் நெற்றியில் முத்தம் வைத்தவன். இந்த கண்ல தான நான் விழுந்துட்டேன் என்று சொல்லி அவள் கண்களில் முத்தமிட்டு பின் அவள் கன்னத்திலும் முத்தம் வைத்தான், ப்ரியா கண் மூடி மயக்கத்தில் இருந்தாள், கௌதம் மெதுவாக அவள் இடையை பிடித்து அழுத்த மயக்கம் கலைந்த ப்ரியா, கௌதமின் கையை பிடித்தவள். அவனை பார்த்து முறைக்க, கௌதம் "இல்ல நீ உஷாரா இருக்கியான்னு பார்த்தேன், இருக்க" என்றவன் அவள் இதழ்களில் முத்தமிட்டான்.***

***மழை பெரியதாக பெய்ய தொடங்க, அந்த சத்தத்தில் விலகிய***

கௌதமும், ப்ரியாவும் எழுந்து ஜன்னல் அருகில் சென்று நின்றனர்.

ப்ரியா கௌதமிடம் "மழை வேற பெருசா வருது... போனவங்கள இன்னும் காணமே" என்று கவலைபட்டாள்.

முரளியும், ஷ்ருதியும் மழை பெரிதாக பெய்ய தொடங்கவும் காரில் திரும்ப தொடங்கினர்.

மிது மழை பெரிதாக பெய்ய தொடங்கவும் தன் உடம்பிலும், தலையிலும் இருந்த சேற்றை மழை நீரில் கழுவியவள், கார்த்திக் கை வலியில் இருந்ததால்... அவன் உடம்பில் இருந்த சேற்றையும் அவளே துடைத்துவிட தொடங்கினாள்.

கார்த்திக் "பரவாயில்லை மிது இருக்கட்டும்" என்றதற்கு,

"சேற்றோட எப்படி கார்ல உட்கார முடியும்" என்றவள், அவன் உடையில் இருந்த சேற்றை எல்லாம் நீரில் கழுவியதும், இருவரும் எழுந்து ஒருவர்கையை ஒருவர் பிடித்து கொண்டு நடக்க தொடங்கினர்.

மழை விட்டதும் கௌதமும், ப்ரியாவும் வெளியே நின்று இன்னும் கார்த்திக்கையும், மிதுவையும் காணவில்லையே என்று அவர்கள் சென்ற பக்கம் பார்த்து கொண்டிருந்தனர். அப்போது தூரத்தில்

***கார்த்திக்கும் மிதுவும் நடந்து வருவது தெரிந்தது, அதோடு கார்த்திக் ஒரு கையை தூக்கிவைத்து கொண்டே வருவதை பார்த்த கௌதம், வேகமாக அவனிடம் சென்றான்.***

***கார்த்திக் அருகில் சென்ற கௌதம் அவனுடன் சேர்ந்து நடந்து கொண்டே "என்ன ஆச்சு ?" என்று கேட்க, "வழுக்கி விழுந்துட்டேன்டா கைய ஊன்னி எந்திரிக்க பார்த்தேன்னா... அப்போ எதோ ஆகிடுச்சு ரொம்ப வலிக்கிது... கையை கீழ இறக்க முடியல" என்று கார்த்திக் சொல்லிகொண்டிருக்கும் போதே முரளியும், ஷ்ருதியும் வந்துவிட கௌதம் முரளியிடம் நடந்ததை சொன்னான்.***

***கட்டிடத்தின் வெளியே அவனை ஒரு இருக்கையில் அமர வைத்து, முரளி அவன் கையை ஆராய்ந்தவன் "தோள் மூட்டு இறங்கி இருக்கு" என்றான், உடனே கௌதம் ஹாஸ்பிடல் போகலாமா என்று கேட்க,***

***முரளி "வேண்டாம் அதை பொறுத்த நான் ஒரு முயற்சி செஞ்சு பார்கிறேன், முடியலைனா நாம ஹாஸ்பிடல் போகலாம்" என்றவன் கார்த்திக்கிடம் "கார்த்திக் ரொம்ப வலிக்கும் பொறுத்து தான் ஆகணும் வேற வழி இல்ல" என்றான்.***

***கார்த்திக் மிதுவின் முகத்தில் தெரிந்த பயத்தை பார்த்து "நீ உள்ள போ" என்றான். ஆனால் மிது மறுத்துவிட்டு அவனருகிலே நின்றாள்.***

Ramya Rajan

முரளி கௌதமிடம் கார்த்திக்கை அசையாமல் பிடித்து கொள்ள சொன்னவன், ப்ரியாவிடம் ஒரு துண்டை நீரில் நனைத்து எடுத்து வரும்படி சொல்லிவிட்டு, கார்த்திக்கின் கையை லேசாக இறக்க கார்த்திக் வலியில் கத்தினான். மிது முரளியை தடுத்தவள் "நாம ஹாஸ்பிடலே போய்டலாம் அண்ணா அவங்களுக்கு ரொம்ப வலிக்கிறது போல" என்றதும்,

முரளி "அங்க போனாலும் வலிக்கும் வேற வழி இல்லை, ஒரு அஞ்சு நிமிஷம் தான்" என்றவன் தன் வேலையை தொடர்ந்தான்.

முரளி அவன் கையில் கிழே இறங்கிய தோள் மூட் எலும்பை மேலே தூக்கி வைத்து பொருத்தும் போது... வலி பொறுக்க முடியாமல் கார்த்திக் துள்ள,கௌதம் அவனை விடாமல் பிடித்து கொண்டான், ப்ரியா கார்த்திக்கின் கால் அருகில் அமர்ந்து... அவன் காலை அசைக்க விடாமல் பிடித்து கொள்ள, ஷ்ருதி அவன் துடிப்பதை பார்க்க முடியாமல் உள்ளே ஓடி விட்டாள். மிது கார்த்திக் ஒவ்வொரு தடவை வலியில் துடிக்கும் போதும், அவளுக்கு வலித்தது போல் அவளும் துடித்தாள்.

முரளி மூட் எலும்பை பொருத்திவிட்டு கடைசியாக கார்த்திக்கின் கையை படக்கென்று பிடித்து இழுக்க, தோள் மூட்டு அதன் இடத்தில் சரியாக பொருந்தியது ஆனால் வலி தாங்க முடியாமல் கார்த்திக் போட்ட அலறலில் ப்ரியாவும், ஷ்ருதியும் அழுதுவிட, மிது கதறியே விட்டாள்.

முரளி "சரி ஆகிடுச்சு கார்த்திக். இப்போ வலிக்காது கைய மேல

**தூக்கி, கிழே இறக்கி பாரு" என்றதும், கார்த்திக்கும் அவன் சொன்ன மாதிரி செய்ய, இப்போது வலி இல்லை. ப்ரியா வியர்த்திருந்த கார்த்திக்கின் முகத்தை ஈர துண்டை வைத்து துடைத்துவிட்டாள். ஷ்ருதி வெளியே வந்து கார்த்திக்கை பார்த்து நிம்மதியாக மூச்சு விட, மிது இன்னும் தேம்பி கொண்டிருந்தாள்.**

**முரளி "ஷ்ருதி பாயை எடுத்திட்டு வந்து விரிச்சு போடு, கார்த்திக் கொஞ்ச நேரம் படுக்கட்டும்" என்றான்.ஷ்ருதியும் அவன் சொன்னபடி செய்ய, கார்த்திக் அவன் சட்டையை எடுத்து போட்டு கொண்டு அதில் படுத்தான்.**

**முரளி கை கழுவ வேண்டும் என்று சொன்னதால்... ஷ்ருதி அவனை அழைத்து கொண்டு பின் புறம் செல்ல, கௌதமும்,ப்ரியாவும் கட்டிடத்தின் உள்ளே வீட்டுக்கு கிளம்ப, சாமான்களை எடுத்து வைத்து கொண்டிருந்தனர்.**

**கார்த்திக் சிறிது நேரம் கண்ணை மூடி படுத்திருந்தவன், கண்ணை திறந்து பார்க்க... மிது சற்று தள்ளி அமர்ந்திருந்தாள். ஈரமான உடையில் முகம் வீங்கி, கண்கள் அழுததினால் சிவந்து பார்க்கவே ரொம்ப களைத்து இருந்தாள்.**

**கார்த்திக் மிதுவை பார்த்து "ஏய் அழு மூஞ்சி... இங்க வா" என்று கூப்பிட, அவன் அருகில் சென்று அமர்ந்த மிது "கை இப்ப வலிக்குதா" என்று கேட்க, "இல்லை... ஆமா எனக்கு தான வலிச்சுது... நீ ஏன் அழுத" என்று கேட்க,**

Ramya Rajan

***மிது சிறிது நேரம் மௌனமாக இருந்தவள், அவன் கேட்டதுக்கு பதில் சொல்லாமல் "நீங்க கொஞ்ச நாளுக்கு அந்த கைக்கு ரொம்ப வேலை குடுக்காதீங்க" என்றாள்.கார்த்திக் சரி என்றதும் "நீங்க பைக் கூட கொஞ்ச நாளுக்கு ஓட்ட வேண்டாம்" என்றாள் மிது.***

***கார்த்திக் "அதெல்லாம் நான் பார்த்துகிறேன் கவலைபடாத, நீ ரொம்ப நேரமா ஈரமான டிரஸ்ல இருக்க... ஜுரம் வர போகுது கிளம்பலாமா" என்று கேட்க... மிதுவும் சரி என்றாள்.***

***கார்த்திக் "நீ ஹாஸ்டல் போனதும் சுடு தண்ணியில குளிச்சிட்டு... சாப்பிட்டு... எதுக்கும் ஒரு மாத்திரை போட்டுடு" என்று அக்கறையாக சொல்ல,***

***இவர்கள் இருவரும் பேசுவதை கேட்டு கொண்டே வந்த ஷ்ருதி "போதும் உங்க ரொமான்ஸ் கொஞ்சம் நிறுத்துங்க, நானும் அப்பதுல இருந்து பார்கிறேன்... ரெண்டு பேரும் ஒரே அன்பு மழையா... பொழியுரீங்க என்ன விஷயம்" என்று கேட்க,***

***கார்த்திக் சிரித்து கொண்டே எழுந்து அமர்ந்தவன் "என்ன விஷயம்... நீ தான் புதுசா எதோ சொல்ற" என்றான்.***

***"கார்த்தி அண்ணா பொய் சொல்லாதீங்க... நான் உங்க ரெண்டு போரையும்... ரொம்ப நாளா வாட்ச் பண்றேன், நீங்க ரெண்டு பேரும்***

Ramya Rajan

முதல் நாள் பார்க்கும் போதே... முன்னாடியே தெரிஞ்சவங்க மாதிரி பேசுனீங்க. இப்பவெல்லாம் என்னையும், ப்ரியாவையும் விட மிது தான் உங்களுக்கு க்ளோஸ்... அப்புறம் இன்னைக்கு நீங்க வலியில துடிக்கும் போது உங்களைவிட மிது தான் அதிகமா துடிச்சா, இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்" என்று ஷ்ருதி ஆர்வமாக கார்த்திக்கையே பார்க்க,

"நீ தான் இவ்ளோ கண்டு பிடிச்சியே... அப்ப நீயே சொல்லு" என்றவன் மிது எதோ சொல்ல வர... அவளை தடுத்தவன் "இரு ஷ்ருதியே சொல்லட்டும்" என்றான் கார்த்திக்.

"நான் இத மட்டும் கண்டு பிடிக்கலை... வேற ஒன்னும் கண்டு பிடிச்சேன்" என்று ஷ்ருதி இழுக்க,

"வேற என்ன கண்டு பிடிச்சே" என்று கார்த்திக் கேட்டதும்

ஆபீஸ் உள்ளே நின்று இவர்கள் பேசுவதை கேட்டு கொண்டிருந்த கௌதமும், ப்ரியாவும்,வெளியே ஷ்ருதியுடன் இருந்த முரளியும் ஆர்வமாக என்ன சொல்ல போகிறாள் என்று அவளையே பார்க்க,

ஷ்ருதி கார்த்திக்கின் அருகில் வந்து... அவன் சட்டை பாக்கெட்டில் ஒட்டியிருந்த மிதுவின் பொட்டை எடுத்தவள், அதை மிதுவின் நெற்றியில் வைத்துவிட்டு "இதுக்கு என்ன காரணம் சொல்லபோறீங்க" என்பது போல் அவனை பார்க்க,

கார்த்திக் மிதுவை பார்க்க, அவள் முகம் சிவந்து விட்டது. கார்த்திக் ஷ்ருதியிடம் "அவ தெரியாம என் மேல விழுந்துட்டான்னு சொன்னா நம்புவியா என்ன " என்று ஷ்ருதியை பார்க்க,ஷ்ருதி கார்த்திக்கை பார்த்து முறைத்தாள், கார்த்திக் "அது தான் நீ கண்டு பிடிசிட்டியே அப்புறம் நான் என்ன சொல்றது" என்றான்.

அவன் சொன்னதை கேட்ட மிது அதிர, ஷ்ருதி ஹே... என்று துள்ளி குதித்தவள், மிதுவை அனைத்து கொண்டாள்.

முரளி கை கொடுத்து கார்த்திக்கு வாழ்த்து சொன்னவன், மிதுவையும் வாழ்த்த... அவள் என்ன சொல்வது என்று தெரியாமல் லேசாக சிரித்தாள்.

கௌதமும், ப்ரியாவும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்து கொண்டனர். கௌதம் கார்த்திக்கை அனைத்து தன் மகிழ்ச்சியை தெரிவிக்க, ப்ரியா மிதுவின் கரத்தை பற்றி வாழ்த்து சொன்னவள் மிதுவின் முகத்தில் தெரிந்த கலக்கத்தையும் கவனிக்க தவறவில்லை.

கார்த்திக் எழுந்து பின் புறம் சென்றவன், மிதுவையும் அழைக்க... மிதுவும் அவனுடன் சென்றாள்.மிது கார்த்திக்கிடம் எதோ சொல்ல வர கார்த்திக் "இங்க ஒன்னும் பேச வேண்டாம், நான் உனக்கு நைட் போன் பண்றேன்" என்றவன் முகத்தை கழுவி விட்டு தலை வார, மிதுவும் முகத்தை கழுவி தலை வாரினாள்.

***இருவரும் ரெடியாகி முன் பக்கம் வர... அங்கே மற்றவர்கள் காரில் ஏறி இவர்களுக்காக காத்திருக்க, கார்த்திக்கும், மிதுவும் பின் பக்கம் ஏறி அமர்ந்தனர். இப்போது கௌதம் கார் ஓட்ட அருகில் முரளி அமர்ந்திருக்க, பின் சீட்டில் ஷ்ருதி, ப்ரியா, மிது மற்றும் கார்த்திக் அமர்ந்தனர். இடம் பத்தாததால் கார்த்திக் மிதுவோடு நெருங்கி அமர்ந்திருந்தான்.***

***கார்த்திக் கௌதமிடம் எதாவது ஓட்டலில் நிறுத்த சொன்னான், கௌதம் "வீட்லயே போய் காபி குடிப்போமே" என்று சொல்ல,***

***கார்த்திக் "மிது ஹஸ்டல் போகணும், அவளுக்கு அங்க நைட் தான் சாப்பிட முடியும், அதுக்கு தான்" என்றதும் முரளி இரும... கௌதமும், ஷ்ருதியும் ஓ.... என்று கத்த... கார்த்திக் சிரிக்க... மிது வெட்கப்பட்டாள்.***

***கார்த்திக்கையும், மிதுவையும் பார்த்த ப்ரியா நிம்மதி அடைந்தாள்.***

21

***முரளி வீட்டில் அன்று இரவு உணவை அனைவரும் சேர்ந்து***

***அருந்தியதும். முரளி அவனது அப்பாவுடன் ஹாலில் அமர்ந்து பேசி கொண்டிருந்தான். ப்ரியா அவளது அறையில் அடுத்த நாள் கல்லூரிக்கு தேவையான உடைகளை எடுத்து வைத்து கொண்டிருந்தாள்.***

***ஜானகி வேலை முடித்து வந்து ஹாலில் அமர்ந்ததும், முரளி இந்த வருடம் படிப்பு முடிந்ததும் சென்னைக்கு வந்து இங்கிருக்கும் ஹாஸ்பிடலில் வேலைக்கு சேர்ந்து விட்டு, வெளிநாட்டில் மேல்படிப்பு படிப்பதற்கான முயற்ச்சிகள் செய்ய போவதாக சொன்னான்.***

***அதை கேட்ட ராமமூர்த்தி படிக்க சென்றால் எவ்வளவு நாட்கள் ஆகும் திரும்பி வர என்று கேட்க,***

***முரளி இரண்டு வருடங்கள் ஆகும் அதோடு தான் அங்கிருக்கும் மருத்துவமனையில் வேலை பார்த்து கொண்டே படிக்க போவதால் பணத்திற்கு பிரச்சனை இல்லை என்றவன், தான் சென்னையில் இருந்து வெளிநாடு கிளம்ப எப்படியும் ஒரு வருடம் ஆகும் என்றான்.***

***ஜானகி "இன்னும் ஒன்னரை வருஷம் கழிச்சு வெளிநாடு போய், திரும்பி வர ரெண்டு வருஷம் ஆகும்னா பேசாம... முரளி கல்யாணம் பண்ணிக்கிட்டு வெளிநாடு போகட்டும். இவனுக்கு இப்ப பண்ணத்தான் ப்ரியா படிச்சு முடிந்ததும் அவளுக்கு பண்ண முடியும் "என்று சொல்ல,***

Ramya Rajan

ராமமூர்த்திக்கும் ஜானகி சொல்வது சரி என்று பட "நீ சென்னைக்கு வந்ததும் பொண்ணு பார்க்க ஆரம்பிக்கலாம், உங்க பாட்டிக்கு உன்ன வாசுகி அத்தை பொண்ணு சுமிக்கு கல்யாணம் செஞ்சு வைக்கணும்ன்னு ஆசைபடறாங்க, நீ என்ன சொல்ற" என்று கேட்க,

முரளி "உறவுக்குள்ள திருமணம் செய்வது அவ்வளவு நல்லதில்லை, அதுவும் ஒரு டாக்டரா இருந்திட்டு என்னால அது முடியாது" என்றான்.

அவன் சொன்னதை கேட்ட ராமமூர்த்தி "அப்படின்னா வெளிய இருந்து நிறைய டாக்டர் வரனுங்க வருது... அத பார்க்கலாமா" என்று கேட்க,

முரளி "எனக்கு டாக்டர் பொண்ணு வேண்டாம், நம்ம கிருஷ்ணகுமார் மாமா பொண்ணு ஷ்ருதிய எனக்கு பிடிச்சிருக்கு, நாங்க ரெண்டு பெரும் விரும்புறோம்" என்று சொல்ல, ராமமூர்த்தியும், ஜானகியும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

ஜானகி "நாம ஏற்கனவே ப்ரியாவ அவங்க அண்ணன் கௌதமுக்கு செய்யலாம்ன்னு இருக்கோம், அதுவும் இல்லாம உங்க பாட்டி நீ சுமிய வேண்டாம்ன்னு சொல்றதுக்கே பிரச்சனை பண்ணுவாங்க அதையாவது நீ டாக்டர் பொண்ணு கேட்குறேன்னு சொல்லி சமாளிக்கலாம். ஆனா நீ ஷ்ருதிய கல்யாணம் பண்ணா அவங்களுக்கு ரொம்ப கோபம் வரும் அப்புறம் ப்ரியாவ அங்க செய்ய முடியுமா"

என்று கேட்க,

முரளி "நாங்க ரெண்டு பேரும் விரும்புறோம் அதனால என்னால வேற யாரையும் கல்யாணம் செஞ்சுக்க முடியாது. ஒரே வீட்ல நீங்க ரெண்டு சம்பந்தம் செய்ய வேண்டாம்ன்னு நினைச்சா... ப்ரியாவுக்கு நாம வேற இடம் பார்க்கலாம், என்னோட ms படிக்கிற நாம் ஊரு பையன் ஒருத்தன் ப்ரியா போட்டோ பார்த்திட்டு, அவனுக்கு கல்யாணம் பண்ணி தர முடியுமான்னு என்னை கேட்டான். நான் உங்களை கேட்டு சொல்றேன்னு சொல்லி இருக்கேன்" என்று அவன் பாட்டுக்கு முரளி பேசி கொண்டிருக்க,

ப்ரியா தனது அண்ணன் கல்யாணம் விஷயம் பேசுகிறார்கள் என்று ஆர்வமாக உள்ளே இருந்து கேட்டு கொண்டிருந்தவள், முரளி சொன்னதை கேட்டதும் தலையில் இடி விழுந்தது போல் அதிர்ந்து நின்றாள்.

ராமமூர்த்தியும், ஜானகியும் முரளி சொன்னதை கேட்டு அதிர்ந்தவர்கள், சரி நாங்க யோசிச்சு சொல்றோம் என்று சொன்னதும், முரளி ப்ரியாவை பற்றி பேச் எடுக்க, ராமமூர்த்தி "அதை அப்புறம் பார்க்கலாம்... அவ இப்ப தான் ரெண்டாவது வருஷம் படிக்கிறா" என்று சொல்ல, முரளி எழுந்து தனது அறைக்கு சென்றான்.

ப்ரியா போர்வையை இழுத்து மூடி கொண்டு படுத்துவிட்டாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

இரவு தனது கட்டிலில் படுத்திருந்த மிது, இன்று நடந்த நிகழ்சிகளை நினைத்து பார்த்தாள். கார்த்திக் தன் மேல் இன்று விழுந்த போது பயமாக தான் இருந்தது ஆனால்... இப்போது நினைக்கும் போது அது சுகமான நினைவாக தோன்றியது. இப்போதும் அவன் தன் மேல் படுத்திருப்பதை போல் உணர்வு தோன்ற... மிது வேகமாக எழுந்து அமர்ந்தாள்.

அவள் கார்த்திக்கை ரொம்ப நாட்களாகவே விரும்புகிறாள்... அது மிதுவுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் கார்த்திக் வேறு ஒரு பெண்ணை விரும்புகிறான். அதுவும் இல்லாமல்... அவன் அப்படி வேறு ஒரு பெண்ணை விரும்பவில்லை என்றாலும் தன்னை விரும்ப மாட்டான் என்று தன் மனதை அவள் கட்டுபடுத்தி வைத்திருந்தாள். ஆனால் இன்று கார்த்திக் ஷ்ருதியிடம் சொன்னது உண்மையா அப்படி அவன் சொன்னது உண்மை என்றாலும் தான் அவனுக்கு பொருத்தமானவளா என்று மிது குழம்பி கொண்டிருந்தாள். அவள் கார்த்திக்கை தான் முதலில் சந்தித்த நாளை நினைத்து பார்த்தாள்.

மிது அப்போது தான் கல்லூரி சேர்ந்து மூன்று மாதம் ஆகி இருந்தது.

அவள் கிராமத்தில் இருந்து வந்ததால்... சென்னை அவளுக்கு ரொம்ப வித்தியாசமாக தெரிந்தது. ஆணும், பெண்ணும் சேர்ந்து வெளியில் சுற்றுவதை எல்லாம் அவள் சினிமாவில் தான் பார்த்திருக்கிறாள். ஆனால் இங்கே ஆணும், பெண்ணும் நண்பர்களாக சேர்ந்து பழகுவதை நேரில் பார்த்ததும் அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

முதல் வருடம் அனைத்து பிரிவு be மாணவர்களும் ஒரே வகுப்பில் இருந்தனர். அப்போது சுனில் என்ற மாணவன் மிதுவோடு நண்பனாக பழகினான். மிதுவிற்கும் அவனது நட்பு பிடித்திருந்ததால் அவளும் அவனோடு பழகினாள். இப்படியே ஒரு மாதம் சென்ற நிலையில் சுனில் திடிரென்று ஒரு நாள் மிதுவிடம் காதலை சொல்ல, மிது தனக்கு அந்த மாதிரி எந்த நினைப்பும் இல்லை என்று மறுக்க சுனில் விடாமல் அவளை தொந்தரவு செய்தான்.

சுனில் தன்னால் சாப்பிட முடியவில்லை, தூங்க முடியவில்லை என்று முதலில் புலம்பியவன், பின் தனக்கு வாழவே பிடிக்கவில்லை என்றும் தான் சாக போவதாகவும் மிரட்ட ஆரம்பித்தான். மிது மென்மையான மனம் கொண்டவள். அவளிடம் வந்து சுனில் இப்படி சொல்லவும் மனம் இலகியவள் சரி என்று அவன் காதலை ஏற்று கொண்டாள்.

மிது காதலை சொல்லிய ஒரு வாரத்தில் சுனில் அவளை ஞாயிற்று கிழமை தன்னுடன் பீச்சுக்கு வர சொல்லி அழைத்தான், முதலில் மறுத்த மிது அவன் ரொம்ப வற்புறுத்தவும் சரி என்றாள்.

சுனில் தன்னுடைய ஏரியா நண்பன் விமல் என்பவனுக்கு போன் செய்து "டேய் நீ சொன்ன மாதிரியே அந்த பொண்ணுகிட்ட பேசினேன் ஒத்துகிச்சு, நான் இன்று மிதுவுடன் பீச்சுக்கு போறேன் " என்றதும், அவனது நண்பன் தானும் அங்கே வருவதாக சொல்லி போன்னை வைத்தான்.

Ramya Rajan

**சுனிலின் நண்பன் விமல், வேறு ஒருவனை போன்னில் அழைத்து. சுனில் தனது காதலியுடன் பீச்க்கு வருவதாகவும், தாங்களும் அங்கே சென்றால், ஆள்ளிலாத இடமா கூடிட்டு போய்... சுனிலை ரெண்டு தட்டு தட்டி அனுப்பிவிட்டு... அந்த பெண்ணுடன் இருக்கலாம் என்று சொல்ல, அந்த பக்கம் இருந்த நண்பன் ஏதோ சொல்ல, அதற்க்கு விமல் "அது அந்த பொண்ணு கிராமத்துல இருந்து இங்க வந்து காலேஜ்ல படிக்குது அதனால வெளிய சொல்லாது பயப்படாத, அதனால நாமளும் இப்பவே கிளம்பலாம்" என்றவன், அவன் நண்பனை நேராக கிளம்பி பீச்சுக்கு வர சொல்லி போன்னை வைத்தான்.**

**கௌதமும், கார்த்திக்கும் ஒரு வேலையாக பெருங்ககளத்தூர் வந்தவர்கள், ஒரு கடையில் நின்று டீ குடிக்க... அப்போது விமல் பேசியது அனைத்தையும் கேட்டு அதிர்ந்தார்கள். இப்போது என்ன செய்வது என்று யோசிக்க, கௌதம் "முதலில் இவனை விட கூடாது அப்புறம் நமக்கு அந்த பொண்ணு யாருன்னு தெரியாது" என்று விமலை பிடித்து நாலு அறைவிட்டவன், கார்த்திக்கை வண்டி ஓட்ட சொல்லி... நடுவில் விமலை வைத்து... பின்புறம் அவன் அமர்ந்து கொண்டு... பெருங்ககளத்தூரில் இவர்கள் கட்டி கொண்டு இருக்கும் ஒரு வீட்டுக்கு போக சொன்னான்.**

**அங்கே சென்றதும் ஒரு அறையில் விமலின் கையை கட்டி ஓரமாக உட்கார வைத்துவிட்டு. அவனிடம் விவரம் கேட்க விமலும் கௌதமின் அடிக்கு பயந்து எல்லாவற்றையும் சொன்னான். அவன் சொன்னதை கேட்டு என்ன செய்வது என்று கௌதம் யோசிக்க,**

**கார்த்திக் கௌதமிடம் "நீ இவன இங்க பாத்துக்க, நான் கிளம்பி**

Ramya Rajan

***பீச்சுக்கு போறேன். அந்த பொண்ண நேர்ல பார்க்கிறத தவற வேற வழி இல்லை, இன்னைக்கு இல்லைனாலும் வேற நாள் இவனுங்க இதே மாதிரி செய்ய மாட்டானுங்கன்னு என்ன உறுதி, இவனை வெளிய விட்டா இவன் போன் பண்ணி சொல்லிடுவான். அப்புறம் அந்த மிருதுள்ளா யாருன்னு நம்மளால கண்டு பிடிக்க முடியாது" என்று சொல்ல, கௌதமும் சரி என்றான்.***

***கார்த்திக் விமலை விட்டு சுனிலை செல்லில் அழைத்து, பீச்சில் உழைப்பாளர் சிலை அருகே வந்து காத்திருக்கும்படி சொல்ல வைத்தவன். கௌதமிடம் சொல்லிக்கொண்டு பீச்சுக்கு சென்றான்.***

***கார்த்திக் தாம்பரத்தில் தனது வண்டியை விட்டுவிட்டு பஸ்சில் கிளம்பி சென்றான். பீச்சில் சென்று இறங்கியவன் நேராக உழைப்பாளர் சிலை அருகே செல்ல, அங்கே ஒரு பையன் மட்டும் நின்று கொண்டிருந்தான் கூட எந்த பொண்ணும் இல்லை, கார்த்திக் அந்த பையனின் அருகில் சென்று "நீங்க சுனிலா" என்று கேட்க, "ஆமா... நீங்க யாரு" என்று சுனில் கேட்க,***

***கார்த்திக் பதிலுக்கு "மிருதுள்ளா எங்கே ? " என்றதும் திகைத்த சுனில் "நீங்க எதுக்கு கேட்கறீங்க" என்றான். "சொல்றேன் நீ முதல்ல சொல்லு" என்றதும் சுனில் கையை நீட்டி காண்பிக்க... அவன் காண்பித்த பக்கம் கார்த்திக் பார்த்த போது அங்கே ஒரு பதினெட்டு வயது பெண் அங்கிருந்த சிறுவர்களோடு சேர்ந்து ஓடி பிடித்து விளையாடி கொண்டிருந்தாள்.***

***ஆள் பார்க்க மிகவும் அழகாக இருந்தாள், முகத்தில் இன்னும்***

குழந்தை தனம் மாறவில்லை. தற்செயலாக நிமிர்ந்து பார்த்த மிது சுனிலோடு நின்ற கார்த்திக்கை பார்த்ததும் அவர்கள் அருகில் வந்தாள்.

கார்த்திக் "நீ தான் மிருதுளாவா" என்று கேட்க, மிது ஆமாம் என்று தலை ஆட்டினாள். அவளிடம் கார்த்திக் நடந்த விஷயத்தை சொல்ல, அதிர்ச்சி அடைந்தவள் அசையாமல் நின்றாள். சுனிலுக்கும் அதிர்ச்சி தான் அவனும் தன் நண்பன் இப்படி பட்டவன் என்று எதிர் பார்க்கவில்லை, அப்போது விமலின் நண்பன் அங்கே வர... கார்த்திக் அவனை பிடித்து இரண்டு அறைவிட்டதும், விமல் தன்னிடம் போன்னில் சொன்னதை சொல்லி மன்னிப்பு கேட்டான்.

கார்த்திக் சுனிலையும், அவன் நண்பனையும் எச்சரித்து அனுப்பி வைத்தவன், கௌதமிற்கு போன் செய்து விவரம் சொல்ல, அவனும் விமலை எச்சரித்து அனுப்பிவிட்டு தானும் கிளம்புவதாக சொன்னான். போன்னை வைத்த கார்த்திக் மிதுவை பார்க்க... அவள் இன்னும் அதிர்ச்ச்யில் தான் இருந்தாள். கார்த்திக் "மிருதுள்ளா" என்று அழைத்ததும் அவன் பக்கம் திரும்பியவள், சட்டென்று கார்த்திக் காலில் விழுந்துவிட்டாள்.

கார்த்திக் அவளது செயலில் பதறி தூக்கிவிட்டவன் "இங்க பாரு இது உங்க ஊரு மாதிரி சின்ன ஊரு இல்ல, உங்க ஊர்ல யார பத்தி கேட்டாலும் தெரியும் அதனால பிரச்சனை இல்ல, ஆனா இங்க அப்படி இல்ல, இது ரொம்ப பெரிய ஊர்... இங்க யார் கூட பழகினாலும் ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும்" என்றதும்,

சரி என்று தலை ஆட்டிய மிது "இன்னைக்கு மட்டும் நீங்க அந்த ஆளு பேசினதை கேட்கலைனா... என்னோட நிலைமை" என்று நினைத்து பயந்து நடுங்கினாள். அவள் கண்களில் இருந்து நிற்காமல் கண்ணீர் வடிய, கார்த்திக் "அழாத பார்க்கிறவங்க நம்ம ரெண்டு போரையும் தப்பா நினைப்பாங்க" என்றதும் கண்களை துடைத்த மிது "ரொம்ப நன்றி சார்... யாரோன்னு நினைக்காம... வந்து சொன்னீங்களே, வாழ்கையில உங்களை மறக்க மாட்டேன்" என்றாள்.

கார்த்திக் அவளோடு பேசிக்கொண்டே நடந்தவன், அவளுக்கு ஜூஸ் வாங்கி குடுத்து குடிக்க சொல்லி "அவளிடம் இனிமே தனியா எங்கையும் வராத பிரண்ட்ஸ் கூட வா" என்று சொல்ல, மிது சரி என்றவள் "இவன் நான் வரலைனா செத்துடுவேன்னு சொன்னான், அது தான் வந்தேன் இனிமே அவன் செத்தாலும் வர மாட்டேன், அவனோடு இனி பேசவும் மாட்டேன்" என்றாள்.

கார்த்திக் அவளை அவள் கல்லூரி வரை செல்லும் பஸ்சில் ஏற்றிவிட்டவன் அவனும் அதே பஸ்சில் ஏற, மிது சென்று பெண்கள் சீட்டில் ஜன்னலோரத்தில் அமர்ந்தாள். மிது பஸ்சில் அழுது கொண்டே வர அவளுக்கு டிக்கெட் எடுக்க வேண்டும் என்பது கூட நினைவில்லை.

ஆண்கள் சீட்டில் அமர்ந்திருந்த கார்த்திக் அவளின் நிலையை அறிந்து அவளுக்கும் சேர்த்து டிக்கெட் எடுத்தான்.

மிது அழுவதும், கண்களை துடைப்பதுமாக இருந்தாள். அவளுக்கு இன்று நடந்ததை நினைத்தால் இப்போதும் தாங்க முடியவில்லை.

***அவள் ஒன்றும் உலக நிலவரம் தெரியாதவள் இல்லை, அவளும் நியூஸ் பேப்பர் படிக்கிறாள்... டிவி பார்க்கிறாள்... அதில் எத்தனை இந்த மாதிரி விஷயம் நடக்கிறது, அது தெரிந்தும் தான் இன்று செய்த செயலை அவளாலேயே மன்னிக்க முடியவில்லை.***

***அவள் கல்லூரி ஹஸ்டல் வரை, கார்த்திக் கூட வந்தது கூட தெரியாமல் பஸ்சில் இருந்து இறங்கி ஹஸ்டல் உள்ளே சென்றாள். அவள் உள்ளே சென்றதும் தான் கார்த்திக் திரும்பி சென்றான்.***

***அன்றிலிருந்து மிது சுனில் பக்கம் திரும்பவே இல்லை, சுனிலும் மிதுவை அதற்க்கு பிறகு தொந்தரவு செய்யவில்லை. அவன் இரண்டாம் வருடம் வேறு பிரிவுக்கு சென்றுவிட்டான். அன்று மட்டும் கார்த்திக் வந்திருக்கவில்லை என்றால் தன்னுடைய நிலைமை என்ன ஆகியிருக்கும் என்று இப்போது நினைக்கும் போதும் மிதுவிற்க்கு தாங்க முடியாமல் அழுகை வந்தது.***

***அப்போது கார்த்திக் செல்லில் அழைத்தவன் "குளிச்சியா... சாப்ட்டியா... மாத்திரை போட்டியா" என்று கேட்க, மிது வெறும் ம்..ம்..ம்.. என்று மட்டும் சொல்லி கொண்டிருந்தாள்.***

***கார்த்திக் அவள் மன நிலையை உணர்ந்தவன் "அப்ப எதோ கேட்க வந்தியே, அது என்ன ?" என்று கேட்க,***

***"நீங்க ஏன் ஷ்ருதிகிட்ட அப்படி சொன்னீங்க ?..."***

***"நான் உண்மையா சொல்றேன் மிது, எனக்கு உன் மேல காதல் எல்லாம் எதுவும் இல்லை ஆனா நீ என்ன காதலிக்கிறேன்னு எனக்கு தெரியும். நாம விரும்புகிறவங்களா விட நம்மள விரும்புறவங்கள கல்யாணம் பண்றது நல்லதுன்னு சொல்வாங்க, அத தான் நானும் இப்ப செய்றேன்."***

***மிது மௌனமாக இருக்க...***

***கார்த்திக் "நீ எங்க வீட்ல ரொம்ப பொருந்துற மிது. எங்க அம்மா அப்பாவுக்கு உன்னை பிடிச்சிருக்கு, எனக்கும் உன்னை பிடிச்சிருக்கு. நான் எப்படியும் எங்க அம்மா அப்பா சொல்ற பொண்ண தான் கல்யாணம் பண்ண போறேன், அது ஏன் நீயா இருக்க கூடாது? காதலிச்சு தான் கல்யாணம் பண்ணனுமா... என்ன ? கல்யாணம் பண்ணிட்டு கூட காதலிக்கலாம்" என்றான்.***

***மிது மெதுவாக "நான் உங்களுக்கு வேண்டாம்" என்றாள்.***

***"அத நீ சொல்ல கூடாது, நான் தான் முடிவு பண்ணனும். எனக்கு உன்னோட பாஸ்ட் வேண்டாம், இப்ப நீ என்ன விரும்புற அது போதும். நான் உன் மேல இறக்கபட்டு இத செய்றேன்னு நினைக்காத... இன்னைக்கு மதியம் நான் உன் மேல படுத்திருந்த மாதிரி, என்னால வேற யார்கிட்டயும் இனி இருக்க முடியாது. அப்படி நான் வேற ஒரு பொண்ண கல்யாணம் பண்ணாலும்... எனக்கு உன் முகம் தான் நியாபகம் வரும். அப்போ ரொம்ப***

கொடுமையா இருக்கும்" என்றான்.

மிதுவும் அதே போல் தான் நினைத்தாள், தெரியாமல் அவள் மேல் கார்த்திக் விழுந்திருந்தாலும் அது ரொம்ப அந்தரங்கமான விஷயம் தான், இனி தன்னால் அது போல் வேறு யாருடனும் இருக்க முடியாது என்றும் புரிந்தது.

கார்த்திக் "இன்னொரு உண்மைய நான் ஒத்துக்குறேன் மிது, இன்னைக்கு மதியம் எனக்கு உன்ன அவ்வளவு பக்கத்தில பார்த்ததும் முத்தம் குடுக்கனும்னு தோனுச்சு, நமக்குள்ள கெமிஸ்ட்ரி இருக்கு ஹிஸ்ட்ரி வரும்மான்னு வெயிட் பண்ணி பார்க்கலாம்" என்று சொல்லி சிரித்தவன், குழப்பிக்காம தூங்கு என்று போன்னை வைத்துவிட்டான்.

கார்த்திக் என்ன சொன்னபோதிலும் மிதுவுக்கு மனம் சமாதானம் ஆகவில்லை, கார்த்திக்கை தான் முன்பே சந்தித்திருந்தால் தன் வாழ்கையில் ஒரு கரும்புள்ளி ஏற்படாமலே போய் இருக்கும் என்று நினைத்தவள் அதை நினைத்து வருந்தினாள்.

ஷ்ருதி தனது அறையில் முரளியுடைய பெற்றோர்... தங்களுடைய காதலுக்கு என்ன சொல்ல போகிறார்களோ என்று பயந்து கொண்டிருந்தாள். அவர்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டாலோ இல்லை முரளியின் பாட்டி இதற்க்கு ஒத்து கொள்ளவில்லை என்றால் என்ன ஆகுமோ என்ற கவலையில் அழுது கொண்டே படுத்திருந்தாள்.

**ப்ரியா, மிது, ஷ்ருதி இவர்கள் துன்பம் தீருமா பொறுத்திருந்து பார்ப்போம்.**

**22**

**மறுநாள் விடியக்காலையில் முரளி டெல்லிக்கு கிளம்பினான். அவனது அம்மா அப்பாவிடம் சொல்லிக்கொண்டு கிளம்பியவன், ப்ரியாவை தேட அவளை காணோம். எப்போது முரளி ஊருக்கு கிளம்பினாலும் ப்ரியா அவனுடனே இருப்பாள். அவனுக்கு தேவையானதை எடுத்து கொடுத்து உதவி செய்வாள். இன்று ஏன் வரவில்லை என்று யோசித்தவன், ஒரு வேலை நேற்று வெளியில் சென்றது அலுப்பாக இருக்கும் என்று நினைத்து, அவள் அறைக்கு சென்று கதவை தட்ட... ப்ரியா அப்போதுதான் தலைக்கு குளித்துவிட்டு வந்தவள் கதவை திறந்தாள்.**

**முரளி அவளிடம் சொல்லிக்கொண்டு கிளம்பினான். ப்ரியாவும் வாசல் வரை சென்று தன் அண்ணனை வழி அனுப்பினாள். முரளி**

**சென்றதும் தன் அறைக்கு வந்த ப்ரியாவிற்கு மீண்டும் அழுகை வந்தது, மனதை அடக்கி புத்தகத்தை எடுத்து கொண்டு படிக்க அமர்ந்தாள்.**

**கல்லூரிக்கு செல்லும் நேரம் ஆனதும் கிளம்பி வெளியே வந்த ப்ரியா, காலை உணவை சாப்பிட அழைத்த ஜானகியிடம், மறுத்துவிட்டு செல்ல... அவள் கை பிடித்து தடுத்த ஜானகி, அவளை டைனிங் டேபிலில் அமர வைத்து உணவு பரிமாறியவர் "முரளியோட கல்யாணத்துக்கு அவன்கிட்ட விருப்பத்த கேட்கிற மாதிரி, உன்னையும் கேட்போம். உனக்கு பிடிச்சவன தான் உனக்கும் கல்யாணம் செஞ்சு வைப்போம். முரளிக்கு தெரியாம எதோ பேசுறான், நீ எதுவும் மனசுல வச்சுக்காத" என்றதும் நிம்மதி அடைந்த ப்ரியா சாப்பிட்டுவிட்டு கல்லூரிக்கு கிளம்பினாள்.**

**ஜானகி ராமமூர்த்தியிடம் முரளி ஷ்ருதி பற்றி கேட்க, "அவங்க விரும்பினா... நாம கல்யாணம் செஞ்சு தான் வைக்கணும். ஆனா அது யார் மனசையும் புண் படுத்தாம எப்படி செய்யறதுன்னு தான் நான் யோசிக்கிறேன்" என்றவர் பார்க்கலாம் என்று ஆபீஸ் கிளம்பி சென்றார்.**

**இப்படியே அந்த வாரம் முடிய, வெள்ளிகிழமை அன்று ஷ்ருதியை செல்லில் அழைத்த முரளி அவளிடம் பேசி கொண்டிருந்தவன் "என்னனே தெரியல... ப்ரியா என்கிட்டே சரியவே பேச மாட்றா... டெய்லி நான் அவளோட பேசுவேன், என்கிட்டே எப்பவும் நல்லா பேசுவா ஆனா நான் ஊர்ல இருந்து வந்ததுல இருந்து சரியாவே பேசலை" என்று முரளி புலம்ப,**

"ப்ரியா எதுக்கு உங்ககிட்ட சரியா பேசாம இருக்கணும், நீங்க என்ன பண்ணீங்க ? ப்ரியா உன்கிட்ட சரியா பேசலைனா... அப்ப நீங்க தான் எதாவது தப்பு செஞ்சு இருப்பீங்க" என்றாள் ஷ்ருதி.

ஷ்ருதி சொன்னதை கேட்டு யோசித்த முரளி "நாம எல்லோரும் சேர்ந்து வெளிய போயிட்டு வந்த அன்னைக்கு நைட் சாப்பிடும் போது... என்கிட்டே நல்லா தான் பேசினா... ஆனா அதுக்கப்புறம் நான் எங்க அம்மா அப்பாகிட்ட பேசும் போது அவ அங்க இல்லை" என்றவன் பேச்சு சட்டென்று நின்றது.

"ஷ்ருதி என்ன ஆச்சு முரளி" என்றதும்,

"இல்லை நாங்க அன்னைக்கு பேசும் போது ப்ரியா அங்க இல்லை, ஆனா நான் பேசினத கண்டிப்பா கேட்டிருப்பா" என்றான் முரளி.

"அப்படி என்ன பேசினீங்க" என்று ஷ்ருதி கேட்க,

"நம்ம விஷயம் தான் பேசினோம், அப்ப அம்மா உனக்கும் ப்ரியாவுக்கும் ஒரே வீட்ல கல்யாணம் பண்ண, உங்க பாட்டி விட மாட்டாங்கன்னு சொன்னாங்க. அப்ப நான் அப்படினா நானும், ஷ்ருதியும் விரும்புறோம்... அதனால எங்களுக்கு கல்யாணம் பண்ணுங்க ப்ரியாவுக்கு என்னோட ப்ரிண்ட பார்க்கலாம்ன்னு சொன்னேன், ஒருவேளை நான் சொன்ன பையன அவளுக்கு பிடிக்கலையோ" என்று முரளி இழுக்க...

அவன் சொன்னதை கேட்டு அதிர்ந்த ஷ்ருதி "நீங்க என்ன சொன்னீங்க... ப்ரியாவுக்கு வேற மாப்பிள்ளை பார்க்கலாம்னா சொன்னீங்க" என்று கேட்க,

"ஆமா... ஏன் நான் சொன்னதுல என்ன தப்பு ?" என்று முரளி புரியாமல் கேட்க,

"முரளி நீங்க ஒரு விஷயம் தெரிஞ்சிக்கோங்க, அப்படி உங்க வீட்ல ரெண்டு சம்பந்தம் பண்ண விரும்பலைனா நிக்கறது நம்ம கல்யாணமா தான் இருக்கும். கௌதம், ப்ரியா கல்யாணம் இல்லை" என்று ஷ்ருதி உறுதியாக சொல்ல,

"நீ என்ன சொல்ற ஷ்ருதி, அப்படின்னா ப்ரியாவும், கௌதமும் விரும்புறாங்களா..." என்ற முரளி எனக்கு எப்படி இது தெரியாம போச்சு என்றான்.

"நல்லா படிச்சவங்க எல்லாம் அறிவாளி இல்லைன்னு, உங்களை பார்த்து தெரிஞ்சிக்கலாம்" என்று ஷ்ருதி சொல்ல,

"எதுக்கு நீ இப்படி சொல்ற" என்று முரளி கோபபட,

"பின்ன... உங்களை சொல்லாம யார சொல்றது ? நேத்து நான் கார்ல கௌதம் மடியில உட்கார்ந்து வந்ததுக்கு... ப்ரியா எப்படி சண்டைக்கு வந்தா, அத பார்த்து கூடவா தெரியல" என்று ஷ்ருதி சொல்ல,

அவள் சொன்னதை கேட்டு சிரித்த முரளி "மேடம் அதனால தான் என் மேல கோபமா இருக்காங்களா... நான் நாளைக்கு கிளம்பி சென்னைக்கு வரட்டுமா" என்று கேட்டதும்,

ஷ்ருதி "அதெல்லாம் ஒன்னும் தேவை இல்லை, நீங்க அடுத்த மாசம் இருக்கிற எங்க வீடு பால் காய்ச்சுற விழாவுக்கு வாங்க, அதுக்குள்ள உங்க தங்கச்சி ஒன்னும் உருகிட மாட்டா... வேணா போன் பண்ணி பேசுங்க" என்றதும்,

முரளி "சரி பாய்..." என்று போனை வைத்துவிட்டான்.

அடப்பாவி தங்கச்சின்னு வந்ததும் நம்மள கழட்டி விட்டுட்டானே என்று நினைத்து கொண்டாள் ஷ்ருதி.

முரளி ப்ரியாவை செல்லில் அழைக்க, எடுத்து பேசிய ப்ரியா "என்ன அண்ணா... இப்ப போன் பண்ணி இருக்கீங்க" என்று கேட்டதும்,

"சாரி ப்ரியா எனக்கு நிஜமா தெரியாது, நீயும் கௌதமும் லவ்

Ramya Rajan

***பண்றது தெரிஞ்சிருந்தா... நான் அப்படி சொல்லி இருக்க மாட்டேன்" என்று முரளி மன்னிப்பு கேட்க,***

***ஆச்சிரயம் அடைந்த ப்ரியா "பரவாயில்லை விடுங்க அண்ணா, உங்களுக்கு ஒன்னும் என் மேல கோபம் இல்லையே" என்று கேட்க,***

***"நான் ஏன் கோப படனும் ப்ரியா, எனக்கு கௌதம ரொம்ப பிடிக்கும், நீ கௌதம விரும்புறது எனக்கு ரொம்ப சந்தோஷம். நான் அவனை பிடிக்காம அப்படி சொல்லலை... நம்ம ரெண்டு பேர்ல ஒருத்தருக்கு தான் மாமா வீட்ல செய்ய முடியும்ன்னு அம்மா சொன்னதுனால, நான் அப்ப லவ் பண்ற நாங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாமேன்னு சொல்லிட்டேன். நான் பண்ணது தப்பு தான். கௌதம் ரொம்ப பீல் பண்ணிருப்பான் இல்லை, நான் வேணா அவன்கிட்ட சாரி கேட்கவா" என்று கேட்டதும்,***

***"நான் அவங்ககிட்ட இத பத்தி சொல்லலை, எனக்கு தெரியும் நீங்க தெரியாம சொல்றீங்கன்னு, இருந்தாலும் நீங்க பேசினது கஷ்டமா தான் இருந்தது. அதுக்காக நான் உங்களை யார்கிட்டயும் விட்டு குடுக்க மாட்டேன், அது கௌதமா இருந்தாலும், நான் இதை கௌதம்கிட்ட சொன்னா கண்டிப்பா கோபபட மாட்டாங்க, ஆனா பீல் பண்ணுவாங்க" என்று ப்ரியா சொல்ல,***

***அவள் சொன்னதை கேட்ட முரளி "எனக்கு ரொம்ப கில்டியா இருக்கு ப்ரியா. நீ இவ்வளவு நல்லா என்னை புரிஞ்சு வச்சிருக்கும் போது, எனக்கு மட்டும் எப்படி தெரியாம போச்சு" என்று வருத்தப்பட,***

"வருத்தபடாதீங்க அண்ணா... நீங்க வேற ஊர்ல இருக்கீங்க.... எப்பவாவது தான் இங்க வரீங்க அப்புறம் எப்படி தெரியும். அதுவும் உங்க கண்ணுக்கு இப்பெல்லாம் ஷ்ருதி மட்டும் தான் தெரியிறா.... அதனால தான்" என்று ப்ரியா முரளியை கேலி செய்ய,

முரளி "என்னோட நிலைமை இப்படி ஆகிடுச்சே... சின்ன வாண்டுங்க எல்லாம் என்னை கேலி செய்துங்க.... இப்ப தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஒருத்தி என்னை முட்டாள்ன்னு சொன்னா" என்றான்.

"யாரு ஷ்ருதியா... எதுக்கு எங்க அண்ணன அப்படி சொன்னா ? நான் அவளை கேட்கிறேன், சரி அண்ணா நிம்மதியா தூங்குங்க குட் நைட்" என்று சொல்லி போன்னை வைத்த ப்ரியா உடனே ஷ்ருதியை அழைத்தாள்,

போன்னை எடுத்த ஷ்ருதி "என்னமா பாச மலர் கிட்ட இருந்து போன் வந்துச்சா... போன்லயே உங்க அண்ணன் அழுதாரா" என்று கேட்க,

"அதெல்லாம் உன்கிட்ட சொல்ல முடியாது, இப்ப நான் உன்கிட்ட ஒரு விஷயம் சொல்ல போன் பண்ணேன், முரளி அண்ணா பேசினத தயவு செய்து கௌதம்கிட்ட சொல்லிடாத ஷ்ருதி" என்றதும்,

***"ஏன் தெரிஞ்சா என்ன ? முரளி தெரியாம தானே பேசினாங்க" என்று ஷ்ருதி கேட்க,***

***"தெரியாம சொல்லி இருந்தாலும், கௌதம் மனசுல ஒரு சின்ன வருத்தம் முரளி அண்ணா மேல வந்திடும். அது வேண்டாமே ப்ளீஸ் சொல்லாத" என்றதும், ஷ்ருதியும் சரி என்றாள்.ப்ரியா நிம்மதியாக போன்னை வைத்துவிட்டு தூங்க சென்றாள்.***

***மிதுவுக்கு கார்த்திக் தன்னை காதலிக்கிறேன் என்று சொல்லவில்லை என்றாலும், அவளுடைய காதலை புரிந்து... ஏற்று கொண்டதை நினைத்து சந்தோசம் அடைந்தாள். கார்த்திக் ஒரு நாள் நிச்சயம் தன்னிடம் காதலை சொல்வான் என்ற நம்பிக்கை மிதுவுக்கு வந்தது. அவள் அந்த நாளுக்காக காத்திருந்தாள்.***

***கார்த்திக் மிதுவிடம் வெளியே சென்றுவிட்டு வந்த அன்று பேசியது தான் அதற்கு பிறகு அவன் அவளை அழைக்கவில்லை, வரும் ஞாயிற்றுகிழமை அவன் வீட்டுக்கு போவோமா வேண்டாமா என்று தனக்குள் பட்டிமன்றம் நடத்தியவள், கார்த்திக்கை பார்க்க வேண்டும் என்ற ஆசையில் போவது என்று முடிவு செய்தாள்.***

***மிது வழக்கம் போல் கார்த்திக்கின் அம்மாவிடம் போன் செய்து பேச அவர் வீட்டுக்கு வா என்றதும் கிளம்பி சென்றாள். கார்த்திக்கின் வீட்டுக்கு வந்த மிதுவை ரவி சந்தோஷமாக வரவேற்றார்.***

***கார்த்திக் அப்போது தான் குளித்து முடித்து தலை துவட்டியபடி***



Ramya Rajan

வந்தான். மிதுவை பார்த்து வா மிது என்றவன் ஹாலில் அமர்ந்து பேப்பர் படிக்க ஆரம்பித்தான்.

அடப்பாவி... எதோ யாரோ தெரியாதவங்களை பார்க்கிற மாதிரி வான்னு சொல்லிட்டு, அவன் பாட்டுக்கு பேப்பர் படிகிறான்னே... இவனுக்கு போன வாரம் என்னை பிடிச்சிருக்குன்னு சொன்னது நியாபகம் இருக்கான்னே தெரியலையே என்று மனதிற்குள் மிது குழம்ப,

சிறிது நேரத்தில் சாவித்திரி கார்த்திக்கையும், மிதுவையும் டிபன் சாப்பிட அழைத்ததும், இருவரும் சென்று டிபன் சாப்பிட்டனர். அப்போது அவளிடம் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினான் அவ்வளவு தான் அதோடு வெளியே கிளம்பி விட்டான். ரவி கார்த்திக்கிடம் "டேய்... உனக்கு தான் கேர்ள் ப்ரிண்ட இல்லை, ஆனா கௌதமுக்கு இருக்கே அப்புறம் ஏன்டா சண்டேவும் அவன ப்ரீயா இருக்க விடமாற்றே" என்றதும்.

கார்த்திக் மிதுவை பார்த்து கொண்டே "எனக்கு கேர்ள் ப்ரிண்ட இல்லைன்னு... உங்களுக்கு யார் சொன்னா..." என்றவன், அவளை பார்த்து கண் சிமிட்ட,

மிது முகம் சிவந்தவள், ஹப்பாடா.... அவன் மறக்கலை என்று நினைத்து நிம்மதி அடைந்தாள்.

ரவி "அப்ப உனக்கு கேர்ள் ப்ரண்ட் இருக்கா... சொல்லவே இல்ல...

யாரு ?" என்று ஆர்வமாக கேட்க,

"சொல்றேன், நீங்க தான கல்யாணம் பண்ணி வைக்கணும். அப்புறம் சொல்றேன்" என்றவன் வெளியே கிளம்பி சென்றுவிட்டான்.

மிது எப்போதும் போல் சாவித்ரிக்கு சமையலில் உதவியவள், ஹாலில் அமர்ந்து ரவியுடன் பேசிக்கொண்டே டிவி பார்த்தாள். மதியம் உணவிற்க்காவது கார்த்திக் வீட்டுக்கு வந்துவிடுவான் என்று மிது எதிர் பார்க்க.... அவன் அப்போதும் வரவில்லை.

ரவி மாலை மிதுவை கடைக்கு அழைக்க, அவருடன் சென்றவள் அங்கிருந்தே ஹஸ்டல்லுக்கு கிளம்பி சென்றாள். இது வழக்கமாக அவள் இங்கே வரும் போது நடப்பது தான் ஆனால் இத்தனை நாள் தான் வந்ததிற்கும், இன்று தான் வருவதற்கும் வேறுபாடு இருக்கும் என்று நினைத்தவள், கார்த்திக் எப்போதும் நடந்து கொள்வதை போல் இப்போதும் நடந்து கொள்ள சிறிது ஏமாற்றமாக உணர்ந்தாள்.

அடுத்த வாரம் செல்லாமல் அதற்கு அடுத்த வாரம் செல்ல, அப்போதும் கார்த்திக் அவளுடன் சிறிது நேரம் பேசிவிட்டு வெளியே கிளம்பிவிட்டான். மிது தன் மனதை தேற்றி கொண்டாள். அவனுக்கா தோணும் போது வரட்டும் என்று விட்டுவிட்டாள்.

மதியம் சாப்பிட்டுவிட்டு ஹாலில் அமர்ந்திருந்த மிதுவை சாவித்ரி கொஞ்சம் நேரம் கார்த்திக் ரூம்ல படு என்றதும், சரி என்று அவன்

***அறைக்கு சென்று அவன் கட்டிலில் படுத்தவள், அதன் அருகில் டேபிளில் இருந்த கார்த்திக்கின் போட்டோவை கையில் எடுத்து பார்த்தாள்.***

***எதோ நமக்குள்ள கெமிஸ்ட்ரி இருக்கு... ஹிஸ்ட்ரி இருக்குன்னு டைலாக் பேசின... இப்ப ஒண்ணுத்தையும் காணோம் என்று போட்டோவை பார்த்து கேட்டவள், அந்த போட்டோவை அவளது பாகில் வைத்து கொண்டாள்.***

***அதற்க்கு அடுத்து வாரம் மிதுவை செல்லில் அழைத்த ஷ்ருதி "கடைக்கு போலாமா... எங்க வீடு பால் காய்ச்சிறோம்ல... அதுக்கு ஷாப்பிங் போகணும் கூட வரியா" என்று கேட்க, சரி என்று மிது கிளம்பி ஷ்ருதி வீட்டுக்கு சென்றாள்.***

***ஷ்ருதியும், மிதுவும் க்ரோம்பேட்டில் இருந்த ஷாப்பிங் மாலுக்கு சென்றவர்கள், அங்கே ஷாப்பிங் செய்து கொண்டிருக்கும் போது ஷ்ருதி யாரையோ பார்த்து "ஹாய் காவ்யா" என்று கூப்பிடும் சத்தத்தில் திரும்பி பார்த்த மிது, ஷ்ருதியின் அருகே செல்ல, அங்கே ஷ்ருதியோடு ஒரு பெண்ணும் அவளது அப்பாவும் நின்று கொண்டிருந்தனர்.***

***ஷ்ருதி அந்த பெண்ணோடு சரளமாக பேச ஆரம்பித்தாள் "எப்படி இருக்க காவ்யா பார்த்து ரொம்ப நாள் ஆச்சு, ஏன் எங்க வீட்டுக்கெல்லாம் இப்ப வர மாட்ற ?" என்று கேட்க, காவ்யா அவள் அப்பா அருகில் இருந்ததினால் சிரித்து மழுப்பி கொண்டிருந்தாள்.***

Ramya Rajan

காவ்யாவின் அப்பா ஷ்ருதியிடம் "நீங்க ரெண்டு பேரும் ஒரே காலேஜா" என்று கேட்க, ஷ்ருதி "இல்லை..." என்றாள். "அப்புறம் எப்படி தெரியும்" என்று அவர் கேட்க, ஷ்ருதி "ப்ரியா மூலம் தெரியும் என்றதும், "உங்க வீட்ல எத்தனை பேர்" என்று கேட்க, ஷ்ருதி "எங்க அம்மா, அப்பா, நான் அப்புறம், எங்க அண்ணன்" என்றவள் இவரு எதுக்கு இவரு என்ன இப்படி கேள்வி மேல் கேள்வியா கேட்கிறார் என்று மனதில் நினைத்தாள்.

காவ்யாவின் அப்பா பணம் குடுக்க காஷ் கவுன்ட்டர் சென்றதும் ஷ்ருதி காவ்யாவிடம் "இவ மிது, எங்க கார்த்தி அண்ணா லவ் பண்ற பொண்ணு" என்று சொல்ல, காவ்யா மிதுவை பார்த்து புன்னைகையுடன் "ஹாய்... நீங்க ரொம்ப லக்கி" என்றாள், மிது காவ்யாவுடன் பேசும் முன் அவள் அப்பா வந்துவிட அவள் இவர்களிடம் விடைபெற்று சென்றாள்.

மிதுவிற்கு காவ்யா சொன்ன "நீங்க ரொம்ப லக்கி" என்ற வாக்கியமே காதில் ஒலித்தது, காவ்யா யாரு என்று யோசித்தவளுக்கு, இவள் தான் கார்த்தி விரும்பிய பொண்ணா இருக்குமோ என்ற எண்ணம் தோன்ற திரும்பி பார்த்தாள், படி இறங்கி கொண்டிருந்த காவ்யாவும் திரும்பி மிதுவை பார்த்தாள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்து கொண்டனர்.

வியாழன் அன்று மாலை கல்லூரியில் இருந்து வீட்டுக்கு போகும் போது காவ்யாவை பார்த்த ப்ரியா "ஏண்டி நாலு நாளா காலேஜ் வரலை..." என்று கேட்டவள், காவ்யாவின் கையில் இருந்த விலை உயர்ந்த செல்லை பார்த்துவிட்டு "புது செல் போன் வாங்கி

இருக்கியா" என்று கேட்க,

காவ்யா "நான் வாங்கலை எனக்கு கிப்டா வந்தது",

"இவ்ளோ காஸ்ட்லி ஆன கிபிட் யார் குடுத்தா ?" என்று ப்ரியா கேட்க,

காவ்யா "என்னை கல்யாணம் பண்ணிக்க போறவர் குடுத்தார்" என்றதும்,

அதிர்ந்த ப்ரியா "என்ன சொல்ற காவ்யா கல்யாணம் பண்ணிக்க போறவரா... யாரு ?, எதுக்கு இப்படி திடிர்ன்னு ?" என்று கேட்க,

"எல்லாம் உன்னோட நாத்தனார் பண்ண வேலை தான்" என்று காவ்யா சொல்ல,

"யாரு ஷ்ருதியா... அவ என்ன பண்ணா ? " என்று இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளாமல் ப்ரியா கேட்க,

"போனவாரம் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்ல் அவளை சந்தித்தை சொன்னவள், எங்க அப்பா சும்மாவே ஆடுவாரு... இதுல அவ தனக்கு ஒரு அண்ணன் இருக்கார் என்றும், நான் அவங்க வீட்டுக்கு வேற வந்திருக்கேன்னு சொன்னா சும்மா இருப்பாரா, எங்க

Ramya Rajan

***அம்மாவை போட்டு பாடா படுத்தி, என்கிட்டயும் விசாரணை செஞ்சும் அவருக்கு நம்பிக்கை வரலை. எங்க அக்காவோட சின்ன மாமனார் பையனுக்கு ஏற்கனவே என்னை கேட்டாங்க. எங்க அப்பா படிப்பு முடியலையேன்னு யோசிச்சாரு, இப்ப அந்த இடத்தையே எனக்கு முடிவு பண்ணிட்டாரு" என்றதும்,***

***ப்ரியாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிய, அதை துடைத்து விட்ட காவ்யா "நீ வருத்தபடும்படி எதுவும் இல்லை. நான் எங்க அக்கா கல்யாணத்தின் போது அவரை பார்த்திருக்கேன், என்னையே சுத்தி சுத்தி வந்தாரு, பேரு சுந்தர் US ல சாப்ட்வேர் இன்ஜினியரா வேலை பார்கிறாங்க" என்றாள்.***

***ப்ரியா "உனக்கு சுந்தரை பிடிச்சிருக்கா காவ்யா",***

***"ம்ம்..பிடிச்சிருக்கு, ரொம்ப நல்ல டைப். அவர் இப்ப USலதான் இருக்கார். நிச்சயம் எங்க வீட்ல தான் நடந்தது. அவரு நிச்சயத்துக்கு வரலை, கல்யாணம் அவரு அடுத்து எப்ப லீவ்ல வர்றாரோ அப்ப. அவரு தான் அவர் தம்பி மூலமா இந்த செல் போன் வாங்கி குடுத்தாரு. இப்ப நான் டெய்லி அவர்கிட்ட பேசறேன். நானும் கல்யாணம் முடிஞ்சதும் US போய்டுவேன், எனக்கு எங்க அப்பாகிட்ட இருந்து விடுதலை ரொம்ப சந்தோஷமா இருக்கேன்" என்றாள் காவ்யா.***

***ப்ரியா "நீ நிஜமாவே சந்தோஷமா இருக்கியா காவ்யா",***

Ramya Rajan

காவ்யா "நிஜமாவே நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். எங்க அப்பா தான எங்களை போட்டு எப்பவும் படுத்துவாரு, இப்ப நான் அவர் முன்னாடியே தைரியமா சுந்தர்கிட்ட பேசுறேன். அவர் முகத்தை பார்க்கணுமே" என்று சிரிக்க ப்ரியாவும் சிரித்தாள்.

ப்ரியா சந்தோஷமாக காவ்யாவை கட்டி கொண்டு வாழ்த்து சொல்ல,

காவ்யாவும் ப்ரியாவை கட்டிக்கொண்டாள். இவர்கள் இருவரும் கட்டி பிடித்து கொண்டு நிற்கும் போது அங்கே கௌதமும், கார்த்திக்கும் வந்தனர்.

கௌதம் ப்ரியாவிடம் "பப்ளிக் பிளேஸ்ல ரெண்டு பேரும் என்ன பண்றீங்க" என்று கேட்டவனின் கண்களில் தெரிந்த பொறாமையை பார்த்து சிரித்தாள் காவ்யா.

ப்ரியா "காவ்யாவுக்கு கல்யாணம் நிச்சயம் ஆகீருக்கு, மாப்பிள்ளை US ல இருக்கார்" என்று சொன்னதும்,கௌதமும், கார்த்திக்கும் காவ்யாவுக்கு வாழ்த்து சொன்னார்கள்.

கௌதமும், ப்ரியாவும் முன்னே நடக்க, கார்த்திக்கும், காவ்யாவும் அவர்களுக்கு பின்னே சென்றனர். கார்த்திக் அமைதியாக வர காவ்யா "நான் மிதுவ பார்த்தேன் ரொம்ப அழகா இருக்காங்க, ரொம்ப லக்கி அவங்க" என்று சொல்ல,

கார்த்திக் "அவ இல்ல நான் தான் ரொம்ப லக்கி, அவ என் மேல



Ramya Rajan

ரொம்ப அன்பு வச்சிருக்கா, எனக்கு ஏதாவதுன்னா... அவ தான் ரொம்ப துடிப்பா" என்று சொல்ல, அவன் சொன்னதை கேட்டு புன்னகைத்த காவ்யா "சோ ஸ்வீட்" என்றாள். பைக் ஸ்டாண்ட் வந்ததும் கார்த்திக் காவ்யாவிடம் விடைபெற்று கொண்டவன், கௌதமிடம் "நான் மிதுவ பார்க்க போறேன்" என்று சொல்லிவிட்டு கிளம்பினான்.

கார்த்திக் மிதுவின் ஹஸ்டலுக்கு அருகில் வந்துவிட்டு அவளுக்கு போன் செய்ய, போன்னை எடுத்து பார்த்த மிது, இவங்க ஏன் இப்ப போன் பண்றாங்க என்று யோசித்து கொண்டே "ஹலோ கார்த்திக்" என்றாள்.

கார்த்திக் "மிது நான் வெளிய தான் இருக்கேன், வரியா" என்று கேட்க,

"இப்பவா...சரி இருங்க வரேன்" என்று வேகமாக கிளம்பி வெளியே வந்தாள்.

கார்த்திக் தனது பைக்ல் அமர்ந்திருந்தவன், மிது அருகில் வந்ததும் அவளை வண்டியில் ஏறு என்றான். அவள் ஏறியவுடன் அவளை சற்று தள்ளி இருந்த ஐஸ் கிரீம் ஷாப்க்கு அழைத்து சென்றான். இருவரும் கடைசியில் இருந்த இருக்கையில் சென்று அமர, கார்த்திக் மிதுவின் எதிரில் அமராமல், அவள் அருகில் நெருங்கி அமர்ந்தான்.

***மிதுவுக்கு இன்று நடப்பதெல்லாம் கனவில் நடப்பது போல் இருந்தது. மிது கார்த்திக்கிடம் "எதுக்கு இங்க வந்திருகோம்" என்று கேட்க,***

***கார்த்திக் "சும்மா எனக்கு உன்னை பார்க்கணும் போல இருந்துச்சு அதனால தான்",***

***"நான் உங்க வீட்டுக்கு வந்த போது எல்லாம் என்னை கண்டுக்கலை இப்ப என்ன திடிர்ன்னு" என்று மிது கேட்டதும்,***

***"என்னவோ இன்னைக்கு மனசு உன்னை ரொம்ப தேடுச்சு" என்றவன் மிதுவின் கையை படித்து கொண்டான்.***

***அவனின் செயல் மிதுவுக்கு கண்களை கலங்க செய்ய, அதை கவனித்த கார்த்திக் "சாரி மிது... நான் உன்ன ரொம்ப கஷ்ட்ட படுத்துறேன்ல" என்றான்.***

***இல்லை என்று தலை ஆட்டிய மிது அவனின் தோள் சாய, இருவரும் சிறிது நேரம் அப்படியே இருந்தனர்.***

***சிறிது நேரத்தில் இயல்புக்கு திரும்பிய கார்த்திக், இருவருக்கும் ஐஸ் கிரீம் வாங்க. இருவரும் சாப்பிட்டு கொண்டே பேசினார்கள்.***

***கார்த்திக் "எங்க வீட்ல திருடு போய்டுச்சு மிது " என்றான்.***

***அவன் சொன்னதை கேட்டு திடுகிட்ட மிது "என்ன காணோம் ?" என்று கேட்க,***

***கார்த்திக் "என்னோட போட்டோவ காணோம், யாரோ திருடிட்டாங்க" என்றவன் குறும்பு புன்னைகையுடன் மிதுவை பார்க்க,***

***மிது "யாரவதுஅவங்க வீட்ல டிஷ்ட்டி கழிக்க.... உங்க போட்டோவ எடுத்திட்டு போய் மாட்டி இருப்பாங்க" என்று சொன்னதும்,***

***"அப்படி இருக்காது... என்னை எப்பவும் பார்க்கனும்ன்னு நினைக்கிறவங்க தான் எடுத்திட்டு போய் இருப்பாங்க, டெய்லி என் போட்டோவுக்கு முத்தம் குடுப்பாங்களோ" என்று கார்த்திக் மிதுவை பார்த்து கேட்க,***

***அவள் "எனக்கு எப்படி தெரியும்" என்றாள்,***

***கார்த்திக் "உனக்கு தான் தெரியும். நீ தானே என்னோட போட்டோவ எடுத்திட்டு போன திருடி" என்றதும்,***

***மிது கார்த்திக்கை பார்த்து "நேர்ல வந்தாலும் பார்க்க முடியல, எதுக்கு வீணா அலையணும் அதனால தான் போட்டோ எடுத்திட்டு வந்தேன்" என்றாள்.***

***கார்த்திக் "சாரிடா மிது இனிமே அப்படி நடக்காது" என்றதும்.***

***சரி என்ற மிது "டைம் ஆகிடுச்சு... என்னை ஹாஸ்டலில் விடுங்க" என்றாள்.***

***கார்த்திக் அவளை ஹஸ்டல் அருகில் விட்டவன், அவனும் பைக்கில் இருந்து இறங்கி அவளை அங்கிருந்த மரத்தடிக்கு அழைத்து சென்று ஒரு முறை அவளை இறுக அனனைத்து பின் விடுவித்தான்.***

***மிது கார்த்திக்கை திரும்பி, திரும்பி பார்த்து கொண்டே சென்றாள். மிது ஹஸ்டல் உள்ளே சென்றதும் கார்த்திக் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் தன்னுடைய வீட்டுக்கு கிளம்பி சென்றான்.***

23

Ramya Rajan

முரளி ஞாயிறு அன்று நடக்கவிருக்கும் கிருஷ்ணகுமாரின் வீட்டு கிரகபிரவேசத்திற்கு வெள்ளிகிழமை மாலையே வந்து விட்டான். ராமமூர்த்தி வெள்ளி அன்று இரவு உணவிற்கு கிருஷ்ணகுமார் குடும்பத்தை முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று தன்னுடைய வீட்டிற்க்கு அழைத்திருந்தார்.

ஷ்ருதி என்ன சொல்ல போறாங்களோ என்று பயந்து கொண்டே சென்றாள் ஆனால் அவளை பார்த்ததும் ஜானகி வா மருமகளே என்றதும் ஷ்ருதியின் கலக்கம் மறைந்தது. ஜானகியும், ஷ்ருதியும் கட்டிகொள்ள, சாருமதி நாங்க யாருன்னு காட்றோம் என்று நினைத்தவர் ப்ரியாவை கட்டிக்கொண்டு முத்த மழை பொழிந்தார்.

ராமமூர்த்தி கிருஷ்ணா குமாரிடம் "உனக்கு தெரியும் நம்ம பிள்ளைங்க ஒருத்தர ஒருத்தர் விரும்புறாங்க. இன்னைக்கு நாட்ல முக்கால் வாசி காதல் கல்யாணம் தான் நடக்குது. இவங்க தெரியாதவங்களை கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னாலும் நாம பண்ணி தான் வைக்கணும் அதனால் பின்னாடி பிரச்சனை வரலாம் ஆனா... நாம இவங்க விஷயத்துல பயப்பட வேண்டியது இல்லை, ஏன்னா... நம்ம ரெண்டு குடும்பத்துக்கும் ஒருத்தர ஒருத்தர் நல்லா தெரியும் அதனால கவலைப்பட வேண்டாம்" என்றதும்

கிருஷ்ணகுமார் "ஆமா... நீ சொல்றது கரெக்ட் தான் நமக்கு இவங்களோட குணத்தை பத்தி நல்லா தெரியும், அதே மாதிரி அவங்களுக்கும் ஒருத்தர பத்தி ஒருத்தருக்கு நல்லா தெரியும். வெளிய தெரியாதவங்க குடும்பத்தில பொண்ண குடுத்திட்டு அவங்க எப்படி பார்த்துப்பாங்கலோன்னு நினைச்சு கவலை பட

வேண்டாம்" என்றார்.

ராமமூர்த்தி "எல்லாம் சரி தான் எங்க அம்மாவை சமாளிகிறது தான் கஷ்ட்டம். அவங்களுக்கு முரளிய என்னோட தங்கச்சி பொண்ணுக்கு செய்யணும்னு ஆசை அதனால அவங்க பிரச்சனை பண்ணுவாங்க, என்னால அவங்ககிட்ட ஒரேடியா உறவை முறிச்சிக்க முடியாது எனக்கு என்னோட அம்மாவும் தங்கையும் வேண்டும்" என்று சொல்லி நிறுத்த....

கிருஷ்ணகுமார் "கண்டிப்பா புதுசா வர உறவுக்காக, பழைய உறவுகல நாம விட முடியாது" என்றார்.

ராமமூர்த்தி தொடர்ந்து "அதுவும் இன்னும் என்னோட தங்கச்சி பையன் அருணுக்கு கல்யாணம் ஆகலை, அவனுக்கு ஏன்னோ இதுவரை பொண்ணே அமையலை, நல்ல பையன், முரளியவிட பெரியவன் அவன் இன்னும் கல்யாணம் ஆகாம இருக்கும் போது, நாம இவங்க கல்யாண விஷயத்த பேச முடியாது அதனால நான் ஒரு யோசனை வச்சிருக்கேன்" என்றார்.

எல்லோரும் ஆவலாக அவரையே பார்க்க கௌதம் மட்டும் அலட்ச்சியமாக அமர்ந்திருந்தான்.

ராமமூர்த்தி "நாம இப்ப முரளி ஷ்ருதி விரும்புறதை மட்டும் சொல்வோம், அதுவும் எங்க அம்மாவே பேச்ச ஆரம்பிச்சதும், முதல்ல அருண் கல்யாணம் முடியட்டும் அடுத்து முரளிக்கும், ஷ்ருதிக்கும் பண்ணிட்டு அதுக்கடுத்து என்னோட தங்கச்சி

பொண்ணுக்கும் பண்ணிட்டு கடைசியா நாம கௌதம் ப்ரியா கல்யாணம் பண்ணும் போது இவங்களும் விரும்புறாங்கன்னு சொல்வோம், இப்பவே ரெண்டு கல்யாணம் பத்தியும் பேசினா... அவங்க ரொம்ப டென்ஷன் ஆவாங்க" என்று சொல்ல...

ஷ்ருதி நிம்மதியாக மூச்சுவிட்டாள். முரளி, ப்ரியா சிரிக்க கௌதம் உர்ரென்று இருந்தான்.

ராமமூர்த்தி சொன்னதை அனைவரும் ஒத்து கொண்டனர். பெரியவர்கள் ஹாலில் அமர்ந்து பேச, இளையவர்கள் மாடிக்கு சென்றனர்.

முரளின் அறையில் அவனும் ஷ்ருதியும் நின்று பேச, ப்ரியா கௌதமை அழைத்து கொண்டு மொட்டை மாடிக்கு சென்றாள்.

ப்ரியா மாடிக்கு சென்றதும் "எல்லாரும் சந்தோஷமா இருக்காங்க, நீங்க மட்டும் ஏன் கோபமா இருக்கீங்க" என்று கேட்க...

கௌதம் "என்ன உங்க அப்பா சும்மா பாட்டி பாட்டின்னு பயம் பொருத்துறாரு, உங்க பாட்டிக்கு பயந்திட்டு என்னால உன்கூட பேசாம எல்லாம் இருக்க முடியாது. உங்க பாட்டி நாளை கழிச்சு எங்க வீட்டுக்கு வருதுல நான் அது தலைல கல்ல தூக்கி போட்றேன்னா இல்லையானு பாரு..." என்றதும்,

பயந்த ப்ரியா "ஐயோ ! கௌதம்... அந்த மாதிரி எதுவும்

பண்ணிடாதீங்க" என்றாள்

"கல்யாணம் செஞ்சுக்க போறவங்களுக்கு பிடிகிதான்னு தான் பார்க்கணும், அதவிட்டு பாட்டிக்கு புடிக்குதா தாத்தாவுக்கு புடிக்கிதான்னு எல்லாம் பார்க்க கூடாது. உங்க அப்பாவுக்கு அவர் பிள்ளைங்களுக்கு யார கல்யாணம் செஞ்சு வைக்கிறதுன்னு தெரியாதா... எதுக்கு உங்க பாட்டிக்கு பயப்படனும்" என்று கௌதம் கோபபட...

ப்ரியா "அது அப்படியே எங்க அப்பா பழகிட்டாறு அதனால தான்" என்றதும்

"நீ காலேஜ் முடிச்ச ஒரு மாசத்துக்குள்ள நாம கல்யாணம் முடியனும் அதுக்கு மேல எல்லாம் என்னால வெயிட் பண்ண முடியாது. இவரு எப்ப அருணுக்கு கல்யாணம் பண்ணி, முரளிக்கு கல்யாணம் பண்றது அதுக்கப்புறம் அருணோட தங்கச்சிக்கு வேற கல்யாணம் பன்னனும்மாம், நாலஞ்சு வருஷம் ஆகிடும் போல நம்மால அவ்வளவு நாள் வெயிட் பண்ண முடியாது. முரளிக்கும், ஷ்ருதிக்கும் இந்த வருஷம் பண்ண சொல்லு நாம அடுத்த வருஷம் பண்ணிக்கலாம்."

"நான் அடுத்த வருஷம் தர்ட் இயர் தான் படிப்பேன்..."

கௌதம் "உன்னை யாரு... be படிக்க சொன்னா நீ ba படிச்சிருந்தாலும், நான் உனக்கு நம்ம கம்பெனி வேலை சொல்லி தந்திருப்பேன் இப்படி ஒரு வருஷம் தள்ளி போதே..." என்று

**ஆத்திரப்பட...**

**ப்ரியா "நீங்க முதல்லையே சொல்லி இருக்கணும்... இப்ப சொன்னா..." என்றாள்.**

**இவர்கள் இருவரும் பேசிய அனைத்தையும் மாடிப்படியில் நின்று கேட்ட முரளி சிரிக்க தொடங்க ஷ்ருதி அவனை இழுத்துக்கொண்டு அவன் அறைக்குள் சென்றாள்.**

**அறைக்குள் வந்த முரளி சிரிப்பை அடக்க முடியாமல் வாய்விட்டு சிரித்தான்.**

**ஷ்ருதி "போதும் ரொம்ப சிரிக்காதீங்க..." என்றதும்,**

**"உங்க அண்ணன் என்ன இப்படி காமெடி பண்றான்" என்று முரளி சொல்ல...**

**ஷ்ருதி "ஏன்... எங்கண்ணன் காமெடி பண்ணது மட்டும் தான் உங்க கண்ணுக்கு தெரிஞ்சுதா... கூட உங்க தங்கச்சி அவன் பேசினதுக்கு ஒத்து ஊதினாலே, அது உங்களுக்கு தெரியலையா..." என்றாள் கடுப்புடன்.**

**முரளி "விட்டா... அவன் நமக்கு முன்னாடி கல்யாணம் பண்ணிப்பான் போலிருக்கு" என்றதும்,**

"ஆமா... அது என்னவோ உண்மை தான். இப்ப உங்க அப்பா கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டதால பேசாம இருக்கான். அவரு மட்டும் மாட்டேன்னு சொல்லி இருக்கணும், அவன் இந்நேரம் ப்ரியா கழுத்துல தாலி கட்டி இருப்பான்" என்றாள் ஷ்ருதி.

கிருஷ்ணகுமார் கேட்டு கொண்டதால் ஞாயிறு கிழமை வீடு கிரகபிரவேசதிற்கு சனிக்கிழமை காலையே மிதுவின் தந்தை ராகவன் தனது மனைவியுடன் வந்துவிட்டார். வந்ததும் மிதுவையும் ஹாஸ்டலுக்கு சென்று இரண்டு நாட்களுக்கு தங்களுடன் தங்க அழைத்து வந்துவிட்டார்.

சனிக்கிழமை காலை உணவு முடிந்ததும் ஜானகியும், ப்ரியாவும் சாருமதிக்கு உதவி செய்ய அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தனர்.

கிருஷ்ணகுமாரின் சித்தப்பா ஊரிலிருந்து தனது முழு குடும்பத்துடன் விழாவுக்கு வந்திருந்தார். அவர்கள் காலை உணவை முடித்து கொண்டு சென்னையை சுற்றி பார்த்துவிட்டு இரவு வருவதாக சொல்லி வெளியே சென்று விட்டனர்.

ஷ்ருதியின் வீட்டில் இப்போது ப்ரியாவின் குடும்பமும், மிதுவின் குடும்பமும் தான் இருந்தது. வெளியே சென்றிருந்ததால் காலை உணவை கௌதமும், கார்த்திக்கும் பதினோரு மணிக்கு தான் சாப்பிட்டு கொண்டிருந்தனர். அவர்களோடு ஷ்ருதி, ப்ரியா மற்றும் மிது டைனிங் ஹாலில் அமர்ந்திருக்க.

**ஹாலில் சாருமதி, ஜானகியோடு மிதுவின் பெற்றோர் அமர்ந்து பேசி கொண்டிருந்தனர்.**

**மிதுவின் பெற்றோர் வந்திருப்பதால் கௌதமும், ஷ்ருதியும் கார்த்திக்கை மறைமுகமாக கேலி செய்து அவனை ஒரு வழி ஆக்கினார்கள். அவர்கள் செய்யும் கேலியை ப்ரியாவும், மிதுவும் ரசிக்க, கார்த்திக் இவன் எவ்ளோ அடிச்சாலும் தாங்குவாண்டா ரேஞ்சுல்**

**உட்கார்ந்து இருந்தான்.**

**" மாமா உன் பொண்ண குடு அட**

**ஆமாம் சொல்லி கொடு**

**இது சாமி போட்ட முடிச்சு**

**அதுதாண்டா மூணு முடிச்சி**

**யாருக்கும் தெரியாம நான்**

**தாலிய கட்டவும் மாட்டேன்**

**நியத்த மறக்காம அட**

**நானும் உன்கிட்ட கேட்டேன்**

**என்னோட ஆசை உன் பொண்ணோட பேச**

**எ மாமா நீ சொன்னா கேளு …"**



Ramya Rajan

என்று கௌதமும், ஷ்ருதியும் பாட,கார்த்திக் "டேய்... நீங்க பண்றதெல்லாம் பார்த்து, அவரு எனக்கு பொண்ணு குடுக்க மாட்டேன்னு சொல்லிட போறார்டா" என்று பயப்பட,

ப்ரியா "கவலைபடாதீங்க கார்த்திக் அண்ணா, நான் உங்களுக்காக அவர்கிட்ட பொண்ணு கேட்கிறேன்" என்றாள்."பார்த்தியா இப்படி ஒரு ஆள, நீ சப்போர்ட்க்கு வச்சிக்கிட்டு பயப்படலாமா" என்றான் கௌதம்.

சாப்பிட்டு முடித்து அனைவரும் ஹாலில் வந்து அமர, ராகவன் கௌதமிடம் "பாட்டெல்லாம் சூப்பரா பாடற" என்றதும்.

கௌதம் எங்க இவரு மாத்தி புரிஞ்சிக்க போறார்ன்னு பயந்தவன் "அது கார்த்திக் அந்த பாட்டு பாட சொன்னான், அவன் சார்பா பாடினேன்" என்றான்.

சாருமதி கௌதமிடம் "நாளை காலை பூஜைக்கு வாங்க வேண்டிய சாமான் எல்லாம் வாங்கியாச்சா" என்று கேட்க,

"அம்மா அதெல்லாம் கார்த்திக் டிபார்ட்மென்ட், நீங்க அவன கேளுங்க. எனக்கு வேற வேலை இருக்கு" என்றவன் கார்த்திக்கிடம் சொல்லி கொண்டு வெளியே கிளம்பி செல்ல,

சாருமதி கார்த்திக்கிடம் விவரம் கேட்க அவன் ஒரு பேப்பரை கையில் எடுத்தவன் அவர் சொல்ல சொல்ல குறித்து கொண்டே

***வந்தான். "எல்லாம் ரெடி சாருமா, நீங்க டென்ஷன் ஆகாம இருங்க. எனக்கும் வேலை இருக்கு... நான் போயிட்டு மதியம் வரேன் அப்புறம் புது வீட்டுக்கு போய் அங்க பார்கிற வேலையெல்லாம் பார்த்திட்டு வரலாம்" என்றான்.***

***சாருமதி கார்த்திக்கிடம் மதியம் இங்க சாப்பிட வந்திடு என்றதும் ஷ்ருதி "கார்த்தி அண்ணா எனக்கு மெஹந்தி போட கோன் வேண்டும், நானும் உங்களோட வரேன், கடைல வாங்கிட்டு என்னை வீட்ல விட்டுட்டு போங்க" என்று அவனுடன் கிளம்பினாள்.***

***ராகவனுக்கு கார்த்திக்கை தெரியும் அவர் அடிக்கடி அவனை கௌதமுடன் பார்த்திருக்கார், ஆனால் மிதுவின் அம்மா இப்போது தான் கார்த்திக்கை பார்க்கிறார். அவர் சாருமதியிடம் கார்த்திக்கை பற்றி விசாரிக்க, சாருமதி "அவனும் எங்க பிள்ளை மாதிரி தான், ரொம்ப நல்ல பையன்" என்று கார்த்திக்கின் படிப்பு... வீடு...பெற்றோர்கள் என்று எல்லாவற்றையும் விளக்கியவர். இப்போது கௌதமும், கார்த்திக்கும் ஒன்றாக சேர்ந்து சிறிய தொழிற்ச்சாலை ஆரம்பித்ததையும் சொன்னார்.***

***மிது மெதுவாக அவளது அம்மாவிடம் "நானும் அவங்க வீட்டுக்கு அடிக்கடி ஷ்ருதியோட போவேன், நான் உங்ககிட்ட சொல்லி இருக்கேன் இல்ல, ஒருத்தவங்களுக்கு நம்ம ஊரு சமையல் பிடிக்கும்ன்னு, அது இவங்க அப்பா தான், என்னை ரொம்ப நல்லா கவனிச்சிப்பாங்க" என்றதும், மிதுவின் அம்மா "யாரு கவனிப்பா ?" என்று கேட்க,***

Ramya Rajan

***அவளது அம்மாவை ஒரு மாதிரி பார்த்தவள் "அந்த அங்கிள்லும்,ஆன்டியும் தான். நாம இன்னைக்கு சாயங்காலம் அவங்க வீட்டுக்கு போகலாமா, உங்களை அவங்க வீட்டுக்கு கூட்டிட்டு வர சொன்னாங்க" என்று மிது கேட்க, மிதுவின் அம்மா சரி பார்க்கலாம் என்றார்.***

***கார்த்திக் தனது அப்பாவிடம் "மிதுவோட அப்பா அம்மா சாயங்காலம் இங்க வரலாம் என்றவன். அப்பா உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்" என்றான்.***

***ரவி சொல்லு என்றவர் அவனுடன் சோபாவில் சென்று அமர்ந்தார். கார்த்திக்கின் அம்மா இன்னும் வங்கியில் இருந்து வரவில்லை.***

***கார்த்திக் "அப்பா எனக்கு மிதுவ பிடிச்சிருக்கு, மிதுவுக்கும் என்னை பிடிச்சிருக்கு" என்றதும்,***

***ரவி "எனக்கும் தான் மிதுவ பிடிச்சிருக்கு" என்றார்,***

***பல்லை கடித்த கார்த்திக் "உங்களுக்கு பிடிக்கிறது வேற... எனக்கு பிடிக்கிறது வேற.... எனக்கு அவளை கல்யாணம் செஞ்சுக்குற அளவு பிடிச்சிருக்கு" என்றதும்,***

***சந்தோஷப்பட்ட ரவி "உண்மையாவா கார்த்திக், நிஜமாவே நீ நல்ல முடிவு எடுத்திருக்க, மிது மாதிரி ஒரு பொண்ணு... நம்ம***



Ramya Rajan

குடும்பத்துக்கு மருமகளா வந்தா... அதவிட சந்தோசம் வேற இல்லை" என்றார்,

"மிதுவோட அப்பா அம்மாவுக்கு எங்க விஷயம் தெரியாது, இப்ப சொல்ல வேண்டாம். ஆனா நீங்க என்ன பண்ணுவீங்களோ தெரியாது அவங்களுக்கு நம்ம குடும்பத்தை பிடிக்கணும், அப்ப தான் நாம அப்புறமா பொண்ணு கேட்க்கும் போது வசதியா இருக்கும்" என்றவன்

" நீங்க தான் மிதுவ மருமகன்னு கூப்பிட்டு எல்லாத்தையும் ஆரம்பிச்சு வச்சீங்க.... அதனால எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செஞ்சு வைக்க வேண்டியது உங்க பொறுப்பு, நான் உங்களை நம்பி தான் இருக்கேன்" என்று கார்த்திக் தனது அப்பாவிடம் சரணடைய,

ரவி "கவலைபடாதே நான் உனக்காக பண்ணலைனாலும், மிது வைக்கிற நாட்டு கோழி குழம்புக்காக கண்டிப்பா... உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செஞ்சு வைக்கிறேன்" என்றார்.

கார்த்திக் "எனக்கும் அது தெரியும், எப்படியோ எங்களுக்கு கல்யாணம் பண்ணி வச்சா சரி" என்றான்.

மாலையில் முரளியும் வந்துவிட அனைவரும் சேர்ந்து இரண்டு கார்களில் புது வீட்டுக்கு கிளம்பினார்கள். போகும் போது கார்த்திக் வீட்டுக்கு சென்று அவனுடைய அம்மாவையும் அழைத்து செல்வது

**என்று முதலில் அங்கு சென்றனர்.**

**கார்த்திக்கின் அம்மா அப்பா அனைவரையும் மகிழ்ச்சியாக வரவேற்று உபசரிக்க, ப்ரியா, ஷ்ருதி, மிது மூன்று பேருமே அவர்களிடம் உரிமையுடன் பழகுவதையும், மிது தன் சொந்த வீடு மாதிரி அந்த வீட்டில் நடமாடுவதையும் மிதுவின் அம்மா கவனித்து கொண்டுதானிருந்தார்.**

**எல்லோரும் புது வீட்டுக்கு கிளம்ப ரவி ராகவனிடம் "மத்தவங்க போகட்டும்... நாம இப்பயே போய் என்ன பண்ண போறோம், நாம கொஞ்சம் நேரம் கழிச்சு பேசிகிட்டே நடந்து போய்டலாம், இங்க இருந்து கிட்டதான்" என்று சொல்ல, ராகவனும் சரி என்றார். அவருக்கு ரவியை பிடித்திருந்தது. அவரோடு பேசி கொண்டிருப்பதை அவரும் விரும்பினார். கார்த்திக் கிளம்பும் போது தனது அப்பாவை திரும்பி பார்க்க, அவர் நீ போ நான் பார்த்துகிறேன் என்று கண்களால் சொன்னார்.**

**கிருஷ்ணகுமார் சென்னைக்கு வந்ததும், இரண்டு கிரௌண்ட் இடத்தை வாங்கி போட்டிருந்தார். அவருக்கு அப்போது வீடு கட்ட நேரம் இல்லை, அப்போது தான் தொழில் தொடங்கிய புதிது. கௌதம் எப்போதும் வீடு இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்று பேசியதால் அவனே படிப்பை முடித்ததும் கட்டட்டும் என்று நினைத்தார்.**

**கிருஷ்ணகுமார் இடத்தை கேட்டட் கம்யுநிட்டி என்று அழைக்கப்படும் இடத்தில் வாங்கி இருந்தார். இந்த லேஅவுட்டில்**

***வீடு கட்டும் அனைவருக்கும் பொதுவாக நீச்சல் குளம்... ஜிம்... பார்க்...வாக்கிங் ட்ராக் மற்றும் 24 மணி நேரம் செக்யூரிட்டி என்று அனைத்தும் இருந்தது.***

***முரளி போன தடவை வந்த போது வீடு கட்ட ஆரம்பித்த நேரம் தான் பார்த்திருந்தான். அதனால் இப்போது வீட்டை பார்த்ததும் பிரம்மித்தான். வீடு ரொம்ப அழகாக மாடர்னாக மூன்று அடுக்கில் கம்பீரமாக இருந்தது.***

***கௌதம் இரண்டு கிரௌண்ட் இடத்தில் மொத்தமாக வீடு மட்டும் கட்டாமல், முக்கல் வாசி இடத்தில் தான் வீடு கட்டி இருந்தான்.வீட்டை சுற்றி தோட்டமும், வீட்டின் ஒரு பக்கத்தில் லானும், குழந்தைகளுக்காக ஒரு சின்ன நீச்சல் குளமும் அமைத்து இருந்தான்.வீட்டில் வேலைகள் அனைத்தும் முடிந்ததும் தான் கிரகபிரவேசத்திற்கு நாள் குறித்தான். ஒரு வருடத்திற்குள் இந்த வீட்டை கட்டி முடித்தது சாதனை தான்.***

***முரளியும், ஷ்ருதியும் சேர்ந்து வீட்டை சுற்றி பார்த்தனர். வீட்டின் தரை தளத்தில் ஹால், கிட்சென், டைனிங் ஹால், சாமி ரூம் மற்றும் ஒரு பெரிய படுக்கை அறையும். முதல் தளத்தில் ஒரு சிறிய ஹால் அதிலிருந்து பால்கனி, இரண்டு பெரிய படுக்கை அறைகள் அதில் ஒரு படுக்கை அறையின் அருகே ஒரு சிறிய அறையும் இருந்தது. இரண்டாம் தளத்தில் ஒரு பெரிய ஹாலும் அதிலிருந்து வெளியே சென்றால் மொட்டை மாடியும் இருந்தது.***

***வீட்டை சுற்றி பார்த்துவிட்டு மீண்டும் முதல் தளத்திற்கு வந்த***



Ramya Rajan

முரளியும், ஷ்ருதியும் கௌதம் அறைக்கு சென்றனர். முரளி "எல்லா ரூம்லயும் இண்டீரியர் வொர்க் முடிச்சிட்டு, ஏன் இன்னும் இந்த ரூம் மட்டும் முடிக்காம இருக்கு" என்று கேட்டவன், ரெஸ்ட் ரூம் கதவை தவிர அங்கிருந்த இன்னொரு கதவை திறந்து பார்க்க... அந்த கதவு பக்கத்துக்கு அறைக்கு இந்த வழியாகவும் போவதற்காக இருந்தது.

ஷ்ருதி "கௌதம், ப்ரியா எங்க வீட்டுக்கு வந்ததும் தான் இந்த ரூம உபயோகபடுதுவானாம், அதனால அவ வரும் போது அப்ப என்ன மாடல் இருக்கோ... அது மாதிரி பண்ண போறானாம். இந்த பக்கத்து ரூம் அவனோட பசங்களுக்கு அதனால தான் இங்க இருந்து ஒரு கதவு" என்று சொன்னதும்,

முரளி ஆச்சர்யமும் சந்தோஷமும் அடைந்தவன் "கௌதம் ப்ரியாவை எவ்வளவு விரும்பினா இப்படி சொல்வான், உண்மைலேயே நாங்க தேடி இருந்தா கூட இந்த மாதிரி மாப்பிள்ளை ப்ரியாவுக்கு கிடைச்சிருக்காது" என்று சொல்லி கொண்டிருந்த போது மற்ற இரண்டு ஜோடிகளும் அங்கே வந்தனர்.

ஷ்ருதி "அம்மா, அத்தை எல்லாம் எங்கே ?" என்று கௌதமிடம் கேட்க, "கீழ இருக்காங்க" என்றான்.

ஷ்ருதி "உன்னோட பசங்களுக்கு மட்டும் ரூம் போட்டிருக்க, என்னோட பசங்களுக்கு எங்க" என்றதும்,

கௌதம் "ரூம் இருக்கே நீ பார்க்கலை" என்றான்.

**ஷ்ருதி "ஆர்வமாக எங்க இருக்கு ?" என்று கேட்க,**

**மற்றவர்களுக்கு தெரியும் கௌதம் எடாகூடமா எதோ சொல்ல போறான் என்று, அதை தடுப்பதிற்காக முரளி "நம்ம வீட்ல தான் இருக்கே மா இங்க இல்லைனா பரவாயில்லை" என்றான்.**

**ஆனால் ஷ்ருதி விடாமல் "நீங்க சும்மா இருங்க எங்க இருக்கு கௌதம்" என்று ஆர்வமாக கேட்க,**

**"மேல மாடியில போட்டிருக்கேன்னே... நீ பார்க்கலை... பெரிய ரூம் அது யாருக்கு உன் பசங்களுக்கு தான். நாங்க ரெண்டு குழந்தைங்க தான் அதனால் தான் இந்த சின்ன ரூம். நீ எப்படியும் பத்து ரிலீஸ் பண்ணுவ இல்ல, அதனால தான் உனக்கு பெரிய ரூம்" என்றதும் எல்லோரும் சிரிக்க, ஷ்ருதி கௌதமை அடிக்க துரத்தினாள்.**

**சாயங்காலம் வீட்டை அலங்கரிக்கும் ஆட்கள் வந்துவிட, ப்ரியா தான் வந்து வாழ போகும் வீட்டில் அழகான பெரிய கோலம் போட்டாள். ஷ்ருதியும், மிதுவும் அவளோடு சேர்ந்து கலர் போட, கௌதம், முரளி மற்றும் கார்த்திக் அவர்களை சுற்றி நின்று கேலி செய்தனர்.**

Ramya Rajan

24

***மறுநாள் விடியற்காலை மூன்று மணிக்கு ப்ரியாவின் அப்பத்தா லண்டன்னில் இருந்து வந்தவர், சென்னை விமான நிலையத்தில் இறங்கினார். அவர் தனியாக வரவில்லை அவரோடு கூட .........?***

***விமான நிலையத்தில் வந்து இறங்கிய அப்பத்தாவை அழைத்து வர முரளி சென்றிருந்தான். சந்தன நிற காட்டான் புடவையில், கழுத்தில் பவள மாலையும், நெற்றியில் திருநீறும் அணிந்து எழுபது வயதிலும் கம்பீரமாக நிற்கும், தனது அப்பத்தாவின் அருகில் சென்ற முரளி***

"வாங்க அப்பத்தா எப்படி இருக்கீங்க" என்றான், "நல்லா இருக்கேன் முரளி, நீ எப்படி இருக்க ?"என்றார் பதிலுக்கு.

"நல்லா இருக்கேன்" என்ற முரளி இருங்க அப்பத்தா நான் போய் உங்க லக்ஏஜ் எடுத்திட்டு வரேன் என்று திரும்ப,

அப்பத்தா முரளியை தடுத்தவர் "வேண்டாம்... அதுவே இங்க வரும்" என்றார்.

அது எப்படி இங்க வரும் என்று முரளி யோசிக்க, "ஹாய் முரளி" என்று அழைக்கும் குரல் கேட்டு திரும்பியவன், அங்கே வந்த சுமியை பார்த்து அதிர்ச்சி + ஆச்சர்யம் அடைந்தான்.

முரளியின் அருகே வந்த சுமி "என்ன திகைச்சு போய் நிற்கறீங்க, நான் ரொம்ப அழகா இருக்கேன்னா... அது தான் இப்படி பார்கறீங்களா" என்று மழலை தமிழில் கேட்டு, அவள் போட்டிருந்த லாங் ஸ்கர்ட்டை இருப்பக்கமும் பிடித்து அழகாக சுற்றியவள், அவனை பார்த்து சிரிக்க,

முரளியும் பதிலுக்கு சிரித்தவன் "வா... சுமி நான் உன்னை எதிர் பார்க்கலை, நீ வரேன்னு சொல்லலையே... அதனால தான் உன்னை பார்த்ததும் ஷாக் ஆகிட்டேன்" என்றான்.

"அப்ப என் அழக பார்த்து இல்லையா" என்று சுமி சிணுங்க, முரளி என்ன இது இப்பவே கண்ண கட்டுது என்று நினைத்தவன், வீட்ல போய் பேசலாம் என்று அப்போதைக்கு சுமியை சமாளித்து அவர்களை காரில் ஏற்றி கொண்டு வீட்டுக்கு கிளம்பினான்.

ஜானகியும், ப்ரியாவும் விடிய காலையிலேயே எழுந்து குளித்து கிளம்பி ரெடியாக இருந்தனர். ப்ரியா பச்சை கலர் பட்டுபுடவையில் தலை நிறைய பூவோடு பார்க்க கல்யாண பெண் போல் அழகாக இருந்தாள்.

வீட்டிற்க்கு வந்த மாமியாரை வரவேற்ற ஜானகி அவருடன் வந்த சுமியை பார்த்து சந்தோஷம் அடைந்தார். சுமி, வீட்டினருடன் நன்றாக பேசி அரட்டை அடித்தவள், ஜானகி அவளுக்கு எளிதான டிபன் செய்து கொடுக்க அதை சாப்பிட்டதும் தூங்க சென்றாள்.

ராமமூர்த்தி தனது அம்மாவிடம் "நாங்க முதலில் கிரகபிரவேசத்திற்கு செல்கிறோம். உங்களை முரளி வந்து மதிய உணவுக்கு அங்கே அழைத்து வருவான், அதுவரை நன்றாக தூங்கி ஓய்வெடுங்கள்" என்றார்.

அவரது அம்மாவும் சரி என்று உறங்க செல்ல, மற்ற நால்வரும் காரில் கிளம்பினார்கள்.

இவர்கள் புதுவீட்டில் சென்று இறங்கியதும் வாசலுக்கு வந்து வரவேற்ற கௌதம் பட்டுவேஷ்டியில் அழகாகவும், கம்பீரமாகவும்

***இருந்தான். கௌதம் தனது மாமா அத்தையை வரவேற்றவன், அடுத்து முரளியை பார்த்து வாங்க மாப்பிள்ளை என்றதும் பதிலுக்கு முரளி வரேன் மாப்பிள்ளை என்று சிரித்து கொண்டே சொல்ல, கௌதம் ப்ரியாவின் கையை பற்றி வா ப்ரியா என்று அழைத்து சென்றான். வெளியே நின்றிருந்த கார்த்திக் ப்ரியா ரைட் லெக் என்று நியாபகபடுத்த, ப்ரியா கௌதம் கையை பிடித்துகொண்டு, முகத்தில் புன்னகையோடு வலது காலை எடுத்து வைத்து உள்ளே நுழைந்தாள். இது அனைத்தையும் போட்டோகிராபர் படம் எடுத்து கொண்டிருந்தார்.***

***உள்ளே வந்த ராமமூர்த்தி குடும்பத்தை கிருஷ்ணகுமாரும், சாருமதியும் வரவேற்றனர். பூஜை ஆரம்பித்ததும் முரளியின் அருகில் சென்று அமர்ந்த ஷ்ருதி நீல வண்ண பாட்டுபுடவையில் ஒயிலாக இருந்தாள்.***

***ஷ்ருதியின் அருகே அமர்ந்திருந்த மிது பிங்க் கலர் பட்டுபுடவையில் ரோஜா மாதிரி அழகாக இருக்க, கார்த்திக்கின் கண்கள் மிதுவையே சுற்றி வந்தது, மிதுவும் கார்த்திக்கை தனது அப்பா,அம்மாவுக்கு தெரியாமல் பார்த்து கொண்டிருந்தாள்.***

***முரளி அமைதியாக இருக்க அவன் முகத்தை பார்த்த ஷ்ருதி "என்ன ஆச்சு ஏன் டல்லா இருக்கீங்க ?" என்று மெதுவாக கேட்க, முரளி "ஒன்னும் இல்லை.... நல்லாத்தான் இருக்கேன்" என்றான்.***

***ஷ்ருதி "உங்க பாட்டி வந்துட்டாங்களா" என்று கேட்டதும்,***

Ramya Rajan

முரளி "வந்துட்டாங்க" என்றவன் எதோ சொல்ல வந்து சொல்லாமல் நிறுத்தியவன் "பேசாம பூஜைய கவனி" என்றான்.

காலை பூஜைக்கு நெருங்கிய உறவினர்களையும் நண்பர்களையும் மட்டும் தான் அழைத்திருந்தனர், மதிய விருந்துக்கு தான் மற்ற விருந்தினர்களையும் ,தொழில் துறை நண்பர்களையும் அழைத்திருந்ததால். அப்போது ராமமூர்த்தி குடும்பம், கிருஷ்ணகுமாரின் சித்தப்பா குடும்பம், ராகவன் குடும்பம் மற்றும் ரவியின் குடும்பம் மட்டுமே அங்கிருந்தனர்.

பூஜை முடிந்து பால் காய்ச்சியவுடன், ப்ரியா டம்ப்ளரில் பாலை ஊற்றி அனைவருக்கும் எடுத்து சென்று கொடுத்தாள். காலை உணவு முடிந்ததும் பெரியவர்கள் அனைவரும் ஆளுக்கு ஒரு பக்கம் ஓய்வெடுக்க, இளையவர்கள் அனைவரும் மாடியில் கௌதம் அறையில் வட்டமாக அமர்ந்து பேசி கொண்டிருந்தனர். மூன்று ஆண்கள் பக்கத்திலும் அவரவர் ஜோடி அமர்ந்திருக்க, அவர்கள் விடும் ஜொல்லிர்க்கு கேட்கவா வேண்டும்.

கார்த்திக் கௌதமிடம் "இருந்தாலும் நீ பண்ணும் அலும்பு தாங்கலைடா காலையில ப்ரியா அம்மா அப்பா முன்னாடியே... அவ கைய புடிச்சு உள்ள கூடிட்டு வர, உனக்கு எவ்வளவு கொழுப்பு" என்றதும்,

கௌதம் "அவங்க அப்பா, அம்மா இருந்ததுனால தான் கைய புடிச்சு

கூடிட்டு வந்தேன், இல்லைனா தூக்கிட்டு இல்ல வந்திருப்பேன்" என்றான்.

கௌதம் சொன்னதை கேட்ட ப்ரியா அவன் கையை பிடித்து கிள்ள

முரளி "வேண்டாம் கௌதம், ப்ரியாவுக்கு நாங்க ரெண்டு அண்ணன்கள் இருக்கோம், நியாபகம் வச்சுக்கோ... எப்பவும் நாங்க ஒரே மாதிரி இருக்க மாட்டோம்" என்றதும்,

கார்த்திக்கும் "ஆமாம் நியாபகம் வச்சுக்கோ" என்று சொல்ல,

"உங்க ரெண்டு பேருக்கும் என்மேல பொறாமை, உங்களுக்கு தைரியம் இருந்தா... நீங்களும் என்ன மாதிரி இருக்க வேண்டியது தான அதவிட்டுட்டு என்னை மிரட்றீங்க" என்று கௌதம் சொல்ல,

அவன் சொன்னது உண்மை என்றதால் முரளியும், கார்த்திக்கும் வாயை மூடி கொண்டனர்.

முதலில் அனைவரும் சேர்ந்து அரட்டை அடித்தவர்கள் பின்பு அவரவர் ஜோடியுடன் மெதுவான குரலில் பேச ஆரம்பித்தனர்.

கார்த்திக் மிதுவிடம் "எங்க அப்பாவும் உங்க அப்பாவும் ரொம்ப

***க்ளோஸ் ஆகிட்டாங்க பார்த்தியா" என்றதும், மிது "பார்த்தேன்" என்றாள்.***

***"நம்ம ரெண்டு பேர் குடும்பத்துக்கும் ஒருத்தர ஒருத்தர் பிடிச்சா, அப்ப நம்ம கல்யாணத்துக்கு சரின்னு சொல்லிடுவாங்கள" என்று கார்த்திக் கேட்க, மிது சிரித்துக்கொண்டே ஆமாம் என்றாள். கார்த்திக் "நான் நம்ம கல்யாணம் நடக்குமான்னு பயந்திட்டு இருக்கேன், நீ என்ன ரொம்ப அசால்ட்டா இருக்க" என்றான். "அதெல்லாம் நடக்கும்" என்று மிது நம்பிக்கையாக சொன்னதும், கார்த்திக்கின் முகமும் மலர்ந்தது.***

***கௌதம் ப்ரியாவிடம் "கல்யாண பொண்ணு மாதிரி இருக்கடீ" என்றதும் ப்ரியா "நீங்களும் தான் வேஷ்டியில மாப்பிள்ளை மாதிரி இருக்கீங்க" என்றாள். "நமக்கு இன்னைக்கே கல்யாணமா இருக்க கூடாது" என்று கௌதம் பெரு மூச்சு விட, ப்ரியா "ரொம்ப ஆசைதான் போற போக்க பார்த்தா... நமக்கு ஆக எப்படியும் மூன்னு வருஷம் ஆகும் போல" என்றதும், கௌதம் "வேண்டாம் ப்ரியா அத சொல்லி என்னை மூட் அவுட் பண்ணாத" என்றான். ப்ரியா "நீங்க இருக்கீங்க பாருங்க விட்டா இப்பவே தாலி கட்டிடுவீங்க" என்று சொல்லி சிரிக்க, கௌதம் ப்ரியாவை இமைக்காமல் பார்த்து கொண்டிருந்தான்.***

***ஷ்ருதி முரளியிடம் "நான் புடவைல எப்படி இருக்கேன்னு, நீங்க சொல்லலையே" என்றதும், "உனக்கென்னடா நீ எப்பவும் அழகு தான்" என்ற முரளியின் முகம் வாடி இருக்க, ஷ்ருதி "என்ன ஆச்சு முரளி ? இன்னைக்கு நீங்க சரியாவே இல்லை" என்றாள். சுமி வந்திருப்பதை சொன்னால் ஷ்ருதி மூட் அவுட் ஆகிவிடுவாள் என்று***

***முரளி சொல்லாமல் இருந்தான். இத்தனை நாள் பாட்டி மட்டும் தான் சமாளித்துவிடலாம் என்று நினைத்து இருந்த முரளி இப்போது சுமியும் வந்திருப்பதால் பிரச்சனை பெருசாகும் என்று கவலைப்பட்டான், அதை சொல்லி ஷ்ருதியை வருந்த வைக்க விரும்பாமல் "அதெல்லாம் ஒன்னும் இல்லை நைட் தூங்கலை இல்ல, அதனால தான்" என்றவன் ஓரமாக இருந்த பாயை எடுத்து விரித்து அதில் சென்று படுத்துவிட்டு ஷ்ருதியிடம் "12 மணிக்கு எழுப்பிவிடு, பாட்டியை கூப்பிட போகணும்" என்று சொல்லி குப்புற படுத்து தூங்க தொடங்கினான்.***

***கார்த்திக்கும், கௌதமும் மதிய விருந்துக்கான வேலையை பார்க்க செல்ல, ப்ரியா, ஷ்ருதி மற்றும் மிது அதே அறையில் மற்றொரு ஓரத்தில் சென்று தாங்களும் படுத்து ஓய்வெடுத்தனர்.***

***இவர்கள் வீட்டிற்க்கு பக்கத்துக்கு மனை காலியாக இருந்ததால் அதில் பந்தல் போட்டு... அலங்கரித்து... பப்பே முறையில் உணவை அடுக்கி, சாப்பிட வருபவர்களுக்கு உட்கார்ந்து சாப்பிட சேர்ரும் போட்டு வைத்திருந்தனர்.***

***மதிய விருந்திற்கு ப்ரியாவும், மிதுவும் முகம் கழுவி தலை வாரி அதே உடையில் இருக்க, ஷ்ருதி மட்டும் உடை மாற்றினாள். முரளி வாங்கி தந்த பிங்க் கலர் காக்ரா சோலியில்... அழகான தேவதை போல் வந்த ஷ்ருதியை, ப்ரியா "இரு இப்ப என்னோட அண்ணன் வந்து உன்னை பார்த்து மயங்க போறார்" என்று கேலி செய்தாள்.***

***மதியம் ஒரு மணி ஆனதும் ஒவ்வொரு விருந்தாளியாக வர***

தொடங்க கிருஷ்ணகுமாரும், ராமமூர்த்தியும் வாசலில் நின்று வரவேற்க, கௌதம் வந்தவர்களுக்கு வீட்டை சுற்றி காட்டி சாப்பிட அழைத்து சென்றான். அங்கே கார்த்திக் விருந்தினர்கள் உணவு அருந்த ஏற்ப்பாடு செய்து கொடுத்தான்.

பெண்கள் எல்லோரும் ஹாலில் அமர்ந்து அரட்டை அடிக்கும் போது கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு ப்ரியா "எங்களோட கார் தான் முரளி அண்ணா வந்துட்டாங்க. வா என்று ஷ்ருதியை கூட்டி கொண்டு வாசலுக்கு" செல்ல, மிதுவும் அவர்களோடு சென்றாள்.

காரின் பின் பக்கத்தில் இருந்து அப்பத்தா இறங்க, முன் பக்கத்தில் இருந்து இறங்கிய சுமி, மறு பக்கத்தில் இருந்து இறங்கிய முரளியோடு வந்த சேர்ந்து அவன் கையை பிடித்துகொண்டு உள்ளே வர, அதை பார்த்த ஷ்ருதி அதிர்ச்சி அடைந்தாள். சுமி ப்ரியாவிற்கு முரளி எடுத்து வந்திருந்த லவெண்டெர் கலர் காக்ரா சோலியை அணிந்திருந்தாள்.

ப்ரியாவிற்கு ஷ்ருதியின் அதிர்ச்சி நன்றாகவே புரிந்தது. அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை, வேகமாக சென்று தனது அப்பத்தாவை வரவேற்றவள். ஷ்ருதியிடம் ஜாடை காட்ட... அவளும் அதிர்ச்சிலிருந்து மீண்டு "வாங்க பாட்டி" என்றாள்.

மிதுவிர்க்கு அப்பத்தாவை ஒரே ஊர் என்பதால் நன்றாக தெரியும், அவள் அவரோடு பேசிக்கொண்டே உள்ளே சென்றாள். ஷ்ருதி ப்ரியாவிடம் "அவள் யார் ?" என்று கேட்க, ஷ்ருதி "அவ தான் எங்க அத்த பொண்ணு சுமி. எங்க பாட்டி கூட தான் வந்தா... உனக்கு



Ramya Rajan

**அண்ணா சொல்லலியா" என்று கேட்க,**

**ஷ்ருதி இல்லை என்று தலை ஆட்டினவள் வாசலிலேயே நிற்க, முரளி சுமியை உள்ளே விட்டதும் வெளியே வந்தவன், ஷ்ருதியை பார்க்க அவள் கோபத்தோடு அவனை முறைத்தாள். இது என்னடா வம்பா போச்சு என்று நினைத்தவன் வெளியே கார்திக்கோடு சென்று நின்று கொண்டான்.**

**ஷ்ருதிக்கு முரளி காலையில் இருந்து எதற்காக அமைதியாக இருந்தான் என்று அப்போது புரிந்தது. ஷ்ருதி உள்ளே வர அங்கே ப்ரியாவோடு சுமி நின்று பேசி கொண்டிருந்தாள். அவர்களோடு மிதுவும் நின்று கொண்டிருந்தாள்.**

**சுமி உயரம் சற்று குறைவு தான், ஆனால் வெளிநாட்டில் பிறந்து வளர்ந்ததால் அவள் வெளிநாட்டினர் போல்... அவர்கள் நிறத்தில் இருந்தாள். கழுத்து, கைகளில் எந்த ஆபரணமும் அணிந்து வழக்கம் இல்லை போலும் அதனால் ஒரு வளைவு, நெளிவே இல்லாமல் இருந்தாள். ஆனால் பார்க்க அழகாக தான் இருந்தாள்.**

**சுமி "சாரி ப்ரியா, உன்னை கேட்காம உன்னோட டிரஸ் எடுத்து போட்டுகிட்டேன். நான் ஜீன்ஸ், ஸ்கிர்ட், டாப் இந்த மாதிரி டிரஸ் தான் கொண்டு வந்தேன் ஆனா பாட்டி அதெல்லாம் போட கூடாது போய் ப்ரியாவோட டிரஸ் எதாவது போட்டுட்டு வான்னு சொன்னாங்க. இந்த டிரஸ் ரொம்ப நல்லா இருந்துச்சு அது தான் போட்டேன்" என்றதும்,**

ப்ரியா "பரவாயில்லை சுமி, இது புது டிரஸ்... நான் இன்னும் போட்டதில்லை... உனக்கு நல்லா இருக்கு, நீயே வச்சுக்கோ" என்றாள்.

சுமி "ரியல்லி நானே வச்சிக்கட்டுமா" என்றவள், ப்ரியாவை கட்டி அனைத்து "யு ஆர் சோ ஸ்வீட்... ப்ரியா" என்று கன்னத்தில் முத்தம் வைத்தாள்.

ப்ரியா சுமி உடைக்கு தகுந்த ஆபரணங்கள் அணியவில்லை என்பதை கவனித்து, தனது பாகில் வைத்திருந்த பெரிய கம்மலை எடுத்து போட்டுவிட்டவள், தனது கையில் இருந்து பாதி வளையல்களையும் கழட்டி அவளுக்கு போட்டு விட்டாள். நெற்றியில் பெரிய பொட்டை வைத்துவிட்டதும் சுமி பார்க்க ரொம்ப அழகாக இருந்தாள்.

இதை எல்லாம் பார்த்து கொண்டிருந்த ஷ்ருதிக்கு உள்ளம் கொதித்தது. முரளி வாங்கி கொடுத்த டிரஸ்சை, ப்ரியா எப்படி சுமிக்கு குடுக்கலாம் என்று ஆத்திரபட்டாள். அவளது கோபம் ப்ரியாவின் மேல் திரும்பியது.

ஷ்ருதி அவர்களின் அருகில் சென்றாள். ப்ரியா ஷ்ருதியை சுமிக்கு அறிமுகம் செய்தாள். சுமி ஷ்ருதியிடம் "ஹாய் "என்றவள், அப்போது தான் அவளது உடையை பார்த்து "ஹே... நம்ம ரெண்டு பேர் டிரஸ்சும் ஒரே மாதிரி இருக்கு" என்று சந்தோஷமாக சொல்ல,

***ஷ்ருதி அவளுக்கு எந்த பதிலும் சொல்லாமல் இருக்க, ப்ரியா "முரளி அண்ணா தான், எங்க ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி வாங்கிட்டு வந்தாங்க" என்றதும்,***

***ஆச்சர்யபட்ட சுமி "ரியல்லி முரளிக்கு இதெல்லாம் தெரியுமா" என்றவள், அப்போது அங்கே வந்த முரளியிடம் "நீங்க தான் இந்த டிரஸ் செலக்ட் பண்ணீங்களா... எனக்கு இந்த டிரஸ் ரொம்ப பிடிச்சிருக்கு எனக்கும் வாங்கி தர்றீங்களா" என்று சின்ன குழந்தை மாதிரி கேட்க,***

***முரளி "கண்டிப்பா வாங்கி தரேன் என்றவன்", தன் அருகில் இருந்த கார்த்திக்கை அவளுக்கு அறிமுகம் செய்ய, கார்த்திக் கையை பிடித்து குளுக்கியவள் "ஹாய்" என்றாள்.***

***கார்த்திக் அவளிடம் "வெல்கம் டூ இந்தியா" என்று சொல்ல,***

***"சோ நைஸ் டு ஹியர்" என்றவளுக்கு, கார்த்திக்கை ரொம்ப பிடித்துவிட சுமி அவனோடு சென்று சேரில் அமர்ந்தவள். இது என்ன ?, அது என்ன ? என்று அவனை கேட்க,***

***கார்த்திக் அங்கிருந்த மிதுவை கண் ஜாடையில் அழைத்து, தங்களுடன் உட்கார சொன்னவன். சுமியின் கேள்விகளுக்கு பதில் சொன்னான்.***



Ramya Rajan

***கௌதம் ரொம்ப பிஸியாக இருந்தான், அவன் விருந்தினர்களுக்கு வீட்டை சுற்றி காண்பிப்பதும், அவர்களை உணவு அருந்த அழைத்து செல்வதுமாக இருந்ததால் அவனால் யாரோடும் நின்று பேச முடியவில்லை.சுமி கௌதம் அடிக்கடி உள்ளே வருவதை பார்த்து "அவன் யார் ?" என்று கார்த்திக்கிடம் கேட்க,***

***கார்த்திக் கௌதமை பற்றி சொன்னான். அவன் சொன்னதை கேட்ட சுமி "ஓ... ஹி இஸ்... வெரி ஹன்ட்சம்" என்று சொல்ல, கார்த்திக் போச்சு இது மட்டும் ப்ரியாவுக்கு தெரிஞ்சிது, மவளே நீ தொலைஞ்ச என்று மனதில் நினைத்தான்.***

***ஷ்ருதி கோபமாக இருப்பதை பார்த்து அவளை மாடிக்கு அழைத்து சென்ற முரளி "என்ன ஷ்ருதி ஏன் டென்ஷனா இருக்க ? "என்று கேட்டதும், இருந்த கோபத்தை எல்லாம் அவன் மேல் காட்டிய ஷ்ருதி "நீங்க பண்றத எல்லாம் பார்த்தா... டென்ஷன் ஆகாம இருக்க முடியுமா" என்று கேட்க, முரளி "இப்ப நீ டென்ஷன் ஆகுற அளவு, என்ன நடந்தது ?" என்று கேட்டதும்,***

***ஷ்ருதி "நீங்க என்னடானா அவ கைய புடிச்சிட்டு வர்றீங்க, உங்க தங்கச்சி அவளை உருகி உருகி கவனிக்கிறா, ப்ரியா இப்படி இருப்பான்னு நான் கொஞ்சம் கூட எதிர் பார்க்கலை" என்று ஷ்ருதி வாயைவிட,***

***முரளி "போதும் நிறுத்து, சுமி ஒன்னும் யாரோ இல்லை... அவ எங்களோட அத்தை பொண்ணு... அவகிட்ட ப்ரியா அப்படி பேசுறது***



Ramya Rajan

**என்ன தப்பு, நீ என்னை சுமி கூட பேச கூடாதுன்னு சொன்னா ஒரு நியாயம் இருக்கு... ஆனா ப்ரியாவை சொல்ல உனக்கு எந்த உரிமையும் இல்லை, நான் இன்னும் ரெண்டு நாள் கழிச்சு தான் டெல்லிக்கு போறதா இருந்தேன், ஆனா நான் இங்க இருந்தா... நீ என்னையும் சுமியையும் நினைச்சு ரொம்ப டென்ஷன் ஆவ... அதனால நான் நாளைக்கு காலையில கிளம்பறேன்" என்று சொன்னவன், அவள் பதிலை எதிர் பார்க்காமல் வேகமாக கீழே இறங்கி சென்றான்.**

**ஷ்ருதிக்கு முரளி பேசியதை கேட்டு கோபம் இன்னும் அதிகமானதே தவிர குறையவில்லை.**

## 25

**மதியம் முன்று மணிக்கு மேல் தான் கௌதம் ப்ரீ ஆனான். வீட்டிற்குள் வந்து சேரில் அமர்ந்தவன் கையை தூக்கி சோம்பல் முறிக்க, "ஹாய்" என்று குரல் கேட்டது,**

**கௌதம் யாரென்று நிமிர்ந்து பார்க்க அங்கே ஒரு பெண் நின்றிருந்தாள். கௌதமிற்கு அவள் யார் என்று தெரியவில்லை அதனால் மெதுவாக பதிலுக்கு "ஹாய்" என்றவன், சுற்றி வேறு**

Ramya Rajan

யாரவது இருகிறார்களா என்று பார்க்க யாரையும் காணோம்.

அந்த பெண் "ஐஅம் சுமி" என்று கையை நீட்ட...

வேறு வழியில்லாமல் கையை குடுத்தவன் "ஐ அம் கௌதம்" என்றான்.

சுமி கௌதம் அருகில் இருந்த சேரில் அமர்ந்தவள் "ரொம்ப பிஸியா இருந்த, சாப்பிட்டியா" என்று கேட்க,

கௌதம் "இல்லை" என்றவன், யார் இந்த பொண்ணு ரொம்ப தெரிஞ்ச மாதிரி பேசுது என்று யோசித்தவன், பொறுக்க முடியாமல் நீங்க யாரு என்று அவளிடமே கேட்டு விட்டான்.

சுமி "நான் முரளியோட அத்த பொண்ணு லண்டன்ல இருந்து இன்னைக்கு தான் வந்தேன், நான் அப்பவே உங்க வீட்டுக்கு வந்துட்டேன்னே... நீங்க என்னை பார்க்கலை" என்று கேட்க,

கௌதம் "இல்லை நான் கவனிக்கலை சாரி, ஒரு நிமிஷம்" என்று சொல்லி செல்லை எடுத்து கார்த்திக்கை அழைத்தான், அவன் போன்னை எடுத்ததும் "கார்த்திக் எல்லோரும் எங்கடா இருக்கீங்க வாங்க சாப்பிடலாம்" என்றதும், கார்த்திக் "மாடியில இருக்கோம் கௌதம், இரு வரோம்" என்று போன்னை வைத்தான்.

கௌதம் சுமியின் தோற்றத்தை வைத்து சின்ன பெண் என்று நினைத்து "என்ன படிக்றீங்க" என்று கேட்டான். சுமி தான் படித்து முடித்து வேலை பார்ப்பதாக சொன்னவுடன், அவளை ஆச்சர்யமாக பார்த்த கௌதம் "உங்களை பார்த்தா காலேஜ் படிக்கிற பொண்ணு மாதிரி தான் இருக்கு" என்றான். சுமி சிரித்து கொண்டே "தேங்க்ஸ்" என்றாள்.

வீட்டு ஆட்கள் யாரும் இன்னும் உணவு அருந்தவில்லை, கார்த்திக் எல்லோரையும் அழைத்து கொண்டு கீழே வர, அவர்களோடு வந்த ப்ரியா கௌதமை பார்த்து சிரித்தவள் "இவ சுமி எங்க அத்த பொண்ணு" என்றாள். கௌதம் "தெரியும் இப்ப தான் சொன்னாங்க" என்றவன் எல்லோரையும் அழைத்து கொண்டு உணவு அருந்த சென்றான்.

பெரியவர்கள் எல்லோரும் உணவை எடுத்து கொண்டு ஒரு பக்கம் சேர்ந்து அமர்ந்து பேசிக்கொண்டே சாப்பிட, இளையவர்கள் மறுபுறம் சேர்ந்து அமர்ந்து சாப்பிட்டனர். ஷ்ருதி இன்னும் கோபமாக தான் இருந்தாள். ப்ரியாவிடம் கூட அவள் பேசவில்லை, ப்ரியா ஷ்ருதியிடம் சென்று பேசினாலும் அவள் ஒழுங்காக பதில் சொல்லவில்லை அதனால் ப்ரியாவும் ஒதுங்கி இருந்தாள்.

சாப்பிடும் போது முரளி சென்று ஷ்ருதி அருகில் அமர,ஷ்ருதி "ஏன் உங்க அத்தை பொண்ணு கூட சாப்பிடலையா" என்றதும், அவளை பார்த்து முறைத்த முரளி பேசாமல் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

Ramya Rajan

ப்ரியாவோடு சாப்பிட சென்ற சுமிக்கு, ப்ரியா ஒவ்வொரு உணவையும் பற்றி விளக்க... சுமி அதில் தனக்கு பிடித்ததை மட்டும் எடுத்து கொண்டாள். அதை பார்த்த ஷ்ருதி அவளுக்கு "தெரியாதா எத சாப்பிடணும்ன்னு... இன்னைக்கு ப்ரியா பண்றது எல்லாம் வித்தியாசமா தான் இருக்கு" என்று குறை சொல்ல,

"சுமி லண்டன்ல இருந்து வந்திருக்கா அவளுக்கு நம்ம ஊர் சாப்பாடு பத்தி ரொம்ப தெரியாது, அதனால தான் ப்ரியா அவளுக்கு ஹெல்ப் பண்றா, அவ ஒழுங்கா தான் இருக்கா.... நீ தான் இன்னைக்கு வித்தியாசமா நடந்துகிற" என்றான் முரளி.

சுமி குடிக்க தண்ணீர் எடுக்க சென்றாள். அப்போது கௌதம் "சுமி சிஸ்டர் எனக்கும் ஒரு கிளாஸ் வாட்டர்" என்று கேட்க, சுமியும் கௌதமுக்கும் கொண்டு வந்து குடுத்தாள்.

அதை பார்த்த ஷ்ருதி "பாருங்க எங்க அண்ணனை, இவ்ளோ நேரம் சுமி அவனை ஹன்ட்சம் என்று சொல்லிட்டு இருந்தா, சிஸ்டர் அப்படின்னு அவளை கூப்பிட்டு ஒரே நிமிஷத்துல ப்ரியாவுக்கு பிரச்சனை இல்லாம பண்ணிட்டான். நீங்களும் இருக்கீங்களே" என்று முரளியை சீண்ட,

"சுமி உண்மையாவே கௌதமுக்கு தங்கச்சி முறை தான் அதனால அப்படி கூப்பிடுறான். எனக்கு அத்தை பொண்ணு ஆச்சே... நான் எப்படி சிஸ்டர்ன்னு அவளை கூப்பிட முடியும்" என்று முரளி ஆதங்கப்பட,

ஷ்ருதி "இல்லைனா மட்டும் நீங்க கிழிச்சிடுவீங்க" என்றதும், முரளி "உனக்கு இன்னைக்கு எதோ ஆகிடுச்சு" என்றவன் பேசாமல் சாப்பிட்டான்.

அப்போது அப்பத்தா மிதுவின் பெற்றோரிடம் முரளியையும், சுமியையும் காட்டி "இவங்க ரெண்டு பேருக்கும் தான் கல்யாணம் பண்ண போறோம் " என்று சொல்ல, அது அங்கிருந்த எல்லோர் காதிலும் விழுந்தது. இதுமேலும் எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போல் ஆனது ஷ்ருதியின் உள்ளம் மேலும் எரிந்தது.

கௌதம் சுமியிடம் "அவள் என்ன படித்திருகிறாள்" என்று கேட்க,

சுமி பொருளாதாரத்தில் மாஸ்டர்ஸ் முடித்துவிட்டு, மூன்று மாதம் ஒரு கம்பெனியில் வேலை பார்த்ததாகவும், இப்போது வேறு வேலைக்கு மாறுவதால் கிடைத்த இடைவேளையில், இந்தியவுக்கு வந்ததாகவும் சொல்ல, கார்த்திக் "இதற்க்கு முன் எப்போ இங்க வந்த ?"என்று கேட்டதற்கு, சின்ன வயதில் அடிக்கடி வந்திருக்கேன், கடைசியாக வந்தது 8த் கிரேட் படிக்கும் போது குடும்பத்துடன் வந்து ஒரு மாதம் தங்கிட்டு போனோம் என்றாள் சுமி.

அனைவரும் சாப்பிட்டு முடித்ததும் ஹாலில் அமர்ந்து பேச, அப்போது ராமமூர்த்தி கௌதமிடம் "உன்னால இதே மாதிரி நம்மகிட்ட வீடு கட்ட கிட்டதட்ட பத்து கஸ்ட்மர்ஸ் கேட்ருக்காங்க, அதுல நாலஞ்சு பேர் இதே லே அவுட் சேர்ந்தவங்க, நாம ஏற்கனவே

நிறைய பில்டிங்க்ஸ் பண்றதுனால... எல்லாத்தையும் நாம எடுத்துக்க முடியுமான்னு தெரியல... நீயே அவங்ககிட்ட பேசு" என்றார். கௌதம் "சரி மாமா..." என்றான்.

அனைவரும் வீட்டுக்கு கிளம்ப ராமமூர்த்தி ராகவனை தங்கள் வீட்டுக்கு அழைத்ததால், அவரும் அங்கே சென்றுவிட்டு அங்கிருந்து ஊருக்கு செல்ல முடிவு செய்து அவர்களுடன் கிளம்பினார். காரில் இடம் பத்தாததால் முரளி தான் சுமி, ப்ரியா மற்றும் மிதுவை ஆட்டோவில் அழைத்து கொண்டு வருவதாக சொல்ல, மிது தான் இங்கிருந்தே நேராக ஹஸ்டல் செல்வதாக சொன்னதும், கௌதம் மாமா "நான் கொஞ்ச நேரம் கழித்து அவங்க மூன்னு போரையும் காரில் கொண்டு வந்து வீட்டில் விடுகிறேன்" என்றான். ராமமூர்த்தி சரி என்று மற்றவர்களை அழைத்து கொண்டு கிளம்பினார்.

கிருஷ்ணகுமார் தனது சித்தப்பா குடும்பத்தை அழைத்து கொண்டு வீட்டுக்கு செல்ல, கார்த்திக்கின் பெற்றோரும் வீட்டுக்கு கிளம்பினார்கள்.

இப்போது புது வீட்டில் சாருமதி, கௌதம், ஷ்ருதி, கார்த்திக், மிது, ப்ரியா, முரளி, சுமி மட்டும் தான் இருந்தார்கள்.

ப்ரியா சாருமதிக்கு சாமான்களை எடுத்து வைப்பதில் உதவினாள். அவளோடு சேர்ந்து மிதுவும் அவர்களுக்கு உதவினாள். சாருமதி ஷ்ருதியின் முகத்தை பார்த்தே... அவள் முரளியின் அப்பத்தா பேசியதை கேட்டு மன வருத்தத்தில் இருக்கிறாள் என்று நினைத்து... அவளை எந்த வேலையும் சொல்லவில்லை.

வேலை எல்லாம் முடிந்து ஹாலில் வந்து அமர்ந்த சாருமதி ப்ரியாவிடம் "இவ்ளோ நேரம் இருந்திட்டோம், இன்னும் கொஞ்சம் நேரம் இருந்து ஆறு மணி ஆனதும் விளக்கை ஏத்தி சாமி கும்பிட்டு போகலாம்" என்றதும் ப்ரியா "சரி அத்தை" என்றாள்.

அவ்வளுவு நேரம் அமைதியாக இருந்த ஷ்ருதி "ஏன் உங்க மருமக தான் விளக்கு எத்தனுமா, நாங்கலாம் ஏத்துனா ஆகாதா.... நானும் பார்க்கிறேன் என்ன எல்லோரும் ப்ரியா ப்ரியான்னு அவளையே தலையில தூக்கி வச்சிக்கிட்டு ஆடறீங்க" என்று கோபமாக கேட்க,

அனைவரும் ஷ்ருதியா இப்படி பேசுறதுன்னு அதிர்ச்சியில் இருந்தனர்.

சாருமதி "உனக்கு என்ன பைத்தியம் புடிசிடுச்சா ஷ்ருதி, ஏன் இப்படி பேசுற ?" என்று கேட்க, முரளி "ஆமா அத்தை. நீங்க சொல்றது கரெக்ட், மதியத்திலிருந்து அப்படி தான் இருக்கா" என்றான். கௌதம் நிலைமையை சரியாக்க எண்ணி "அம்மா அவ எதோ டென்ஷன்ல பேசுறா... நீங்க விடுங்க" என்றதும், ஷ்ருதி "இல்லை நான் உண்மைய தான் சொல்றேன்" என்றாள்.

கார்த்திக் அருகில் அமர்ந்து பார்த்து கொண்டிருந்த சுமி "ஆர் தே பைட்டிங்" என்று கேட்க, கார்த்திக் "ஏன் உனக்கு தமிழ் தெரியும் தான" என்று கேட்டதும், சுமி தெரியும் "ஆனா வேகமா... பேசினா புரியாது" என்றாள். கார்த்திக் உனக்கு புரியவே வேண்டாம் என்று

மனதில் நினைத்தவன். சுமியிடம் ஒன்றும் சொல்லவில்லை.

முரளி "நீ சுமி வந்ததுனால கொஞ்சம் மூட் அவுட், நான் ஒத்துக்குறேன் ஆனா... உன் கோபத்தை ப்ரியா மேல எதுக்கு காட்றேன்னு தான் தெரியல" என்று சொல்ல, ஷ்ருதி "சுமி வந்ததுனால எனக்கு எவ்வளவு மன கஷ்ட்டம்ன்னு ப்ரியாவுக்கு நல்லா தெரிஞ்சும், அவ என் முன்னாடியே சுமியோட க்ளோஸா இருக்கா... அப்ப எனக்கு கோபம் வராதா" என்றதும்,

கௌதம் "இதுக்கு தான் நீ இந்த குதி... குதிச்சியா, அவளோட அத்தை பொண்ணு லண்டன்ல இருந்து வந்திருக்கா, இங்க அவளுக்கு யார தெரியும், அதனால ப்ரியா அவகிட்ட க்ளோஸா பழகி இருப்பா இதெல்லாம் ஒரு விஷயம்ன்னு பேசற" என்றதும்,

ஷ்ருதி "நீ சும்மாவே ப்ரியாவுக்கு தான் சப்போர்ட் பண்ணுவ, இப்ப கேட்கவா வேண்ணும். உனக்கு என்னைவிட அவ தான் உசத்தி, அவளுக்குனா நீ ஒன்னு ஒன்னும் பார்த்து பார்த்து செய்வ" என்று கௌதமை குற்றம் சொல்ல,

கௌதமிற்கு கோபம் வந்துவிட்டது அவன் கோபமாக எதோ சொல்ல வந்தவன், ப்ரியா முகத்தை பார்க்க, அவள் வேண்டாம் என்று தலை ஆட்டியதும் அமைதியாக இருந்தான்.

ப்ரியா "உனக்கு என் மேல தான் கோபமா சாரி ஷ்ருதி, கௌதம் சொன்ன மாதிரி தான் நானும் நினைச்சேன், அது உன்னை இவ்வளவு



Ramya Rajan

**தூரம் ஹர்ட் பண்ணும்ன்னு நான் நினைக்கல" என்றவள், முரளியிடம் "அண்ணா இதெல்லாம் சாதாரண விஷயம், நீங்க குழப்பிக்காதீங்க நான் கூட ஷ்ருதி மாதிரி இதுக்கு முன்னாடி நடந்திருக்கேன். நீங்க வேணா கார்த்திக் அண்ணாவை கேளுங்க" என்றதும்,**

**கார்த்திக் "ஆமா முரளி, கௌதம் ஒரு பொண்ணு கூட சேர்ந்து டான்ஸ் ஆடினதுக்கு ப்ரியா பத்திரகாளியா மாறி.... ஆடினாலே ஒரு ஆட்டம் இப்பவும் என்னால அத மறக்க முடியாது" என்றதும் எல்லோரும் சிரிக்க,**

**அதுவரை அமைதியாக இருந்த சுமி "இப்ப என்னால தான் பிரச்சனைனா நான் கொஞ்சம் பேசணும்" என்றாள்.**

**இவ என்ன சொல்ல போறா என்று எல்லோரும் அவளையே பார்க்க,**

**சுமி "நான் இந்தியாவுக்கு முரளிய கல்யாணம் பண்ணிக்க வரலை. எனக்கு தெரியும் அது பராக்டிகளா ஒத்துவராது, என்னால லண்டன விட்டு இங்க வந்து இருக்க முடியாது, அதே மாதிரி முரளியால லண்டன்ல வந்து செட்டில் ஆக முடியாது. அப்படி இருக்கும் போது... நாங்க எப்படி கல்யாணம் பண்ணிக்க முடியும், இது எனக்கு மட்டும் இல்லை எங்க வீட்ல இருக்கிற எல்லோருக்கும் தெரியும். ஆனா பாட்டி மனசு கஷ்ட்டப்பட வேண்டாம்ன்னு தான், நாங்க இது வரை எதுவும் சொல்லாம இருந்தோம். ஆனா நான் இந்த தடவை சொல்லிடறேன் டோன்'ட் வொர்ரி" என்றவள்,**

**"நான் இந்தியாவுக்கு ரொம்ப ஆசையா வந்தேன், ஆனா எனக்கு ஏர்போர்ட்லையே தெரியும் முரளிக்கு நான் வந்தது சந்தோசம் இல்லைன்னு, முரளி என்னோட சரியாவே பேசலை ஆனால் ப்ரியா என்னோட நல்லா பேசினா... அப்ப தான் நான் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆனேன், அதோட இங்க கௌதம், கார்த்திக், மிது எல்லோரும் என்கிட்டே நல்லா பேசினாங்க நவ் ஐ அம் ஹாப்பி" என்று பேசி முடித்தாள்.**

**சுமி சொன்னதை கேட்ட முரளியின் முகம் இன்னும் வாட, அதை பார்த்த ஷ்ருதியும் வருந்தினாள். இதெல்லாம் தன்னால் தான் என்று புரிந்தது. அவள் சுமியிடமும், ப்ரியாவிடமும் மன்னிப்பு கேட்டாள்.**

**கார்த்திக் "எனக்கு ஒரு விஷயம் நல்லா புரிஞ்சிது ஷ்ருதிக்கு முரளி சுமியோட பேசினதுக்கு கூட கோபம் வரலை, ஆனா ப்ரியா சுமியோட பேசினதுக்கு தான் கோவப்பட்டா. இதுல இருந்து என்ன தெரியுது, ஷ்ருதி முரளியவிட ப்ரியாவை தான் அதிகமா லவ் பண்றா" என்றதும்,**

**எல்லோரும் சிரிக்க, சாருமதி "சரி இப்ப பிரச்சனை முடிஞ்சாச்சு, போய் முகம் கழுவிட்டு வாங்க விளக்கேத்தி சாமி கும்பிடுவோம்" என்றதும், எல்லோரும் முகம் கழுவ சென்றனர்.**

**கௌதம், முரளி, ப்ரியா மூன்று பேரின் மனமும் ஷ்ருதியால் காயப்பட்டிருந்தாலும் அதை அவர்கள் யாரும் வெளியே**



Ramya Rajan

காமிக்காமல் நடந்து கொண்டனர்.

முரளி ஷ்ருதியொடு அவளது அறைக்கு செல்ல, கௌதம் மாடிக்கு வந்தவன் படியிலேயே அமர்ந்துவிட, கார்த்திக்கும், மிதுவும் சுமியை அழைத்து கொண்டு மேல் மாடிக்கு சென்றனர். அவர்கள் சென்றதும் ப்ரியா கௌதமை அழைத்து கொண்டு அவனது அறைக்கு சென்றவள். உள்ளே சென்று கதவை சாற்றியதும் கௌதமை அணைத்து கொண்டாள்.

ஷ்ருதியின் அறைக்கு அவளோடு கூட சென்ற முரளி உள்ளே சென்று கதவை சாற்றியவன் "இப்ப உனக்கு சந்தோஷமா, சுமியே இந்த கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்லிட்டா, இனிமே நமக்கு ஒரு பிரச்சனையும் இல்லை" என்றதும்,

"சாரி முரளி" என்று ஷ்ருதி சொல்ல,

"இப்ப அதனால எதாவது பயன் இருக்கா, நீ மட்டும் கொஞ்சம் பொறுமையா இருந்திருந்தா இப்ப யாருக்கும் எந்த கஷ்ட்டமும் வந்திருக்காது. என்கிட்டே கோபத்தை காமிச்ச சரி அது ஒன்னும் தப்பில்லை, ஆனா சுமிகிட்ட, ப்ரியாகிட்ட கடைசியில கௌதமையும் விட்டுவைக்கல அவங்ககிட்ட எதுக்கு காமிச்ச, சுமி உன்னை பத்தி என்ன நினைப்பா ?, ப்ரியா யார்கிட்ட பேசனும்ன்னு நீ என்ன சொல்றது, கௌதம் உனக்கு வாங்கி தராதத ப்ரியாவுக்கு வாங்கி தந்தானா, அவனை எதுக்கு அப்படி சொன்ன ?" என்று முரளி சராமாரியாக கேள்வி கேட்க,

ஷ்ருதியால் எதற்கும் பதில் சொல்ல முடியவில்லை,

"நான் உன்னை கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னதுக்கு எங்க அம்மா, அப்பா ஒத்துக்கிட்டாங்க, அவங்க நம்மகிட்ட என்ன சொன்னாங்க நாங்களே பாட்டிய பேசி சமாளிகிறோம்ன்னு தான சொன்னாங்க. ஆனா உனக்கு அவசரம், எல்லாமே நல்ல படியா முடிஞ்சிருக்கும். நீ தான் தேவை இல்லாம வாயவிட்டு உன்னோட மரியாதைய கெடுத்துகிட்ட" என்று முரளி சொன்னதை கேட்டு ஷ்ருதி அழ,

அவள் அழுவதையும் முரளியால் தாங்க முடியவில்லை "சரி நல்ல நாள் அதுவுமா அழாத, இதுக்கு முன்னாடி நீ என்கிட்ட சொல்லி இருக்க ரெண்டு கல்யாணத்துல ஒரு கல்யாணம் மட்டும் தான் நடக்கணும்னா அது கௌதம், ப்ரியாது தான்னு. அத நான் மறக்கலை... எதோ கோபத்தில பேசிட்ட, இனிமே பேசுறதுக்கு முன்னாடி யோசிச்சு பேசு" என்றவன் ஷ்ருதியை அனைத்து கொண்டான்.

கௌதமும், ப்ரியாவும் எதுவும் பேசாமல் அணைத்தபடியே வெகு நேரம் இருந்தனர். இருவருக்கும் அந்த அணைப்பு தேவையாக இருந்தது தங்களின் மனம் சற்று தெளிந்ததும் விலகினார்கள், ப்ரியா அந்த அறையில் இருந்த ரெஸ்ட் ரூமிற்கு முகத்தை கழுவ சென்றவள்,

***"கௌதம் இங்க என்ன குழாயே இல்லை ?" என்று கேட்க,***

***கௌதம் "இன்னும் போடலை ப்ரியா" என்றதும் வெளியே வந்தவள்***

***"ரூம் தான் நான் வரும் போது பண்ண போறதா சொன்னீங்க, ரெஸ்ட் ரூம் கூடவா அப்ப பண்ண போறீங்க" என்றதும், "நீ வந்ததும் யூஸ் பன்னனும்னு நினைச்சது உண்மை, ஆனா முடிக்காம இருக்கிறதுக்கு அது காரணம் இல்லை, இப்ப தான சிமெண்ட் பிளாக் பாக்ட்ரி ஆரம்பிச்சோம், அதோட வீட்டுக்கும் அதிகமா செலவாகிடுச்சு, நிறைய பில்டிங்க்ஸ் கட்டிட்டு இருக்கிறதுனால பணம் எல்லாம் அங்கங்க லாக் ஆகிடுச்சு, ஷ்ருதிக்கு திடிர்ன்னு கல்யாணம் வேற பண்ற மாதிரி இருந்தா பணம் கொஞ்சம் கைல இருக்கட்டும்ன்னு இந்த ரூம் அப்புறம் பண்ணலாம்ன்னு நினைச்சேன். ஆனா அத வெளிய சொன்னா அம்மா வறுத்த படுவாங்கன்னு, உன்னை காரணமா சொன்னேன். ஆனா அதுக்கு தான் இன்னைக்கு ஒருத்திகிட்ட வாங்கி கட்டிகிட்டேன்" என்று கௌதம் சொல்லி முடிக்க,***

***ப்ரியா கௌதமை இறுக்கி கட்டி கொண்டவள் அவன் முகமெங்கும் முத்தமிட, கௌதம் "ஏண்டி... நான் நல்லவனா இருக்கனும்ன்னு நினைச்சாலும் விடமாட்ற" என்றவன், பதிலுக்கு ப்ரியாவை முத்தமிட சிறிது நேரம் அந்த வேலையை மட்டும் செய்தவர்கள், பின்பு விலகி அடுத்த அறையில் முகம் கழுவி கீழே வந்தனர்.***

***அவர்கள் வந்ததும் மற்றவர்களும் அங்கே வர சாருமதி "முகம்***

கழுவிட்டு வர அரை மணி நேரமா" என்றவர், அங்கிருந்த விளக்கை ஏற்றினார். அனைவரும் அங்கிருந்த சாமி படத்தின் முன் விழுந்து கும்பிட, சாருமதி தானே எல்லோருக்கும் திருநீர் வைத்தார்.

முதலில் முரளிக்கு வைத்தவர் "கடவுள் உனக்கு நிறைய சக்திய தரட்டும், அப்பாவி உன் தலையில என் பொண்ண கெட்றேன். அவ உன்ன படுத்தி வைக்காம நல்லபடியா குடும்பம் நடத்துங்க" என்றவர்.

அடுத்து ஷ்ருதிக்கு "இனிமேலாவது நல்ல புத்திய குடுப்பா முருகா" என்றார்.

அடுத்து கௌதமிற்கு பூசும் போது "இவனுக்கு கோபத்தை குறைங்க கடவுளே" என்றவர் ப்ரியாவிற்கு "உன்னை எப்பவும் கடவுள் கைவிட மாட்டார்" என்றார், அடுத்து மிதுவுக்கு "நினைச்ச வாழ்வு கிடைக்கட்டும்" என்றவர், அடுத்து சுமிக்கு "உன் நல்ல மனசுக்கு, நல்ல புருஷன் வருவான்" என்றவர், கடைசியாக கார்த்திக்கு பூசும் போது "நல்லாயிரு கார்த்திக்" என்றார்.

கார்த்திக் "இன்னொன்னும் சொல்லுங்க மா" என்றதும்,

சாருமதி "என்னடா கார்த்திக் சொல்லணும்" என்று அவனையே கேட்க,



Ramya Rajan

***"என்னோட ரெண்டு தங்கச்சிகளுக்கும், நான் இப்ப தனி ஆள் இல்லை, முன்னாடி மாதிரி பாடிகார்டு வேலை பார்க்க முடியாது, எனக்கும் சில கடமைகள் இருக்கும், அத நானும் நல்லபடியா செய்யணும் அப்படின்னு நியாபகம் வரட்டும்ன்னு சொல்லி பூசுங்க மா" என்று வார்த்தைக்கு... வார்த்தை... அழுத்தம் குடுத்து சொல்ல... அதை புரிந்து கொண்ட ப்ரியாவும், ஷ்ருதியும் கார்த்திக்கை அடிக்க துரத்தினார்கள்.***

***கௌதமும், முரளியும் சிரிக்க, சாருமதிக்கு கார்த்திக் சொன்னது புரியவில்லை அவர் குழப்பத்தில் நிற்க, மிது வெட்கத்தில் சிவந்து நின்றாள்.***

***கார்த்திக் ஓடிக்களைத்தவன் சுமி அருகில் சென்று அமர "அவ நீ என்ன சொன்ன ? எதுக்கு உன்னை துறத்துறாங்க" என்று கேட்க, கார்த்திக் "உனக்கு வேகமா பேசினா தானே புரியாது, நான் மெதுவா தானே பேசினேன். அப்புவுமா புரியலை "என்றவன், சாரும்மா "சுமிக்கு நல்ல தமிழ் தெரிஞ்ச புருஷன் கிடைகட்டும்ன்னு, இன்னொரு வாட்டி பூசுங்க" என்றதும் அங்கே எல்லோரும் சந்தோஷமாக சிரித்தனர்.***

Ramya Rajan

சுமிக்கு மாடியில் முரளி அறைக்கு பக்கத்து அறையை தங்கி கொள்ள குடுத்திருந்தனர். முரளி அன்று இரவு உணவிற்கு பிறகு மாடி ஹாலில் அமர்ந்திருந்தான். அப்போது சுமி அங்கே வர "சுமி உன்னோட கொஞ்சம் பேசணும்" என்றதும் சுமி அவன் எதிரில் அமர்ந்தாள்.

முரளி "நான் உன்னை ஏர்போர்ட்ல பார்த்து அதிர்ச்சி அடைந்தது உண்மை தான், அது நீ என்ன நினைப்புல வந்திருக்கேன்னு எனக்கு தெரியாது, பாட்டி வேற நமக்கு கல்யாணம் பண்ணனும்ன்னு சொல்லிட்டு இருந்தாங்க. உன்னிடம் நேரடியா மறுப்பு சொல்ல வேண்டியதா இருந்திடுமோ இல்லை... நான் உன்கிட்ட சிரிச்சு பேசினா உனக்கு அது பால்ஸ் ஹோப் குடுதிடுமோன்னு நினைச்சி தான், நான் பேசாம இருந்தேன்" என்று சொன்னதும்.

சுமி "தேங்க்ஸ் முரளி, உனக்கு நான் வந்தது பிடிக்கலையோன்னு நினைச்சேன்" என்றாள்.

"எனக்கு உன்னை பிடிக்கும், இது உன்னோட மாமா வீடு. இங்க நீ எப்ப வேணா வரலாம், இது மாதிரி இன்னொரு தடவை பேசாத. அப்புறம் ஷ்ருதிய பத்தி தப்பா நினைக்காத அவ எங்க கல்யாணம் நடக்காதோன்னு பயத்தில இருந்தா... அதனால அப்படி நடந்துகிட்டா மத்தபடி அவ ரொம்ப நல்ல டைப், ரொம்ப ஜாலியா

இருப்பா" என்று முரளி ஷ்ருதிக்காக வக்காலத்து வாங்குவதை பார்த்து சிரித்த சுமி,

"முரளி ஐ நோ, பொசெஸ்சீவ்நெஸ் இருந்தா தான் அது லவ். நான் ஷ்ருதிய தப்பா நினைக்கல நீ கவலைபடாதே, நீ எப்ப டெல்லிக்கு போறே" என்று கேட்க,

"நாளைக்கு போகலாம்ன்னு நினைச்சேன், ஆனா போகலை நாளைக்கு நாம ரெண்டு பேரும் வெளிய போகலாம். எங்க போகலாம்ன்னு நீயே சொல்லு" என்றவன் குட் நைட் சொல்லி தூங்க சென்றான்.

முரளி இருந்த இரண்டு நாட்களும் சுமியோடவே வெளியே சென்று வந்தான். அவளுக்கு பிடித்த உடைகள், பட்டு புடவை என்று வாங்கி குடுத்தான். இதையெல்லாம் பார்த்து கொண்டிருந்த அப்பத்தா மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். தான் நினைத்தது நடக்க போவதாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தவர், அன்று இரவு உணவின் போது முரளி நாளை காலை டெல்லிக்கு கிளம்புவதாக சொன்னதும். அப்பத்தா தான் ஒரு விஷயம் பேச வேண்டும் என்று எல்லோரையும் ஹாலுக்கு வர சொன்னார்.

அவர் என்ன பேச போகிறார் என்று எல்லோருக்கும் தெரிந்ததால் எல்லோரும் டென்ஷனாக இருந்தனர். அப்பத்தா ராமமூர்த்தியிடம் முரளி, சுமி கல்யாணத்தை பற்றி பேச,

***சுமி "என்னால இங்க வந்து இருக்க முடியாது பாட்டி, முரளி வந்து லண்டன்ல செட்டில் ஆகறதுன்னா நீங்க அதை பத்தி பேசுங்க" என்றதும்,***

***அதிர்ந்த பாட்டி "என்ன சுமி இப்படி சொல்ற ? அவன் எப்படி அங்க வருவான் ?" என்றதும்,***

***"அப்ப நான் மட்டும் எங்க அம்மா அப்பாவ விட்டு வரணுமா. எனக்கு இந்த ஊரே பிடிக்கலை, எங்க பாரு ஒரே கூட்டம். என்னால இங்க இருக்க முடியாது" என்றாள் தெளிவாக,***

***அப்பத்தா "நான் என் பொண்ண வெளிநாட்டில இருக்கிற உங்க அப்பாவுக்கு கல்யாணம் செஞ்சு குடுத்தேன், அதனால என் பொண்ணுக்கு பொறந்த வீட்டு தொடர்பே இல்லை. அவளாலையும் இங்க வர முடியலை, இவன்களாலும் அவளை போய் பார்க்க முடியல எதோ என்னால உங்களுக்குள்ள இந்த அளவுக்காவது நெருக்கம் இருக்கு, நானும் இல்லைனா... என்னோட பசங்களோட தொடர்பே விட்டுடும், அதனால தான் உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ண நினைச்சேன்" என்று சொல்லி அழ, அவர் அழுவது அங்கிருந்த எல்லோர் மனதையும் வருத்தியது.***

***சுமி "நீங்க சொன்ன மாதிரி நாங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிகிட்டா, என்னோட நிலைமையும் அது தான் பாட்டி. நானும் எங்க அம்மா, அப்பா, அண்ணனை விட்டு பிரிஞ்சு வரணும். எங்க அம்மாவுக்கும் நாளைக்கு உங்களோட நிலைமை தான், இது தேவையா நீங்களே சொல்லுங்க" என்றதும்,***

Ramya Rajan

**யோசித்த பாட்டி "சரி உங்களுக்கு விருப்பம் இல்லைனா வேண்டாம்" என்றார்.**

**அனைவரும் நிம்மதி அடைந்தனர். இப்போது முரளி ஷ்ருதி பற்றி பேசி, தனது அம்மாவை மேலும் வறுத்த விரும்பாத ராமமூர்த்தி. அது முரளி சென்னைக்கு வந்து வேளையில் சேர்ந்ததும் பார்ப்போம் என்று வேறு விஷயங்கள் பேசி, தனது அம்மாவை சமாதனம் செய்து தூங்க சென்றார்.**

**முரளி அடுத்த நாள் காலை விமானத்தில் டெல்லி கிளம்பி சென்றான். ப்ரியாவிற்கு அடுத்து வந்த முன்று நாட்களும் காலேஜ் கல்ச்சுரல்ஸ். அவள் கௌதமிடம் சொல்லி சுமியும் தங்களுடன் காலேஜ் அழைத்து வர, கல்லூரி முதல்வரிடம் அனுமதி வாங்க ஏற்பாடு செய்தாள். அதனால் சுமியும் ப்ரியாவுடன் கல்லூரிக்கு வந்தாள்.**

**காலேஜ் கல்ச்சுரல்ஸ் என்பதால் கௌதமும், கார்த்திக்கும் காலையிலேயே காலேஜ்க்கு வந்துவிட்டனர். காவ்யா தனியாக அமர்ந்து சுந்தருடன் போன் பேசிகொண்டிருந்தாள். அதனால் மற்ற நான்கு பேரும் சேர்ந்து ஒன்றாக சுற்றினார்கள்.**

**கல்ச்சுரல்ஸ் கடைசி தினம் அன்று மிதுவும் இவர்கள் காலேஜ்க்கு வந்திருந்தாள். அன்று கௌதமிற்கு காலேஜ் லைட் மியூசிக் போட்டி இருந்தது, அதனால் அவன் அங்கு சென்றுவிட, கார்த்திக் மிதுவை**



Ramya Rajan

அழைத்து கொண்டு கான்டீன் சென்று விட்டான். அப்போது சுமி ப்ரியாவிடம் "நீயும் கௌதமும் லவ்வெர்ஸ் தானே" என்றதும், ப்ரியா "ஆமாம் உனக்கு எப்படி தெரியும், ஷ்ருதி பேசுனது வச்சு சொல்றியா" என்று கேட்க,

"இல்லை... கௌதம் பார்வையில இருந்து கண்டுபிடிச்சேன். அவங்க புது வீட்டுக்கு நான் வந்திருந்த போது. நான் உன்கூட தானே இருந்தேன். அப்ப கௌதம் ஒவ்வொரு தடவையும் வீட்டுக்குள்ள வரும் போதும், அவன் பார்வை உன் மேல தான் இருக்கும். அப்புறமா நான் அவன்கிட்ட பேசும் போது அவனுக்கு என்னை தெரியவே இல்லை, எங்க பார்த்தா தானே தெரியும். அவன் கண்ணு உன்னை மட்டும் தான் பார்க்குது, நீ ரொம்ப லக்கி. ஹி லவ்ஸ் யு சோ மச்" என்று சுமி சொல்ல,

ப்ரியா புன்னகையுடன் "எனக்கு தெரியும்" என்றாள். அப்போது அங்கே கார்த்திக்கும், மிதுவும் வர நிகழ்ச்சியும் ஆரம்பித்தது.

மேடை ஏறிய கௌதம் தான் கல்லூரியின் கடைசி ஆண்டில் இருப்பதால் இன்று போட்டியில் கலந்து கொள்ளவில்லை என்றும் எல்லோரையும் மகிழ்விக்கவே இப்போது பாடுவதாகவும் சொல்லி, பாட ஆரம்பித்தான்.

"காதலின் தீபம் ஒன்று

ஏற்றினாளே என் நெஞ்சில்

ஊடலில் வந்த சொந்தம்



Ramya Rajan

***கூடலில் கண்ட இன்பம்***

***மயக்கம் என்ன***

***காதல் வாழ்க***

***(காதலின் தீபம்)***

***நேற்று போல் இன்று இல்லை***

***இன்று போல் நாளை இல்லை***

***அன்பிலே வாழும் நெஞ்சில்***

***ஆயிரம் பாடலே***

***ஒன்றுதான் எண்ணம் என்றால்***

***உறவுதான் காதலே***

***எண்ணம் யாவும்***

***சொல்ல வா***

***(காதலின் தீபம்)***

***என்னை நான் தேடித் தேடி***

***உன்னிடம் கண்டு கொண்டேன்***

***பொன்னிலே பூவை அல்லும்***



Ramya Rajan

**புன்னகை மின்னுதே**

**கண்ணிலே காந்தம் வைத்த**

**கவிதையை பாடுதே**

**அன்பே இன்பம்**

**சொல்ல வா**

**(*காதலின் தீபம்)***

***பாடல் முடியும் போது அரங்கமே அமைதியாக இருந்தது. எவ்வளவோ காதல் பாட்டுகள் வந்திருந்தாலும், இன்னும் இந்த பாடலுக்கு இருக்கும் மயக்கம் குறையவில்லை என்பது எல்லோரும் பாடலை ரசித்து அமைதியாக இருந்ததிலேயே தெரிந்தது. பாடல் முடிந்துவிட்டது என்பதையே சில நொடிகள் கழித்து தான் உணர்ந்தார்கள், அதற்க்கு பிறகு தான் கைதட்டவே ஆரம்பித்தனர்.***

***கௌதம் வீட்டில் கார்த்திக்கிடம் "சுமிக்கு தீம் பார்க் போகணுமாம் நாளைக்கு போலாமா" என்று கேட்டவன், ஷ்ருதியிடம் "நீயும் வரியா" என்று கேட்க, "இல்லை கிளாஸ் இருக்கு" என்றாள்.***

***கௌதம் "சரிடா... அப்ப நாம போயிட்டு வந்திடலாம்" என்றதும்,***

***கார்த்திக் "ஐ.. நீ எதுக்கு கூப்பிடுறேன்னு எனக்கு தெரியாதா... நைசா எங்களோட சுமிய தள்ளிட்டு... நீ ப்ரியாவோட எஸ் ஆகிடுவ, நான்***

வரலைபா" என்றான்.

கௌதம் "டேய்... நீ என்னை பத்தி......... என்று இழுதத்தவன், கரெக்டா தான் சொல்ற, உன் நண்பனுக்காக நீ இந்த தியாகத்தை கூட பண்ண மாட்டியா, அதனால நீ கண்டிப்பா வர" என்றதும்,

கார்த்திக் "நானும் எத்தனை நாள்டா தியாகியாகவே இருக்கிறது, வேண்டாம் கௌதம் என்னை வெறி ஆக்காத, நான் மிதுவோட வெளிய போலைனாலும், அவ எங்க வீட்டுக்கு வருவா... நாங்க எதோ தனியா பேசவாவது செய்வோம், உன்னோட வந்தா அதுவும் முடியாது. அதனால நான் வரலை" என்றதும்,

"டேய்... நீ இன்னும் பேசிட்டு தான் இருக்கியா... நீயெல்லாம் என் ப்ரிண்ட்ன்னு வெளியே சொல்லாத" என்று கௌதம் சொல்ல,

"உன்ன மாதிரி ப்ரிண்ட் கூட இருந்தா... நான் வேற என்ன செய்றது" என்று கார்த்திக்கும் பதிலுக்கு பேச,

அதை கேட்ட ஷ்ருதி "டேய் என்னை வச்சிக்கிட்டு, ரெண்டு பேரும் என்னடா பேசுறீங்க" என்றாள்.

கௌதம் "இங்க பாரு உனக்கு தான் கல்யாணம் பண்ணப்போறோம்ல அப்புறம் என்ன" என்றதும்,



Ramya Rajan

தலையில் அடித்த ஷ்ருதி "சரி நானும் வரேன், சுமிக்காக. நீங்க ரெண்டு பேரும் எக்கேடோ கெட்டு போங்க" என்றாள்.

"தேங்க்ஸ் ஷ்ருதி" என்று கௌதமும், கார்த்திக்கும் ஒரே நேரத்தில் சொன்னார்கள்.

சுமியும், ப்ரியாவும் கிளம்பி கௌதம் வீட்டுக்கு வர, அங்கிருந்து எல்லோரும் காரில் தீம் பார்க் கிளம்பினார்கள். உள்ளே சென்றதும் முதலில் ரைட்ஸ் போவோம், மதியம் உணவிற்கு பிறகு வாட்டர் கேம்ஸ் போவோம் என்று முடிவு செய்தனர். அன்று வார நாள் அதனால் கூட்டம் இல்லை.

ரைட்ஸ் செல்லும் போது கௌதம் ப்ரியாவுடனும், கார்த்திக் மிதுவுடனும் அமர்ந்து கொள்ள, சுருதியும், சுமியும் ஒன்றாக அமர்ந்தனர்.

வாய்ப்பு கிடைக்கும் போது எல்லாம், அவரவர் ஜோடி மீது தோளில் கை போடுவதும், கட்டி அணைப்பதுமாக கௌதமும், கார்த்திக்கும் எதற்கு வந்தார்களோ அந்த வேலையை சரியாக செய்தனர்.

மதியம் உணவு முடிந்து வாட்டர் கேம்ஸ்க்கு சென்றார்கள். சுமி தண்ணீரை பார்த்து தயங்க, கார்த்திக் "ஏன் குளிக்கிற... நாங்க எல்லாம் மனுஷங்க இல்லையா" என்று சொல்லி, அவளை நீருக்குள்

**தள்ளிவிட்டான். அங்கே எல்லோரும் சேர்ந்து நீரில் விளையாடினார்கள் பின்பு ரெயின் டிஸ்கோவில் ஆட்டம் போட்டவர்கள் பின்பு அங்கிருந்த வாட்டர் பால்ஸ் சென்றனர்.**

**சுமி, ஷ்ருதி ரெண்டு பேருமே அங்கே கொட்டும் நீரை பார்த்து பயப்பட கௌதமும், கார்த்திக்கும் அவர்களை கையில் பிடித்து அழைத்து சென்று நீரில் விளையாட விட்டனர். சிறிது நேரம் கழித்து அவர்கள் போதும் என்றதும் அவர்களை வெளியே அழைத்து வந்துவிட்டு, ஷ்ருதியிடம் அரை மணியில் வந்து விடுவதாக சொல்லி தங்கள் ஜோடியை அழைத்து கொண்டு மீண்டும் வாட்டர் பால்ஸ் சென்றனர்.**

**அங்கே இவர்கள் இரண்டு ஜோடி மட்டும் தான் இருந்தனர். இரண்டு ஜோடியும் நீரில் கொஞ்ச நேரம் நன்றாக ஆட்டம் போட்டு விட்டு இஷ்ட்டமில்லாமல் அதிலிருந்து வெளியே வந்தனர். இரண்டு ஜோடிகளுக்கும் அன்றைய நாள் மறக்க முடியாத நாளாக அமைந்தது.**

**அப்பத்தா சுமி சொன்னதை அவர் மகள் வாசுகியிடம் சொல்லி வருத்தப்பட, அவர் விடுங்க அம்மா என்றவர், இங்கே சுமிக்கு ஒரு நல்ல வரன் வந்திருக்கு. மாப்பிள்ளை லண்டனில் வேலை பார்ப்பதாகவும், அவர் அங்கேயே செட்டில் ஆக விரும்புவதாகவும் தெரிவித்தவர். சுமிக்கு ஏற்கனவே அந்த பையனை தெரியும் அவளும் சரி என்று சொல்லிவிட்டாள், மாப்பிளையின் குடும்பம் சென்னையில் இருப்பதால் அவர்கள் வரும் ஞாயிறு அன்று அங்கே பெண் பார்க்க வருவதாகவும் சொல்லி அதற்கு ஏற்பாடு செய்ய சொல்ல,**

அப்பத்தா சந்தோஷம் அடைந்தவர், சரி என்று சொல்லி போன்னை வைத்தார்.

அப்பத்தா ராமமூர்த்தியிடம் சொல்ல அவர் தனது தங்கையிடம் விபரம் கேட்டு ஏற்பாடு செய்தார். ஞாயிறு அன்று ப்ரியா தான் சுமியை ரெடி செய்தாள், ப்ரியா முரளி சுமிக்கு எடுத்து குடுத்த புடவைக்கு ஜாக்கெட் தைத்து வாங்கி வைத்திருந்தாள். அந்த புடவையை கட்டி எளிமையான அலங்காரத்தில் சுமியை மிகவும் அழகாக மாற்றியிருந்தாள். சுமிக்கே தன்னை கண்ணாடியில் பார்க்கும் போது அடையாளம் தெரியவில்லை.

மாலையில் மாப்பிள்ளை வீட்டார் வந்தனர். அவர்களுக்கு சுமியை பார்த்ததும் பிடித்தது, அன்றே சுமிக்கு பூ வைத்து, மோதிரம் போட்டு நிச்சயம் செய்து, இன்னும் ஒரே மாதத்தில் திருமணம் என்று முடிவு செய்தனர்.

லண்டனில் இருந்து வாசுகியும் அவர் கணவரும் ஒரே வாரத்தில் கிளம்பி வர, ஆளுக்கு ஒரு வேலையாக செய்தனர். ராமமூர்த்தி அவர்கள் வருவதற்கு முன்பே பத்திரிகை அடித்து, வாங்கி வைத்திருந்தார். அவருக்கு எல்லா வேலைகளிலும் கிருஷ்ணகுமாரும், கௌதமும் உதவி செய்தனர்.

சுமியின் அண்ணன் அருணும், முரளியும் கல்யாணதிற்கு நான்கு நாட்கள் முன்பு தான் வந்தனர். வந்தும் ஒன்றும் செய்யவில்லை

**அவர்களுக்கு இங்கே ஒன்றும் தெரியவில்லை, கௌதம் தான் அதிக வேலை பார்த்தான்.**

**கல்யாணத்திற்கு முதல் நாள் இரவு கௌதம் கடைசியாக அமர்ந்து சாப்பிடுவதை பார்த்து, அவன் அருகில் சென்ற சுமி "நீ யாருன்னே எனக்கு ஒரு மாசம் முன்னாடி தெரியாது... ஆனா நீ என் கல்யாணத்துக்கு இப்படி வேலை செய்ற, உனக்கு நான் எப்படி நன்றி சொல்றது" என்று நெகிழ்ந்த குரலில் கேட்க,**

**"இதெல்லாம் ஒரு வேலையா, நீ எனக்கும், ப்ரியாவுக்கும் கல்யாணம் நடக்கும் போது கண்டிப்பா வந்திடனும், அது தான் நீ எனக்கு சொல்ற நன்றி" என்று கௌதம் சொன்னதும், சுமி "கண்டிப்பா வரேன் கௌதம்" என்றாள்.**

**திருமண நாளும் அழகாக விடிந்தது சுமி, அர்ஜுன் திருமணமும் இனிதாக நடந்தது.**

27

Ramya Rajan

சுமியின் திருமணம் முடிந்து ஒரு வாரம் கழித்து, வாசுகி தனது கணவருடன் லண்டன் கிளம்பினர். அதற்க்கு இரண்டு நாட்களுக்கு முன்பே அருண் சென்றுவிட்டான்.

வாசுகி லண்டன் போவதற்கு முன் தனது அம்மாவிடம் "அருணுக்கு... இன்னும் எந்த வரணும் சரியாக அமையவில்லை... அடுத்து அவனுக்கும் திருமணம் முடிந்து விட்டால் தனக்கு நிம்மதி" என்று சொல்ல, அப்பத்தா "கவலைபடாதே அவனுக்கு நான் பெண் பார்கிறேன் சீக்கிரமாக அவனுக்கும் முடித்து விடலாம். அதனால் கவலைபடாமல் போய் வா" என்று மகளை வழி அனுப்பினார்.

சுமி தனது புகுந்த வீடு சென்னை என்பதால் மேலும் இரு வாரம் தங்கி சென்றாள். சென்னையில் இருக்கும் போது நடுவில் தனது மாமா வீட்டிற்க்கும் அடிக்கடி வந்து சென்றாள்.

சாருமதி... சுமியையும் அவள் கணவனையும் அழைத்து வீட்டில் விருந்து வைத்தார். சுமிக்கு ப்ரியா, கௌதம், கார்த்திக், மிது மற்றும் ஷ்ருதியுடன் நெருங்கி பழகியதால் அவளுக்கு அவர்களை பிரிந்து செல்வது வருத்தமாக இருத்தது. ஒருவழியாக அனைவரிடமும் பிரியாவிடைபெற்று, சுமி தனது கணவனுடன் லண்டனுக்கு சென்றாள்.

அனைவருக்கும் பரிட்ச்சை நேரம் என்பதால் எல்லோரும் படிப்பில் கவனத்தை செலுத்தினார்கள். கௌதம் தங்கள் வீடு போல் கட்டி தர

கேட்டவர்களிடம் ஒத்துக்கொண்டு அதற்க்கான வேலையை தொடங்கினான்.

கார்த்திக் மே மாதத்தில் இருந்து R.K .கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்ல் ஆர்க்கிடெக்ட்டாக வேளையில் சேருவதாக இருந்தான். அவனுக்கு வெளி இடத்தில் வேலை பார்க்க விருப்பம் இல்லை. இன்னொன்று R.K .கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இப்போது நிறைய கட்டிடங்கள் கட்டுவதால் அவர்களுக்கும் கார்த்திக் தேவைபட்டான்.

கௌதம் கார்த்திக்கிடம் வீட்டிற்கான வரைபடம் மற்றும் எளிவேஷன் இரண்டையும் கார்த்திக்கை போட்டு தர சொன்னான். பிளான் எல்லாம் போட்டு ரெடியாக வைத்தால், பரிட்ச்சை முடிந்ததும் ஆரம்பிக்கலாம் என்று கௌதம் நினைத்தான். அதனால் காலையில் கௌதமும், கார்த்திக்கும் அந்த வேலையை பார்க்க, மதியம் கல்லூரி சென்று வந்தனர்.

மிதுவுக்கு... பரிட்ச்சை முடிந்ததும்.... தனது ஊருக்கு கிளம்பியவள், ஊருக்கு செல்லும் அன்று காலையிலேயே தனது பெட்டியுடன் கார்த்திக் வீட்டிற்கு வந்துவிட்டாள், அன்று இரவு இங்கிருந்தே ஊருக்கு செல்ல முடிவு செய்திருந்தாள்.

மிது... அன்று ரவிக்கு பிடித்த நாட்டு கோழி குழம்பு வைத்து கொடுத்தாள். ரவியும், சாவித்ரியும் சாப்பிட்ட போது மிது தனக்கு பசிக்கவில்லை தான் அப்புறம் சாப்பிடுவதாக சொன்னாள். ரவியும், சாவித்ரியும் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுக்க, மிது கார்த்திக்காக காத்திருந்தாள்.

**கார்த்திக்... வந்ததும் மிதுவும், கார்த்திக்கும் சாப்பிட்டனர். மிது இன்று ஊருக்கு செல்லும் வருத்தத்தில் இருந்தாள்.**

**மிது... எப்போதும் கார்த்திக் மேல் அவளுகிருக்கும் உரிமையை காட்ட மாட்டாள், அவள் இன்னும் பழைய விஷயத்தை மறக்காததால், அவளுக்கு அவனிடம் சட்டென்று உரிமை எடுத்து பேசவராது. அது கார்த்திக்கும் தெரியும். அதனாலேயே அவன் மிது மனதில் இருக்கும் ஆசையை புரிந்து நடந்து கொள்ள முயலுவான்.**

**மிது... அன்று ஊருக்கு போவதால் வருத்தத்துடன் இருக்கிறாள் என்பதை உணர்ந்து, எப்போதும் ஹாலிலோ அல்லது தோட்டத்திலோ உட்கார்ந்து பேசுபவன், இன்று அவளை தனது அறைக்கு அழைத்து வந்தான்.**

**கட்டிலில் மிதுவை தனது அருகில் அமர வைத்து, அவளை தனது தோளில் சாய்த்தவன் "என்னடா ரொம்ப அமைதியா இருக்கீங்க" என்று கேட்க, மிது மௌனமாக இருந்தாள்.**

**கார்த்திக் "மிது என்கிட்டே மனசுவிட்டு பேச உனக்கு என்ன தயக்கம். நீ ப்ரியா மாதிரி... ஷ்ருதி மாதிரி... என்கிட்டே உரிமை எடுத்து பேசனும்ன்னு, எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா, நீ உன் மனசை இப்படி பூட்டியே வச்சுக்காத மிது...."**

மிது மெதுவாக "எனக்கு ஊருக்கு போக வேண்டாம்....".

"ஏன் மிது..."

"என்னால உங்களை பார்க்காம இருக்க முடியாது."

"எனக்கும் உன்னை பார்க்காம இருக்கிறது கஷ்ட்டமா தான் இருக்கும், ஆனா நீ போய் தான ஆகணும் என்றவன், ஒரு மாசம் தான... நீ சந்தோஷமா போயிட்டு வா, அங்க போய் உம்ன்னு இருக்க கூடாது நல்லா கலகலப்பா இருக்கணும். இல்லைனா உங்க அப்பா வருத்தபடுவாறு" என்று கார்த்திக் மிதுவுக்கு எடுத்து சொல்ல...

அவள் ம்..ம்.ம்..என்று அவன் சொல்வதற்கு எல்லாம் உம் கொட்டி கொண்டிருந்தாள்.

மிதுவை பார்த்து சிரித்த கார்த்திக், அவள் முகத்தை பற்றி நேராக நிமிர்த்தியவன். அவள் இதழ்களில் முத்தமிட்டான். சிறிது நேரம் அவளை முத்தமிட்டு கொண்டிருந்தவன், மிது "அத்தையும், மாமாவும் வரப்போறாங்க" என்று பயப்பட, அவளை அழைத்து கொண்டு வெளியே வந்து தோட்டத்தில் சென்று அமர்ந்தான்.

"மிது... உங்க அம்மா அப்பா நம்ம கல்யாணத்துக்கு ஒத்துக்குவாங்களா",

மிது "ஒத்துக்குவாங்க அப்படி இல்லைனா... நான் எங்க... எப்படி... உங்களை முதல பார்த்தேன்னு சொன்னா... ஒதுக்குவாங்க" என்று சொல்ல....

அவள் சொன்னதை கேட்டு திடுகிட்ட கார்த்திக் "ஓத வாங்க போற மிது... அவங்களுக்கு அந்த விஷயம் தெரிஞ்சா தாங்குவாங்களா... எதாவது லூசு மாதிரி உளறாத.... உங்க அப்பாகிட்ட எங்க அப்பா பேசுவாரு, நீ எதையும் சொல்ல வேண்டாம். எனக்கு சத்தியம் பண்ணு... உங்க அப்பாகிட்ட நீ அந்த விஷ்யத்ததை பற்றி சொல்ல மாட்டேன்னு" என்று கையை நீட்ட...

மிது... அவன் கையில் சத்தியம் செய்து கொடுத்தவள் "நீங்க ஏன் கார்த்திக் மத்தவங்களுக்காக இவ்வளவு பாடுபடறீங்க... அதனால தான் எனக்கு உங்களை ரொம்ப பிடிக்கும்" என்று சொல்ல...

"நீ... மத்தவங்க இல்லை, உங்க அப்பா என்னோட மாமனாரு அதனால நான் என் குடும்பத்துக்கு செய்யறது, எனக்கு சந்தோசம் தான்" என்றான் கார்த்திக், அவனின் பேச்சை கேட்ட மிது சந்தோஷமாக ஊருக்கு கிளம்பி சென்றாள்.

கௌதம், ப்ரியாவை இந்த விடுமுறையில் இண்டிரியர் டெக்ரேஷன் கிளாஸ்க்கு போக சொல்லி சேர்த்து விட்டிருந்தான். அதனால் ப்ரியா அந்த வகுப்புக்கு சென்று வந்து கொண்டிருந்தாள்.

***ஷ்ருதிக்கு கடைசி வருடம் கல்லூரி தேர்வு முடிந்துவிட்டது. அவள் இப்போது CA பைனல் எக்ஸாமுக்கு படித்து கொண்டிருந்தாள்.***

***இப்படியே நாட்கள் ரெக்கை கட்டி பறக்க ஆறு மாதங்கள் முடிந்திருந்த போது,***

***முரளி... சென்னையில் அறுவை சிகிச்சை மருத்துவனாக ஒரு பிரபலமான மருத்துவமனையில் பணியில் சேர்ந்து இருந்தான்.***

***ஷ்ருதி... CA எக்ஸாமில் நல்ல மதிப்பெண் பெற்றதால், அவள் பயிற்சிக்கு சென்ற நிறுவனத்திலேயே அவளை வேலைக்கு எடுத்து கொண்டனர்.***

***கார்த்திக்... R.K .கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்ல் ஆர்க்கிடெக்ட்டாக பணி புரிகிறான். அதோடு அவனும், கௌதமும் சேர்ந்து நடத்தும் சிமெண்ட் ப்ளாக் தொழிற்சாலையும் நன்றாக நடப்பதால் அவனுக்கு நல்ல வருமானம்.***

***மிதுவுக்கு கேம்பஸ் இன்டெர்வியுவில் சென்னையில் ஒரு நல்ல சாப்ட்வேர் கம்பெனியில் வேலை கிடைத்திருகிறது. இப்போது அவள் கல்லூரி ப்ராஜெக்ட் செய்து கொண்டிருக்கிறாள்.***

Ramya Rajan

***கௌதம்... நிறைய வீடுகள் கட்டுவதும், அப்பார்ட்மெண்ட் கட்டுவது என்று பிஸியாக இருக்கிறான். என்ன பிஸியாக இருந்தாலும் வாரம் ஒரு முறை கல்லூரிக்கு வந்து ப்ரியாவை பார்த்து பேசிவிட்டு அவளையும் தன்னோடு அழைத்து போவான்.***

***ப்ரியா... படிப்பதோடு கௌதமை இன்னும் அதிகமாக காதலித்து கொண்டிருந்தாள்.***

***எல்லாம் நல்லபடியாக சென்று கொண்டிருந்தது அப்பத்தா முரளிக்கு டாக்டர் வரனை கொண்டு வரும் வரை.***

***அப்பத்தா... அருனுக்கு பெண் தேடி கொண்டிருந்தார், அப்போது ஒரு டாக்டர் வரன் வர, அந்த பெண் வீட்டில் டாக்டர் மாப்பிள்ளை கேட்டதால் அதை முரளிக்கு பார்க்கலாம் என்று நினைத்து ஊரிலிருந்து கிளம்பி வந்தார்.***

***அப்பத்தா... ராமமூர்த்தியிடம் "வீட்டுக்கு ஒரே பொண்ணு அதனால சொத்தெல்லாம் அந்த பெண்ணிற்கு தான். பெரிய இடம்பா நம்ம முரளிக்கு பார்க்கலாம்" என்று சொல்ல... ராமமூர்த்தி இதற்க்கு மேல் அம்மாவிடம் சொல்லி விடுவதே நல்லது என்று நினைத்தவர் "முரளி கிருஷ்ணகுமாரின் மகளை திருமணம் செய்ய விரும்புவதாக" சொல்ல...***

***அப்பத்தா எல்லோரையும் வசை பாட ஆரம்பித்து விட்டார் "நான் இப்படி எல்லாம் நடக்கும்ன்னு தெரிஞ்சு தான் முதல்லையே அந்த***



Ramya Rajan

குடும்பத்தில இருந்து விலகி இருக்க சொன்னேன். நீ கேட்டியா... இப்ப எங்க வந்து நிற்குது பாரு. டாக்டருக்கு படிச்சவனுக்கு வெறும் கணக்கு எழுதுற பொண்ணா, முரளியோட படிப்புக்கும், அறிவுக்கும் எத்தனை பெரிய இடத்தில இருந்து கேட்கிறாங்க அத விட்டு இவங்க வீட்ல செஞ்சா மதிப்பு இருக்குமா. இவங்க வீட்ல பொண்ண எடுத்தா என்ன செய்வாங்க" என்று வாய்க்கு வந்ததை பேச...

ராமமூர்த்தி எதோ சொல்ல வர, அவரை பேசவிடாமல் தடுத்து மறுபடியும் அப்பத்தாவே பேச்சை தொடர்ந்தார்.

"நண்பன்னு கூட சேர்ந்தியே இப்ப என்ன ஆச்சு, நான் அவங்க வீடு பால் காய்ச்சும் போது பார்த்தேன் அந்த பொண்ணு, நம்ம முரளியோடவே இருந்துது. அது என் பேரனை மயக்க தான் போல, என் பேரன் வெளிநாட்டுக்கு எல்லாம் போக போறான். அப்ப அவன் மரியாதை இன்னும் உயரும்... அப்ப அவன் பெரிய இடத்தில கல்யாணம் முடிச்சிருந்தா தானே அவனுக்கும் மரியாதை நமக்கும் கௌரவம்" என்று நிறுத்தாமல் புலம்ப...

ராமமூர்த்தியிடம் ஒரு இடத்தின் பத்திரத்தை வாங்கும் சாக்கில் ப்ரியாவை பார்க்கலாம் என்று வந்த கௌதம், வெளியே நின்று அப்பத்தா பேசிய அனைத்தையும் கேட்டவன், ஆத்திரத்தில் உள்ளம் கொதிக்க நின்றான்.

முரளி அப்போது வீட்டில் இல்லை, அப்பத்தா டைனிங் ஹாலில் கத்துவது இங்கே ஹால் வரை கேட்டது. ப்ரியா ஏன் அப்பத்தா

இப்படி கத்துறாங்களோ என்று நினைத்து கதவை சாற்ற வந்தவள், அங்கே நின்ற கௌதமை பார்த்து அதிர்ந்தாள். அவன் முகத்தில் இருந்தே அவன் எல்லாத்தையும் கேட்டு இருக்கிறான் என்று புரிந்து கொண்டவள் கௌதமை இழுத்து கொண்டு பின் பக்கம் சென்றாள்.

கௌதம் "விடுடி... இன்னைக்கு நான் அவங்களை விட போறது இல்லை எங்க குடும்பத்தை இவ்வளவு கேவலமா பேசுறாங்க" என்று சொல்லி ப்ரியாவை பிடித்து தள்ள...

அவனை விடாமல் பின் பக்கம் கௌதமோடு வந்த ப்ரியா "கௌதம்... தயவு செஞ்சு எதாவது பேசிடாதீங்க, நீங்க கோபத்துல எதாவது மரியாதை இல்லாம பேசிட்டா... எங்க பாட்டி அத சாக்கா வச்சு கல்யாணத்தை நிறுத்திடுவாங்க, அப்புறம் எங்க அப்பாவாலும் எதுவும் செய்ய முடியாம போய்டும் ப்ளீஸ்..." என்று கெஞ்ச...

"அப்ப உங்க பாட்டி என்ன பேசினாலும், நாங்க கேட்கணுமா" என்று கௌதம் கோபத்தில் துள்ள...

"கௌதம்... ஷ்ருதிக்காக கொஞ்சம் பொறுமையா இருங்க. நீங்க பேசுற பேச்சு அவளை தான் பாதிக்கும். எங்க பாட்டி இப்ப அப்படி தான் பேசுவாங்க. எங்க அப்பா சொன்னா கேட்பாங்க".

கௌதம் "முடியாது எனக்கு உங்க பாட்டி கிட்ட நாலு கேள்வி கேட்டா தான் என் மனசு நிம்மதி ஆகும், என்னை தடுக்காத



Ramya Rajan

வழியவிடு ப்ரியா..."

"கௌதம்... இப்ப உங்க மனசு நிம்மதி முக்கியமா... இல்லை ஷ்ருதி கல்யாணம் முக்கியமா, நீங்க இப்ப செய்ய போற காரியத்தால உங்க தங்கச்சி கல்யாணம் தான் நிக்க போகுது, நான் உங்க கால்ல விழறேன் தயவு செய்து இங்கிருந்து போங்க" என்று ப்ரியா கௌதம் காலை பிடிக்க போக....

"ஹே... என்னடி பண்ற" என்று ப்ரியா காலில் விழாமல் தடுத்த கௌதம் சரி நான் போறேன் என்றான்.

அவனின் சோர்ந்த முகத்தை பார்த்த ப்ரியா "இருங்க வரேன்" என்று உள்ளே சென்று கௌதமுக்கு... குளிர்ந்த நீரை கொண்டு வந்து கொடுத்தாள்.

அதை வாங்க மறுத்தவன் கைகளில் திணித்தவள் "குடிங்க கோபமா வண்டி ஓடிட்டு போகாந்தீங்க" என்றாள்.

கௌதம் விரக்தியாக சிரித்தவன் அவள் குடுத்த நீரை குடிக்க...

அவன் வருத்தத்தை தாங்க முடியாதவள் "கவலை படாதீங்க கௌதம், ஷ்ருதி கல்யாணம் நல்ல படியா முடியட்டும். நம்ம கல்யாணத்தின் போது நீங்க அவங்க பேசினா மாதிரி பதிலுக்கு

**பேசிடுங்க" என்று கௌதமை சமாதானம் செய்ய...**

**"ஆமா டாக்டருக்கு படிச்ச உங்க அண்ணனும், நானும் ஒண்ணா... உங்க பாட்டி நம்ம கல்யாணத்துக்கும் பிரச்சனை தான் பண்ண போறாங்க. ஷ்ருதியவே இப்படி பேசுறவங்க, உன்னை எனக்கு கட்டி தருவாங்களா" என்றான்.**

**"உங்களுக்கென்ன... நீங்க ராஜா... உங்களை யாருக்கும் பிடிக்க வேண்டாம், எனக்கு பிடிச்சிருக்கு அது போதும்" என்று ப்ரியா சொல்ல...**

**கௌதம் சிறிது நேரம் அமைதியாக இருந்தவன், ப்ரியாவிடம் சொல்லி கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.**

**ஆபீஸ்க்கு வந்த கௌதமால் அங்கிருக்க முடியாமல் வீட்டுக்கு சென்றவன், வீட்டில் வந்து தனது அறையில் சோர்ந்து படுத்துவிட்டான். சாருமதி இரண்டு முறை சென்று சாப்பிட அழைக்க, கௌதம் வரவில்லை அப்போது கார்த்திக் அங்கே வந்தான்.**

**சாருமதி "டேய்... என்ன ஆச்சுடா இவனுக்கு, சாப்பிட கூப்பிடாலும் வர மாட்றான். ஆபீஸ்ல எதாவது பிரச்சனையா" என்று கார்த்திக்கிடம் கேட்க...**

Ramya Rajan

***"இல்லைமா... ப்ரியா வீட்டுக்கு தான் போனான். அங்க என்ன ஆச்சுன்னு தெரியலையே" என்று கார்த்திக் சொன்னதும்,***

***அங்கே எதோ பிரச்சனை நடந்திருக்கு என்று சாருமதிக்கு புரிந்தது இரண்டு தட்டில் சாதம் போட்டு எடுத்து கொண்டு கௌதமின் அறைக்கு சென்றவர், ஒன்றை கார்த்திக்கிடம் கொடுத்து சாப்பிட சொன்னார். கௌதமமை எழுப்பி பசியோட இருந்தா எல்லாம் பெருசா தான் தெரியும் என்று அவனுக்கு சாதத்தை ஊட்ட முதலில் மறுத்தவன் பின்பு வாங்கினான்.***

***அவன் சாப்பிட்டதும் என்ன நடந்தது என்று கேட்க, கௌதம் அப்பத்தா பேசியதை சொல்ல சாருமதி "நான் இதை எதிர் பார்த்தேன்" என்றார்.***

***எல்லோரும் சிறிது நேரம் அமைதியாக இருக்க கௌதம் "அவங்க எதிர் பார்த்தத விட அதிகமா செஞ்சு... நான் அவங்க மூக்க உடைக்காம விட மாட்டேன், அவங்க பெரிய இடத்தில சம்பந்தம் பண்ண நினைச்சது தப்பில்லை... ஆனா நம்ம குடும்பத்தை பத்தி எவ்வளவு கேவலமா பேசினாங்க தெரியுமா" என்று வேதனைப்பட...***

***"ஆமா... நீ எப்படி அவங்க பேசினத கேட்டு பதில் பேசாம வந்த, அவ்வளவு நல்லவனா நீ...." என்று கார்த்திக் சந்தேகமாக கேட்க...***

***கார்த்திக்கை பார்த்து முறைத்த கௌதம் "நான் அவங்ககிட்ட சண்டை போட தான் நினைச்சேன். ஆனா அங்க ஒருத்தி இருக்கா இல்ல... என் உயிரை எடுக்க... அவ நான் எதுவும் பேச கூடாதுன்னு என் கால்ல விழ வந்தா... அதனால தான் சும்மா விட்டேன்".***

***"அது தான பார்த்தேன். இது நம்ம தியாக செம்மளோட வேலையா, அவங்க டாக்டருக்கு படிச்ச பொண்ணு கேட்கிறாங்க அதுக்காக நீ ஷ்ருதிய டாக்டருக்கு படிக்க சொல்வியா.... அந்த பாட்டி ஏதோ தெரியாம உளறுது, முரளி... கேட்டாரா இதெல்லாம் அவரு கேட்டா தான் நாம கவலைபடனும்" என்று கார்த்திக் சொல்ல...***

***சாருமதி "இல்லை கார்த்திக்... அவங்க வெளிய சம்பந்தம் பண்ணா எவ்வளவு செய்வாங்களோ... அதை நாம செய்யிறது தான் நமக்கு மரியாதை" என்றார்.***

***கௌதம் "நாம எப்படியும் செய்ய தான் போறோம். ஆனா அவங்க நம்ம குடும்பத்த பத்தியும், ஷ்ருதியை பத்தியும் பேசினது தான் தாங்க முடியல, அங்கயே எதாவது பேசி இருப்பேன் ப்ரியா... தான் தடுத்திட்டா".***

***"ஆமா கௌதம்... நீ பாட்டுக்கு எதாவது பேசிட்டா... நாம தூரத்து சொந்தம் இல்லை... அவங்களை பார்க்காம இருக்கிறதுக்கு. நாம அவங்களோட ரெண்டு சம்பந்தம் செய்ய போறோம், அதனால பொறுத்து தான் போகணும். அவங்க பாட்டி தான் ஒரு மாதிரி ஆனா மாமாவும், அத்தையும் அவங்கள மாதிரி இல்லை. முரளியும், ப்ரியாவும் தங்கமான பிள்ளைங்க அப்புறம் நமக்கு வேற என்ன***

வேணும், நாம அவங்க பாட்டி எதிர் பார்த்த மாதிரி செஞ்சிடுவோம்" என்றார் சாருமதி.

ராமமூர்த்தி தனது அம்மாவை எப்படி சமாளித்தாரோ அது அந்த கடவளுக்கு தான் தெரியும். ஆனால் ஞாயிற்று கிழமை பெண் பார்க்க தன் குடும்பத்துடன் கிருஷ்ணகுமார் வீட்டிற்க்கு வந்தார். ஆனால் அப்பத்தா மட்டும் வரவில்லை. முரளிக்கு அன்று வீட்டில் நடந்தது எதுவும் தெரியாது, யாரும் அவனிடம் எதுவும் சொல்லவில்லை.

முறைப்படி பெண் பார்க்கும் சம்ப்ரதாயம் முடிந்ததும் கல்யாணம் எப்ப வைப்போம் என்று பேச்சு வர, கௌதம் கல்யாணத்தை சிறப்பாக செய்ய நினைத்தான். அதற்க்கு அவனுக்கு அதிக நாட்கள் தேவைபட்டதால் அடுத்த மாதம் நிச்சயதார்த்தமும், ஐந்து மாதம் கழித்து திருமணமும் வைத்துகொள்ளலாம் என்று கிருஷ்ணகுமாரிடம் சொல்லி இருந்தான். அவரும் அதேயே ராமமூர்த்தியிடம் சொல்ல அவரும் சரி என்றார்.

நிச்சயம் வீட்டிலேயே வைத்து கொள்ளலாம் என்று சொன்னதற்கு கௌதம் ஒத்துக்கொள்ளவில்லை, அவன் ஒரு பெரிய ஹோட்டலில் ஹால் ஏற்பாடு செய்து உயர்தரமான உணவிற்கு ஆர்டர் கொடுத்திருந்தான்.

உறவினர்கள் அனைவரையும் அழைத்து வெகு சிறப்பாக முரளி, ஷ்ருதியின் திருமண நிச்சயம் நடந்தது.

இவங்க என்ன செய்ய போறாங்க என்று நினைத்து வந்த அப்பத்தாவே... நிச்சயதார்த்ததை கல்யாணம் போல் செலவு செய்து நடத்துவதை பார்த்து ஆச்சர்யப்பட்டார்.

முரளி, ஷ்ருதி இருவருமே ஒருவருக்கொருவர் பொருத்தமான ஜோடியாய் வந்திருந்தவர்கள் கண்களுக்கு தெரிந்தனர்.

நிச்சயம் முடிந்து அனைவரும் சென்றதும் வீட்டு ஆட்கள் மட்டும் உட்கார்ந்து பேசி கொண்டிருந்த போது கார்த்திக் ஷ்ருதியிடம் "இப்ப சந்தோஷமா..." என்று கேட்க...

ஷ்ருதி பதில் சொல்லாமல் ம்... என்று மட்டும் சொல்ல...

"என்ன சத்தம் கம்மியா வருது" என்று கார்த்திக் கேட்டதும்,

ஷ்ருதி "அது தான் கல்யாணத்தை அஞ்சு மாசம் தள்ளி வச்சுடீன்களே, அப்புறம் என்ன "...

கௌதம் "கல்யாணத்தை சீக்கிரம் வைக்கணும்னா... பெரிய மண்டபம் எல்லாம் கிடைக்காது, சின்ன மண்டபம்னா பரவாயில்லையா" என்று கேட்டதும்,

ஷ்ருதி "அது எப்படி முரளி கூட வேலை பார்க்கிற டாக்டர்ஸ் எல்லாம் வருவாங்க, சின்ன மண்டபம் பிடிச்சா நல்லா இருக்காது இல்லை...."

ஷ்ருதி இப்போது கொஞ்சம் மாறி இருந்தாள். முரளியோடு கல்யாணம் நடக்குமா என்று இருந்தவள் நிச்சயத்திற்கு வந்தவர்கள் முரளியை புகழ்ந்ததை கேட்டதும், தான் இனி ஒரு டாக்டரின் மனைவி என்ற கர்வம் வந்தது. அதனால் அவள் எல்லாவற்றையும் அலட்ச்சியமாக நினைத்தாள்.

"அப்ப வாய் மூடிட்டு பேசாம இரு... மண்டபம் கிடைக்கிறதே பெரிய கஷ்ட்டமா இருக்கு, இதுல இந்த அம்மாவுக்கு சீக்கிரம் கல்யாணத்தை வைக்கலைன்னு கவலை, அப்புறம் மண்டபம் சரி இல்லை அது இதுன்னு குறை சொல்ல" என்று கௌதம் முனங்க...

சாருமதி ஷ்ருதியிடம் "உன்னை கார்த்திக் என்ன கேட்டான். நிச்சயம் எப்படி நடந்துச்சுன்னு தானே கேட்டான், அதுக்கு பதில் சொல்லாமல் வேற எதையோ பேசுற" என்று கோபப்பட்டார்.

தனது நண்பர்களை வழி அனுப்பிவிட்டு வந்த முரளி கௌதமிடம் "ஹால்... டெக்கரேஷன்.... சாப்பாடு எல்லாமே ரொம்ப கரண்டா இருந்துச்சு, மாமா சொன்னங்க நீ தான் எல்லாமே ஏற்பாடு பண்ணேன்னு தேங்க்ஸ் கௌதம்" என்றான்.

**"இதுல என்ன இருக்கு முரளி, நம்ம ரெண்டு வீட்ல நடக்கிற முதல் கல்யாணம். கிராண்டா இருக்கணும்" என்று கௌதம் சொல்ல...**

**"அதுக்காக ரொம்ப வருத்திக்காத கௌதம், எனக்கு ஒரு நாளுக்காக வெட்டியா செலவு பண்ண எல்லாம் பிடிக்காது" என்று முரளி அக்கறையாக சொல்ல..., ப்ரியா ஹப்பா.... அண்ணனாவது இப்படி பேசுறாங்களே என்று நிம்மதி அடைந்தாள். அவளுக்கு ஷ்ருதி மீது வருத்தம் எவ்வளவு கஷ்ட்டப்பட்டு, எல்லாம் பண்ணி இருக்காங்க. வாய திறந்து நல்லாயிருக்குன்னு சொன்னா என்னவாம்" என்று நினைத்தாள்.**

**கிருஷ்ணகுமாரே மகள் கல்யானத்திற்க்காக நிறைய சேர்த்து வைத்திருந்தார். ஆனால் அதையும் விட அதிகமாக இப்போது செய்யவேண்டி இருந்தது. ராமமூர்த்தியோ, ஜானகியோ அவர்களிடம் எதுவும் கேட்கவில்லை என்றாலும் அவர்கள் கேட்கவில்லை என்று சும்மா இருக்காமல் வெளியே இருந்து அவர்கள் பெண் எடுத்து இருந்தால், எவ்வளவு அவர்களுக்கு செய்வார்களோ... அதை தாங்களும் தங்கள் மகளுக்கு செய்துவிட வேண்டும் என்று நினைத்தனர்.**

**கௌதம் அந்த பகுதியிலேயே இருந்த பெரிய மண்டபத்தை புக் செய்துவிட்டு வந்தவன், சாருமதியிடம் விவரம் சொல்ல...**

**ஷ்ருதி "இந்த பக்கம் எதுக்கு பார்த்தீங்க, சிட்டிகுள்ள பார்க்க**

வேண்டியது தானே" என்றாள்.

"உனக்கு அங்க எல்லாம் எவ்வளவு கேட்பாங்கன்னு தெரியாதா... அதுவும் இங்கேயே பெரிய பெரிய மண்டபம் இருக்கும் போது, சிட்டிகுள்ள இருக்குன்னு தெண்டமா காச குடுக்கணுமா, நம்ம வீட்டு பக்கம் மண்டபம் இருந்தா தான், நமக்கு வசதியும்" என்று சாருமதி சொன்னதும்,

ஷ்ருதி அமைதியாக எழுந்து சென்றாள்.

கௌதம் தனது தங்கையின் கல்யாணத்தில் யாரும் ஒரு குறையும் சொல்லிவிட கூடாது என்று ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்தான்.

முரளிக்கு கார் வாங்கி குடுப்பது என்று முடிவு செய்திருந்தனர். அதனால் மூன்று மாதத்திற்கு முன்பு புக் பண்ணும் போதே முரளியின் பெயருக்கு புக் பண்ணிவிடலாம், அதோடு அவனுக்கு பிடித்த கார் வாங்கலாம் என்று நினைத்து, கௌதம் அவர்கள் வீட்டுக்கு சென்றான்.

கௌதம் முரளியை ஷோ ரூம்க்கு அழைக்க, அவன் "எதுக்கு கௌதம்... நமக்குள்ள என்ன பார்மலிடீஸ், அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்..."

***கௌதம் "நாம என்ன தான் ஒரே பிசினஸ் செஞ்சாலும், கல்யாணம்ன்னு வரும் போது செய்ற முறைய கரெக்டா செஞ்சிடனும் இல்ல பாட்டி..." என்று அப்பத்தாவிடம் கேட்க....***

***அவர் இவன் ஏன் என்கிட்டே கேட்கிறான் என்று நினைத்தவர் ஆமாம் என்றார்.***

***முரளி "இல்லை கௌதம்... நான் எப்படியும் ரெண்டு மூனு வருஷம் வெளிநாடு போய்டுவேன், ஏற்கனவே ஒரு கார் இருக்கு... இப்ப இன்னொரு கார் வாங்கினாலும் வேஸ்ட் தான்" என்றான்.***

***"அப்படியா... அப்ப சரி காரோட பணத்தை நாங்க தந்திடுறோம். நீங்க வந்த பிறகு வாங்கிக்கோங்க" என்று கௌதம் சொல்ல...***

***இதற்க்கு மேல் எப்படி மறுப்பது என்று முரளிக்கு தெரியவில்லை***

***கௌதம் அப்பத்தாவிடம் "நான் சொல்றது கரெக்ட் தான பாட்டி" என்றவன், சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டு சென்றான்.***

***கௌதம் போனதும் முரளியை பார்த்த ப்ரியா அவன் முகம் வாடி இருப்பதை பார்த்து "என்னனா ஒரு மாதிரி இருக்கீங்க...." என்று கேட்க...***

Ramya Rajan

"இல்லை கௌதம் ஏன் இப்படி பண்றான் ? எனக்கு இது சுத்தமா பிடிக்கலை, எனக்கு கார் வேணுமுனா எனக்கு வாங்க தெரியாதா எதுக்கு இவங்க வாங்கி தரனும்."

ப்ரியா "அவங்க செய்யிறது முறை தானே... நாம வேற வீட்ல பெண் எடுத்திருந்தா... அவங்க செய்வாங்க தானே..."

"நான் வேற இடத்தில் கல்யாணம் செஞ்சிருந்தாலும் வாங்கி இருக்க மாட்டேன். நான் டாக்டருக்கு படிச்சது வரதட்சணை வாங்க இல்லை. எனக்கு என்ன வேணுமோ அத நான் வாங்கினா தான், அது எனக்கு சந்தோஷத்தை கொடுக்கும், எனக்கு ஒரு மரியாதை வேண்டாமா... நானே நல்லா சம்பத்திப்பேன். அப்புறம் எனக்கு எதுக்கு அடுத்தவங்க காசு" என்று பட பட என பட்டாசாக பொரிய....

முரளி சொன்னதை கேட்ட அப்பத்தாவின் முகம் விழுந்துவிட்டது. அவர் அந்த இடத்தைவிட்டு எழுந்து அவரது அறைக்குள் சென்றார்.

ப்ரியா "ஏன்னா... வருத்தப்படறீங்க அவங்க ஒன்னும் கஷ்ட்டப்பட்டு செய்ய போறது இல்லை, உங்களுக்கு கஷ்டமா இருந்தா... நீங்களும் பதிலுக்கு செஞ்சுடுங்க" என்று யோசனை சொல்ல...

முதலில் முரளிக்கு ஒன்னும் புரியவில்லை... பிறகு புரிந்ததும் "ஹே மேடம்... என்ன சொல்ல வர்றீங்க" என்று சிரித்து கொண்டே

கேட்க...

"அவங்க மாப்பிள்ளைக்கு அவங்க செய்றாங்க, நீங்க உங்க மாப்பிள்ளைக்கு செய்ங்க" என்று ப்ரியா வெட்கத்துடன் சொல்ல...

"அப்ப எங்க கல்யாணம் எப்படி பண்றமோ ? அப்படியே உங்க கல்யாணமும் நடக்கணுமா..." என்று முரளி கேட்க...

ப்ரியா யோசிக்காமல் "அதெல்லாம் வேண்டாம். எனக்கு கௌதம்மோட கல்யாணம் ஆனாலே போதும். அது கோவிலா இருந்தாலும் எனக்கு சந்தோசம் தான். கல்யாணம் பண்ணிக்கிற இடமா முக்கியம், கல்யாணம் பண்ணிக்க போறவங்க தான் முக்கியம்" என்று உணர்ந்து சொன்னாள்.

கௌதமை எந்த அளவுக்கு விரும்பினால் அவள் இப்படி சொல்வாள் என்று புரிந்து கொண்ட முரளி "அதெல்லாம் உங்களுக்கும் கிராண்டா பண்ணிடலாம் கவலைபடாதே... கௌதம் அவன் தங்கச்சிக்கு பண்ணும் போது, நான் என் தங்கச்சிக்கு பண்ண மாட்டேன்னா" என்று முரளி உரிமை குரல் கொடுக்க...

ப்ரியா சந்தோஷமாக சிரித்தாள்.

முரளி பல வருடங்கள் வெளி ஊரில் இருந்ததால் அப்போது

***எல்லாம் அவனால் ப்ரியாவுடன் ரொம்ப பேச முடியாது. ஆனால் இப்போது அவன் இங்கேயே இருப்பதால்... இருவரும் ரொம்ப அன்பாக இருந்தனர். எல்லா விஷயங்களையும் பகிர்ந்து கொண்டனர்.***

28

***ஷ்ருதி கல்யாணத்திற்கு என்று வார வாரம் ஷாப்பிங் செய்து கொண்டிருந்தாள். அவளுக்கு வீட்டில் வாங்குவதே சிறப்பானதாக தான் வாங்கினார்கள். ஆனால் அவள் அதிலும் உயர்ந்ததை தான் கேட்டாள். அதில் ஒன்றும் தவறில்லை ஆனால் இவர்கள் வாங்குவதை குறை சொல்லிவிட்டு அதை செய்தது தான் எல்லோருக்கும் வருத்தத்தை தந்தது.***

***சாருமதி ஷ்ருதியின் நடவடிக்கைகளை கவனித்து கொண்டு தான் இருந்தார். கல்யாண நாள் நெருங்கியதும் ஷ்ருதியிடம் "நீ... முன்னாடி மாதிரி சின்ன பெண் இல்லை... நீ இப்போ" என்று எதோ சொல்ல வந்தவரை தடுத்த ஷ்ருதி "தெரியும் நான் இனிமே டாக்டரோட மனைவி அது தானே மா..." என்றதும்,***

***சாருமதி "அதுமட்டும் இல்லை... நீ ஒரு குடும்பத்துக்கு மருமகளா போற அதையும் நியாபகம் வச்சுக்கோ... இங்க இருக்கிற மாதிரி அங்கயும் போய் இருக்க முடியாது, போற இடத்தில நல்ல பேர்***

Ramya Rajan

வாங்க பாரு அத்தையும், மாமாவும் அவங்க அம்மாவை எதிர்த்து தான் உங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறாங்க" என்றவர் அப்பத்தா பேசிய அனைத்தையும் சொன்னவர் "எந்த பிரச்சனையும் வராம பார்த்துக்கோ அடுத்து உங்க அண்ணனுக்கும், ப்ரியாவுக்கும் கல்யாணம் பண்ணனும் மறந்துடாத" என்றார்.

அப்போது கார்த்திக்கும் அங்கு தான் இருந்தான். அவனும் கொஞ்ச நாட்களாக ஷ்ருதியின் போக்கை பார்த்தவன் "ஷ்ருதி... நீ ரொம்ப மாறிட்ட" என்றான்.

தன் மகள் போற இடத்தில் ஒழுங்காக இருக்க வேண்டும் என்று சாருமதி எல்லாவற்றையும் சொல்ல... அதுவே ஷ்ருதி மனதில் அப்பத்தா பற்றி வெறுப்பை ஏற்படுத்தியது, எனக்கு என்ன குறை இவங்க ஏன் அவங்க பேரனுக்கு என்னை வேண்டாம்ன்னு சொன்னங்க என்று அதை மட்டும் நினைத்தவள் மற்ற எல்லாவற்றையும் மறந்தாள்.

அதனால் பாதிக்கப்பட போவது ஷ்ருதியா........ப்ரியாவா..............?

திருமணதிற்கு ஒரு மாதம் முன்பு ஒரு நல்ல முகுர்த்த நாளில் கல்யாண புடவை எடுக்க கடைக்கு இரண்டு குடும்பமும் சென்றது. ராமமூர்த்தி, கிருஷ்ணகுமார் இருவரும் வரவில்லை. முரளி எனக்கு புடவையை பற்றி ஒன்றும் தெரியாது என்று சொன்னதற்கு ஷ்ருதி "கல்யாண புடவை எடுக்க கூட வரமாடீங்களா" என்று கேட்டதால் முரளியும் கிளம்பி வந்தான். அவர்களோடு கார்த்திக், மிதுவையும் அழைத்து சென்றனர்.

காரை இரண்டு தெரு முன்பே நிறுத்தி விட்டு நடந்து சென்றனர். போகும் வழியிலேயே ப்ரியா அவித்த வேர்கடலை.... மசாலா பொறி எல்லாம் வாங்கி தனது பாகில் வைத்து கொண்டாள். அவளும் மிதுவும் கடைசியாக நடந்து வந்ததால் வேறு யாரும் அவள் வாங்கியதை பார்க்கவில்லை.

அனைவரும் போத்தீஸ் சென்றனர். முதலில் ஷ்ருதிக்கு முகுர்த்த புடவையும், வரவேற்புக்கான புடவையும் வாங்கிவிட்டு மற்றவர்களுக்கு வாங்கலாம் என்று நினைத்து முதலில் அதை பார்த்தனர்.

எப்போதும் உடனே எடுக்கும் ஷ்ருதி, இந்த முறை ரொம்ப நேரம் பார்த்தாள். ஒரு ஒரு புடவையாக எடுத்து உடுத்தி பார்த்து கொண்டிருந்தாள். ஒரு மணி நேரமாகியும் அவள் எந்த புடவையும் எடுக்கவில்லை, இது வேலைக்கு ஆகாது என்று நினைத்த சாருமதி ஜானகியையும், மிதுவையும் அழைத்து கொண்டு தங்களுக்கும், மற்றவர்களுக்கும் புடவை எடுக்க சென்றார்.

ப்ரியாவும் அன்று இரண்டு புடவைகள் வாங்க வேண்டியது இருந்ததால் அவளும் ஷ்ருதி அருகில் சேரில் அமர்ந்து பார்த்து கொண்டிருந்தாள். அவளை சாருமதி தங்கள் சார்பாக ஒரு புடவை விலை உயர்ந்தது எடுத்து கொள்ள சொல்லி இருந்தார்.

ஷ்ருதி வாங்கும் வழியை காணோம் என்று நினைத்த கௌதம்

***கார்த்திக்கை அழைத்து கொண்டு ஆண்கள் பிரிவுக்கு சென்று கிருஷ்ணகுமாருக்கு, கார்த்திக்கு, சாருமதி சொன்னபடி அவர்களது உறவினர்களுக்கு மற்றும் தனக்கும் என்று உடைகள் வாங்கியவன், ஒரு மணி நேரம் கழித்து கீழே வர அப்போதும் ஷ்ருதி பார்த்து கொண்டு தான் இருந்தாள்.***

***இவ எப்ப புடவை எடுத்து... இன்னும் அத்தை நகை வேற வாங்கணும். அத எப்ப வாங்கிறது என்று நினைத்து கொண்டே ஷ்ருதி அருகில் செல்ல முரளியும் ஷ்ருதியிடம் அதை தான் சொல்லி கொண்டிருந்தான். அவனுக்கு நின்று நின்று கால் வலித்தது "ஷ்ருதி... நீ எப்பவும் சீக்கிரம் வாங்குவியே... இப்ப என்ன ?" என்று கேட்க...***

***"இதுக்கு முன்னாடி வாங்கினது வேற... இப்ப கல்யாணத்துக்குன்னு வாங்கும் போது பொறுமையா தான் வாங்கணும்" என்றாள்.***

***கௌதம் ப்ரியாவை தேட... அவள் ஒரு சேரில் காலை மடக்கி அமர்ந்து கொண்டு மசாலா பொறி சாப்பிட்டு கொண்டிருந்தாள். அதை பார்த்ததும் கௌதமிற்கு சிரிப்பு வந்தது. அவளருகில் சென்றவன் "புடவை எடுக்க கூடிட்டு வந்தா.... நீ என்ன உட்கார்ந்து மசாலா பொறி சாப்பிடுற" என்று கேட்க....***

***"அவளுக்கு லைட்டா பசிச்சிருக்கும், இல்லை ப்ரியா" என்று கார்த்திக் கிண்டல் செய்ய....***

**டேய்... நான் சாப்பிடறதை பார்த்து கிண்டலா பண்றீங்க, ஷ்ருதி புடவை வாங்கி முடிகிறதுக்குள்ள உங்களுக்கு நாக்கு வெளிய தள்ளுதா... இல்லையானு பாருங்க" என்று நினைத்தவள் "இந்த கடையில குடிக்க மோர் குடுத்தாங்க ரொம்ப டேஸ்ட்டா இருந்துச்சு, கௌதம் எனக்கு இன்னொரு கிளாஸ் வாங்கிட்டு வரீங்களா. நான் இப்பதான் வாங்கினேன்... திரும்பி வாங்க ஒரு மாதிரி இருக்கு" என்று கேட்க...**

**"ஏண்டி... இப்படி வெளிய வந்து மானத்தை வாங்குற" என்றான் கௌதம்.**

**"நாமளா கேட்டோம்... அவங்களா தானே குடுக்கிறங்க.... சாயங்காலம் சக்கரை பொங்கலாம், எனக்கு ரொம்ப பிடிக்கும். நான் ரெண்டு கப் வாங்கிப்பேன்" என்று ப்ரியா சொன்னதும்.**

**அடிப்பாவி... என்று அலறிய கௌதம் "சாயங்காலம் வரை... இங்க தான் இருப்போன்னு சொல்றீயா" என்றவன் கிழே சென்று மோரை வாங்கி வந்து கொடுக்க...**

**ப்ரியா "நீங்க பாதி குடிச்சிட்டு தாங்க" என்று சொல்ல....**

**கௌதம் "ரொம்ப தாராள மனசு உனக்கு" என்றவன், அவள் சொன்னபடி பாதியை குடித்துவிட்டு குடுக்க...**

Ramya Rajan

**"என்ன..." பர்ஸ்ட் நைட் சீன்னுக்கு ரிகரஸ்ஸலா..." என்று கௌதம் காதில் கார்த்திக் கேட்க....**

**கௌதம்.... மனதில் அப்படி இருந்தா எப்படி இருக்கும் என்று நினைவு தோன்ற.... ப்ரியா அருகில் நெருங்கி அமர்ந்தான்.**

**கார்த்திக்.... ஐயோ ! சும்மா இருந்தவன நானே தூண்டி விட்டுட்டேன்னே என்று நொந்தவன் "டேய்... இன்னும் வேலை நிறைய இருக்குடா உன்னோட ரொமான்ஸ் அப்புறம் வச்சுக்கோ" என்ற கௌதம் கையை பிடித்து இழுத்து சென்றான்.**

**கௌதம் முரளியை அழைத்து கொண்டு சென்று அவனுக்கு உடைகள் வாங்கிவிட்டு வந்தான்.**

**எல்லோரும் வாங்கி முடித்திருக்க அப்போதும் ஷ்ருதி வாங்கவில்லை புடவை எடுக்க வந்தா இவ்வளவு நேரம் ஆகும்ன்னு தெரிஞ்சு, கூட வர்றவங்க மயக்கம் போட்டு விழுந்திட கூடாதுன்னு தான், இந்த கடையில மோர் எல்லாம் குடுக்குறாங்க போலருக்கு என்று நினைத்த கௌதம் கார்த்திக்கையும், முரளியையும் அழைத்துக்கொண்டு கீழே சென்று மோர் வாங்கி குடித்தவன் தனது அம்மா, அத்தை, ஷ்ருதி, மிதுவிற்க்கும் வாங்கி குடுத்தான்.**

**ப்ரியாவின் அருகில் சென்று அமர்த்த கௌதம் "முன் ஜாக்கிரதை முத்தமா.... நீங்க புடவை வாங்கலையா" என்று கேட்க....**

"நான் ஒன்னு செலக்ட் பண்ணிட்டேன். இன்னொன்னு ஷ்ருதி அநேகமா வேற கடைக்கு போவா.... அப்ப வாங்கிக்கலாம்ன்னு நினைச்சேன்" என்று ப்ரியா சொல்ல....

அவள் சொன்னதை கேட்ட கௌதம் "உங்க அம்மா உன்னை பெத்தாங்களா.... இல்லை செஞ்சாங்களா..... மேனுபாக்ச்சரிங் டிபக்ட்ஸே இல்லை.... நீங்க எப்பவும் இப்படி சமத்து சக்கரை கட்டியா செல்லம்" என்று சொன்னவனுக்கு அப்போது தெரியவில்லை, இன்னும் பத்து நிமிடத்தில் தான் சொன்னது மாறபோகிறது என்று...

அப்போது கௌதம் சொன்னதை கேட்ட ஜானகி "அவ சின்ன குழந்தையா இருக்கும் போது, வெளிய போனா சாப்பிட எதாவது கைல குடுத்து உட்கார வச்சிட்டா.... அதே இடத்தில ரெண்டு மணி நேரம்னாலும் உட்கார்ந்திருப்பா. அதனால எனக்கு எப்பவுமே அவளால தொல்லை இருந்தது இல்லை" என்று சொல்ல....

கார்த்திக் "அது தான் எங்களுக்கு தெரியுமே" என்றதும், அனைவரும் சிரிக்க.... பக்கத்தில் நின்று புடவை எடுத்தவர்களும், அவர் சொன்னதை கேட்டு சிரிக்க.... ப்ரியாவுக்கு வெட்கமாக இருந்தது. அந்த இடத்தில் இருந்து எழுந்தவள் கௌதமிடம் "அத்தை என்னை ஒரு புடவை எடுத்துக்க சொன்னாங்க.... அதை நீங்க செலக்ட் செஞ்சு குடுங்க" என்று அவனை அழைக்க.... கௌதமும் சரி என்று அவளோடு சென்றான்.

Ramya Rajan

ஷ்ருதி தனக்கு இங்கே எதுவும் பிடிக்கவில்லை, வேறு கடைக்கு போகலாம் என்று வர... எல்லோரும் சரி கௌதமும், ப்ரியாவும் வரட்டும் என்று காத்திருந்தனர்.

கௌதம் பத்து நிமிடங்கள் புடவைகளை அலசியவன், நவாப்பல கலரில் தங்க கலர் பார்டர் வைத்த புடவையை தேர்ந்தெடுத்து கொடுக்க புடவையை வாங்கி கையில் வைத்து பார்த்தவளுக்கு அந்த புடவையின் கலரும், டிசைன்னும் மிகவும் பிடித்திருந்தது. நவாப்பல கலரில் தங்க கலர் பார்டர் வைத்து, உடல் முழுவதும் புடவையில் மெலிதான ஜரிகை நூலினால் அழகான வேலைப்பாடு செய்யப்பபடிருந்தது. அதோடு வெள்ளை கலரில் பெரிய கற்கள் வைத்து, புடவை பார்பதற்கு கண்ணை பறித்தது.

ப்ரியா சந்தோஷமாக புடவையை எடுத்து கொண்டு எல்லோரிடமும் காட்ட சென்றாள். எல்லோருக்கும் அந்த புடவை ரொம்ப பிடித்தது.

ஷ்ருதி "இந்த புடவை எங்க இருந்துச்சு.... நான் பார்க்கலையே ரொம்ப அழகா இருக்கு" ப்ரியா தான் கேட்டாள் குடுத்துவிடுவாள் என்ற நம்பிக்கையில் "நான் எடுத்துக்கட்டுமா" என்று கேட்க....

ப்ரியா "இல்லை.... கௌதம் எனக்கு எடுத்து கொடுத்தது. நான் குடுக்க மாட்டேன்" என்றாள்.

ஷ்ருதி "வேணா கௌதம.... நீ இன்னொரு புடவை செலக்ட் பண்ண சொல்லு" என்று சொல்ல....

***ப்ரியா "நீ வேணா கௌதம வேற புடவை செலக்ட் பண்ண சொல்லி வாங்கிக்கோ.... இது எனக்கு வேண்டும்" என்று புடவையை தர மறுக்க....***

***இவர்கள் இருவரின் வாக்குவாதத்தை பார்த்த மற்றவர்கள் அவர்களே ஒரு முடிவுக்கு வரட்டும் என்று பேசாமல் இருந்தனர். கார்த்திக் சென்று அதே மாதிரி புடவை இன்னொன்று இருக்கிறதா என்று கேட்க... கடைகாரர் இல்லை என்றார்.***

***சாருமதி "நீ அந்த புடவை வேனானன்னு தானே எடுக்கலை... இப்ப எதுக்கு கேட்கிற... உனக்கு வேற கடையில பார்க்கலாம்" என்று சொல்ல...***

***ஷ்ருதி "நான் அந்த புடவைய பார்க்கலை மா...." என்றாள்.***

***"இவ பார்த்து கலைச்சு போட்ட புடவைல இருந்து தான் கௌதம் எடுத்தாங்க" என்றாள் ப்ரியா.***

***ஜானகி "ப்ரியாவிடம் அவ கல்யாண பொண்ணு, அதனால நீ தான் விட்டு குடேன் ப்ரியா" என்று சொல்ல...***

***"கௌதம் வாங்கி குடுத்த முதல் புடவை நான் குடுக்க மாட்டேன்"***

**என்று சொன்ன ப்ரியா எங்கே கௌதமை நிமிர்ந்து பார்த்தால் புடவையை ஷ்ருதிக்கு குடுக்க சொல்லிவிடுவானோ என்று முரளியின் அருகே சென்று நின்று கொண்டவள், கடை ஆளிடம் அந்த புடவையை பில் போட சொன்னாள்.**

**அதற்க்கு மேல் யாராலும் எதுவும் பேச முடியாமல் போக, சரி வேறு கடைக்கு போகலாம் என்று கிளம்பினர்.**

**எல்லோருக்கும் ஒரு விஷயம் நன்றாக புரிந்தது. எல்லாவற்றிற்கும் விட்டு கொடுக்கும் ப்ரியா, கௌதம் விஷயத்தில் ஒரு புடவை என்றாலும் விட்டு கொடுக்க மாட்டாள் என்று...**

**மதிய உணவை முடித்து விட்டு வேறு கடைக்கு செல்வோம் என்று நினைத்தவர்கள், ஹோட்டலுக்கு உணவு அருந்த சென்றனர். போகும் வழியில் ஷ்ருதி முரளியிடம் "நீங்க ஒரு வார்த்தை சொன்னீங்களா உங்க தங்கை பேசினத கேட்டுட்டு சும்மா இருக்கீங்க" என்றாள்.**

**"நீ அவகிட்ட அந்த புடவைய கேட்டதே தப்பு. இதுல நான் வேற பேசணுமா... நான் உங்க ரெண்டு பேருக்கும் டிரஸ் வாங்கிட்டு வந்த போது, ப்ரியா உன்னை தான முதல எடுத்துக்க சொன்னா.... இன்னைக்கு அவளுக்குன்னு கௌதம் வாங்கி குடுத்த புடவைய, நீ எப்படி கேட்கலாம்" என்று முரளி கோபபட....**

**அவன் சொன்னது உண்மை என்பதால் ஷ்ருதி அதற்க்கு மேல் அதை**

**பற்றி எதுவும் பேசவில்லை...**

**சாப்பிட அமரும் போது ப்ரியா அருகில் அமர்ந்த கௌதம் மெதுவாக "உனக்கு நான் இனிமே புடவையே வாங்கி தர மாட்டேன்னா... நீ கேட்டா ஒன்னு இல்லை... ஒன்பது வாங்கி குடுப்பேன். ஷ்ருதிக்கு தானே கல்யாணம். அவ நீ குடுப்பேன்னு தானே கேட்டா... குடுத்திருக்கலாம் இல்லை" என்று சொல்ல...**

**ப்ரியா தன் கையில் இருந்த புடவை கவரை ஷ்ருதியிடம் குடுத்தவள் "இந்தா ஷ்ருதி நீயே இந்த புடவையை வச்சுக்கோ" என்றாள். ஷ்ருதி முரளியை பார்க்க... அவன் நீ மட்டும் அந்த புடவைய வாங்கின தொலைஞ்ச என்பது போல் பார்த்தான். ஷ்ருதி "வேண்டாம் ப்ரியா... நான் வேற எடுத்துக்கிறேன்" என்றாள்.**

**அனைவரும் சாப்பிட்டு முடித்ததும் ஆர்.எம்.கே.வி போக, ப்ரியா கௌதமிடம் புடவை கவரை கொடுத்தவள் "இதை நீங்களே ஷ்ருதிகிட்ட குடுத்திடுங்க" என்று சொன்னாள்.**

**கௌதம் "கோபமா ப்ரியா" என்று கேட்க...**

**"எதுக்கு கோவிக்கணும். நீங்க தான் நான் கேட்டா ஒன்பது புடவை வாங்கி குடுப்பேன்னு சொன்னீங்களே. நான் ஒன்பது புடவை எடுத்துக்கிறேன்" என்று சொன்னவள், உள்ளே சென்று நிஜமாகவே ஒன்பது புடவைகள் எடுக்க ஆரம்பித்தாள்.**

Ramya Rajan

ப்ரியா தேர்ந்தெடுத்த ஒவ்வொரு புடவையும் இருபது ஆயிரம், முப்பது ஆயிரம் என்று இருந்தது. அதை கவனித்த கௌதம், இவ ரெண்டு லட்ச ரூபாய்க்கு பில்ல போட்ருவா போலிருக்கு என்று நினைத்தவன் "அம்மா தாயே.... நான் தெரியாம சொல்லிட்டேன். நீயே இந்த புடவைய வச்சுக்கோ" என்றான்.

ப்ரியா சிரித்து கொண்டே அந்த புடவையை வாங்கி கொண்டவள், தான் தேர்ந்தெடுத்திருந்த புடவைகளில் இருந்து ஒரு புடவையை மட்டும் எடுத்து தன் அம்மாவிடம் "இந்த புடவை எடுத்துக்கிறேன் மா" என்றாள்.

கௌதம் ப்ரியாவை பார்த்து முறைத்து கொண்டே அங்கிருந்து நகர்ந்தவன், கார்த்திக் அருகில் சென்று அமர்ந்தான். கார்த்திக்கும், மிதுவும் நடந்ததை எல்லாம் பார்த்து கொண்டுதான் இருந்தனர்.

கௌதம் கார்த்திக்கிடம் "பாருடா எப்படி பண்றா...." என்று சொல்ல...

"அவ செஞ்சது என்ன தப்பு, அவளே எப்ப பாரு விட்டு குடுக்கணும்ன்னு நீங்க ஏன் எதிர் பார்கறீங்க. அவளுக்குன்னு சில ஆசைகள் இருக்கும் அதை நீயும் புரிஞ்சிக்கணும் கௌதம்" என்று கார்த்திக் சொல்ல...

**"எனக்கு புரியுது டா... ஆனா நான் யாருக்கு சப்போர்ட் பண்றது, நீயே சொல்லு... ப்ரியா புரிஞ்சிப்பான்னு நினைச்சேன், அவளும் இப்படி பண்றா..." என்றதும்,**

**"சரி விடுடா.... இனிமே அவங்களுக்குள்ள பிரச்சனை வந்தா... அவங்களே பார்த்துக்கட்டும், நீ தலையிடாதே" என்றான் கார்த்திக்.**

**மிதுவுக்கு சாருமதி, ஜானகி இருவரும் புடவை எடுத்து கொடுத்தனர். அதோடு கார்த்திக்கும் ஒரு புடவை அவனே தேர்ந்தெடுத்து வாங்கி கொடுத்தான். அவன் ப்ரியாவை பார்த்து ஒரு பெண்ணுக்கு தன்னுடையவன் வாங்கி கொடுக்கும் ஒரு புடவை கூட எவ்வளவு முக்கியமானது என்று புரிந்து கொண்டவன். மிதுவுக்கும் அப்படிபட்ட ஆசை இருக்கும் என்று நினைத்து வாங்கினான். மிதுவும் அவன் வாங்கி கொடுத்த புடவையை ஆசையுடன் வருடி கொண்டே இருந்தாள்.**

**முரளி ஷ்ருதியிடம் தான் இந்த கடை மூடும் வரையில் கூட காத்திருப்பதாக சொன்னவன், உனக்கு பிடிச்ச புடவை அது என்ன விலைனாலும் வாங்கிக்கோ என்றான்.**

29

Ramya Rajan

கௌதமிற்கு ப்ரியாவின் மேல் இருந்த வருத்தம், அவளை அந்த புடவையில் முரளி, ஷ்ருதியின் வரவேற்ப்பு அன்று காணும் வரை தான் இருந்தது.

ப்ரியா சேலையை ஒரு ப்ளீட் மட்டும் வைத்து பின் பண்ணி இருந்தாள். அதனால் அந்த சேலையின் வேலைபாடு நன்றாக தெரிந்தது. தளர்வாக தலையை பின்னி தோளில் இருபுறமும் வழியுமாறு மல்லிகை பூவை வைத்திருந்தவளுக்ககவே அந்த சேலை நெய்த மாதிரி அவளுடைய அழகை மேலும் உயர்த்தி காண்பித்தது.

கௌதம் ப்ரியாவின் மேல் வைத்த பார்வையை திருப்ப முடியாமல் இருந்தான். மண்டபத்தில் இன்னும் யாரும் வந்திருக்கவில்லை ப்ரியா மிதுவோடு சேர்ந்து வாசலில் நின்று வரவேற்பதற்காக டேபிலில் பொருட்களை அடுக்கி கொண்டு இருந்தவள், கௌதம் அவளோடு ஒட்டிக்கொண்டு நிற்பதை பார்த்து என்னவென்று கேட்க...

"உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும் வா..." என்று கௌதம் கூப்பிட....

அவன் எதற்கு கூப்பிடுகிறான் என்று தெரிந்ததால் "எனக்கு வேலை இருக்கு" என்றாள் ப்ரியா.

கௌதம் "எனக்கு... மட்டும் வேலை இல்லையா.... எனக்கும் நிறைய வேலை இருக்கு, இன்னும் யாரும் வரலைல வா..." என்றவன்

***முன்னால் செல்ல.... மிதுவிடம் சொல்லிக்கொண்டு ப்ரியா பின்னால் சென்றாள்.***

***மாடியில் இருந்த அறைக்குள் நுழைந்த கௌதம் ப்ரியா உள்ளே வந்ததும், கதவை சாற்றி தாள் போட்டுவிட்டு, அவளை இறுக அணைத்தவன் "இந்த புடவைல தேவதை மாதிரி இருக்க ப்ரியா" என்று சொல்லி அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.***

***கார்த்திக் வீட்டிற்கு சென்று உடை மாற்றி வந்தவன், வாசலில் மிது மட்டும் நிற்பதை பார்த்து அவள் அருகில் சென்றான். மிது குனிந்து மும்முரமாக எதையோ தேடி கொண்டிருந்தாள். கார்த்திக் சுற்றி பார்க்க அங்கே யாரும் இல்லை, புடவை கட்டி இருந்ததால்... அவளுடைய இடை லேசாக தெரிய... அதை பிடித்து கார்த்திக் கிள்ள... மிது ஆஆஅ..... என்று அலறி துள்ள... உள்ளே வேலை செய்து கொண்டிருந்த வேலை ஆட்கள் வெளியே வந்து என்னவென்று கேட்டனர்,***

***கார்த்திக் "சமாளி மிது.. "என்று மெதுவாக சொல்ல...***

***மிது "இல்லை... இங்க ஒரு பூச்சி பார்த்தேன். அது தான் பயத்தில கத்திட்டேன்" என்றதும் அவர்கள் உள்ளே செல்ல...***

***மிது கார்த்திக்கை பார்த்து முறைத்தவள் "வாசல்ல வச்சு பண்ற வேலையா இது" என்று கேட்க....***

கார்த்திக் "அப்ப உள்ளேனா ஒகேயா..." என்று கண்ணடித்தவன் ஆமா எங்க ப்ரியா என்று கேட்டான்.

"கௌதம்... அண்ணாவுக்கு அவகிட்ட எதோ விஷயம் சொல்லனுமாம் கூடிட்டு போயிருக்காங்க" என்றாள்.

"இவனுக்கு நான் காதல் மன்னன்னு தான் பட்டம் குடுக்க போறேன். எவ்வளவு வேலை இருந்தாலும், சுத்தி எத்தனை பேர் இருந்தாலும், அவன் வேலைய கரெக்டா பண்றான்" என்றவன் செல்லில் கௌதமை அழைக்க...

போன்னை எடுத்த கௌதம் "என்ன கார்த்தி ? எதுக்கு கூப்பிட்ட ? நான் முக்கியமான வேலை பார்த்திட்டு இருக்கேண்டா..." என்றான்.

கார்த்திக் "நீ என்ன முக்கியமான வேலை பார்கிறேன்னு எனக்கு தெரியும். முதல்ல எறங்கி கீழே வா... வீட்ல இருந்து வேன் கிளம்பிடுச்சு..."

"இன்னும் இங்க வரலைல வாசலுக்கு வந்ததும் சொல்லு வரேன்" என்றவன் போன்னை வைத்துவிட்டு, ப்ரியாவை இன்னும் இறுக்க கட்டி கொள்ள...

அவள் "விடுங்க நான் போகணும்" என்றாள்.

கௌதம் "ஏண்டி முத்தம் கொடுக்கலாம்னா... இப்படி வாய் புல்லா லிப்ஸ்டிக் போட்டு வச்சிருக்க, அட்லீஸ்ட் கட்டியாவது பிடிச்சுகிறேனே..." என்றான்.

வாசலில் வேன் வந்து நின்றதும் கார்த்திக், கௌதமை அழைத்து "டேய் கௌதம்... வேன் வந்துடுச்சு டா, சீக்கிரம் வா...." என்றதும், கௌதம் ப்ரியாவிடம் இருந்து விலக அவனால் விலக முடியவில்லை. அவனுடை சட்டை பட்டன் ப்ரியாவின் சேலையில் இருந்த சரிகையில் நன்றாக மாட்டி கொண்டது.

இருவரும் எடுக்க போராட எடுக்க முடியவில்லை, இழுத்தால் புடவை கிழிந்துவிடும். பதடத்தில் இருவருக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை....

கார்த்திக் கௌதமை மீண்டும் அழைத்தான் "டேய்... என்னடா பண்ற எல்லோரும் இறங்கி உள்ளே வராங்க" என்றான் மெதுவான குரலில்...

"டேய் கார்த்திக்... என்னோட ஷர்ட் பட்டன், ப்ரியா புடவைல மாட்டிகிச்சுடா... எடுக்க வர மாட்டுது" என்று கௌதம் சொல்ல...

Ramya Rajan

"இன்னைக்கு நீ தொலைஞ்சடா... அந்த பாட்டி வேற வந்திருக்கு, நீ ஷர்ட்ட கழட்டி ப்ரியாகிட்ட குடுத்திட்டு, வேற ரூம்குள்ள போய் கதவை சாத்திக்கோ. ப்ரியாவை புடவையில் இருந்து எடுத்ததும், அதை அங்க இருக்கிற கப்போர்ட்ல வச்சிட்டு போக சொல்லு" என்றான் கார்த்திக்.

கௌதம், கார்த்திக் சொன்னதை ப்ரியாவிடம் சொல்லிக்கொண்டே சட்டையை கழட்டியவன், கதவை திறந்து வெளியேற... ப்ரியா கதவை மூடி விட்டு, மெதுவாக மாட்டி இருந்ததை எடுத்துவிட்டு... சட்டையை கப்போர்டில் வைத்துவிட்டு சென்றாள்.

ப்ரியா கீழே வர "அப்பத்தா அவளிடம் வாசல்ல நின்னு வரவங்களை வாங்கன்னு கேட்காம... எங்க போன ?" என்று கேட்க....

ப்ரியா ரெஸ்ட் ரூம் போயிட்டு வந்தேன் என்றவள் வாசலில் சென்று மிதுவோடு நின்றாள்.

வாசலில் நின்ற கார்த்திக் ப்ரியாவை பார்த்ததும் கௌதமை அழைத்து சொல்ல.... அவன் அந்த அறைக்கு சென்று சட்டையை போட்டு கொண்டு கீழே வந்தான்.

கௌதம் "நண்பன் உடையான்... படைக்கு அஞ்சான்... அப்படின்னு ஒரு புது பழமொழியை, நீ இன்னைக்கு உண்டாக்கி இருக்க நண்பா..." என்று கார்த்திக்கை அனைத்து கொள்ள...

***"போதும் ரொம்ப வழியுது..." என்று கார்த்திக் சொல்ல மிதுவும், ப்ரியாவும் சிரித்தனர்.***

***மாலை 6.30 மணிக்கு வரவேற்ப்பு தொடங்க... முரளியும், ஷ்ருதியும் மேடைக்கு வந்தனர். மரூன் கலர் புடவையில் தங்க ஜரிகை வேலைப்பாடும் வெள்ளை நிற கற்களும் பதித்த புடவையில் ஜொலித்தாள் ஷ்ருதி, முரளி க்ரே கலர் சூட்டில் கம்பீரமாக இருந்தான்.***

***மேடையில் கும்பலாக நிறைய பேர் நின்றால் நன்றாக இருக்காது என்பதால் சிறிது நேரம் ப்ரியா, கார்த்திக், மிது மற்றும் மற்ற உறவினர்கள் என்று ஆளுக்கு கொஞ்ச நேரம் நின்றனர். கௌதம் நிற்க நேரமில்லாமல் விருந்தினர்களை கவனித்தான்.***

***முரளியுடன் படித்தவர்கள் வேலை பார்பவர்கள் என்று நிறைய பேர் வரவேற்ப்பிற்க்கு வந்திருந்தனர். அதில் முரளியிடம் ப்ரியாவை பெண் கேட்ட நண்பனும் வந்திருந்தான். முரளி அவனிடம் இப்போதைக்கு ப்ரியாவிற்கு கல்யாணம் செய்யும் எண்ணம் இல்லை என்று மட்டும் தான் சொல்லி இருந்தான். ஆனால் இன்று ப்ரியாவை நேரில் பார்த்த அவனது நண்பன் விஷ்வாவிற்கு அவளை விட்டுவிட கூடாது, தான் எப்படியாவது அவளை திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அழுத்தமாக பதிய அவன் ப்ரியாவையே பார்த்து கொண்டிருந்தான்.***

Ramya Rajan

முரளி ஷ்ருதியின் வரவேற்ப்பு மிகவும் சிறப்பாக நடந்தது. பப்பே முறையில் உணவு பரிமாறப்பட்டது. அது தவிர மண்டபத்தின் வெளியே இருந்த தோட்டத்தில் குழந்தைகளுக்காக பஞ்சு மிட்டாய்... பாப்கார்ன்.... பெண்களுக்கு மெஹந்தி போடுவது.... சிறுவர்களுக்கு கார்ட்டூன் வரைவது என்று தனித்தனி கூடாரங்கள் வைத்து அதுவேறு ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தது.

இரவு ஒன்பது மணிக்கு மேல் தான் கூட்டம் குறைந்தது. கௌதமின் நண்பர்கள் அனைவரும் வந்திருந்தனர் கார்த்திக் அவர்களை கவனித்து கொண்டிருந்தான்.

முரளியின் நண்பன் விஷ்வா தனது நண்பனை நம்பினால் வேலைக்கு ஆகாது என்று நினைத்தவன்... யாரை பிடிப்பது என்று யோசித்து கொண்டிருந்தான். மேடைக்கு சென்றவன் முரளியுடன் பேசிவிட்டு ஷ்ருதியை புகழ்ந்து தள்ளினான். உங்களை போல ஒரு பொருத்தமான ஜோடி இல்லை.... முரளிக்கு நீங்க ரொம்ப பொருத்தம் என்று புகழ... அப்போது அப்பத்தா மேடைக்கு வர அவரை பார்த்த ஷ்ருதி பாருங்க நீங்க என்ன சொன்னீங்க மத்தவங்க என்ன சொல்றாங்கன்னு கேளுங்க என்பதை போல் அவரை ஒரு பார்வை பார்க்க....

அப்பத்தா பதிலுக்கு நீயெல்லாம் எனக்கு சமமா... என்று ஒரு லுக் விட்டார்.

விஷ்வா ஷ்ருதிக்கு பக்கத்தில் நின்ற ப்ரியாவை பார்த்து "நீங்க முரளி தங்கச்சி தானே... நான் அவனோட ப்ரெண்ட்" என்று கையை

Ramya Rajan

கொடுக்க...

ப்ரியா கைகுவித்து அழகாக வணக்கம் என்றாள்.

கைய கூட தொட விட மாட்டியா... பார்க்கலாம் நீயா... நானான்னு என்று நினைத்த விஷ்வா பதிலுக்கு வணக்கம் சொன்னவன் "நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க என்று வழிய... " வேறு பேச்சு மாற்ற நினைத்த ப்ரியா "சாப்டீங்களா..." என்று கேட்க...

விஷ்வா "இனிமே தான் சாப்பிடனும், நீங்க கூட்டிட்டு போறீங்களா...." என்றான்.

ப்ரியா மேடையில் இருந்து கீழே இறங்கினாள். அவள் பின் சந்தோஷமாக சென்றான் விஷ்வா. கீழே இறங்கிய ப்ரியா கார்த்திக்கின் அருகில் சென்றவள் "கார்த்தி அண்ணா.... இவங்க முரளி அண்ணாவோட ப்ரெண்ட்.... சாப்பிட கூட்டிட்டு போங்க" என்றதும், விஷ்வாவின் முகம் மாற.... அவன் "நீங்க வரலியா ப்ரியா..." என்று கேட்க...

விஷ்வாவின் முக மாற்றத்தை வைத்தே... அவன் எண்ணத்தை புரிந்து கொண்ட கார்த்திக் "அவ அப்புறம் சாப்பிடுவா... நீங்க வாங்க நான் கூட்டிட்டு போறேன்" என்று விஷ்வாவை அழைத்து கொண்டு சென்றான்.

அங்கிருந்த வினோத் "எப்படி இருக்க ப்ரியா ?" என்று கேட்க...

ப்ரியா "நல்லா இருக்கேன் வினோத் அண்ணா.... நீங்க எப்படி இருக்கீங்க... ?" என்றாள்.

"நல்லா இருக்கேன்" என்ற வினோத், "உன்னோட ஹீரோ என்ன ரொம்ப பிஸியா இருக்கான்... பேச கூட முடியலை" என்றதும்,

ப்ரியா "அவங்க தங்கச்சி கல்யாணம் இல்லை... அதனால தான் இன்னும் கொஞ்ச நேரத்தில ப்ரீ ஆகிடுவாங்க" என்றாள், அவள் சொன்னது போல் கௌதம் கொஞ்ச நேரத்தில் இவர்களுடன் வந்து அமர்ந்தான்.

நண்பர்களை நலம் விசாரித்தவன், ப்ரியாவை பார்த்து "மேடம்... சொல்லுங்க.... நீங்க மாப்பிள்ளையோட தங்கச்சி உங்களுக்கு எதாவது குறை இருக்கா...." என்று கேட்க....

அவன் உண்மையாகவே கேட்கிறான் என்று நினைத்த ப்ரியா "இல்லை" என்றவள், "ஆனா பஞ்சு மிட்டாய் தான்.... நான் போறதுக்குள்ள காலி ஆகிடுச்சு" என்று கவலையாக சொல்ல...

அதை கேட்டு அங்கிருந்த அனைவரும் விழுந்து... விழுந்து சிரித்தனர்.

ப்ரியா கௌதமிடம் "நீங்க தான... கேட்டீங்க" என்றாள் பாவமாக.

அவள் முக வாட்டத்தை தாங்க முடியாமல் கௌதம் "உனக்கு இல்லைன்னு யார் சொன்னா ? வா... உனக்கு நான் வாங்கி தரேன்" என்று அவளை அழைத்து கொண்டு செல்ல.... கூட நண்பர்கள் பட்டாளமும் சென்றது.

கௌதம் பஞ்சு மிட்டாய் விற்பவரிடம் "என்ன சார்... இப்படி பண்றீங்க இவங்க மாப்பிள்ளையோட தங்கச்சி, இவங்களுக்கு போய் இல்லைன்னு சொல்லலாமா.... அப்புறம் கோவிச்சிக்கிட்டு போய்டா... எங்களோட நிலைமை" என்று சொல்ல....

அதற்க்கு வினோத் "எங்களோட நிலைமைன்னு.... ஏன் எல்லோரையும் சேர்த்துக்கிற... ? உன்னோட நிலைமைன்னு சொல்லு" என்றான்.

"இல்லை... இவங்க ஒருத்தருக்கு மட்டும் எப்படி பண்றதுன்னு நினைச்சி சொன்னேன்" என்று பஞ்சு மிட்டாய் விற்பவர் சொல்ல...

"பரவாயில்லை... கொஞ்சம் அதிகமா பண்ணுங்க" என்றான் கௌதம்.

***அவர் சரி என்று புதிதாக செய்து தர... ப்ரியா அதை ரசித்து சாப்பிட்டாள்.***

***அவள் சாப்பிடுவதை... அங்கிருந்த குட்டீஸ் பார்த்துவிட்டு வர... கௌதம் அவர்களுக்கும் தர சொன்னான்.***

***சாப்பிட்டதும் திரும்ப மண்டபத்திற்குள் சென்றனர். இப்போது வெளி ஆட்கள் சென்றிருக்க முக்கியமான உறவினர்கள் நண்பர்கள் மட்டும் இருந்தனர். முரளியும், ஷ்ருதியும் கேக் வெட்டி ஒருவருக்கொருவர் ஊட்டி கொண்டனர். முரளி மற்றொரு கேக் துண்டை எடுத்து ப்ரியாவுக்கு ஊட்ட... ஷ்ருதி கௌதமிற்கு கொடுத்தாள். நான்கு பேரும் சேர்ந்து போட்டோ எடுத்து கொண்டனர். கார்த்திக்கையும் மேடைக்கு அழைத்தனர்... ஷ்ருதி அவனுக்கும் கேக் கொடுத்தாள். இப்போது ஐந்து பேரும் சேர்ந்து போட்டோ எடுத்து கொண்டனர்.***

***கௌதமிடம் முரளி பாட்டு பாட சொல்ல.... அவனும் சரி என்றவன் அவனுக்கு மிகவும் பிடித்த பாடலை பாடினான்.***

***" விழி மூடி யோசித்தால் அங்கேயும் வந்தாய்***

***முன்னே முன்னே***

Ramya Rajan

**தனியாக பேசிடும் சந்தோசம் தந்தாய்**

**பெண்ணே பெண்ணே**

**அடி இது போல் மழை காலம்**

**என் வாழ்வில் வருமா**

**மழை கிளியே மழை கிளியே**

**உன் கண்ணை கண்டேனே**

**விழி வழியே விழி வழியே**

**நான் என்னை கண்டேனே சென்றேனே**

**விழி மூடி யோசித்தால் அங்கேயும் வந்தாய்**

Ramya Rajan

**முன்னே முன்னே**

**கடலாய் பேசிடும் வார்த்தைகள் யாவும்**

**துளியாய் துளியாய் குறையும்**

**மௌனம் பேசிடும் பாஷைகள் மட்டும் புரிந்திடுமே**

**தானா எந்தன் கால் இரண்டும் உந்தன் திசையில் நடக்கும்**

**தூரம் நேரம் காலம் எல்லாம் சுருங்கிடுமே**

**இந்த காதல் வந்துவிட்டால்**

**நம் தேகம் மிதந்திடுமே**

**விண்ணோடும் முகிலோடும் திரிந்திடுமே**

ஒ..ஒ..ஒ.."

என்ற பாட்டை பாடி முடித்ததும். கௌதம் வினோத்தை மேடைக்கு அழைக்க... இருவரும் சேர்ந்து ஒரு குத்து பாடலை பாடிக்கொண்டே ஆடினர்.

"you know ladies

it's time to show some real love

மேரே பியா

மேரே பியா பியா ஓஹ

மேரே பியா

பன்னாரஸ் பட்டு கட்டி

மல்லிப்பூ கொண்ட வெச்சு

சிங்கப்பூர் சீமாட்டி

எம் மனச கெடுத்தா

***அவ முந்தானை பூவகண்டு***

***என் உயிரு புட்டுகிச்சு***

***சிந்தாம செதராம***

***என் கதைய முடிச்சா***

***மேரே பியா***

***மேரே பியா பியா***

***ஓஹ மேரே பியா***

***மேரே பியா பியா***

***ஓஹ மேரே பியா***

***மேரே பியா பியா***

***பென்னராஸ் பட்டு கட்டி***

***மல்லிப்பூ கொண்ட வெச்சு***

***சிங்கப்பூர் சீமாட்டி***

***எம் மனச கெடுத்த***

***உன் மூச்சு வாசனையில்***

***ரோஜாக்கள் டவன் டவன்***

***அப் டவன் அப் டவன்***

Ramya Rajan

***உன்னுடைய பேச்சுனிலே***

***ரிங்க்டோன்கல் டவன் டவன்***

***அப் டவன் அப் டவன்***

***உன் விழியன் கோட்டையிலே***

***டாஸ் மார்க்கெட் டவன் டவன்***

***அப் டவன் அப் டவன்***

***மேரே பியா பியா***

***ஓஹ மேரே பியா***

***மேரே பியா பியா"***

***அந்த பாடல் முடிந்ததும். அடுத்த பாடல் என்று ஒரே கலட்டவாக இருந்தது. ப்ரியா... கார்த்திக், மிதுவுடன் கீழே அமர்ந்து கௌதம் பாடுவதை பார்த்து கொண்டிருந்தாள்.***

***குடும்பத்தினர்கள் அனைவரும் அங்கு தான் இருந்தனர். லண்டனில் இருந்து வாசுகி தனது கணவருடன் வந்திருந்தார். சுமி அவளது கணவன் அர்ஜுனுடன் தனது மாமியார் வீட்டில் இருந்து லேட்டாக தான் வந்தாள். அருணுக்கு எதோ முக்கியமான வேலை இருந்ததால் வரவில்லை. மும்பையில் இருந்து ராமமூர்த்தியின் தம்பி தனது***

Ramya Rajan

குடும்பத்துடன் வந்திருந்தார்.

அதே மாதிரி கிருஷ்ணகுமாரின் சித்தப்பா குடும்பம் மற்றும் ஊரில் இருந்து மற்ற உறவினர்களும் வந்திருந்தனர்.

ராமமூர்த்தி -ஜானகி, கிருஷ்ணகுமார்- சாருமதி இன்று பார்த்த அதிகபடியான வேலையில் களைத்து போய் அமர்ந்திருந்தவர்களுக்கு இளையவர்கள் போடும் ஆட்டம் உற்சாகத்தை கொடுத்தது. அப்பத்தா மற்ற உறவினர்களோடு வீட்டுக்கு சென்றுவிட்டார்.

வந்திருந்த உறவினர்களின் பிள்ளைகள் மற்றும் குட்டீஸ் எல்லாம் மேடைக்கு சென்று டான்ஸ் ஆடினார்கள். வினோத்.... முரளியை கை பிடித்து டான்ஸ் ஆட இழுத்து செல்ல... கௌதம்... ஷ்ருதியை இழுத்து கொண்டு சென்றான். வினோத் கார்த்திக்கை அழைக்க அவனும் மேடைக்கு சென்று அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

எல்லோரும் சேர்ந்து டான்ஸ் ஆட... ப்ரியாவை பார்த்த கௌதம் மேடைக்கு வா என்று அழைக்க, ப்ரியா மாட்டேன் என்று தலை ஆட்டினாள்.

ப்ரியா, கௌதம் கீழே இறங்கி வருவதை பார்த்து... தன் அம்மாவின் அருகே சென்று அமர்ந்து கொள்ள... கௌதம் கீழே வந்தவன், சுமியையும், அர்ஜுனையும் மேடைக்கு டான்ஸ் ஆட அழைக்க... அவர்கள் சரி என்று சென்றனர். பிறகு ப்ரியாவை தேட... அவள்

அவளது அம்மாவுக்கு பின் மறைந்து கொண்டாள்.

கௌதம் ப்ரியாவை கண்டு பிடித்தவன் அங்கே வந்து "வா ப்ரியா...." என்று அழைக்க... ப்ரியா "வரலை..." என்றாள். "உங்க அண்ணன் ஆடறாரு... அப்புறம் உனக்கு என்ன ? " என்று கௌதம் கேட்க... ஜானகி போ என்றார். ப்ரியா மறுக்க... கௌதம் அவள் கையை படித்து இழுத்து கொண்டு சென்றான். அதை பார்த்து அனைவரும் சிரிக்க... ப்ரியா சாருமதியின் கையை இறுக பிடித்து கொண்டாள். கௌதம் "இப்ப நீயா... வரலைனா தூக்கிட்டு போவேன், எப்படி வசதி..." என்று கேட்க... இவன் கண்டிப்பா செய்வான் என்று நினைத்த ப்ரியா அவனுடன் சென்றாள்.

"எனக்கு ஆட தெரியாது... விடுங்களேன்... அதுதான் எனக்கும் சேர்த்து நீங்க ஆடுறீங்கள....... அப்புறம் என்னை எதுக்கு படுத்தறீங்க...?" என்று கேட்டு கொண்டே படி ஏறிய ப்ரியா... புடவை தடுக்கி விழ பார்க்க... கௌதம் அவள் இடையில் கைகொடுத்து... விழுந்துவிடாமல் தூக்கி மேடையில் நிற்க வைத்தான்.

மேடைக்கு வந்த ப்ரியா முரளியின் பின் சென்று நின்று கொண்டவள் "அண்ணா... என்னை விட சொல்லுங்க" என்றாள்.

"சும்மா... ஜாலிக்கு தான ப்ரியா... கொஞ்சம் நேரம் ஆடிட்டு போ" என்றான் முரளி.

**முரளி-ஷ்ருதி, கௌதம்-ப்ரியா, அர்ஜுன்-சுமி இந்த மூன்று ஜோடிகள் மட்டும் நிற்க... மற்றவர்கள் நகர்ந்து நின்றனர், ப்ரியா அழுதுவிடுபவள் போல் இருந்தாள். கார்த்திக் சென்று பாட்டு போடுபவரிடம் எதோ சொல்ல பாடல் ஒலிக்க தொடங்கியது,**

**கௌதம் ப்ரியாவோடு ஒரு கையை கோர்த்தவன், மற்றொரு கையை அவளது இடையை சுற்றி போட்டு கொண்டு பாடலுக்கு ஏற்றபடி மெதுவாக ஆட தொடங்க... ப்ரியா அவன் இழுத்த இழுப்புக்கு சென்றாள். மற்ற இரண்டு ஜோடிகளும் நன்றாகவே ஆடினார்கள்.**

**முரளியும், ஷ்ருதியும்... இதெல்லாம் தங்கள் வாழ்கையில் மறக்க முடியாத... திரும்ப வராத.... நாட்கள் என்பதை உணர்ந்து ரசித்து ஆடினார்கள். அவர்கள் நடனம் ஆடிய பாடல்**

**"வாராயோ வாராயோ காதல் கொள்ள**

**பூவோடு பேசாத காற்று இல்லை**

**ஏன் இந்த காதலோ நேற்று இல்லை**

**நீயே சொல் மனமே**

Ramya Rajan

**வாராயோ வாராயோ மோனலிசா**

**பேசாமல் பேசுதே கண்கள் லேசா**

**நாள்தோறும் நான் உந்தன் காதல் தாஸா**

**என்னோடு வா தினமே**

**என்னோடு வா தினமே"**

பாட்டு முடிந்ததும் அனைவரும் கை தட்ட... ப்ரியா ஹப்பா... முடிஞ்சிடுச்சு என்று சந்தோஷபட்டவள், வேகமாக கீழே இறங்கி சென்றாள்.

எல்லோரும் மகிழ்ச்சியாக உணவு அருந்த சென்றனர். சாப்பிடும் போது முரளி ஷ்ருதிக்கு ஊட்டிவிட... கௌதமும், கார்த்திக்கும் அவர்களை கிண்டல் செய்தே ஒரு வழி ஆக்கினார்கள்.

இதையெல்லாம் பார்த்து கொண்டிருந்த விஷ்வா உள்ளம் கொதித்தான் தான் கல்யாணம் செய்ய போகும் பெண் வேறு ஒருவனுடன் ஆடுவதா என்று கோபப்பட்டான்.

***அன்று இரவு மண்டபத்தில் இருந்த அறையில்.... ப்ரியா அடுத்த நாள் எடுபதற்காக மிதுவுடன் ஆரத்தி தட்டுகள் தயார் செய்து கொண்டிருந்தாள். கௌதம் "நீயா ஆரத்தி எடுப்ப...." என்று கேட்க.... "இல்லை..... உங்க வீட்டு ஆளுங்க தான் எடுக்கணும், நான் மாப்பிள்ளையோட தங்கச்சி. நான் எங்க அண்ணாவோட கூட வருவேன்..." என்று ப்ரியா கெத்தாக சொல்ல... புருவத்தை உயர்த்திய கௌதம் "மேடம் பெரிய ஆளு... தான்" என்றான்.***

***சாருமதி, கௌதமிடம் "நீ தான் நாளைக்கு மாப்பிள்ளை அழைப்பின் போது முரளிக்கு மாலையும்... செயின்னும் போட்டு உள்ளே அழைக்கணும்" என்றதும்,***

***"அப்படியா.... பக்கத்தில நிக்கிற மாப்பிள்ளையோட தங்கச்சிக்கு, என்ன போடணும்" என்று கௌதம் ப்ரியாவை பார்த்து கொண்டே கேட்க....***

***ஜானகியும், சாருமதியும் திரும்பி கௌதமை பார்க்க... கார்த்திக் "அம்மா... எதுக்கும் தாலிய, நீங்க இவன் கண்ல காமிக்காம இருங்க. இல்லைனா... இவன் முரளிக்கு முன்னாடி தாலிய எடுத்து ப்ரியா கழுத்துல கட்டிடுவான் போலிருக்கு..." என்றதும்***

***ஜானகி சிரிக்க... சாருமதி "ரொம்ப கரெக்டா... சொன்ன கார்த்திக். இன்னைக்கு ப்ரியாவோட இவன் போட்ட ஆட்டத்தை... பார்க்க அப்பத்தா இல்லாம போய்ட்டாங்க... இருந்திருந்தா தெரிஞ்சிருக்கும்" என்று சொல்ல...***

Ramya Rajan

கௌதம் "அவங்க இருந்தா மட்டும் நாங்க பயன்திடுவோமா.... இன்னும் ரெண்டு பாட்டுக்கு ஆடி இருப்போம்" என்றான்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்து கொண்டு முரளி அமர்ந்திருக்க சாருமதி "நீ போய் தூங்குபா... நாளைக்கு உனக்கு நிறைய வேலை இருக்கும்" என்று சொல்ல, ஜானகியும் "ஆமா... நீ போய் தூங்கு முரளி" என்றார்.

கௌதம் "அம்மா... இதெல்லாம் ஓரவஞ்சனை, மாப்பிள்ளைய தான் கவனிக்றீங்க... பெத்த புள்ளைய கவனிக்க மாட்றீங்க... வேலை பார்க்கிறது நான்... ரெஸ்ட் எடுக்கிறது உங்க மருமகனா" என்று கேட்டவன், "முரளிக்கு நாளைக்கு அப்படி என்ன வேலை இருக்கு ?" என்று கேட்க...

சாருமதி தலையில் அடிக்க... ஜானகி சிரிப்பை அடக்கி கொண்டிருந்தார். ப்ரியாவும், மிதுவும் கௌதமை பார்த்து கேவலமாக லுக் விட.... கார்த்திக் கௌதமை அழைத்துக்கொண்டு வெளியே சென்றவன்,

"டேய்... நீ ரொமான்ஸ் ஹீரோன்னு எல்லோரும் நினைச்சிட்டு இருக்காங்க... இப்படி சின்ன விஷயம் கூட தெரியாம இருக்க.." என்றதும்,

***கௌதம் "அப்படி என்னடா எனக்கு தெரியல ?" என்று கேட்க...***

***"நாளைக்கு நைட் தான முரளிக்கு பர்ஸ்ட் நைட்.... அதுக்குதாண்டா அவரை போய் தூங்க சொல்றாங்க.... இதுகூட உனக்கு புரியலை..." என்றதும்,***

***கௌதம் "இதுக்கு தான் அந்த ரெண்டும், என்னை பார்த்து கேவலமா லுக் விட்டுசுங்களா...." என்று சொல்ல.... அவர்கள் பேசியதை கேட்ட முரளி சிரித்து கொண்டே தனது அறைக்கு சென்றான்.***

30

***மறுநாள் அழகாக விடிய பட்டுவேஷ்ட்டி சட்டையில் அழகான மணமகனாக முரளி நடந்து வர.... அவன் அருகே ப்ரியா முகுர்த்த புடவையும் தாலியும் தட்டில் வைத்து கொண்டு வர..... கூட உறவினர்களும் வந்தனர். கௌதம் வாசலில் நின்று அவர்களை வரவேற்றவன் முரளிக்கு மாலை அணிவித்து உள்ளே அழைத்து சென்றான்.***

ப்ரியா தான் கொண்டு வந்த தங்க கலர் பட்டுப்புடவையை ஷ்ருதிக்கு கட்டி.... மண மேடைக்கு அழைத்து வந்து முரளியின் பக்கத்தில் அமர வைக்க.... முரளி ஷ்ருதியின் கழுத்தில் தாலி கட்டி.... அவளை தனது வாழ்க்கை துணைவியாக ஏற்று கொண்டான். வந்திருந்த அனைவரும் அட்சதை தூவி மணமக்களை பல்லாண்டு காலம் சேர்ந்து வாழ வாழ்த்தினார்கள். அதை இருவரின் பெற்றோரும் கண்ணில் ஆனந்த கண்ணீரோடு பார்த்து கொண்டிருந்தனர். திருமணத்தோடு மற்ற சடங்குகளும் நல்லபடியாக நடந்து முடிந்தது.

விருந்தினர்கள் வந்து திருமணத்தை பற்றி புகழ்ந்து தள்ள.... அப்பத்தா நாம குறை சொல்ல முடியாத அளவுக்கு எல்லாத்தையும் செஞ்சிட்டான்களே.... என்று நினைத்தார். அப்போது சில உறவினர்கள் ப்ரியாவை கௌதமிற்கு தான் செய்ய போறீங்களா நேத்து ரெண்டு பேரும் சேர்ந்து டான்ஸ் ஆடினாங்களே.... ரொம்ப பொருத்தமான ஜோடி என்று பத்த வைக்க....

அப்பத்தா உள்ளம் கொதித்தார். அப்போது விஷ்வா அங்கே வந்து அவரிடம் தன்னை அறிமுகபடுத்தி கொண்டு அவரிடம் நன்றாக பேசினான்.

மணமக்கள் முதலில் மாப்பிள்ளை வீட்டுக்கு கிளம்பினார்கள். ஷ்ருதி தனது அம்மா அப்பாவிடம் சொல்லி கொண்டு கிளம்பியவள் கௌதமிடம் போயிட்டு வரேன் என்று சொல்லும் போது... அவளை அனைத்து கொண்ட கௌதம் "நீயில்லாம வீடு கலகலப்பாவே இருக்காது ஷ்ருதி.... இனிமே நான் யார் கூட சண்டை போடுவேன்" என்று கண்கலங்க... ஷ்ருதியும் அதுவரை பக்கத்தில் இருக்கும்

Ramya Rajan

மாமியார் வீட்டுக்கு தானே போறோம் என்று இருந்தவள், கௌதம் சொன்னதை கேட்டு அழ ஆரம்பித்தாள்.

ப்ரியாவும், கார்த்திக்கும் சும்மா இருந்தவள அழ வைக்கிறான் பாரு என்று முறைக்க... முரளி ஷ்ருதியை சமாதானம் செய்தான். சாருமதி "சாயங்காலம் நம்ம வீட்டுக்கு வருவா... பக்கத்தில தான இருக்கா... அடிக்கடி பார்க்கலாம்" என்று கௌதமை சமாதானம் செய்தார்.

ஷ்ருதியை... சிரிக்க வைக்க நினைத்த கௌதம் "நீயில்லாம எனக்கு ரொம்ப போர் அடிக்கும், அதனால சீக்கிரமா உனக்கு பதில் ப்ரியாவை நம்ம வீட்டுக்கு அனுப்பிவச்சிடு" என்று சொல்ல...

ஷ்ருதியும் சிரித்து கொண்டே "சரி...." என்றாள்.

கௌதம் "உன்னை நம்பி தான் இருக்கேன் ஷ்ருதி... மறந்துட மாட்டல..." என்று சொல்ல...

அவன் சொன்னதை கேட்டு கொண்டிருந்த முரளி "அவ மறந்தாலும் நான் மறக்களை போதுமா.... நாங்க போயிட்டு வரோம்" என்றவன் ஷ்ருதியை அழைத்து கொண்டு தங்கள் வீட்டுக்கு சென்றான்.

கௌதம் சொன்னது ஷ்ருதிக்கு நினைவு இருக்குமா ? ....

தங்கள் வீட்டிற்க்கு வந்த புதுமண தம்பதிகளை வாசலில் நிற்க வைத்து ப்ரியா ஆரத்தி சுற்றி உள்ளே அழைத்து சென்றாள். புது மருமகள் புகுந்த வீட்டில் எனென்ன... சடங்கு சம்ப்ரதாயம் செய்ய வேண்டுமோ... எல்லாவற்றையும் ஷ்ருதி செய்து முடித்ததும், அவளை முரளியின் அருகில் அமரவைத்து இருவருக்கும் பாலும், பழமும் கொடுக்கபட்டது.

சிறிது நேரம் உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து அரட்டை அடிக்க... சுமி, அர்ஜுன் தம்பதியர்... முரளி, ஷ்ருதி தம்பதியரை கேலி செய்து கொண்டிருக்க... ப்ரியா அவர்கள் பேசுவதை கேட்டு சிரித்து கொண்டிருந்தாள்.

அப்பத்தா ப்ரியாவை "எந்திருச்சு ரூம் உள்ள போ... எதுக்கு பெரியவங்க பேசுறத வாய் பார்க்கிற... உனக்கு இன்னும் கொஞ்சம் கூட வயசு பொண்ணுன்னு நினைப்பு இல்லை..." என்று திட்ட...

ப்ரியா அமைதியாக எழுந்து உள்ளே சென்றாள்.

சுமி "எதுக்கு பாட்டி அவளை திட்றீங்க... அவ பேசாம தான இருந்தா..."

"ஏன்..? நேத்து நைட் மண்டபத்துல ஆடினது பத்தாதா... இன்னும் இங்க வேற ஆடணுமா... எவ்வளவு தைரியம் இருந்தா... ஒரு கல்யாணம் ஆகாத பொண்ணு... ஒரு பையனோட எல்லார் எதிரிலும் டான்ஸ் ஆடியிருப்பா... வர வர இந்த வீட்ல எல்லாம் மாறிடுச்சு"

என்றதும் எல்லோரும் வாயை மூடி கொண்டனர்.

ஜானகி... ஷ்ருதியை கீழ் இருந்த ப்ரியா ரூமில் சென்று ஓய்வெடுக்க சொன்னவர், முரளியை அவனது அறையில் சென்று ஓய்வெடுக்க சொன்னார்.

கொஞ்ச நேரம் தூங்கி எழுந்த ஷ்ருதிக்கு... ப்ரியா அவள் தலை அலங்காரத்தை கலைத்து... தலைவாரி... பூ வைத்துவிட்டு முகம் கழுவி வர சொல்லி அனுப்பினாள், பின்பு தானும் ரெடியாக ஆரம்பித்தாள். இப்போது புது மாப்பிள்ளையும், பெண்ணும் மறுவீடு செல்வதால்... அவளும் அவர்கள் கூட சென்று அங்கே அவர்களை விட்டுவிட்டு வருவதற்காக கிளம்பினாள்.

அங்கே போனால் கௌதமை பார்க்கலாம் என்று உற்சாகத்தில் கிளம்பிய ப்ரியாவிற்கு அப்பத்தா.... அங்கே அடுத்த வெடியோடு காத்திருந்தார்.

"நீ கல்யாணம் ஆகாத பொண்ணு... அதனால் நீ அவங்களோட போகவேண்டாம்" என்று ப்ரியாவை பார்த்து சொன்னவர்.... கூட சுமியையும் அவர் கணவரையும் போக சொன்னார்.

ப்ரியா முகம் நொடியில் வாடிவிட.... அதை கவனித்த முரளி "போயிட்டு உடனே திரும்ப போறா... அவளும் எங்களோட வரட்டுமே" என்றதற்கு,

"போதும்.... நீங்க நேத்து மண்டபத்தில போட்ட ஆட்டம் எல்லாம் எனக்கு தெரியாதுன்னு நினைச்சியா... டாக்டருக்கு படிச்சிருக்க ரொம்ப அறிவாளின்னு உன்னை பத்தி நினைச்சிட்டு இருந்தேன், ஆனா நீ அப்படி இல்லைன்னு இப்ப உன்னோட நடவடிக்கை காட்டுது. ஒரு வேலை உன்னோட சேர்க்கை சரி இல்லையோ... என்னவோ" என்று ஷ்ருதியை பார்த்து கொண்டே அப்பத்தா சொல்ல...

அவர் சொன்னதை கேட்ட ஷ்ருதிக்கு சுள்ளென்று கோபம் வந்தது. ஆமா... இவங்க பேரன் ரொம்ப அறிவாளி.... எங்களோட சேர்ந்ததுனால அவரோட அறிவை நாங்க கடன் வாங்கிட்டோம், பேசுது பாரு பேச்சு என்று நினைத்தவள், வந்த அன்றே ஆரம்பிக்க வேண்டாம் என்று அமைதியாக இருந்தாள்.

ஜானகி மேலும் அப்பத்தா ஏதும் பேசும் முன் "சரி ப்ரியா இருக்கட்டும் நல்ல நேரம் முடியறதுக்குள்ள.... நீங்க கிளம்புங்க" என்றதும் முரளி - ஷ்ருதியொடு, சுமியும் - அர்ஜுனும் மறு வீட்டுக்கு கிளம்பி சென்றனர்.

முரளிக்கும், ஷ்ருதிக்கும் தனிமை கொடுக்க நினைத்த சாருமதி கௌதமிடம் "நீ... கீழே இருக்கும் அறையில் கொஞ்ச நாள் தங்கி கொள்" என்று சொல்லி இருந்ததால்... கௌதம் தன்னுடைய தேவையான பொருட்கள் சிலவற்றை தனது அறையில் இருந்து எடுத்து வந்து கீழே வைத்துவிட்டு சிறிது நேரம் தூங்கி எழுந்தான்.

மாலையில் முரளியும், ஷ்ருதியும் வந்த போது கௌதம் அவர்களை வரவேற்றவன். ஆர்வமாக அவர்களுக்கு பின்னே ப்ரியாவை தேட... அவளை காணாமல் முகம் வாடினான். அதை முரளியும் கவனித்தான்.

சற்று நேரம் கழித்து கௌதம் சுமியிடம் "ப்ரியா ஏன் வரவில்லை ?" என்று கேட்க....

"அவளை... அப்பத்தா போக வேண்டாம்" என்று சொல்லிவிட்டார் என்று சொன்னவள், "அவங்களுக்கு நேத்து நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து டான்ஸ் ஆடினது... வேற தெரிஞ்சு போச்சு... அதுக்கு வேற திட்டு வாங்கினா" என்றாள்.

கௌதம் "அவ வேண்டான்னு தான் சொன்னா... நான் தான் கேட்கலை. என்னால தான் திட்டு வாங்கியிருக்கா..." என்று வருத்தப்பட...

"அவங்க எப்பவுமே அப்படி தான் பேசுவாங்க. அதெல்லாம் ப்ரியா பார்த்துக்குவா, நீ கவலைபடாதே..." என்றாள் சுமி.

கௌதம் வீட்டிற்க்கு வந்திருந்த விருந்தினர்கள் அன்று இரவே கிளம்ப, சுமியும் தனது கணவனுடன் தனது மாமா வீட்டுக்கு கிளம்பி சென்றாள்.

**இரவு உணவு முடிந்த பின் ஷ்ருதியை குளிக்க சொல்லி அலங்கரித்த சாருமதி. அவளுக்கு நிறைய புத்திமதிகள் சொல்லி முரளி இருந்த அறைக்குள் அனுப்பினார்.**

**அறைக்குள் வந்த ஷ்ருதியின் பயத்தை அறிந்த முரளி... அவளிடம் ரொம்ப நேரம் பேசி கொண்டிருந்தான். முதலில் அவளிடம் தனக்கு பிடித்த விஷயங்களை சொன்னவன் பின் "உனக்கு என்கிட்டே பிடிக்காத அல்லது நான் மாத்திக்க வேண்டிய விஷயம் எதாவது இருப்பதா... நீ நினைக்கிறியா" என்று முரளி ஷ்ருதியிடம் கேட்க...**

**ஷ்ருதி "இல்லை" என்றாள். அதற்க்கு முரளி "ஆனால்.... நான் உன்கிட்ட நீ மாற்றிகனும்ன்னு நினைக்கிறது, சில நேரம் நீ யோசிக்காம பட்டுன்னு பேசறது தான். இனிமே நீ பேசும் போது நல்லா யோசிச்சு பேசு" என்றவன்**

**"நாம் இருவரும் தனி மனிதர்கள் இல்லை... நமக்கு ஒரு குடும்பம் இருக்கு. அதுவும் நாம இன்னும் கொஞ்ச நாள் தான் இங்க இருப்போம் அப்புறம் மூன்று வருஷம் வெளிநாடு போய்டுவோம். இருக்கும் வரை குடும்பத்திற்குள் எந்த பிரச்சனையும் வராமல் பார்த்துக்க வேண்டும்" என்று சொல்ல....**

**அவன் சொன்ன எல்லாவற்றிற்கும் தலை ஆட்டிய ஷ்ருதி... கொட்டாவி விட ஆரம்பித்தாள். அம்மா தாயே தூங்கிடாத என்றவன், அவளை தன் கைகளுக்குள் கொண்டு வந்து காதல் பாடம் நடத்த ஆரம்பித்தான்.**

***மறுநாள் கல்லூரி முடிந்து வந்து கொண்டிருந்த ப்ரியாவின் எதிரில் கௌதம் வந்து நிற்க... அவனை பார்த்து ஆச்சரியம் அடைந்தவள் "நீங்க இன்னைக்கு வருவீங்கன்னு... நான் எதிர் பார்க்கலை" என்று மகிழ்ச்சியுடன் சொல்ல...***

***கௌதம் "நேத்து உங்க பாட்டி... உன்னை ரொம்ப திட்டிட்டாங்களா..." என்று கேட்க...***

***"உங்களுக்கு யார் சொன்னா ?... அதெல்லாம் இல்லை. நான் ரொம்ப எதிர்பார்த்தேன், ஆனா அவங்க கம்மியா தான் திட்டினாங்க" என்று சொன்னவளை பார்த்து... கௌதமிற்கு சிரிப்பு வர.... ப்ரியாவின் தலையை பிடித்து ஆட்டினான்.***

***ப்ரியா "எங்க அண்ணாவும்... அண்ணியும்... எப்படி இருக்காங்க ? என்று கேட்க...***

***"யாருக்கு தெரியும்... நான் பார்க்கவே இல்லை. எங்க அம்மா என்னை வீட்லயே இருக்க விட மாட்றாங்க. நான் அவங்களை நேத்து பார்த்ததுதான். நான் காலையில வீட்டவிட்டு கிளம்பும் போது அவங்க ரெண்டு பேரும் கீழயே வரலை... நான் மதியம் சாப்பிட போகும் போதும் வரலை... உங்க அண்ணன் பார்க்க தான் சாது பூனை மாதிரி இருக்கார். ஆனா... ரொம்ப விவரமானர் தான். நீயும் அப்படி இருந்துட்டா... எனக்கு சந்தோஷம்" என்று கௌதம் சொல்ல... ப்ரியா அவனை பார்த்து முறைத்தாள்.***

Ramya Rajan

***கௌதம் "வேண்டாம்... பயமா இருக்கு" என்றவன் ப்ரியாவை தனது வண்டியில் ஏற்றி கொண்டு சென்றான்.***

***விஷ்வா.... ப்ரியாவை தனியாக சந்தித்து, தனது மனதில் இருப்பதை சொல்லிவிடலாம் என்று நினைத்து வந்தவன். காரில் ப்ரியாவிற்காக கல்லூரி வெளியே காத்திருக்க... அவள் கௌதமோடு வந்தாள். விஷ்வா தனது காரில் இருவரையும் பின் தொடர்ந்தான்.***

***விஷ்வாவிற்கு கௌதம் ப்ரியா இரண்டு போரையும் பார்த்தால் காதலர்கள் போல் தோன்றினாலும்... அதை ஏற்று கொள்ள... அவனால் முடியவில்லை. இதை எப்படி தடுப்பது என்று யோசித்தான்.***

***ப்ரியா கௌதமிடம் தன்னை தங்கள் வீட்டின் பஸ் ஸ்டாப் அருகே விட சொல்ல....***

***கௌதம் "முடியாது... நாம என்ன வீட்டுக்கு தெரியாம... திருட்டு தனமாவா லவ் பண்றோம்.... நான் வீட்ல தான் விடுவேன்"***

***ப்ரியா "சொன்னா... கேளுங்க கௌதம், எங்க பாட்டி எதாவது சொல்வாங்க. இப்ப தானே அண்ணா கல்யாணம் முடிஞ்சிருக்கு... பிரச்சனை வேண்டாம் ப்ளீஸ்... " என்றதும்***

Ramya Rajan

சரி என்றவன் அவளை அவர்கள் வீடு இருக்கும் தெரு முனையில் இறக்கிவிட்டு சென்றான்.

அதை பார்த்த விஷ்வா... இவர்கள் விஷயம் வீட்டுக்கு தெரியாதா... அப்போ நாம ஒரு முயற்ச்சி செய்து பார்ப்போம் என்று நினைத்தான்.

இரண்டு நாள் கழித்து தங்கள் வீட்டுக்கு வந்த முரளிக்கும், ஷ்ருதிக்கும் வீட்டில் ராஜ உபச்சாரம் நடந்தது.

ஷ்ருதி அவள் வீட்டில் அவளும் முரளியும் எந்த தொந்தரவும் இல்லாமல் நன்றாக தனிமையை அனுபவித்தனர். கிருஷ்ணகுமாரும், கௌதமும் காலையில் சென்றால் மதியம் உணவிற்கு வருபவர்கள், திரும்பி இரவு தான் வருவார்கள். அதுவும் மாடிக்கு யாரும் வரவே மாட்டார்கள்.... அதனால் அங்கே அவர்கள் இஷ்ட்டம் போல் இருக்க முடிந்தது. ஆனால் இங்கே வீட்டில் அப்பத்தா இருந்தார். அவர் அந்த கால மனுஷி என்பதால் முனங்கி கொண்டே இருந்தார்.

இங்கேயும் இருவரும் அப்படியே இருக்க... மூன்று நாள் கழித்து அப்பத்தா அவர்கள் காது படவே முனங்க ஆரம்பித்தார். வீட்ல வயசு பொண்ணு இருக்கு பார்த்து இருக்க வேண்டாமா என்று சொல்ல...

முரளி அவர் சொன்னதும் தான் தன் தவறை உணர்ந்தவன், மறு நாளில் இருந்து ஷ்ருதியை காலை 7 மணிக்கு எழுப்பி "நீயும் குளிச்சிட்டு கீழ போய்... அம்மாவுக்கு உதவி பண்ணு... ப்ரியா அப்பா எல்லாம் கிளம்பி போனோன்ன... நாம மாடிக்கு வரலாம்" என்று

**சொல்ல...**

**ஷ்ருதி முரளியே இதை சொல்லி இருந்தால் கேட்டிருப்பாள். ஆனால் அப்பத்தா முனங்குவதை அவளும் கேட்டிருந்ததால் வேண்டும் என்றே கீழே போகாமல் நேரத்தை கடத்தினாள்.**

**முரளி அதற்குபிறகு ப்ரியா வீட்டில் இருக்கும் போது கவனமாக நடந்து கொண்டான். காலையில் சீக்கிரம் கீழே இறங்கி வந்தவன்... அவளும் தந்தையும் வெளியே சென்ற பின் தான் மாடிக்கு சென்றான். அதே போல் மாலையில் ப்ரியா வரும் போது கீழே தான் இருந்தான். மாலையில் அனைவரோடும் அமர்ந்து பேசிவிட்டு, இரவு உணவை முடித்து கொண்டு ப்ரியா அவளது அறைக்கு சென்றதும் தான் மாடிக்கு சென்றான்.**

**முரளி யாருக்கும் பிரச்சனை இல்லாமல் இருக்க நினைத்தான். ஆனால் ஷ்ருதி அவனுடன் ஒத்துழைக்காமல் முகத்தை திருப்பினாள். முரளி, ஷ்ருதி இருவருமே திருமணத்திற்காக இரண்டு வாரம் விடுமுறை எடுத்திருந்தனர். வீட்டில் இருந்தா தானே பிரச்சனை என்று நினைத்த முரளி ஷ்ருதியை அழைத்து கொண்டு ஒரு வாரம் ஹனிமூன் செல்வது என்று முடிவு செய்தான்.**

**முரளி இன்னும் சில மாதங்களில் வெளிநாடு செல்வதால்... தனியாக ஹனிமூன் வேண்டாம் என்று இருந்தான். ஆனால் ஷ்ருதியின் வருத்தத்தை பார்த்து இப்போது போவோம் என்று முடிவு செய்து அவளை அழைத்து கொண்டு ஒரு வாரம் கொடைக்கானல் சென்றான்.**

Ramya Rajan

கொடைக்கானலில் அவர்களது அறையில் முரளியிடம் ஷ்ருதி "ஹனிமூன் எங்கையாவது வெளிநாடு போலாம்ன்னு நினைச்சா... இப்படி கொடைக்கானல் கூடிட்டு வந்துடீங்களே" என்று குறைபட...

"நாம தான் எப்படியும் இன்னும் கொஞ்ச நாள்ல வெளிநாடு போக போறோம் இல்ல.... அப்புறம் இப்ப வேற எதுக்கு.... நீ இப்ப போனா மட்டும் ஊரா சுத்தி பார்க்க போற... நமக்கு தேவை தனிமை அதுக்கு இதுவே போதும்" என்றவன் அவளை மேலும் பேசவிடாமல் அனைத்து கொண்டான்.

முரளி ஊரில் இல்லை என்பதை தெரிந்து கொண்ட விஷ்வா அவனது வீட்டிற்க்கு சென்றான். விஷ்வா முரளி வீட்டுக்கு சென்ற போது ஜானகி, அப்பத்தா இருவர் மட்டும் தான் இருந்தனர்.

விஷ்வா சும்மா இந்த பக்கம் வந்ததாகவும் அப்படியே முரளியை பார்க்கலாம் என்று இங்கே வந்ததாக சொல்ல...முரளி ஹனிமூன் சென்றிருக்கிறான் என்று அப்பத்தா சொன்னார். விஷ்வா அவரிடம் மேலும் பேச்சை வளர்க்க... ஜானகி சமையல் செய்ய எழுந்து உள்ளே சென்றார்.

விஷ்வா தன்னுடைய ஊரை பற்றி, பெற்றோர், படிப்பு என்று எல்லாவற்றையும் சொல்லி அப்பத்தா மனதில் நல்ல இடத்தை பிடித்தான். இங்கே தாம்பரத்தில் ஒரு பெரிய ஆஸ்பத்ரியில் வேலை

**பார்பதாகவும், மாலை நேரத்தில் தனியாக கிளினிக் வைத்திருப்பதால் அங்கே செல்வதாகவும் சொன்னவன், இன்னும் சிறிது நேரம் இருந்து அப்பத்தவுடன் பேசி விட்டு சென்றான். விஷ்வா அவளுக்காக திட்டம் போட்டு வேலை செய்வதை அறியாத ப்ரியா நிம்மதியாக இருந்தாள்.**

**லீவ் முடிவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் முரளியும், ஷ்ருதியும் வீட்டிற்க்கு வந்து சேர்ந்தனர். ஷ்ருதி தங்கள் வீட்டில் இருந்தது போலவே இங்கேயும் இருந்தாள். அவளுக்கு இங்கே பெரியதாக வேலை என்று எதுவும் இல்லை.... வீட்டு வேலைக்கு ஆள் இருந்தது, சமையல் ஜானகி செய்தார். அவருக்கு ப்ரியாவும், அப்பத்தாவும் உதவி செய்தனர். ஷ்ருதி நிம்மதியாக வேலைக்கு சென்று வருவதும், மாலையில் ப்ரியாவோடு அரட்டை அடிப்பதுமாக இருந்தாள். நாட்கள் இப்படியே செல்ல... முரளிக்கும், ஷ்ருதிக்கும் கல்யாணம் முடிந்து ஒரு மாதம் முடிந்து இருந்தது.**

**இந்த ஒரு மாதத்தில்.... இரு முறை விஷ்வா வீட்டிற்கு வந்து சென்றிருந்தான். அதில் ஒரு முறை அவன் வரும் போது முரளி வீட்டில் இருந்தான்.**

**முரளி ஒரு நாள் காலை ஷ்ருதியை எழுப்பி கீழ போய் அம்மாவுக்கு ஹெல்ப் பண்ணு என்று சொல்ல... ஷ்ருதிக்கு கோபம் வந்தது "நான் வெளிய வேலைக்கும் போயிட்டு... வீட்லயும் வேலை பார்க்கனுமா..." என்று கேட்க...**

**"நானும் நீயா செய்யடும்ன்னு தான் இத்தனை நாள் ஒன்னும்**

Ramya Rajan

சொல்லலை" என்ற முரளி, "இங்க எதோ எல்லா வேலையும், நீ தான் பார்கிற மாதிரி சொல்ற.... அம்மா தான் செய்ய போறாங்க... உன்னை கூட போய் ஹெல்ப் தான் பண்ண சொன்னேன். உனக்கு அப்படி கஷ்ட்டமா இருந்தா... நீ வேலைக்கு போக வேண்டாம். நீ எப்படியும் வேலைய விட போற... அத இப்பவே விட்டுட்டு வீட்ல இரு. நாம வெளிநாடு போற வரையாவது வீட்டு மருமகளா இரு" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

ஷ்ருதி எழுந்து குளித்து கீழே சென்றவள்... "ஜானகியிடம் எதாவது வேலை இருக்கா..." என்று கேட்க...

"பரவாயில்லை இருக்கட்டும் ஷ்ருதி... நீ வேலைக்கு வேற போகணுமே" என்றார்.

"உங்க மகன் தான் நான் வேலை பார்க்கலைன்னு.... என்னை திட்றார் அத்தை" என்றாள் ஷ்ருதி குறையாக.

ஜானகி "ஏன் முரளி அவளை திட்டினே ? நீங்க வெளி நாட்டுக்கு போய்ட்டா.... அவ தானே எல்லா வேலையும் பார்க்கணும்",

முரளி ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்து கொண்டிருந்தவன் "அதுக்கு தான்மா நானும் சொல்றேன். இங்க பார்த்தா தான் அங்கயும் போய் பார்க்க முடியும். இங்க பழகலைனா... அங்கயும் போய் செய்ய முடியாது அதனால பழகிகட்டும் விடுங்க" என்றான்.

அப்பத்தா.... அப்படி சொல்றா என் பேராண்டி ! என்று மனதில் முரளியை மெச்சிக்கொண்டவர், ஷ்ருதியை பார்த்து ஆணவமாக ஒரு லுக்விட... பதிலுக்கு ஷ்ருதியும் ஒரு தீ பார்வை பார்த்தாள்.

ஜானகி அன்றிலிருந்து ஷ்ருதிக்கு காலை நேரத்தில் சின்ன சின்ன வேலை கொடுத்தவர், இரவு நேரத்தில் அவளை டிபன் செய்ய சொல்லி தான் அருகில் இருந்து உதவினார்.

அப்பத்தா ஷ்ருதி சுட்டும் போடும் தோசை...சப்பாத்தி என்று எல்லாவற்றிலும் ஒரு சிறு குறையாவது கண்டு பிடித்து அதை ஷ்ருதியிடம் "உனக்கு இது கூட தெரியாதா..." என்று கேட்டு நோகடித்தார்.

ராமமூர்த்தி எப்போதுமே தன் அம்மாவை எதிர்த்து பேச மாட்டார். வீட்டில் உள்ளவர்களும் அவருக்கு ரொம்ப மரியாதை தர வேண்டும் என்று எதிர்பார்ப்பார், அதே சமயம் அவர் எதாவது தவறு செய்தால் அதை பக்குவமாக அவரே அவரது அம்மாவுக்கு எடுத்து சொல்லி புரியவைப்பார். இது அந்த வீட்டில் ஷ்ருதியை தவிர மற்ற அனைவருக்கும் தெரியும். ஆனால் இது தெரியாத ஷ்ருதி தனக்கு இந்த வீட்டில் யாரும் சப்போர்ட் பண்ணுவதில்லை என்று நினைத்து குமுறி கொண்டிருந்தாள்.

ஷ்ருதி இரவு நேரத்தில் இதை முரளிடம் சொல்ல.... அவன் "இதுக்கு எதுக்கு டென்ஷன் ஆகுற... கொஞ்ச நாள் தான பொறுத்துக்கோ... நீ

காது கேட்காத மாதிரி இரு" என்றான்.

ராமமூர்த்தி ஷ்ருதி வீட்டில் இல்லாத ஒரு நாள் தனது அம்மாவிடம் "ஏன்மா... ஷ்ருதி சின்ன பொண்ணு தானே... எதாவது சரியா செய்யலைனா... சொல்லி குடுக்கலாமே.... அதைவிட்டு எதுக்கு குறை சொல்லணும்" என்று சொல்லி இருந்தார். அது ஷ்ருதிக்கு தெரியாது தெரிந்திருந்தால்... ஒரு வேலை அவளால் சண்டை வராமல் இருந்திருக்குமோ என்னவோ.

விஷ்வா முரளி இருக்கும் போது ஒரு ஞாயிறு அன்று வீட்டுக்கு வந்தவன் "வீட்ல தனியா இருக்கேனா... ஒரே போர் அது தான் இங்க வந்தேன்" என்றான். முரளிக்கு அவன் மேல் எந்த சந்தேகமும் வரவில்லை.... ஏனென்றால் விஷ்வா முரளியின் முன்பு ப்ரியாவின் பக்கம் கூட திரும்பி பார்க்க மாட்டான்.

ப்ரியாவிற்கு விஷ்வாவை பற்றி மனதில் ஒரு நெருடல் இருந்தது. ஆனால் தன் பெற்றோரே தனது திருமணத்திற்கு ஒத்து கொண்ட பின் இவனால் என்ன செய்ய முடியும் என்று அலட்சியமாக இருந்து முதல் தவறு செய்தவள், விஷ்வாவை பற்றி கௌதமிடம் சொன்னால் அவன் தேவை இல்லாமல் டென்ஷன் ஆவான் என்று நினைத்து விஷ்வாவை பற்றி கௌதமிடம் சொல்லாமல் இருந்து இரண்டாவது தவறையும் செய்தாள்.

31

**கௌதமின் நண்பன் வசந்த் மிகவும் வசதியானவன், அவனுடைய தந்தை... கௌதம் இப்போது புது மாடல்களில் வீடுகள் மற்றும் அப்பார்ட்மெண்ட்கள் கட்டி வருவதை நேரில் பார்த்தவர், அவர்கள் கட்ட போகும் வில்லாவை கௌதமை வைத்து கட்ட ஆசைபட்டார்.**

**அவர் கௌதமிடம் சொன்ன ஒரே விஷயம் "நீ பணம் எவ்வளவு வேணாலும் வாங்கிக்கோ... ஆனா ! இதுவரை யாரும் இந்தியாவில் பண்ணாத புது மாடலா இருக்கணும்" என்றது மட்டும் தான்.**

**கௌதமிற்கு இது அவன் வாழ் நாளில் ஒரு பொன்னான வாய்ப்பு. அதை அவன் நூறு சதவீதம் சிறப்பாக செய்ய நினைத்தான்.**

**அதற்காக இரவு பகலாக வேலை நடந்தது. அதில் முதல் கட்டமாக கௌதம் வசந்தின் தந்தையிடம் தான் அவர் கேட்ட மாதிரி புது மாடல்களில் வில்லா கட்டி தருவதாக சொல்லி அக்ரீமெண்ட்**

போடப்பட்டது.

கௌதமும், கார்த்திக்கும் இதற்காக கடுமையாக உழைத்தனர். இருவரும் சேர்ந்து நிறைய மாடல்கள் வரைந்து பார்த்தனர் அதில் சிலவற்றை தேர்ந்தெடுத்தனர்.

கௌதம் ஜெர்மன் நாட்டில் கட்டிடம் கட்டுவதில் புது யுக்தியை பயன்படுத்துவதை இதற்கும் செய்யலாம் என்று நினைத்து, அங்கே இருக்கும் சிலரை தொடர்பு கொண்டு அதை பற்றி விசாரித்தவன், அதை கற்று கொள்ள அங்கே செல்ல விரும்பினான். கூடவே அங்கிருக்கும் கட்டிடங்களின் மாடல்கள் பார்ப்பதற்கு கார்த்திக்கையும் கூட அழைத்து செல்ல முடிவு செய்தான்.

இருவாரம் அங்கேயே தங்கி எல்லாவற்றையும் பார்த்து வரலாம் என்று நினைத்து... கௌதமிற்கும், கார்த்திக்கும் விசா ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது.

விஷ்வா ஒரு நாள் அப்பத்தாவை கோவிலில் தற்ச்செயலாக பார்த்தது போல் அவரிடம் வந்து பேசினான். சாமி கும்பிட்டுவிட்டு வெளி மண்டபத்தில் அமர்ந்த அப்பத்தாவின் அருகே அமர்ந்தவன் "உண்மையா சொல்றேன் பாட்டி... உங்களை பார்த்தா என்னோட சொந்த பாட்டி போலவே இருக்கு... அதனால உங்களிடம் ஒரு விஷயம் சொல்லலாம்ன்னு நினைக்கிறன்" என்றவன் தான் ப்ரியாவை திருமணம் செய்ய விரும்புவதாக சொன்னான்.

***அவன் சொன்னதை கேட்ட அப்பத்தாவிற்கு மகிழ்ச்சி தான். தன்னுடைய மகனுக்கு அவன் பையனும் டாக்டர்... மருமகனும் டாக்டர்... இந்த ப்ரியா பொண்ணு தான் என்னோட பேச்ச கேட்கலை டாக்டர்க்கு படின்னா... இன்ஜினியரிங் சேர்ந்தா என்று நினைத்தவர் "நான் என் பையன்கிட்ட நேரம் பார்த்து பேசறேன்" என்றார்.***

***விஷ்வாவிற்கு ரொம்ப சந்தோசம் "ரொம்ப தேங்க்ஸ் பாட்டி..." என்று சொல்லி, அவர் கையை பிடித்து கண்ணில் ஒற்றி கொண்டான்.***

***இங்கே ப்ரியா கௌதம் ஜெர்மன் செல்வதை நினைத்து கண்ணீராக ஊற்றி தள்ளினாள்.***

***அந்த வாரம் ஞாயிறு அன்று முரளி ஷ்ருதியுடன் தனது மாமியார் வீட்டுக்கு கிளம்ப... ப்ரியா நானும் வருகிறேன் என்று கிளம்பினாள். அப்பத்தா "அவன் மாமியார் வீட்டுக்கு நீ ஏன் போற ?" என்று கேட்க நான் போவேன் என்று பிடிவாதமாக கிளம்பி சென்றாள்.***

***அப்பத்தா பிடிவாதமாக ப்ரியா அங்கே கிளம்பி செல்வதை பார்த்து... தனக்குள் எதோ கணக்கு போட்டார்... வந்த விடை அவருக்கு பிடிக்கவில்லை. இதை எப்படி மாற்றுவது என்று யோசித்து கொண்டிருந்தார்.***

***ஷ்ருதியையும், ப்ரியாவையும் கௌதம் வீட்டில் விட்ட முரளி, ஹாஸ்பிடல் செல்ல வேண்டி இருந்ததால்.... மதியம் வருகிறேன்***

Ramya Rajan

என்று சொல்லி விட்டு சென்றான்.

கௌதம் வீட்டுக்கு வந்த ப்ரியா யாரோடும் பேசாமல் உர்ரென்று இருக்க சாருமதி என்னவென்று ஷ்ருதியிடம் கேட்க... அவள் கௌதமை காட்டினாள்.

கார்த்திக்கும் மற்றவர்களும் சேர்ந்து ப்ரியாவை ஓட்ட முடிவு செய்தனர்.

முதலில் ஷ்ருதி ஆரம்பித்தாள் "கௌதம்... அங்க சில்வர் ரொம்ப நல்லா இருக்குமாம்... அதனால எனக்கு சில்வர் பென்டன்ட் வச்ச முத்து செட் வாங்கிட்டு வா..." என்று சொல்ல...

ப்ரியா அவங்க போறதே எனக்கு பிடிக்கலை... இதுல இவளுக்கு முத்து செட்டாம் என்று நினைத்தவள் ஷ்ருதியை முறைத்தாள்

"என்ன முறைக்கிற ? நான் எங்க அண்ணன்ட்ட தான" கேட்டேன் என்று ஷ்ருதி கேட்க...

ப்ரியா பதில் சொல்லாமல் முகத்தை திருப்பி கொண்டாள்.

சாருமதி கௌதமிடம் "டேய்... கார்த்திக்க கூட கூட்டிட்டு போற

ப்ரியாவை விட்டுட்டு போறியே" என்று அடுத்து ஆரம்பிக்க...

கௌதம் "ஆமா... நான் ஹனிமூன் போறேன். அதுக்கு ப்ரியாவை கூட்டிட்டு போகாம கார்த்திக்க கூடிட்டு போற மாதிரி பில்ட் அப் கொடுக்கறீங்க. வேணா... இப்பவே ப்ரியாவை எனக்கு கல்யாணம் பண்ணி வைங்க... கார்த்திக்க விட்டுட்டு ப்ரியாவை கூடிட்டு போறேன். ஒகே வா..." என்று கேட்க...

"அம்மா.... இவன் ஏற்கனவே ப்ரியாவை தள்ளிட்டு போக எதாவது காரணம் கிடைக்காதான்னு பார்த்திட்டு இருக்கான். இதுல நீங்க வேற இப்படி பேசுனீங்கன்னு வச்சுக்கோங்க... அப்புறம் கேட்கவே வேண்டாம்" என்ற கார்த்திக், "நீ இப்ப எதுக்கு ப்ரியா கோபமா இருக்க... ரெண்டு வாரம் தான போறான்... எதோ ரெண்டு வருஷம் போற மாதிரி இருக்க..." என்று சொல்ல...

கௌதம் "போதும்... எல்லோரும் என்னோட செல்லத்தை கிண்டல் பண்ண வேண்டாம், வா ப்ரியா நம்ம ரூம் வேலை முடிச்சாச்சு வந்து பாரு..." என்று கூப்பிட...

"ஆமா... ப்ரியா போய் பாரு... தாஜ் மஹால் கட்டி வச்சிருக்கான்" என்று கார்த்திக் நக்கல் அடிக்க...

கார்த்திக்கை முறைத்த கௌதம் "நீ வா.." என்று ப்ரியா கை பிடித்து அழைத்து செல்ல...

"நண்பா.... உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும், ஒரு நிமிஷம் இங்க வா..." என்று கார்த்திக் கௌதமை கூப்பிட்டான்.

"என்னடா... சொல்லு" என்று கௌதம் கார்த்திக் அருகில் வர...

கார்த்திக் கௌதமின் காதில் "டேய்... நாங்க குட் நியூஸ் ஷ்ருதிகிட்ட இருந்து எதிர் பார்க்கிறோம். நீ ப்ரியாவை சொல்ல வச்சிடாத..." என்று சொல்ல...

கௌதம் "டேய்... ஒரு சின்ன பையன பார்த்து கேட்கிற... கேள்வியா இது, என்னை சொல்லிட்டு நீ மிதுவ சொல்ல... வச்சிடாத" என்றதும், கார்த்திக் குப்பென்று சிரித்தவன் போடா... என்று கௌதம் வயற்றில் குத்த பதிலுக்கு கௌதமும் கார்த்திக் வயற்றில் குத்தினான்.

ஷ்ருதி "அம்மா... எனக்கு இவங்க ரெண்டு போரையும் பார்த்தா சந்தேகமா இருக்கு... ப்ரியா, மிதுகிட்ட பேசாம இவனுங்க ரெண்டு பேரும் தனியா எதோ ரகசியம் பேசுறாங்க" என்றவள், கௌதமையும், கார்த்திக்கையும் பார்த்து "அவங்களா... நீங்க" என்று கேட்க...

கார்த்திக் சீ... என்று சொல்ல... கௌதம் ஷ்ருதியை அடிக்க துரத்தினான்.

ப்ரியா... ஷ்ருதி பேசினது புரியாமல் முழிக்க... கௌதம் "கல்யாணம் ஆனதும்... நீ கெட்டு போய்ட்ட ஷ்ருதி, இரு டாக்டர் வரட்டும் சொல்றேன்" என்றான்.

"டேய் அண்ணா... நீ உன் கையாள என்னை ரெண்டு அடி வேணா அடிச்சிடு... ஆனா டாக்டர்ட்ட மட்டும் என்னை போட்டு குடுத்துடாத... அப்புறம் அவர் போட்டு அட்வைஸ் பண்றேன்னு... என்னை கொன்னுடுவாரு ப்ளீஸ்..." என்று ஷ்ருதி கெஞ்ச...

"ஹப்பா... நீ யாருக்கும் அடங்க மாட்டியான்னு இருந்தேன். பரவாயில்லை டாக்டர்... உன்னை நல்லாவே பெண்ட் எடுக்கிறார் போல..." என்று கௌதம் சந்தோஷப்பட...

ஷ்ருதி பொய்யாக கோபித்து கொண்டு உள்ளே சென்றாள்.

கௌதம் ப்ரியாவை அழைத்து கொண்டு தங்கள் அறைக்கு வந்தான்.

ப்ரியா அறையை பார்த்து மலைத்து விட்டாள். அவ்வளவு அழகாக இருந்தது அறை. அழகான வேலைப்பாடுகள் செய்து... லவெண்டெர் கலர் வண்ணத்தில் அறை ஜொலித்தது. டிரெஸ்ஸிங் ரூம் தனியாக இருந்தது. ரெஸ்ட் ரூமில் அனைத்து நவீன சாதனங்களும் பொறுத்த பட்டு இருந்தது.

Ramya Rajan

ப்ரியா "ரொம்ப கிராண்டா இருக்கே அதிகமா... செலவாகிடுச்சா..." என்று கேட்க...

கௌதம் "இதெல்லாம் நமக்கு பெரிய செலவு இல்லை ப்ரியா. அப்ப வெளிய பணம் நிறைய லாக் ஆகி இருந்தது.. அதனால தான். இப்ப நிறைய பில்டிங்க்ஸ் பண்ணி முடிச்சிட்டோம், அதனால ஒன்னும் பிரச்சனை இல்லை" என்றான்.

ப்ரியா அவன் ஊருக்கு போவதை நினைத்து அமைதியாகிவிட...

கௌதம் ப்ரியாவை அங்கிருந்த சோபாவில் அமர வைத்து "என்னடா.... குட்டி அமைதியாகிடீங்க" என்று கேட்டவன் அவளை தோளோடு சேர்த்து அனைத்து கொண்டான்.

ப்ரியா கண்களில் இருந்து கண்ணீர் வழிய... அதை துடைத்த கௌதம் "நீ ரொம்ப தைரியசாலின்னு நினைச்சா... இப்படி அழற ரெண்டு வாரம் தான... அதுக்கு இப்படியா அழுவாங்க" என்று சொல்ல...

ப்ரியா "எனக்கே தெரியலை... கௌதம். மனசு ரொம்ப கஷ்ட்டமா இருக்கு" என்றாள்.

Ramya Rajan

ப்ரியாவை கெஞ்சி கொஞ்சி அவள் அழுகையை நிறுத்திய கௌதம், "இந்த வருஷம் உன்னோட எக்ஸாம் முடிஞ்சதும். நாம கல்யாணம் பண்ணிக்கலாம். அப்புறம் நான் எங்க போனாலும் உன்னையும் கூடிட்டு போறேன் சரியா..." என்றதும்.

ப்ரியா சரி என்று தலை ஆட்டினாள். கௌதம் அவளது முகம் பற்றி இதழில் முத்தமிட்டவன் அதிலேயே மூழ்கிவிட... சிறிது நேரத்தில் கண் திறந்து பார்த்தபோது மறுபடியும் ப்ரியா கண்ணில் இருந்து நீர் வழிந்தது.

கௌதம் ப்ரியாவிடம் இருந்து விலகியவன், இது வேலைக்கு ஆகாது என்று நினைத்தான்.

"இங்க பாரு... நான் என்ன எப்பவும் உன்னோட முந்தானைய பிடிச்சிட்டே உட்கார்ந்து இருக்கனும்ன்னு நினைக்கிறியா.... என்னோட வேலைய பார்க்காம 24 மணி நேரமும் உன்னோடயே நான் இருக்க முடியுமா..." என்று கத்த தொடங்கினான்...

ப்ரியா அழுகையை நிறுத்திவிட்டு கௌதம் முகத்தையே பார்க்க....

இப்ப தான் வழிக்கு வரா என்று நினைத்தவன் "நமக்கு கல்யாணம் ஆனாலும்... நான் போக வேண்டிய எடத்துக்கு போய் தான் ஆகணும். உன்னோடயே உட்கார்ந்திட்டு இருக்க முடியாது. நம்ம பிசினஸ்ல முன்னேறனும்னா... புது... புது.... முயற்சிகள் செஞ்சு தான் ஆகணும். இப்படியே குண்டுசட்டிக்குள்ள குதிரை ஓட்டினா... பின்னாடி



Ramya Rajan

வர்றவன் எல்லாம் நம்மள மெதிச்சிட்டு போய்டுவான்" என்று சொல்ல....

ப்ரியா அமைதியாக அவன் சொல்வதை கேட்டு கொண்டிருந்தாள்.

கௌதம் ப்ரியாவை கைப்பற்றி எழுந்து நிற்க வைத்து... அவளை அணைத்தவன் "நீ என்னோட உயிர் ப்ரியா... ஆனா... நாம முன்னேறனும்னா.... நான் போய் தான் ஆகணும். புரிஞ்சிக்கோ... நான் எங்க போனாலும் என் மனசு உன்கிட்ட தான் இருக்கும்" என்று சொல்ல...

ப்ரியா சரி என்று தலை ஆட்டினாள்.

"ரெண்டு வாரம் தான் ப்ரியா... சீக்கிரம் போய்டும். நான் டெய்லி போன் பண்றேன் சரியாடா... "என்று கௌதம் கேட்க... ப்ரியா சரி என்றாள்.

அதன்பிறகு ப்ரியா அழவில்லை... ஆனால் எப்போதும் இருக்கும் தெளிவும் இல்லை. முரளி வந்ததும் எல்லோரும் சேர்ந்து உணவருந்தினர். கார்த்திக் சென்று மிதுவையும் அழைத்து வந்திருந்தான். அந்த இடமே கலாட்டாவாக இருந்தது. ப்ரியா அமைதியாக சாப்பாட்டை அளந்து கொண்டிருந்தாள். அதை பார்த்து கௌதம்... ஏன் இந்த தடவை இப்படி இருக்கா... ? எப்பவும் சொன்னா புரிஞ்சிப்பாளே... என்று நினைத்தவன் ப்ரியா அவள் வீட்டுக்கு சென்றதும் கார்த்திக்கிடம் சொல்லி புலம்ப...

கார்த்திக் "நீ... முதல் தடவை இவ்வளவு நாள் வெளியூர் போறதுனால இருக்கும். சரி ஆகிடுவா...." என்று அவனுக்கு தோன்றிய காரணத்தை சொன்னான்.

கௌதமும்... அந்த நம்பிக்கையில் தான் கிளம்பி ஜெர்மன் சென்றான். ஆனால் அவன் திரும்பி வரும் போது ப்ரியா....?

32

கௌதம் ஊருக்கு சென்ற ஒரு பத்து நாட்கள் எந்த பிரச்சனையும் இல்லாமல் சென்றது. அவனும் ப்ரியாவை தினமும் அழைத்து பேசினான். ப்ரியா கூட நாம் தான் தேவையில்லாமல் கௌதம் ஊருக்கு செல்லும் போது அழுது ஆர்பாட்டம் செய்து விட்டோம் என்று நினைத்தாள்.

முரளி வெளிநாட்டிற்கு செல்வதால் அவனுக்கு ஒரு பரிட்ச்சை இருந்தது. அதற்காக அவன் கௌதம் ஊருக்கு வருவதற்கு மூன்று நாட்கள் இருக்கும் போது.... டெல்லிக்கு கிளம்பி சென்றான்.

அப்பத்தா ராமமூர்த்தியிடம் விஷ்வா ப்ரியாவை கல்யாணம் செய்ய விரும்புவதாக சொல்ல....

ராமமூர்த்தி "இல்லைமா... இது ஒத்து வராது, ப்ரியாவை நான் கௌதமிற்கு செய்ய போறேன்" என்றார்.

அப்பத்தா திரும்பி பழைய புராணத்தை ஆரம்பிக்க....

ராமமூர்த்தி "போதும் நிறுத்துங்கமா... எப்ப பாரு இதையே சொல்றீங்க கௌரவம்... அந்தஸ்த்து.... பணம் எல்லாத்திலையும் அவங்களும் நாமும் சமமா தான் இருக்கோம். அதோட நல்ல குடும்பம் வேற இவங்களை விட்டுட்டு... நான் வெளிய போய் ப்ரியாவை செய்யணும்ன்னு தேவை இல்லை..." என்றார்.

அப்பத்தா "ஆனாலும்... விஷ்வா டாக்டர் ஆச்சே..." என்று சொல்ல...

"முதல்ல... இந்த டாக்டர்ன்னு பேசுறத நிறுத்துங்க. டாக்டர் தொழில் உயிர் காக்கும் ரொம்ப புனிதமானது... நான் ஒத்துக்குறேன். அதுக்காக வேற தொழில் பார்க்கிறவங்க எல்லாம் குறைஞ்சவங்களா... அப்படி பார்த்தா முரளியவிட கௌதம் தான் அதிகமா சம்பாதிக்கிறான். கௌதம் மாதிரி திறமையான பையன் கிடைகிறது கஷ்ட்டம்" என்றவர்

"நாங்க எதோ சின்ன அளவுல செஞ்சிட்டு இருந்தத... அவன் எவ்வளவு பெரிய தொழில்லா... கொண்டு வரான் தெரியுமா... இப்ப நாங்களும் பெரிய பில்டர்ஸ் ஆகி இருக்கோம். இதுக்கு காரணம்

**கௌதம்... அவன் தான் எங்க ரெண்டு பேருக்கும் பிசினஸ் வாரிசு... அவன் தான் எங்களுக்கு பின்னாடி பொறுப்பு ஏத்துக்க போறான். அதனால நீங்க எதோ ஒன்னும் இல்லாதவனுக்கு என் பொண்ண குடுக்கிற மாதிரி இனிமே பேசாதீங்க..." என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றார்.**

**அவர்கள் பேசும் போது ஜானகி, ப்ரியா மற்றும் ஷ்ருதி ஆளுக்கு ஒரு வேலை செய்வது போல்... அவர்கள் பேசுவதை கேட்டு கொண்டிருந்தனர்.**

**ப்ரியா நிம்மதியாக மூச்சு விட்டவள், பெரிய கண்டத்தில் இருந்து தப்பித்தோம் என்று நினைத்து அப்பத்தா கண்களில் படாமல் அவள் அறைக்கு சென்றுவிட்டாள்.**

**ஜானகி கோவிலுக்கு கிளம்பி செல்ல... ஷ்ருதி தனது மாமனார் தனது குடும்பத்தை பற்றி உயர்த்தி பேசியதால்... தனக்கு தலையில் கிரீடம் வைத்து விட்டது போல் உணர்ந்தவள்... ஹாலுக்கு சென்று நேராக அப்பத்தா எதிரில்... சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர்ந்தாள்.**

**அப்பத்தா ஏற்கனவே தனது மகன் தன்னிடம் கடுமையாக பேசியதில் ஆத்திரத்தில் இருந்தார். இப்போது ஷ்ருதி செய்வதை பார்த்து... மேலும் எரிச்சல் வந்தது. அவர் ஷ்ருதியை பார்த்து "உனக்கு கொஞ்சமாவது மரியாதை தெரியுதா..." என்று கேட்க...**

Ramya Rajan

"உங்களுக்கு கொஞ்சமாவது நாகரீகம் தெரியுதா..." என்று பதிலுக்கு அவள் அப்பத்தாவை கேட்க...

அவர்கள் இருவரும் பேசும் சத்தத்தில் ப்ரியா ஹாலுக்கு வந்தாள்.

அப்பத்தா எப்படி தன் மகனை வழிக்கு கொண்டு வருவது என்று யோசித்து கொண்டிருந்தவர், ஷ்ருதி தானாகவே வந்து வலையில் மாட்டுவதை தனக்கு சாதகமாக கொண்டு செல்ல பார்த்தார். அனுபவம் இல்லாத ஷ்ருதியும் அவர் வலையில் விழுந்தாள்.

"எனக்கு என்ன நாகரீகம் தெரியலைன்னு சொல்ற..." என்று அப்பத்தா கேட்க...

ஷ்ருதி "ஆமா... இங்க யாரவது உங்களோட விருப்பத்தை கேட்டாங்களா இல்லை... உங்களை ப்ரியாவுக்கு மாப்பிள்ளை பார்க்க சொன்னாங்களா... எதுக்கு தேவை இல்லாம... நீங்க உள்ளே நுழையரீங்க அது தான் கேட்டேன்"

இவர்கள் இருவரும் பேசுவதை கேட்டு ப்ரியா அதிர்ச்சி அடைந்தவள், அவர்கள் பேச்சு எங்கே போய் நிற்க போகிறது என்பதை உணர்ந்து... அதை தடுப்பதற்காக "ஷ்ருதி... ஏன் இப்படி பேசுற ? வேண்டாம் விட்டுடு..." என்று சொல்ல...

அப்பத்தா "நீ சும்மா இரு..." என்று ப்ரியாவை அதட்டியவர், ஷ்ருதியை பார்த்து "அப்ப எனக்கு இந்த வீட்ல எந்த மரியாதையும் இல்லைன்னு சொல்ற..." என்றார்.

ஷ்ருதி அவர் தன்னை முரளிக்கு வேண்டாம் என்று சொன்ன கோபத்தில் இருந்ததால் "இத நான் வேற சொல்லனும்மா... இப்படி தான் எங்க கல்யாணத்லையும் பிரச்சனை பண்ணீங்க... ஆனா யாரவது உங்க பேச்ச கேட்டாங்களா... அது மாதிரி தான் இப்பவும், ப்ரியா கல்யாணத்லையும் நடக்க போகுது" என்று ஷ்ருதி கிண்டலாக சொல்ல...

அப்பத்தா "உங்க குடும்பம் தான்... என்னோட பையனுக்கு நல்லா மூலை சலவை செய்து வச்சிருகீன்களே... அப்புறம் நான் சொல்லறது எப்படி நடக்கும்" என்று கேட்க...

ஷ்ருதி "இங்க பாருங்க... என்னை பத்தி பேசுங்க ஆனா என் குடும்பத்தை பத்தி பேசாதீங்க.."

அப்பத்தா "முழு பிசிஸையும் நீங்களே எடுத்துக்க தானே இந்த கல்யாணம். எப்படியும் முரளி டாக்டர்... அவன் பங்குக்கு வர போறது இல்லை... எல்லாத்தையும் உங்க அண்ணன் எடுத்துக்க தானே நீங்க எல்லாரும் சேர்ந்து இந்த வேலை பார்க்றீங்க" என்று சொல்ல...

ப்ரியா "பேசாத... ஷ்ருதி" என்று அவள் கையை பிடித்து இழுத்தவள்

"விட்டுடு ப்ளீஸ்..." என்று கெஞ்ச...

அவள் பேச்சை கேட்காமல் ஷ்ருதி "உங்களுக்கு பிசினஸ் பத்தி என்ன தெரியும். எதுவும் தெரியாம... உளறாதீங்க. மாமாவும், முரளியும் ஒன்னும் சின்ன பசங்க இல்லை... எங்க அண்ணன் அவங்களை ஏமாத்த... வயசான காலத்தில தேவை இல்லாத விஷயத்தில் தலையிடாம பேசாம கோவில் குளம்ன்னு இருங்க" என்றாள்.

அவள் பேசுவதை கேட்டு கொண்டே ராமமூர்த்தி மாடியில் இருந்து இறங்கி கொண்டிருந்தார்.... அதை பார்த்த அப்பத்தா "அப்ப நீ முடிவா... என்ன சொல்லவர ? எனக்கு இந்த வீட்ல எந்த மதிப்பும் இல்லைனா... யாருக்கும் நான் தேவை இல்லைனா... என் பையன் என் பேச்சை கேட்க மாட்டான்னா..." என்று கேள்விகளாக அடுக்க...

ஷ்ருதி "இத நான் வேற சொல்லனுமா... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான... மாமா சொன்னாங்க, உங்களுக்கு காது கேட்காதா...ஆமாம் இந்த வீட்ல நீங்க வெட்டியா ஜம்பம் பண்ணிட்டு இருக்கீங்க, போதுமா... " என்று அழுத்தி சொல்ல...

ஷ்ருதி பேசுவதை கேட்டு மாடியில் இருந்து வந்த ராமமூர்த்தியும் பக்கத்தில் இருந்த கோவிலுக்கு சென்றுவிட்டு வந்த ஜானகியும் அதிர்ச்சியில் அதே இடத்தில் நின்றனர்.

அப்பத்தா விறுவிறுவென்று தன் அறைக்கு சென்றவர், அவருடைய



Ramya Rajan

பெட்டியில் துணியை அடுக்கி கொண்டு வெளியே வந்து வாசலுக்கு செல்ல... ஜானகி அவரை போகவிடாமல் தடுத்து கதவை சாற்றினார்.

அப்பத்தா "எனக்கு இந்த வீட்ல எந்த உரிமையும் இல்லை... மரியாதையும் இல்லைன்னு... நேத்து நம்ம வீட்டுக்கு வந்த பொண்ணு சொல்லிடுச்சு. அப்புறம் நான் ஏன் இங்க இருக்கணும். நான் போறேன் இனிமே இங்க வர மாட்டேன், நீங்களும் என்னை தேடி வர கூடாது அப்படி வந்தா... நான் எங்கையாவது முதியோர் இல்லத்தில போய் சேர்ந்துடுவேன்" என்று அழுது கொண்டே சொன்னார்.

தன்னை சிறிது வயதில் கஷ்ட்டப்பட்டு தனியாக வளர்த்த தன் அம்மா முதியோர் இல்லம் சென்று விடுவேன் என்று சொன்னதை தாங்க முடியாத ராமமூர்த்தி "என்னமா பேசுறீங்க... அது சின்ன பொண்ணு எதோ தெரியாம பேசுதுன்னு விடாம..." என்று சொல்ல...

"நீ... உன் மருமகளை விட்டு தருவியா... அவ என்ன என்னலாம் சொன்னா தெரியுமா... நாகரீகம் தெரியல... எனக்கு இங்க மரியாதை இல்லை... நீங்க சொல்லறத யாரும் கேட்க மாட்டாங்க... பேசாம கோவில் குளம்ன்னு இருக்க வேண்டியது தானேன்னு, இதுக்கப்புறமும் நான் இந்த வீட்ல இருக்கனுமா..." என்றவர், என்னை விட்டுட்டு ராமு நான் போறேன் என்று கண்களில் நீருடன் சொல்ல...

ஷ்ருதிக்கு தான் பேசியது அதிகம் என்று புரிந்தது, முரளிக்கு தெரிந்தால் என்ன ஆகுமோ என்று பயந்து கொண்டு இருந்தாள்.

***ராமமூர்த்தி "அம்மா... இப்ப என்னை என்ன செய்ய சொல்றீங்க ? நீங்க இந்த வீட்ல இன்னும் நாங்க எல்லாம் மரியாதை தர்ற முக்கியமான இடத்தில தான் இருக்கீங்கன்னு... நான் எப்படி உங்களுக்கு நிருபிக்கணும்"***

***அப்பத்தா "நீ சொன்னது உண்மைனா... ப்ரியாவுக்கு நான் சொல்ற மாப்பிள்ளைய கல்யாணம் பண்ணி வைக்கணும்" என்று சொல்ல...***

***ப்ரியாவிற்கு தன் அப்பா என்ன சொல்ல போகிறார் என்று நன்றாக தெரிந்தது. தன் வாழ்க்கை தன் கண் முன்னே மாறப்போவதை தடுக்க முடியாமல் நின்று பார்த்து கொண்டிருந்தாள்.***

***ராமமூர்த்தி "சரி..." என்று தன் அம்மாவுக்கு வாக்கு கொடுக்க.***

***அதை கேட்ட ப்ரியா தன் அறையில் இருந்த கட்டிலில் சென்று விழுந்து கதறி அழ ஆரம்பித்தாள்.***

***ஷ்ருதி அதிர்ச்சியில் சிலையாக நின்றாள். நாம என்ன பேசினோம்... அது ஏன் இப்ப ப்ரியா கல்யாணத்தில் வந்து நிற்குது என்று புரியாமல் குழம்பினாள்.***

***ஜானகிக்கும் அதிர்ச்சி தான். ஆனால் இப்போது எதுவும் பேச***

முடியாது ராமமூர்த்தி ஆபீஸ் சென்றதும் பார்ப்போம் என்று அவரை கிளப்ப சென்றார்.

தங்கள் அறைக்கு வந்த ஜானகியிடம் ராமமூர்த்தி "என்ன கோபமா ?" என்று கேட்க...

"பின்ன இல்லையா... உங்க அம்மாவுக்காக என்னோட பொண்ணு வாழ்க்கை தான் கிடைச்சுதா...",

ராமமூர்த்தி "எல்லாம் உன் மருமகளால... பெரியவங்ககிட்ட எப்படி பேசனும்ன்னு தெரியல... இப்ப அவளால அவ அண்ணன் கல்யாணம் தான் நிக்குது"

"தப்பு செஞ்சது ஷ்ருதின்னா... முரளிகிட்ட சொல்லி கண்டீங்க. அதைவிட்டு வேற ஏதோ செய்றீங்க... உங்க அம்மா நினைக்கிறது ஒரு நாளும் நடக்காது. எனக்கு கௌதம் பற்றி தெரியும்... அவன் ப்ரியாவை வேற யாருக்கும் விட்டு கொடுக்க மாட்டான்" என்றவர் வெளியே செல்ல...

ராமமுர்த்திக்கே தெரியவில்லை தான் செய்தது சரியா இல்லை தவறா என்று குழப்பத்துடனே ஆபீஸ் கிளம்பி சென்றார்.

ப்ரியா அழுது கொண்டே இருக்க... ஷ்ருதிக்கு ப்ரியாவிடம் சென்று

***பேச தைரியம் இல்லை... அதனால் என்ன செய்வது என்று தெரியாமல் அவளது அறைக்கு சென்றாள்.***

***அம்மா படிச்சு... படிச்சு... சொன்னாங்க... நான் தான் கேட்கலை... முரளி ஒதுங்கி போன்னு சொன்னாரு... நான் அதையும் கேட்கலை... கௌதம் என்னை தான் நம்பிருகேன்னு சொன்னான்..... நான் இப்ப அவன் முகத்தில எப்படி முழிகிறது" என்று நினைத்து ஷ்ருதியும் அழு ஆரம்பித்தாள்...***

***ஜானகி... ப்ரியாவை சமாதானம் செய்தவர் "உனக்கு இஷ்ட்டமில்லாம எதுவும் நடக்காது... கௌதம் ஊர்ல இருந்து வரட்டும் பார்த்துக்கலாம்" என்றார்.***

***இதை ஹாலில் இருந்த அப்பத்தா கேட்டு கொண்டிருந்தார். அவன் என்ன பெரிய இவனா... என்ன செய்றான்னு பார்க்கலாம் என்று நினைத்தவர்... தனது அறைக்கு சென்று விஷ்வாவை அழைத்தார்***

***போன்னை எடுத்த விஷ்வா "என்ன பாட்டி ?" என்றதும், "உன்னால் உன் சொந்த பந்தத்துடன்... எவ்வளவு நாட்களுக்குள் ப்ரியாவை பெண் பார்க்க வரமுடியும்" என்று அப்பத்தா கேட்க...***

***விஷ்வாவிற்கு அவர் சொன்னதை நம்ப முடியவில்லை "நிஜமாவா பாட்டி... நாளைக்கே... என்னால வர முடியும்."***

**அப்பத்தா "நாளைக்கு நல்ல நாள் தான்... அப்ப காலையில பத்தரை மணிக்கு... உன்னோட அம்மா... அப்பா... அப்புறம் சொந்தங்க பத்து பேரையாவது கூடிட்டு வா..." என்று சொல்ல...**

**விஷ்வா சரி என்றான். "வரும் போது மறக்காம புடவையும், மோதிரமும் வாங்கிட்டு வா..." என்று சொல்லி அப்பத்தா போன்னை வைத்தார்.**

**விஷ்வா சந்தோஷமாக சரி என்றவன், போன்னை வைத்து விட்டு தன் பெற்றோருக்கு அழைத்தான். அவன் ப்ரியாவை பார்த்த அன்றே சொல்லிவிட்டான்.... தான் ப்ரியாவை தான் கல்யாணம் செய்வேன் என்று... அவளது போட்டோவையும் காட்டி இருந்தான்... அவர்களுக்கும் ப்ரியாவை ரொம்ப பிடித்தது... அதனால் நீ எப்ப வர சொல்றியோ அப்ப வந்து பொண்ணு கேட்கிறோம் என்று சொல்லி இருந்தனர்.**

**விஷ்வா அவர்களை உடனே கிளம்பி வர சொன்னவன்... நிச்சயமும் செய்வதால் சில சொந்த காரர்களையும் அழைத்து வர சொன்னான்.**

**ஜானகி காலையில் இருந்து ப்ரியா... ஷ்ருதி இருவருமே சாப்பிடவில்லை என்று மதியம்.. இருவரையும் அழைத்து சாப்பாடு போட்டார். ஆளுக்கு ஒரு புறம் அமர்ந்து சாப்பிட்டனர்.**

**ஷ்ருதி "சாரி அத்தை... நான் இப்படி எல்லாம் நடக்கும்ன்னு எதிர்பார்க்கலை.... பாட்டியோட சண்டை போட்டா அது ப்ரியாவ**

Ramya Rajan

***பாதிக்கும்ன்னு நினைக்கலை...".***

***ஜானகி "அதுக்கு தான் ஷ்ருதி... யோசிச்சு பேசணும், சரி விடு..." என்றார்,***

***"இல்ல அத்தை... அவங்க என்னோட குடும்பத்தை பற்றி கேவலமா பேசினாங்க... அதனால தான் நானும் கோவத்தில பேசிட்டேன். ஆனா... நான் என்ன தான் இருந்தாலும் பெரியவங்களை அப்படி பேசி இருக்க கூடாது...." என்று சொல்ல...***

***ஜானகிக்கு தன் மாமியாரை பற்றி தெரியும் என்பதால் "சரி ஷ்ருதி... இப்ப நீ சாப்பிடு" என்றார்.***

***"அத்தை... நான் வேணா... முரளிக்கு போன் பண்ணி நடந்ததை சொல்லட்டுமா..."***

***"அம்மா... அண்ணாவுக்கு இப்ப எதுவும் சொல்ல வேண்டாம். அவங்க எக்ஸாம் நல்லா பண்ணிட்டு வரட்டும்" என்று சொல்லிவிட்டு ப்ரியா அவள் அறைக்கு சென்றாள்.***

***ஷ்ருதிக்கு ப்ரியாவை பார்க்கும் போது இப்படியும் ஒருத்தி இருப்பாளா அவ வாழ்க்கையே கேள்வி குறியா இருக்கு... இப்பவும் தன்னோட அண்ணா நல்லபடியா பரீட்சை எழுதணும்ன்னு***

***நினைகிறாலே என்று நினைத்தவளுக்கு தன்னை நினைத்தே வெட்கமாக இருந்தது.***

***மாலையில் ப்ரியாவை அழைத்த கௌதமிடம்... அவள் எதுவும் சொல்லவில்லை... அங்கே இருப்பவனிடம் எதாவது சொல்லி... அவன் டென்ஷன் ஆனால் நல்லதில்லை என்று நினைத்தவள், அப்பத்தா போட்ட திட்டம் தெரியாமல் ரெண்டு நாளில் வந்துவிடுவான் வந்த பிறகே சொல்வோம் என்று அவனிடம் சொல்லாமல் இருந்தாள்***

***கௌதம் "ஏன் ப்ரியா உன்னோட குரல் ஒரு மாதிரி இருக்கு..." என்றான்***

***"ஜலதோஷம்..." என்று சமாளித்தவள் " நீங்க போன வேலை முடிஞ்சிடுச்சா..." என்று கேட்க...***

***"நல்ல படியா முடிஞ்சிடுச்சு ப்ரியா... இங்க வந்தது நிறைய விஷயங்கள் தெரிஞ்சிக்க முடிஞ்சது. நாளை மறு நாள் விடியற்காலை ப்லைட், நைட் அங்க வந்துடுவேன் சரியா...",***

***ப்ரியா "வேலை முடிஞ்சிருந்தா இன்னைக்கே கிளம்பி இருக்கலாமே..." என்று இழுக்க...***

Ramya Rajan

***கௌதம் "வந்தது வந்தோம்... எல்லாத்தையும் பார்த்திட்டு வரலாம்ன்னு நினைச்சோம்... நான் உனக்கும் ஷ்ருதிக்கும் செயின் வாங்கி இருக்கேன் தெரியுமா..." என்று சொல்ல...***

***ப்ரியா "ம்ம்..." என்றாள்.***

***"சரி ப்ரியா... பாய்... நம்ம ஊருக்கு வந்ததும்... நேரா உங்க வீட்டுக்கு வரேன்" என்று சொல்லி போன்னை வைத்தான் கௌதம்.***

***அன்று இரவு உணவு அருந்தும் போது "அப்பத்தா... நாளைக்கு விஷ்வா வீட்டில் இருந்து ப்ரியாவை பெண் பார்க்க வருகிறார்கள்" என்று ஒரு குண்டை தூக்கி அங்கிருந்தவர்கள் தலையில் போட்டார்.***

***எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.***

33

Ramya Rajan

அப்பத்தா சொன்னதை கேட்டு அதிர்ச்சியில் அனைவரும் இருந்த போது ஷ்ருதி தான் முதலில் தெளிந்தாள் அவள் அப்பத்தாவை பார்த்து "நான் செஞ்ச தப்புக்கு... நீங்க ப்ரியாவை ஏன் கஷ்ட்ட படுத்தறீங்க... நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுகிறேன்" என்றவள் எழுந்து கையை கழுவிவிட்டு வந்து அப்பத்தா காலில் விழுந்தாள்.

ஷ்ருதி செய்த செயல் ராமமூர்த்தி, ஜானகி மற்றும் ப்ரியா மூன்று பேரின் நெஞ்சையும் தொட்டது. ப்ரியா... ஷ்ருதி மீது கோபமாக தான் இருந்தாள்... ஆனால் தான் செய்த தப்பை ஒத்துக்கொண்டு மன்னிப்பு கேட்ட ஷ்ருதி மீது அவளுக்கு இன்னும் அன்பு பெருகியது.

ஷ்ருதி "நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுட்டேன்... இனிமே இதோட இந்த பிரச்சனைய விட்டுடுங்க" என்று அப்பத்தாவை பார்த்து சொல்ல...

அப்பத்தா "ஆமா... என்னை நீ நாக்கை பிடிங்கிகிற மாதிரி கேள்வி கேட்ப அப்புறம் நீ வந்து மன்னிப்பு கேட்டோன... நீ பேசினது எல்லாம் இல்லைன்னு ஆகிடுமா... ஏன் உன்னோட அண்ணனைவிட எங்க ப்ரியாவுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைக்காதா... நான் அவளுக்கு பார்த்து வச்சிருக்குற மாப்பிள்ளையும் பெரிய இடம் தான்" என்றவர்,

"நீயே எங்க வீட்ல வாழ வந்து ரெண்டு மாசம் தான் ஆகப்போது முக்கியமான முடிவு எல்லாம் எடுக்க உனக்கு உரிமை யார் கொடுத்தது ? பேசாம பெரியவங்க விஷயத்துல தலை இடாம இரு..." என்று அப்பத்தா திட்டவட்டமாக சொல்ல...

அவர் சொன்னதை கேட்டு ப்ரியா தவிக்க... ஷ்ருதி என்ன செய்வது என்று தெரியாமல் நின்றாள்

ராமமூர்த்தி தனது அம்மாவிடம் "இப்ப எதுக்குமா... பொண்ணு பார்க்க வர சொன்னீங்க ப்ரியா படிப்பு இன்னும் முடியலை... முரளி வேற ஊர்ல இல்ல..." என்று கேட்க...

"இங்க பாரு முதல இந்த பையன... நம்ம ப்ரியாவுக்கு செய்யலாம்ன்னு சொன்னது முரளி தான்... அதை நல்லா நியாபகம் வச்சுக்கோ... விஷ்வாவுக்கு பேசி வச்சிட்டா... கல்யாணம் படிப்பு முடிந்ததும் பண்ணிக்கலாம். அவன் நான் சொன்னதை நம்பி அவங்க அம்மா... அப்பாவோட... நாளைக்கு பெண் கேட்டு வரான். நீ என்கிட்டே ப்ரியா கல்யாணம் என்னோட பொறுப்புன்னு சொன்னது உண்மைன்னு நினைச்சு... நான் அவனை வர சொல்லிட்டேன்" என்று கண் கலங்கினார்.

தன் அம்மாவின் வருத்தம் தாங்க முடியாத ராமமூர்த்தி "சரி நாளைக்கு வந்து பொண்ணு மட்டும் பார்க்கட்டும்... மிச்சத்த அப்புறம் முடிவு செய்வோம்" என்றார்.

**ப்ரியாவின் தவிப்பை பார்த்த ஷ்ருதியால் அதற்க்கு மேல் பொறுமையாக இருக்க முடியவில்லை... அவளது அறைக்கு சென்று தனது ஹண்ட் பாகை எடுத்து கொண்டு வந்தவள்... இனிமே அம்மாவிடம் சொல்லி தான் எதாவது செய்ய வேண்டும் என்று கீழே இறங்கி வந்தாள்.**

**ஜானகி "இந்த நேரத்தில.... எங்க போற ? ஷ்ருதி..."**

**ஷ்ருதி "நான் எங்க அம்மா வீட்டுக்கு போறேன்..."**

**"இந்த நேரத்திலா..." என்று ஜானகி கேட்க... "ஒன்பது மணி தானே அத்தை போய்டுவேன்" என்றாள் ஷ்ருதி.**

**அப்பத்தா "உனக்கு புகுந்த வீட்ல ஒழுங்கா வாழணும்ன்னு நினைப்பில்லை..." என்று சொல்ல...**

**ஷ்ருதி "உங்க புத்தி தெரியாம... உங்ககிட்ட வாய குடுத்து... நான் செஞ்சு வச்ச குழப்பத்துக்கு எப்படியும் என் புருஷன் என்னை தள்ளி தான் வைக்க போறார்... அது எனக்கு தெரியும், இப்ப ப்ரியா பிரச்சனையை பார்க்கலாம்... உங்களுக்கு எங்க அண்ணனை பத்தி தெரியாது... அவன் கண்டிப்பா ப்ரியாவை வேற ஒருத்தன் கல்யாணம் பண்ண விட மாட்டேன்... அதனால விஷ்வாவ வர வேண்டாம்ன்னு சொல்லிடுங்க" என்ற சொல்ல...**

Ramya Rajan

"உங்க அண்ணன்.... அவ்வளவு பெரிய ஆளா... உங்க அண்ணன் என்ன பண்ணுவான்னு.. நானும் பார்க்கிறேன்..." என்றார்.

ஷ்ருதி ப்ரியாவிடம் "நான் போய் அம்மாகிட்ட சொல்லி... என்ன பண்றதுன்னு பார்க்கிறேன்... நீ தைரியமா இரு... பொண்ணு பார்த்தவங்கலையே கல்யாணம் பன்னிகனும்ன்னு எந்த சட்டமும் இல்லை..." என்று அப்பத்தாவை பார்த்து கொண்டே சொன்னவள், ஜானகி, ராமமூர்த்தி இருவரும் தடுப்பதை கேட்காமல் டாக்ஸ்யில் ஏறி தனது அம்மா வீட்டுக்கு சென்றுவிட்டாள்.

ராமமூர்த்தி "அம்மா... இப்ப இவ்வளவு குழப்பத்தில இந்த பொண்ணு பார்க்கிறது தேவையா..." என்று கேட்க...

"நீ சொன்னா... நான் வேண்டாம்ன்னு சொல்லிடுறேன், ஆனா... அப்புறம் உனக்கும் எனக்கும் ஒன்னும் இல்லை பரவாயில்லையா... நீ அம்மான்னு என்னை தேடி வரகூடாது, நான் ஒன்னும் ப்ரியாவுக்கு ஒரு அயோக்கியனை பார்க்கலியே டாக்டருக்கு படிச்சவனுக்கு தானே பார்த்திருக்கேன். எனக்கு என் பேத்திக்கு கல்யாணம் பண்ண உரிமை இல்லையா.." என்று அப்பத்தா கேட்க...

அதற்க்கு மேல் ராமமூர்த்திக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் அவரது அறைக்குள் சென்றார்.

ப்ரியா இதற்க்கு மேல் கௌதமிடம் மறைப்பது தவறு என்று...

**அவன் அழைத்த எண்ணுக்கு அழைக்க... அவனை தொடர்பு கொள்ள முடியவில்லை இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் ப்ரியா முழிக்க... அவள் கையில் இருந்து செல் போன்னை பறித்து அதை ஆப் செய்த அப்பத்தா... அவளை கட்டிலில் படுக்க சொல்லி தானும் அவளுடனே படுத்து கொண்டார்.**

**இரவு பத்து மணிக்கு வீட்டிற்க்கு வந்த ஷ்ருதியை.... பார்த்து சாருமதிக்கு ஒன்றுமே புரியவில்லை... முரளி டெல்லிக்கு சென்றிருப்பது அவருக்கு தெரியும். அப்படி இருக்கும் போது இவள் எதுக்கு இப்ப வந்திருக்கிறாள் என்று குழம்பினார்.... வந்தவள் வந்தலில் இருந்து அழுதாளே தவிர எதுவும் சொல்லவில்லை.... அவள் அழுவதிளிருந்தே எதோ பெரிய வேலை செய்திருக்கிறாள் என்று புரிந்து கொண்டார்.**

**அப்போது சாருமதியின் செல் அழைக்க எடுத்து பார்த்தால் ஜானகி "ஷ்ருதி வந்துட்டாளா... என்று கேட்டார்.**

**சாருமதி "வந்துட்டா... என்ன ஆச்சு ஜானகி ? வந்ததுல இருந்து எதுவும் சொல்லாம அழுகிறா...." என்று கேட்க...**

**ஜானகி இன்று வீட்டில் நடந்தது அத்தனையும் சொல்ல...கேட்ட சாருமதிக்கு தாங்கவே முடியவில்லை... ஜானகியிடம் போன்னை ராமமூர்த்தியிடம் கொடுக்க சொன்னவர் "அண்ணா... நீங்க பண்றது நியாயமே இல்லை.... என் பொண்ணு செஞ்சது தப்பு தான். தண்டனைய அவளுக்கு குடுங்க... கௌதமுக்கும், ப்ரியாவுக்கும்**



Ramya Rajan

***எதுக்கு கொடுக்கறீங்க. கௌதம் ப்ரியா மேல உயிரையே வச்சிருக்கான். அவன் கண்டிப்பா இத நடக்க விட மாட்டான்" என்று சொன்னவர், தாங்க முடியாமல் அழுதார்...***

***ராமமூர்த்தி "என்ன என்னமா பண்ண சொல்ற ? இப்ப எதுவும் எங்கையில இல்லை... நாளைக்கு வந்து பொண்ணு தான் பார்கிறாங்க பார்த்திட்டு போகட்டும். கௌதம் ஊரில் இருந்து வந்ததும்... நான் திரும்பி எங்க அம்மாகிட்ட பேசுறேன்" என்றார்.***

***போன்னை வைத்த சாருமதி கிருஷ்ணகுமாரிடம் நடந்ததை சொல்ல...***

***அவர் "ஓ.. இன்னைக்கு அது தான்... ஆபீஸ்ல ராமு என்கிட்டே சரியவே பேசலையா.... சரி விடுங்க.... பொண்ணு தானே பார்க்க வராங்க.... வந்துட்டு போகட்டும் பார்க்கலாம்" என்றார்.***

***ஷ்ருதி சாருமதியிடம் "சாரிமா... நான் இப்படி ஆகும்ன்னு நினைக்கலை" என்றாள்.***

***"இதே நிலைமை.... உனக்கு கௌதம் மூலமா வர இருந்தது. அதை ப்ரியா தான் தடுத்து அவன் காலை பிடிச்சி நிறுத்தினா... ஆனா... இன்னைக்கு அவ சொல்லியும் கேட்காம... நீ இப்படி பண்ணி இருக்கே... முரளி என்ன முடிவு எடுப்பான்னோ எனக்கு பயமா இருக்கு" என்று சொல்ல....***

Ramya Rajan

ஷ்ருதி முரளிக்கு போன் செய்ய... அவன் போன் சுவிட்ச் ஆப் என்று வந்தது.

சாருமதி கார்த்திக்கின் அப்பாவுக்கு போன் செய்து "கார்த்திக்.... உங்களுக்கு போன் பண்ணா... உடனே எனக்கு போன் பண்ண சொல்லுங்க" என்று சொன்னவர், பிரச்சனையை சுருக்கமாக சொல்லிவிட்டு போனை வைத்தார்.

சாருமதி கௌதம் போன் பண்ணுடா... என்று மனதில் நினைத்தவர். கடவுளை வேண்டி கொண்டே அமர்ந்திருக்க... அவரது செல் அடித்தது... யார் என்று பார்க்க... கௌதம்.

சாருமதி கடவுளுக்கு நன்றி சொன்னவர் போன்னை எடுத்து "கௌதம்... " என்றதும், "அம்மா... நான் இன்னைக்கே கிளம்பறேன்... ஏர்போர்ட் வந்துட்டேன்... ப்ரியா குரலே சரி இல்லை... கிளம்பும் போதே அழுதா... அதனால தான்" என்று கௌதம் சொல்லி கொண்டே இருக்க...

சாருமதி சத்தமாக அழ ஆரம்பித்தார்.... கௌதம் பதறியவன் "என்ன ஆச்சுமா ? அப்பாவுக்கு உடம்பு சரியில்லையா...." என்று கேட்க...

சாருமதி அழுதுகொண்டே எல்லாவற்றையும் சொல்ல... அதை கேட்ட கௌதமின் முகம் கோபத்தில் சிவந்தது.

"அம்மா நான் காலையில ஒன்பது மணிக்குள்ள வந்திடுவேன். கவலை படாதீங்க.... நாமளா அவங்களான்னு பார்த்திடலாம்... நீங்க நான் வரேன்னு இப்ப சொல்ல வேண்டாம்.... அந்த பாட்டிக்கு தெரிஞ்சா அவங்க உஷார் ஆகிடுவாங்க... அம்மா அவங்க பொண்ணு தானே பார்க்க வராங்க.... நாளைக்கு நாம ப்ரியாவை நிச்சயமே பண்ணிடலாம்" என்றவன் தொடர்ந்து...

"நீங்க... அவளுக்கு புடவை, மாத்திக்க மாலை வேற என்ன தேவையோ எல்லாம் வாங்கிட்டு ப்ரியாவோட வீட்டுக்கு பக்கத்தில இருக்கிற கோவிலுக்கு வந்திடுங்க... நான் கொஞ்சம் லேட் ஆனாலும் வந்திடுவேன். நான் இப்ப போன்ன ஆப் பண்ணனும் சரியா..." என்று கேட்க...

சாருமதி "நீ டென்ஷன் ஆகாம வா.... நான் எல்லாம் ரெடி செஞ்சு வைக்கிறேன்" என்று போன்னை வைத்தார்...

கௌதம் போன்னை வைத்துவிட்டு கார்த்திக்கிடம் விவரம் சொன்னவன் "யாருடா... இந்த விஷ்வா ?" எனக்கு தெரியாதே என்று சொல்ல...

கார்த்திக் அவன் ஷ்ருதி கல்யாணத்தின் போது ப்ரியாவிடம் பேசியதை சொல்ல....

Ramya Rajan

***ப்ரியாவுக்கு... அப்ப அவன் எதுவும் தொந்தரவு கொடுத்தனா... இவ அதனால தான் நான் ஊருக்கு கிளம்பும் போது அழுதாலா... ஒண்ணுமே புரியாமல் இருந்த கௌதம்... சரி அத அப்புறம் பார்ப்போம் என்று நினைத்தான்.***

***கௌதம் கார்த்திக்கை "நீ உங்க அப்பாவுக்கு போன் பண்ணி அவங்களையும்... நாளைக்கு அங்க வர சொல்லிடு..." என்றவன் சற்று தள்ளி சென்று வினோத்தை அழைத்தான். வினோத்திடம் பேசியவன் அவன் கேட்ட விபரத்தையும் அனுப்பிவிட்டு வந்தான்.***

***கௌதம் வினோத்திடம் பேசிவிட்டு வரவும்.... அவர்கள் விமானத்திற்கு அழைப்பு வரவும் சரியாக இருந்தது.***

***நைட் எல்லாம் தூங்காமல்.... அழுது கொண்டிருந்த ப்ரியாவிற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.... ஜானகி அவளை குளிக்க சொன்னவர் "வெறும் பொண்ணு தான் ப்ரியா... பார்க்க வராங்க. வீடு தேடி வர்றவங்களை... நாம திருப்பி அனுப்ப முடியாது... நீ அவங்களை நம்ம வீட்டுக்கு வந்த விருந்தாளின்னு நினைச்சுக்கோ... சுடிதாரே போட்டுக்கோ..." என்றதும், ப்ரியா மனம் சமாதனம் அடைந்தது. இதை தான் ராமமூர்த்தி ஜானகியிடம் சொல்லி இருந்தார்... அதை அவர் இப்போது ப்ரியாவிடம் சொன்னார்.***

***இவர்களுக்கு அப்பத்தா... விஷ்வாவை சொந்த பந்தத்துடன் நிச்சயம் செய்ய வர சொன்னது தெரியாது. அவன் தனது அப்பா அம்மாவை மட்டும் அழைத்து கொண்டு வருவதாக நினைத்திருந்தார்கள்.***

Ramya Rajan

**உண்மை தெரியும் போது.......... ?**

34

**ராமமூர்த்தியும், ஜானகியும் வீட்டிற்கு நமக்கு தெரிந்தவர்கள் வருவதாக இருந்தால்... நாம் எப்படி இருப்பமோ... அதே மாதிரி எந்த பரபரப்பும் இல்லாமல் சாதாரணமாக இருந்தனர். ஜானகி ப்ரியாவை வற்புறுத்தி நான்கு இட்லிகள் சாப்பிட வைத்தார்.**

**பத்து மணி ஆனதும் வீட்டு வாசலில் ஒரு காரும்... சுமோவும்... வந்து நிற்க....அதிலிருந்து விஷ்வா... தனது பெற்றோருடன் இறங்க... சுமோவில் இருந்து அவன் நெருங்கின சொந்தகாரர்கள் இறங்கினார்கள்.**

**வீட்டிற்க்குள் நுழைந்தவர்களை பார்த்து ராமமூர்த்தியும், ஜானகியும் திகைத்தனர். அப்பத்தா.. வந்தவர்களை வரவேற்றவர் "ராமு... என்ன அப்படியே நிக்கிற... வந்தவங்களை வான்னு கேளு...." என்றதும்,**

***ராமமூர்த்தி வாங்க என்று சொல்லி... வந்தவர்களுக்கு குடிக்க ஜானகியை காபி போட சொன்னார்.***

***ப்ரியாவிற்கு வந்தவர்கள் கொண்டு வந்திருக்கும் சீர் வரிசை தட்டில் இருந்த பூ... புடவை... நகை... எல்லாவற்றையும் பார்த்ததும்.... மூலையில் மணி அடித்தது... இவங்களை பார்த்தா வெறும் பொண்ணு மட்டும் பார்க்க வந்தவங்க மாதிரி இல்லையே என்று நினைத்தாள்.***

***ராமு சமையல் அறைக்கு செல்ல.... அங்கே ஜானகி அழுது கொண்டிருந்தவர், ராமமூர்த்தியை பார்த்து "நீங்களும்...உங்க அம்மாவும் இப்படி நம்ப வச்சு ஏமாத்திடீன்களே..." என்று சொல்ல...***

***ராமு "எனக்கும் தெரியாது ஜானகி..." என்றவர் தனது அம்மாவை அழைத்து "என்னமா இதெல்லாம்.." என்று கேட்க...***

***அப்பத்தா "என்ன...?" என்று தெரியாதவர் போல கேட்டார்...***

***ராமு "பொண்ணு தானேமா... பார்க்க வராங்கன்னு சொன்னீங்க... அதுக்கு எதுக்கு இத்தனை பேர்",***

***"அவங்கள்ள... அது தான் வழக்கமோ என்னவோ... ஒரு வேளை பொண்ணு பார்த்து பிடிச்சிருந்தா.... நிச்சயம் பண்ணலாம்ன்னு***

நினைச்சு வந்திருக்கலாம்" என்றவர் அங்கே நின்ற ப்ரியாவிடம் "என்ன இன்னும் சுடிதார்ல இருக்க... போய் புடவை மாத்து" என்று அதட்ட...

ப்ரியாவும், ஜானகியும் மாடிக்கு செல்ல.... கூடவே அப்பத்தாவும் வந்தார்.

ஜானகி "இதுக்கு ப்ரியா சம்மதிக்க மாட்டா.... அவ கௌதம விரும்புறா..." என்று அப்பத்தாவிடம் சொல்ல....

"நீ என்ன பொண்ணு வளர்த்திருக்க ? பெரியவங்க சொன்னா கேட்கணும், அது தான் அழகு.... என் பொண்ணு வெளிநாட்ல இருக்கா... ஆனாலும் பிள்ளைங்களுக்கு அவ தான் வரன் பார்த்து கல்யாணம் பண்றா... ஆனா இங்க" என்றவர் தொடர்ந்து,

"முரளி இப்படி தான் லவ் பண்றேன்னு சொல்லி... ஒரு அடங்கா பிடாரிய கல்யாணம் செஞ்சிருக்கான். அடுத்து என் பேத்திக்கும்...நான் அந்த நிலை வர விரும்பலை... ஏற்கனவே அவன் தங்கச்சி வேற என் அண்ணன் பெரிய இவன்னு மிரட்டறா.... அவன் குணம் வேற எப்படியோ அதனால அதெல்லாம் வேண்டாம். ப்ரியா நாம சொன்னா கேட்பா... இல்லை ப்ரியா... கௌதமிடம் எனக்கு உன்னை கல்யாணம் பண்ண இஷ்ட்டம் இல்லைன்னு சொல்லிடு... அப்புறம் ஒரு பிரச்சனையும் இல்லை" என்றவர்... சரி போய் ஆகுற வேலைய பாருங்க என்றவர் கீழே இறங்கி சென்று விஷ்வாவின் பெற்றோருடன் பேச ஆரம்பித்தார்.

Ramya Rajan

**ப்ரியாவுக்கு சின்ன வயதில் இருந்தே அப்பத்தா என்றாள் பயம். அவள் எப்போதும் அவரை எதிர்த்து பேசியதே இல்லை... இப்போது பேசுவதற்கும் அவளுக்கு துணிவு வரவில்லை... வீட்டை விட்டு எங்காவது ஓடி விடலாமா என்று யோசித்தாள்.**

**இந்த முரளி அண்ணா ஏன் இன்னும் வரலை ? கார்த்திக் அண்ணாவும் இல்லை... நான் எங்க போவேன் ? ஷ்ருதி... ஏன் இன்னும் வரலை என்று நினைத்து கொண்டிருந்தாள்.**

**ஷ்ருதி காலையில் வந்தது ப்ரியாவிற்கு தெரியாது. கௌதம் வந்துவிடுவான் என்று ப்ரியாவிடம் சொல்லலாம் என்று வந்த ஷ்ருதியை... அப்பத்தா "நீ நினைச்ச நேரம் வருவதற்கும் போவதற்கும் இது ஒன்னும் சத்திரம் இல்லை... உன்னோட புகுந்த வீடு... நீ இந்த வீட்டுக்கு திரும்பி வரணும்னா... ஒன்னு உங்க அம்மா, அப்பாவ கூடிட்டு வா... இல்லைனா உன் புருஷனோட வா..." என்று சொல்லி வெளியே தள்ளி கதவை சாத்தி விட்டார்.**

**ஷ்ருதியும் எப்படியும் இன்னும் கொஞ்ச நேரத்தில்... கௌதம் வந்துவிடுவான்... வந்ததும் நாமும் சேர்ந்து போவோம் என்று கோவிலில் சென்று உட்கார்ந்து இருந்தாள்.**

**கௌதம் விமானம் சற்று தாமதமாக வந்ததால்... 10 மணிக்கு தான் வந்து சேர்ந்தான். காரில் செல்லும் போது நகை கடையில் வேறு இறங்கினான் எதுக்கு என்ற கார்த்திக்கிடம் ப்ரியாவுக்கு நகை வாங்க**

**போவதாக சொல்ல....**

**கார்த்திக் "நீ டைம் வேஸ்ட் பண்ற கௌதம்..." என்றான். பத்து நிமிஷத்துல வந்துடுறேன் என்று சொல்லி உள்ளே சென்றவன்... அதே மாதிரி திரும்பி வந்தான்.**

**கௌதம் கோவிலில் சென்று சேர்ந்த போது... அங்கே அவனது பெற்றோர்... கார்த்திக்கின் பெற்றோர்... கிருஷ்ணகுமாரின் சித்தப்பா குடும்பம் என்று ஒரு பெரிய பட்டாளமே இருந்தது. கௌதம் தன் அம்மாவை பார்க்க அவர் "நான் தான் நம்ம பக்கத்துக்கு அவங்க கண்டிப்பா இருக்கனும்ன்னு... நைட் போன் பண்ணி வர சொன்னேன்" என்றதும்,**

**கௌதம் "சரி ரொம்ப நல்லது..." என்றான். ஷ்ருதி கௌதம் பக்கத்தில் வந்து நின்றவள் "சாரி கௌதம்... எல்லாத்துக்கும் நான் தான் காரணம்" என்று சொல்லி அழ...**

**கௌதம் "இந்த பிரச்சனை இன்னைக்கு இல்லைனாலும் என்னைக்காவது வந்திருக்கும் ஷ்ருதி... எனக்கு அவங்க பாட்டி எப்படி பேசுவாங்கன்னு தெரியும்.... இப்ப உன்னால எங்க நிச்சயம் சீக்கிரம் நடக்குது... தேங்க்ஸ்" என்று சொல்லி ஷ்ருதியை தோளோடு சேர்ந்து அனைத்து கொண்டான்.**

**கௌதம் கோபத்தில் துள்ளி குதிப்பான் என்று நினைக்க... அவன் நேற்றில் இருந்து பக்குவமாக நடந்து கொண்டது.... கார்த்திக்கு**



Ramya Rajan

**சந்தேகமாக இருந்தது.**

**இவர்கள் எல்லாம் சேர்ந்து ப்ரியா வீட்டிற்க்கு போகும் போது பதினோரு மணி ஆகி இருந்தது.**

**கௌதம் தனது பெற்றோர் மற்றும் உறவினருடன் உள்ளே வருவதை பார்த்து அப்பத்தா அதிர்ந்தார்.**

**இது என்ன இவன் வெளி நாட்ல இருக்கான்னு சொன்னங்க... இங்க இருக்கான்... வந்தது வந்தான்... இன்னும் கொஞ்சம் நேரம் கழித்து நிச்சயம் முடிந்ததும் வந்திருக்க கூடாதா... என்று நினைத்தவர், இவன் வந்தா மட்டும் எதுவும் மாறிடுமா என்று நினைத்து கொண்டு அலட்ச்சியமாக அமர்ந்து இருந்தார்.**

**ஷ்ருதி ப்ரியாவிடம் கௌதம் வந்துவிட்டான் என்று சொல்வதற்காக துள்ளி குதித்து மாடிக்கு ஏறி சென்றாள்.**

**ராமமூர்த்தி... கௌதமை பார்த்ததும் சந்தோஷம் அடைந்தார். நல்ல வேளை வந்துட்டான் என்று நினைத்தவர் வந்தவர்களை வரவேற்று அமர சொன்னார்.**

**கௌதம் விஷ்வாவிடம் "நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..." என்றவன் அவனை அழைத்து கொண்டு வெளியே செல்ல...**

அப்பத்தா "அவர்... எங்க வீட்டு மாப்பிள்ளை... அவர்கிட்ட உனக்கு என்ன பேச்சு..." என்று கேட்க...

கௌதம் "ப்ரியா... இவரை கல்யாணம் செஞ்சுக்க ஒத்துகிட்டாளா..." என்று கேட்டான். அப்பத்தா... தலை கவிழ்ந்தார். "இருங்க இவர்கிட்ட பேசிட்டு... உங்ககிட்ட வரேன்" என்றவன் விஷ்வாவுடன் வெளியே சென்றான்.

வெளியே வந்ததும் கௌதம் "விஷ்வா... உங்களுக்கு நானும், ப்ரியாவும் லவ் பண்றது தெரியாதுன்னு நினைக்கிறேன்... நாங்க ரெண்டு பேரும் ரொம்ப வருஷமா லவ் பண்றோம்... இது எங்க ரெண்டு வீட்டுக்கும் தெரியும்" என்றதும்,

விஷ்வா அதிர்ந்தான் என்னது... ரெண்டு பேரும் லவ் பண்றது... வீட்டுக்கு தெரியுமா...

கௌதம் "ப்ரியாவோட பாட்டிக்கு.... இதுல இஷ்ட்டம் இல்லை... அதோட அவங்களுக்கும் என் தங்கச்சிக்கும் சண்டை... அவங்க அந்த கோபத்தில உங்களை வர சொல்லிட்டாங்க.. அதனால ப்ளீஸ்... நீங்க எங்களோட நிலைமைய புரிஞ்சிக்கணும்" என்றதும்,

விஷ்வாவிற்கு இப்போது நன்றாக தெரிந்து விட்டது... தன்னுடைய நிச்சயம் இனி நடக்காது என்று... அதனால் பெருந்தன்மையாக

விட்டு குடுப்பவன் போல பரவாயில்லை கௌதம்... எனக்கு புரியுது என்று வெற்றி கரமாக பின்வாங்கியவன். வீட்டிற்க்குள் சென்று தனது பெற்றோரையும், உறவினர்களையும் அழைத்து கொண்டு கிளம்பி சென்றான்.

அவனது பெற்றோருக்கு ஏற்கனவே சந்தேகம் இருந்தது... பெண்ணின் பெற்றோர் வந்தவர்களை சரியாக வாங்க என்று கேட்கவும் இல்லை... பெண்ணின் அண்ணன் விஷ்வாவின் நண்பன் தான்... அவனும் வந்தவன் இவர்களிடம் பேசவில்லை...

விஷ்வா தான் அவசரப்பட்டு எதோ செய்து விட்டான் என்று புரிந்து கொண்டவர்கள்... அவன் அழைத்ததும்... என்ன.. எது...? என்று கேட்காமல் அவன் பின்னே கிளம்பி சென்றனர்... நல்லவேளை ரொம்ப நெருங்கிய உறவுகளை மட்டுமே அழைத்து வந்ததால் மானம் தப்பித்தது என்று நினைத்து கொண்டு சென்றனர்.

அப்போது முரளியும்... அவனுடன் கார்த்திக்கும்... மாடியில் இருந்து இறங்கி வந்தனர்.

கௌதம் அப்பத்தா எதிரில் அமர்ந்தவன் "இப்ப நீங்க சொல்லுங்க பாட்டி... எதுக்கு உங்களுக்கு நாங்க கல்யாணம் செஞ்சுகறதுல இஷ்ட்டம் இல்லை ? உங்களுக்கு ஏன் எங்களை பிடிக்க மாட்டேங்குது ? " என்று நேரடியாக அவரிடமே கேட்க...

அப்பத்தா "உன்னோட தங்கச்சிய முரளிக்கு செஞ்சோம். அவ

யாரையும் மதிக்கிறது இல்லை.... அப்படி தான நீயும் இருப்ப..." என்றார்.

முரளி "அப்பத்தா... நீங்க என்னோட பொண்டாட்டி பத்தி பேசறத என்னால ஒத்துக்க முடியாது... அவ செஞ்சது தப்பு தான்.... அதுக்கு அவ உங்க கால்ல விழுந்து மன்னிப்பு கேட்டாளா இல்லையா... ஷ்ருதி எங்க எல்லார்கிட்டயும் நல்லாத்தான் நடந்துகிட்டா... அவ எதாவது தப்பு செஞ்சாலும் நான் சொன்னா... அவ கேட்டா... அதனால நீங்க அவ தான் இதுக்கு காரணம்ன்னு சொல்றத என்னால ஒத்துக்க முடியாது" என்று சொல்ல...

"நீங்க இப்படிதான் முரளி கல்யாணத்தின் போதும்.... எங்க குடும்பத்தை பற்றி கேவலமா பேசினீங்க... அத நானே கேட்டேன்... அப்ப ப்ரியா என்னை தடுத்ததினால தான் பேசாம போயிட்டேன்... நீங்க திரும்பவும் எதாவது பேசி இருப்பீங்க.... ஷ்ருதி பதில் பேசி இருப்பா.... ஆனா உங்களுக்கு இப்பன்னு இல்லை... எப்பவுமே எங்க குடும்பத்தை பிடிக்காது.... அது தான் ஏன்னு தெரியலை..." என்று கௌதம் சொல்ல....

அப்பத்தா அமைதியாக இருக்க.... கிருஷ்ணகுமாரின் சித்தப்பா நான் சொல்றேன் என்றவர்.

"கௌதம் உன்னோட அப்பத்தாவுக்கும்.... இவங்களுக்கும் சின்ன வயசில இருந்து ஆகாது.... ரெண்டு பேரும் எப்பவும் முட்டிட்டு தான் இருப்பாங்க.... ஆனா உங்க அய்யாங்க ரெண்டு பேரும் ரொம்ப சினேகிதங்க.... அதனால இவங்க ரெண்டு பேர் உள்ள எப்பவும்

போட்டி தான்... உங்க அய்யாங்க மாதிரி அவங்க பிள்ளைங்களும் சிநேகிதம் ஆனது இவங்களுக்கு பிடிக்கலை.... அதனால தான் இவங்க இப்படி செய்றாங்க" என்று சொல்ல...

அது உண்மை என்பதால் அப்பத்தா பேசாமல் இருந்தார். அவருக்கு கௌதமின் அப்பத்தாவை சிறு வயதில் இருந்து பிடிக்காது.... அவர் வேண்டும் என்றே எதாவது ஏட்டிக்கு போட்டி செய்வார்... அவரை மாதிரியே ஷ்ருதி இருப்பதாள் தான் அவருக்கு ஷ்ருதியை கொஞ்சம் கூட பிடிக்கவில்லை... அதனால தான் அந்த குடும்பத்தில் தன் பேர பிள்ளைகள் திருமணம் செய்ய கூடாது என்று அவர் தலை கீழாக நின்று பார்த்தும் ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை.

அங்கிருந்த எல்லோரும் இப்படி ஒரு கதை இருக்க... நமக்கு இத்தனை நாள் தெரியாம போச்சே என்று நினைத்தனர். கிருஷ்ணகுமாரின் சித்தப்பா "அம்மா... நீங்க பழச எல்லாம் மறந்திடுங்க போனது போகட்டும்... சின்னதுங்க ஒருத்தர ஒருத்தர் விரும்புறாங்க... நாம எல்லாம் ஒன்னுக்குள்ள ஒன்னு நாமலே விட்டு குடுக்லைனா எப்படி அதனால அவங்களுக்கு... நாம கல்யாணம் செஞ்சு வச்சிடுவோம், இப்ப நிச்சயம் செஞ்சுக்குவோம்" என்று சொல்ல...

அப்பத்தா பதில் எதுவும் சொல்லவில்லை... ஆனால் மறுக்கவும் இல்லை அதையே சம்மதமாக எடுத்த ராமமூர்த்தி சரி என்று வேகமாக சொன்னார்.

சாருமதிக்கு இப்போது தான் மனசு நிம்மதி அடைந்தது. அவர்

அப்பத்தாவிடம் "நான் என் பொண்ணு செஞ்சது சரின்னு சொல்ல மாட்டேன்... அவ செஞ்சது தப்புதான்.. சின்ன பொண்ணு தெரியாம பேசிடுச்சு மன்னிச்சிடுங்கமா..." என்றார்.

அப்பத்தா பரவாயில்லை... இவ அவங்க மாமியார் மாதிரி இல்லை என்று நினைத்தவர்... வெளியே ஒன்றும் சொல்லாமல் எப்பவும் இருக்கும் கெத்தோடு அமர்ந்திருந்தார்.

ஜானகி எல்லோருக்கும் சந்தோஷமாக குடிக்க ஜூஸ் கொண்டு வந்து கொடுத்தார்.

கௌதம் கார்த்திக்கிடம் "டேய்... எங்கடா ப்ரியா ? வந்ததுல இருந்து பார்க்கவே இல்லை...",

கார்த்திக் "வருவா... டிரஸ் பண்ணிட்டு இருக்கா...",

"நான் போய் பார்த்திட்டு வரவா..." என்று கௌதம் ஆவலாக கேட்க...

அப்போது முரளி "கௌதம்... நீ கீழ இருக்கிற ப்ரியா ரூம்ல... டிரஸ் மாத்திக்கோ டைம் ஆகிடுச்சு..." என்றான்.

கௌதம் சரி என்று உள்ளே சென்றான். ப்ரியாவின் அறைக்குள் சென்றவனுக்கு... அங்கிருந்த ஒவோவொன்றும் அவளை நினைவு படுத்த... சிறிது நேரம் நின்று அவற்றை ரசித்தவன்... வேகமாக சென்று குளித்து உடை மாற்றி வந்தான்.

பண்ணிரெண்டு மணிக்குள் நிச்சயம் செய்வது நல்லது என்று ஹாலில் எல்லோரும் ரெடியாக அமர்ந்திருக்க... கௌதம் வந்து அமர்ந்ததும் லேட்டாக வந்த முரளி வேகமாக சென்று கௌதம் பக்கத்தில் அமர்ந்தான்.

கிருஷ்ணகுமார், சாருமதி தம்பதியினர் ப்ரியாவை தங்கள் மகன் கௌதமுக்கு நிச்சயம் செய்யவதாக சொல்லி... வெத்தலை பாக்கு தட்டை ராமமூர்த்தி, ஜானகி தம்பதியினரிடம் கொடுக்க... அவர்கள் அதற்க்கு சம்மதம் சொல்லி தட்டை வாங்கி கொண்டனர்.

பெண்ணை அழைத்து கொண்டு வாங்க என்று சொன்னதும்... ஷ்ருதி ஒருபுறமும்...மிது ஒருபுறமும் என்று ப்ரியா அவர்கள் இருவருக்கும் நடுவில் மாம்பழ கலரில்... மரூன் பார்டர் வைத்த பட்டு புடவையை ஒரு ப்ளீட் மட்டும் வைத்து கட்டி இருந்தவள்... அதற்க்கு பொருத்தமான நகை அணிந்து... தலையில் நிறைய பூ வைத்து... ஆள் பார்க்க சோர்வாக தெரிந்தாலும்... முகத்தில் புன்னகையோடு கௌதமையே பார்த்து கொண்டு வந்தாள்.

கௌதமும் அவளையே பார்க்க... கீழே வந்த ப்ரியாவை கௌதம் அருகில் அமரவைத்தனர்.

கௌதம் மெதுவாக ப்ரியாவிடம் "பயந்திட்டியா..." என்று கேட்க... ப்ரியா ஆமாம் என்று தலை ஆட்ட..."நான் வந்துட்டேன் இல்லை... இனிமே ஒன்னும் இல்லை..." என்றவன், அவள் கையை பிடித்து அழுத்தினான்.

சாருமதி இருவருக்கும் மாலையை எடுத்து முரளியின் கையில் கொடுத்து கௌதமுக்கு போட சொன்னவர்... ஷ்ருதியிடம் கொடுத்து ப்ரியாவுக்கு போட சொன்னார்.

கௌதமும், ப்ரியாவும் மோதிரம் மாற்றி கொண்டனர். சரி ரெண்டு பேரும் பெரியவங்க கிட்ட ஆசிர்வாதம் வாங்குங்க என்று கிருஷ்ணகுமார் சொல்ல....

கௌதம் "ஒரு நிமிஷம் இருங்க... நான் ப்ரியாவுக்கு ஒரு நகை வாங்கிட்டு வந்திருக்கேன்" என்றவன் தொடர்ந்து "அத்தை உங்ககிட்ட கொடுத்த தட்ல... ஒரு நகை பாக்ஸ் இருக்கும்... அதை குடுங்க" என்றவன், அதை சாருமதியை அவரிடம் இருந்து வாங்கி குடுக்க சொன்னான். சாருமதியும் வாங்கி கொடுக்க....

கௌதம் கண் இமைக்கும் நேரத்தில்... அதில் இருந்த செயின்னை எடுத்து ப்ரியா கழுத்தில் போட்டு விட்டான்.

அவன் போட்ட செயின்னை பார்த்ததும் எல்லோரும் அதிர்ந்து... நாம்

***பார்த்தது சரியா... என்ற சந்தேகத்தில் எல்லோரும் ப்ரியாவையே பார்க்க...***

***ப்ரியா ஏன் எல்லோரும் இப்படி பார்கிறாங்க என்று நினைத்தவள் கௌதம் தன் கழுத்தில் போட்ட செயின்னை குனிந்து பார்க்க... அதிர்ந்தாள். ஏனென்றால் அது திருமாங்கல்யம்.***

***ப்ரியா நம்பமுடியாமல் கௌதமை பார்க்க அவன் அவளிடம் "நீ ரெண்டு நாளா பட்ட கஷ்ட்டமே போதும்... இனிமேலும் கஷ்ட்டபட வேண்டாம்ன்னு தான்" என்று சொல்ல...***

***ப்ரியா கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது, ப்ரியா கௌதம்அருகில் இருந்த முரளியை பார்க்க... அவன் அவளை குற்றம் சொல்லும் பார்வை பார்த்தான்... அதை தாங்க முடியாமல் ப்ரியா தலை குனிந்தாள்.***

***கார்த்திக் நிச்சயத்தை போட்டோ எடுத்து கொண்டிருந்தவன் ப்ரியா கழுத்தில் கௌதம் போட்ட தாலியை பார்த்து "டேய்... நீ இதுக்கு தான் நேத்துல இருந்து அமைதியா இருந்தியா... நான் அப்பவே நினைச்சேன்டா... நீ இது மாதிரி எதாவது செய்வேன்னு" என்று சொல்ல...***

***எல்லோரும் அதிர்ச்சியில் இருந்து மீண்டு சிரித்தனர். இருவரின் பெற்றோருக்கும் நேற்றில் இருந்து வீசிய புயலுக்கு என்ன ஆகுமோ என்று பயந்தவர்கள்.... இப்படியாவது கல்யாணம் நடந்ததே என்று***

சந்தோஷப்பட்டனர்.

அப்பத்தா நான் இவன சாதரணமா நினைச்சிட்டேன். அவன் தங்கச்சி மாதிரி கோபமா கத்துவான் அத வச்சே கல்யாணத்தை நிருத்தலாம்ன்னு நினைச்சா... இவன் என்னடானா வந்தான்... வந்ததும் பொண்ணு பார்க்க வந்தவன கூடிட்டு போய் தனியா எதோ பேசினான்... உடனே அவனும் ஆள விட்டா போதும்ன்னு ஓடிட்டான்... என்கிட்டயும் பொறுமையா தான் பேசினான். பெரிய கில்லாடி தான்...நான் நிச்சயம் பண்ண நினைச்சா... இவன் கல்யாணமே பண்ணிட்டனே என்று நினைத்தவர் "என்ன..? எல்லோரும் அப்படியே உட்கார்ந்து இருக்கீங்க பொண்ணு மாப்பிள்ளைய மாலை மாத்த சொல்லுங்க" என்றார்.

எல்லோரும் அப்பத்தாவா இது என்று நினைத்தவர்கள்... அவரை ஆச்சர்யமாக பார்த்தனர்.

கௌதம் அவனது மாலையை கழட்ட... முரளி ப்ரியாவுக்கு மாலையை கழட்ட உதவி செய்தான். முதலில் கௌதம் மாலையை போட... அடுத்து ப்ரியா போட்டாள். இருவரும் மாலை மாத்தியதும் கௌதம் ப்ரியாவை அழைத்து கொண்டு அப்பத்தாவிடம் சென்றவன் "எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க பாட்டி... உங்களால தான் எங்களுக்கு இவ்வளவு சீக்கிரம் கல்யாணம் ஆச்சு... " என்றவன் ப்ரியாவுடன் அவர் காலில் விழ...

அப்பத்தா "ஆத்திரகாரனுக்கு... புத்தி மட்டுன்னு சொல்வாங்க... ஆனா நீ... ஆத்திரகாரனா இருந்தாலும் நிதானமாவும் யோசிக்கிற...

நல்லா இருங்க" என்று வாழ்த்த...

அவர் வாழ்த்தியதில் எல்லோரும் மகிழ்ந்தனர்.

அடுத்து கௌதம் அவனின் சின்ன தாத்தாவின் காலில் விழ "அவர் நல்லா இருங்க, ஊர்ல இருந்து உனக்கு வக்காலத்து வாங்க கிளம்பி வந்தா... நீ எனக்கே ஆப்பு வைக்கிறியா..." என்று கேட்டு சிரிக்க...

கௌதம் "ஊருக்கு போயிட்டு திரும்ப கல்யாணத்துக்கு வரணும்னா உங்களுக்கு கஷ்ட்டமா இருக்கும்ல.. அதனால உங்களை அலைய விட வேண்டாம்ன்னு தான் இன்னைக்கே கல்யாணம் பண்ணிகிட்டேன்" என்றான்.

அவர் "நீ பொழைச்சுக்குவடா பேராண்டி.." என்றார்.

கௌதமையும், ப்ரியாவையும் கீழே இருந்த அறையில் அமர வைத்து, ஷ்ருதி அவர்களுக்கு பாலும் பழமும் கொடுத்தாள். கௌதம் ஷ்ருதியிடம் "தேங்க்ஸ் ஷ்ருதி... இதுக்கு இல்லை... பாட்டி கூட சண்டை போட்டதுக்கு" என்று சொல்ல... ஷ்ருதி அவனை முறைத்துவிட்டு சென்றாள்.

ப்ரியாவும், கௌதமும் மட்டும் தான் அறையில் இருந்தனர்... கௌதம் ப்ரியாவை தோளோடு அணைத்து கொண்டான்.

**ப்ரியாவின் நெற்றியில் லேசாக முட்டியவன் "ஹாய் பொண்டாட்டி... நமக்கு இன்னைக்கு ப்ர்ஸ்ட் நைட்டா..." என்ற ஆசையாக கேட்க...**

**"ஆமாண்டா... நீ திடிர்ன்னு தாலி கட்டுவ... அதுக்காக உனக்கு ப்ர்ஸ்ட் நைட்டும் இன்னைக்கே வைப்பாங்களா..." என்று கேட்டபடி கார்த்திக் வர...**

**ப்ரியாவிடம் இருந்து விலகி அமர்ந்த கௌதம் "டேய்... எனக்கு மட்டும் இன்னைக்கு இல்லைனா... உனக்கும் கல்யாணம் அன்னைக்கு நடக்காதுடா..." என்று சொல்ல...**

**"இதப்பாருடா... இவரு சாபம் விடறாரு..." என்ற கார்த்திக் "வா ஹோட்டல் போய் மத்தியானத்துக்கு சாப்பாடு வாங்கிட்டு வரலாம்..." என்று கௌதமை அழைக்க....**

**"என்னடா... இது ? புது மாப்பிள்ளைய போய் சாப்பாடு வாங்கிட்டு வர சொல்றீங்க..."**

**"அது... யார்கிட்டயும் சொல்லாம நீயா தாலி கட்டினா... அப்படி தான்" என்ற கார்த்திக் கௌதமை இழுத்து கொண்டு சென்றான்.**

முரளி வந்து ப்ரியாவை அழைத்து கொண்டு மாடிக்கு சென்றான். ப்ரியா அண்ணா "கௌதம்கிட்ட சொல்லாதீங்க..." என்று சொல்ல...

"மறைக்கிற மாதிரி காரியத்தையா... நீ பண்ணி வச்சிருக்க" என்று முரளி சொன்னதும், ப்ரியா அமைதியாக அவள் அண்ணனுடன் சென்றாள்.

35

மதிய உணவு வாங்கி கொண்டு கௌதமும், கார்த்திக்கும் ப்ரியா வீட்டுக்கு வர... பெரியவர்கள் எல்லோரும் ஹாலில் அமர்ந்து பேசி கொண்டிருந்தனர்.

கௌதம் "ப்ரியா எங்கே...?" என்று கேட்க... ஜானகி "அவ ரெண்டு நாளா தூங்கலை... அதனால தூங்குறா" என்று சொன்னார்.



Ramya Rajan

கௌதம்.... ஆமா காலையில் பார்க்கும் போதே.... டையர்ட்டா இருந்தா தூங்கட்டும் என்று நினைத்தவன்... அங்கேய ஹாலில் அமர்ந்து மற்றவர்களுடன் பேசி கொண்டிருந்தான்.

சாருமதியும், ஜானகியும் எல்லோரையும் சாப்பிட அழைக்க... கௌதம் தான் அப்புறம் ப்ரியாவோடு சாப்பிடுவதாக சொன்னான்.

கார்த்திக் "நேத்து நைட்ல இருந்து சாப்பிடல... ஓத வாங்குவா வா.." என்று இழுத்து சென்றான்.

கௌதம் "இல்லை கல்யாணமாகி முதல் தடவை ப்ரியாவோட சாப்பிடலாம்ன்னு நினைச்சேன்" என்றதும்,

"இன்னைக்கு நைட் சேர்ந்து சாப்பிடுங்க... இப்ப சாப்பிட வா" என்று கார்த்திக் கௌதமை அழைத்து சென்றான்.

சாப்பிடும் போது கிருஷ்ணகுமார் கௌதமிடம் "டேய் கௌதம்.... உங்க கல்யாணத்தை கிராண்டா பண்ணலாம்ன்னு நினைச்சா... நீ இப்படி அவசரமா தாலி கட்டிடியே" என்று கேட்க...

"நீங்க எனக்கு அடுத்து ஒன்ன பெத்து வச்சிருக்கீங்களே... அது எப்ப அடுத்து பாட்டிய வம்பு இழுக்குமோ தெரியாது... அப்புறம் பாட்டிக்கு கோபம் வந்து திரும்பி வேற எவனாவது வந்தா... அதுக்கு

**தான் இப்படி கல்யாணம் செய்ய வேண்டியதா ஆகிடுச்சு" என்று கௌதம் சொல்ல...**

**ஷ்ருதி கை இரண்டையும் இடுப்பில் வைத்து கொண்டு கௌதமை முறைக்க... எல்லோரும் சிரிக்க... அப்பத்தாவும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தார்.**

**ராமமூர்த்தி "இவங்களுக்கு கிராண்டா வரவேற்ப்பு வச்சிடுவோம்..." என்றதும் எல்லோரும் சந்தோஷமாக ஒத்துக்கொண்டனர். முரளி வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்பு வைத்துவிடுவது என்று முடிவு செய்தனர்.**

**சாப்பிட்டதும் கௌதமும், கார்த்திக்கும் கீழே இருந்த ப்ரியா அறையில் சென்று தூங்கினார்கள்.**

**தங்கள் அறையில் முரளியிடம் ஷ்ருதி மன்னிப்பு கேட்க...**

**முரளி "உன்னை நான் மத்தவங்ககிட்ட விட்டு தரலை... ஆனா உன்னால பாதிக்கபட்டது நான் மட்டும் இல்லை... அதனால எனக்கு உன்கிட்ட எப்பவும் போல நடந்து கொள்ள... இப்ப முடியுமான்னு தெரியலை" என்று சொல்ல...**

**ஷ்ருதி "நான் செஞ்சது தப்பு... அதனால நான் காத்திருக்கேன்" என்று சொல்லி வெளியே சென்று விட்டாள்.**

ஜானகி, ப்ரியா தூங்கி எழுந்ததும் அவளுக்கு சாப்பாட்டை ஊட்டிவிட்டவர்... அவளை முகம் கழுவ சொல்லி... தலை வாரி பூ வைத்து கீழே அழைத்து வந்தார்.

மாலையில் வினோத் திருமன பதிவாளரை அங்கேயே அழைத்து கொண்டு வந்திருந்தான். கௌதம் அன்றே தங்கள் திருமணத்தை பதிவு செய்ய விரும்பினான்.... அதனால் வினோத்திடம் சொல்லி அதற்க்கு ஏற்பாடு செய்திருந்தான்.

இருவருக்கும் அவரவர் பெற்றோரே சாட்சி கையெழுத்திட... கௌதம், ப்ரியா திருமணம் அன்றே பதிவு செய்யப்பட்டது.

மாலையில் ப்ரியா தனது புகுந்த வீட்டுக்கு தனது கணவன் கௌதமுடன் கிளம்பினாள். ஜானகி அவள் கையில் குத்துவிளக்கை கொடுத்துவிட்டார்.

அவர்களுக்கு இன்று முதலிரவு வைப்பதா வேண்டாமா என்று சாருமதி அப்பத்தாவிடம் கேட்க...

"அதெல்லாம்... இந்த காலத்து பிள்ளைங்க விவரமானவங்க, அவங்க வாழ்க்கை அவங்களே முடிவு பண்ணட்டும்..." என்று அப்பத்தா சொல்ல...

***கௌதம் அப்பத்தா என்கிட்டே இருந்து தப்பிச்சிடீங்க என்று மனதில் நினைக்க... அப்பத்தா உன்னை பத்தி எனக்கு தெரியாதா என்ற பார்வையை கௌதமை நோக்கி வீச... இருவரும் சிரித்தனர்.***

***வீட்டிற்க்கு வந்த மணமக்களுக்கு ஷ்ருதி ஆரத்தி எடுத்தாள். ப்ரியா பூஜை அறையில் விளக்கேற்றி விட்டு கடவுளிடம்... நான் மனசுல நினைச்சவருக்கே என்னை கல்யாணம் செஞ்சு வச்சுடீங்க... ரொம்ப நன்றி கடவுளே... நாங்க நல்லபடியா வாழனும்... எல்லோரும் நல்லா இருக்கணும் என்று வேண்டி கொண்டாள்.***

***ஊரில் இருந்து வந்தவர்கள் கிளம்பிவிட்டனர். சாருமதியும், ஷ்ருதியும் சேர்ந்து இரவுக்கு சமையல் செய்ய... முரளியும், கார்த்திக்கும் ஹாலில் அமர்ந்து பேசி கொண்டிருந்தனர்.***

***கௌதமும், ப்ரியாவும் வெளியே தோட்டத்தில் அமர்ந்திருந்தனர். அப்போது இரவு நேரம் என்பதால் அந்த இடம் இருட்டாக இருந்தது. கௌதம் மிகவும் சந்தோஷமாக இருந்தான். அவனுக்கு இன்று நடந்தது அனைத்தும் கனவு மாதிரி இருந்தது... தன் அருகில் இருக்கும் ப்ரியா இப்போது அவனது மனைவி என்று நினைக்கும் போதே... வானத்தில் பறக்கும் சந்தோஷத்தை கொடுக்க... ப்ரியாவிற்கு நொடிக்கொரு முத்தம் கொடுத்து... அவளை சிவக்க வைத்து கொண்டிருந்தான்.***

***"விடுங்க... யாரவது வரப்போறாங்க"***

கௌதம் "அதெல்லாம் யாரும் வர மாட்டாங்க" என்றவன் ப்ரியாவோடு இன்னும் நெருக்கமாக அமர்ந்தான். எப்போதும் ஒரு எல்லையோடு பழகுபவன்... இப்போது ப்ரியா தன் மனைவி என்பதால் உரிமையுடன் அவளிடம் நடந்து கொள்ள... ப்ரியா தான் தவித்து போனாள்.

கௌதம் "நேத்து... நீ ரொம்ப பயந்திட்டியா... நான் இன்னைக்கு வரலைனா என்ன பண்ணி இருப்ப..." என்று கேட்க...

ப்ரியா முகம் மாறியவள் எழுந்து உள்ளே செல்ல... கௌதம் அவளது இடது கையை பிடித்து இழுக்க... ப்ரியா வலியில் துடித்து விட்டாள்.

"என்ன ஆச்சு ப்ரியா..." என்று கௌதம் பதற...

ப்ரியா "ஒன்னும் இல்லை வாங்க... உள்ளே போவோம்" என்று உள்ளே சென்றாள்.

அங்கே ஹாலில் அனைவரும் அமர்ந்திருக்க... உள்ளே வந்ததும் கௌதம் ப்ரியாவின் கையில் இருந்த சேலையை விலக்கி பார்க்க... அங்கே கட்டு போட பட்டு இருந்தது

கௌதம் "இது எப்படி ஆச்சு ப்ரியா...",



Ramya Rajan

***ப்ரியா "அது சின்ன காயம் தான்..." என்றவள் சாருமதியிடம் "அத்தை.. பசிக்குது சாப்பிடலாமா..." என்றாள்.***

***கௌதம் விடாமல் "இது என்ன காயம் ? எப்படி ஆச்சு ? பதில் சொல்லு" என்று ப்ரியாவை கேள்விகளாக துளைக்க...."***

***ப்ரியா "கௌதம் ப்ளீஸ்... எனக்கு ரொம்ப பசிக்குது" என்றாள். அவளின் சோர்ந்த முகத்தை பார்த்த கௌதம் அவளை அழைத்து கொண்டு சாப்பிட சென்றான். மற்றவர்களும் அவர்களுடன் சாப்பிட சென்றனர். ப்ரியா என்ன தான் மெதுவாக சாப்பிட்ட போதிலும் ஒரு மணி நேரத்தை தான் கடத்த முடிந்தது...***

***சாப்பிட்டதும் மறுபடி கௌதம் "கைல காயம் எப்படி பட்டது ப்ரியா ?" என்று கேட்க...***

***ப்ரியா "எனக்கு தூக்கம் வருது..." என்று சொல்லி... கலங்கிய கண்களால் முரளியை பார்க்க...***

***கௌதம் "நான் என்ன கேட்கிறேன் ? நீ என்ன சொல்ற ?" என்றதும்,***

***முரளி "நான் சொல்றேன் கௌதம்... இரு ஒரு நிமிஷம் வரேன்..." என்றவன் ப்ரியாவை மாடிக்கு அழைத்து சென்று... மாத்திரை***

**கொடுத்து அவளை படுக்கையில் படுக்க வைத்து "நீ தூங்கு ப்ரியா... நான் பார்த்துகிறேன்" என்று சொன்னவன்... ஷ்ருதியை அவளோட தூங்க சொல்லிவிட்டு சென்றான்.**

**கீழே வந்த முரளி இன்று காலையில் என்ன நடந்தது என்று அனைவருக்கும் சொல்ல ஆரம்பித்தான்.**

**முரளி... நேற்று பரிட்ச்சை முடிந்து... அதன் பிறகு நடந்த டிஸ்கஷன் முடிந்து... இரவு ஹோட்டலுக்கு வர வெகு நேரம் ஆகி இருந்தது. வந்ததும் அலுப்பில் அப்படியே படுத்து உறங்கி விட்டான். காலையில் 6.30 மணிக்கு விமானம்... ஹோட்டலில் 5 மணிக்கு எழுப்பி விட சொல்லிவிட்டு படுத்ததால்... அவர்கள் எழுப்பி விட்டார்கள்... வேகமாக கிளம்பி ஏர்போர்ட் வந்ததும் தான் மொபைலை பார்த்தால் அது சார்ஜ் இல்லாமல் ஆப் ஆகி இருந்தது... அப்போது சார்ஜ் போட நேரம் இல்லை சரி வீட்டுக்கு தானே போகிறோம் என்று நினைத்து விமானத்தில் சென்று ஏறினான்.**

**முரளி டாக்ஸ்யில் இருந்து இறங்கும் போது.... தங்கள் வீட்டு முன்பு கார்கள் நிற்ப்பதை பார்த்து... யார் வந்திருக்கா ?...என்று யோசித்து கொண்டே உள்ளே சென்றான்.**

**உள்ளே வந்தவன் அங்கே ஹாலில் அமர்ந்து இருந்த விஷ்வாவை பார்த்ததும்.... இவன் எதுக்கு இங்க வந்திருக்கான் என்று நினைத்தவன் பிறகு தான் மற்றவர்களை கவனித்தான்.**

Ramya Rajan

அப்பத்தா "வந்துட்டியா முரளி.... உன்னோட தங்கச்சி நிச்சயத்துக்கு கரெக்டா வந்துட்ட..." என்றவர் மாப்பிள்ளை பக்கத்தில் உட்காரு என்று விஷ்வாவை காட்டி சொல்ல....

முரளி அதிர்ச்சி அடைந்தவன். தனது அப்பாவை பார்க்க.... அவர் வேறு எங்கோ பார்த்தார்....

முரளி "அம்மா... எங்கே ?" என்று கேட்க....

"ப்ரியாவை... அழைச்சிட்டு வரேன்னு மாடிக்கு போனா..." என்று அப்பத்தா சொல்ல...

முரளி மாடிக்கு சென்றான். விஷ்வாவின் உறவினர்கள் என்ன இது வீட்டுக்கு வந்தவங்களை... யாருமே சரியா வான்னு கூட கேட்க மாட்றாங்க... அம்மா, அப்பாதான் சரியா பேசலை... பொண்ணோட கூட பிறந்த அண்ணன் விஷ்வாவோட தானே படிச்சான், அப்ப... அவனுக்கு விஷ்வாவை நல்லா தெரியும் தானே... ஏன் அவனும் பேசாம போறான் என்று குழப்பத்தில் இருந்தவர்கள்... திரும்பி விஷ்வாவை பார்க்க... அவன் தலை குனிந்தான்.

முரளி மாடிக்கு சென்ற போது... ஜானகி அவன் அறைக்கு பக்கத்து அறையின் வாயிலில் நின்று அழுது கொண்டிருந்தார். முரளி பதறி அவரிடம் சென்று என்னவென்று கேட்க... ப்ரியா கதவை திறக்க மாட்றா என்று அழுது கொண்டே சொன்னார்.

Ramya Rajan

முரளிக்கு ஏன் ப்ரியா... ? இப்படி செய்கிறாள் என்று புரிந்ததால் "ப்ரியா அண்ணன் வந்துட்டேன்டா.... நான் இந்த நிச்சயம் நடக்கவிட மாட்டேன் ப்ளீஸ்டா... கதவை திறமா..." என்று சொல்ல...

கதவு திறந்தது.... கதவிற்கு பின்னால் ப்ரியா முகம் வெளுக்க நின்றிருந்தாள்.

அவள் முகத்தை பார்த்தே முரளிக்கு இவ எதோ வேலை பண்ணி இருக்கா... என்று புரிய...

அவளை ஆராய்ந்தவன்.... அவள் உடை ஒரு பக்கம் முழுக்க ரத்தத்தில் நனைந்திருந்ததை பார்த்து "என்ன பண்ண ? காயம் எங்க ? என்று கேட்டவன் அப்போது தான் அவள் கையை பார்த்தான்... அவள் கையை அறுத்து வைத்திருந்தாள்.

அதை பார்த்ததும் ஜானகி பதற.... முரளி துடித்து விட்டான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் கொட்ட "ஏன் ப்ரியா..." என்றவன் அவளை அனைத்து கொண்டான்.

நல்ல வேலை மணிக்கட்டில் அறுக்கவில்லை என்று நினைத்தவன் காயத்தை பார்க்க.... ப்ரியா ஆழமாக தான் வெட்டி இருந்தாள்.

***முரளி தனது அறைக்கு சென்று மெடிக்கல் பாக்ஸ் கொண்டு வந்தவன் காயத்தில் தையல் போட ஆரம்பித்தான்.***

***ஜானகி நேற்று காலையில் இருந்து வீட்டில் நடந்த அனைத்தையும் சொல்ல....***

***கேட்ட முரளிக்கு தன் பொண்டாட்டியை நினைத்து வருத்தபடுவாதா இல்லை... தான் செய்த தப்பிற்காக காலில் விழுந்ததை நினைத்து சந்தோஷபடுவதா என்று ஒன்றும் புரியவில்லை,***

***முரளி "நீ ஏன் ப்ரியா இப்படி செஞ்ச ? நாங்க உன்னை அப்படி வேறு யாருக்கும் கல்யாணம் பண்ணி வச்சிடுவோமா...?"***

***"என்னால... விளையாட்டுக்கு கூட வேற யார் பக்கத்திலையும் நிக்க முடியாது. அப்படி இருக்கும் போது.... நான் எப்படி இன்னொருத்தனோட நிச்சயம் பண்ணிட்டு கௌதம பார்ப்பேன்.... என்னால அவங்களை பார்க்கவே முடியாது.... எனக்கு எப்படி இந்த நிச்சயத்தை நிறுத்திறதுன்னு தெரியலை... அதனால தான் இப்படி பண்ணேன்" என்று ப்ரியா அழுது கொண்டே சொல்ல....***

***அப்போது கதவை திறந்து கொண்டு ஷ்ருதி உள்ளே வந்தாள். அவளுக்கு முரளியை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை... ப்ரியாவிடம் வந்தவள் முரளி அவளுக்கு கையில் தையல் போடுவதை பார்த்து பதறி என்னவென்று ஜானகியிடம் கேட்க....***

ஜானகி "புடவை மாத்தறேன்னு மாடிக்கு வந்தா... ரொம்ப நேரமா வரலை... வந்து என்னன்னு பார்த்தா... இந்த மாதிரி செஞ்சு வச்சிருக்கா கதவை ரொம்ப நேரம் தட்டின பிறகு தான் திறந்தா... ரொம்ப ரத்தம் போய்டுச்சு" என்று சொல்லி அழுதார்...

அவர் சொன்னதை கேட்ட ஷ்ருதி கதறி அழ ஆரம்பித்தாள். "எல்லாம் என்னால தான்... நான் மட்டும் நேத்து சும்மா இருந்திருந்தா.... இந்த பிரச்சனையே வந்திருக்காது. ப்ரியா... இது எனக்கு எவ்வளவு பெரிய தண்டனை தெரியுமா... நீ ஏன் இப்படி செஞ்ச... கௌதம் உனக்காக ஜெர்மன்ல இருந்து வந்துட்டான். இப்ப உனக்கு மட்டும் எதாவது ஆகி இருந்தா... அவன் தாங்கி இருப்பானா சொல்லு" என்று கேட்க....

கௌதம் வந்துவிட்டான் என்று கேட்டதுமே... ப்ரியா எழுந்து நிற்க பார்க்க... முரளி அவளை விடாமல் பிடித்து கொண்டவன்... பேசாம இரு என்று தையலை போட்டு முடித்து கட்டு கட்ட ஆரம்பித்தான்.

அப்போது அங்கே மிதுவோடு வந்த கார்த்திக்கை பார்த்ததும் ப்ரியா "அண்ணா... கௌதம் நிஜமாவே வந்துட்டாங்களா..." என்று ஆர்வமாக கேட்க...

"ஏன் உனக்கு கண்ணு தெரியாதா...? அவன் கூட போன நான் வந்திருக்கும் போது.... அவன் வந்திருக்க மாட்டானா... வந்துட்டான்" என்றதும் ப்ரியா சந்தோஷமாக சிரிக்க.....

***கார்த்திக் "இந்தா புடவை... உனக்கும் கௌதமுக்கும் இன்னைக்கு நிச்சயம்" என்று சொன்னவன்... அப்போது தான் ப்ரியாவின் கை காயத்தை கவனித்தான் "என்ன ஆச்சு... ப்ரியா ?.."***

***"மேடம் அவங்களே... கைய அருத்துகிட்டாங்க" என்று முரளி சொல்ல...***

***கார்த்திக் அதிர்ச்சி அடைந்தவன் "நீயா ப்ரியா... இப்படி பண்ண... உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா... எவனோ பொண்ணு பார்க்க வந்தா... நீ அதுக்காக இப்படியா பண்ணுவ.... கௌதமுக்கு தெரிஞ்சிது மவளே நீ செத்த..."***

***ப்ரியா "அவங்க பொண்ணு மட்டும் பார்க்க வரலை... நிச்சயமும் செய்ய வந்திருக்காங்க..."***

***கார்த்திக் "இப்ப நிச்சயம் நடந்தா தான் என்ன ? அவன உன் கழுத்தில தாலி கட்ட விட்டுடுவோமா... என்ன இருந்தாலும் நீ பண்ணது தப்பு ?..."***

***ப்ரியா "நீங்க... ஏன் போனீங்க கார்த்திக் அண்ணா ? நீங்களும் இல்லாம முரளி அண்ணாவும் இல்லாம... நான் எப்படி தவிச்சேன் தெரியுமா... ஓடிப்போலாமான்னு கூட நினைச்சேன்... ஆனா இங்க இருந்து தப்பி வேற யார்கிட்டையாவது மாட்டிப்பேன்னு பயந்து***

***தான் போகலை" என்று ப்ரியா அழுது கொண்டே சொல்ல... அது அங்கிருந்த அனைவரின் கண்களில் இருந்தும் கண்ணீரை வர வைத்தது.***

***"நான் ஒன்னும் சாக நினைக்கலை... நிச்சயத்தை தடுக்க தான் இப்படி பண்ணேன்ன தவிர... சாக இல்லை. அதனால தான் நரம்ப வெட்டலை..."***

***முரளி அவளை பார்த்து முறைத்து கொண்டு "அப்ப... எதுக்கு ? இவ்வளவு ஆழமா வெட்டின..." என்று கேட்க...***

***ப்ரியா "நான் லேசா தான் வெட்ட நினைச்சேன், ஆனா... அது புது கத்ரிகோலா... அது தான் இப்படி ஆகிடுச்சு" என்று சொல்ல...***

***முரளி "நீ என்ன சொன்னாலும்... நீ செஞ்சது ரொம்ப தப்பு என்றவன் மருந்து சீட்டில் ட்ரிப்ஸ் போட தேவையானவற்றை எழுதி கொடுத்து இதை யாருக்கும் தெரியாம... வாங்கிட்டு வா..." என்று சொல்லி கார்த்திக்கை அனுப்பினான்.***

***கார்த்திக் பின் வாசல் வழியாக வேகமாக சென்று வாங்கி வந்து கொடுக்க... முரளி ப்ரியாவை உடை மாற்றி கட்டிலில் படுக்க வைத்தவன்.... கார்த்திக் வாங்கி வந்திருந்த மருந்தை ப்ரியாவிற்கு ஏற்ற ஆரம்பித்தான்.***

ப்ரியா "அண்ணா.... நிச்சயம் முடிஞ்சதும் ட்ரிப்ஸ் போடலாமே" என்று சொல்ல....

முரளி கோபமாக ப்ரியாவை முறைத்தவன் "எதாவது பேசின ஹாஸ்பிடல் கூடிட்டு போய்டுவேன்... பேசாம படு" என்று சொல்லிவிட்டு... அங்கிருந்தவர்களிடம் கௌதமுக்கு இப்ப எதுவும் தெரிய வேண்டாம் என்று சொன்னான்.

முரளி ஷ்ருதியிடம் "நீ ப்ரியா... பக்கத்திலேயே இரு... ஏதாவதுன்னா என்னை கூப்பிடு" என்று சொல்லி விட்டு கார்த்திக்குடன் கீழே சென்றான்.

முரளி சொன்னதை கேட்டு கொண்டிருந்த கௌதமின் முகம் பாறையாக இறுகி இருந்தது. அவன் முகத்தில் இருந்து... அவன் என்ன நினைக்கிறான் என்று யாராலும்... எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை. சாருமதி அழுது கொண்டிருந்தார்.

முரளி "எனக்கு தெரியும்... ப்ரியா.... செஞ்சது ரொம்ப தப்பு. ஆனா... அவ இன்னைக்கு ரொம்ப களைப்பா இருக்கா... நீ அவகிட்ட நாளைக்கு பேசு" என்றான்.

கௌதம் யாரிடமும் எதுவும் பேசாமல் மாடிக்கு சென்றவன்... ப்ரியா படுத்திருந்த அறைக்கு செல்ல... அவள் உறங்கி கொண்டிருந்தாள். அவள் கையை தூக்கி பார்க்க... ப்ரியா வலியில் சினுங்கினாள். கௌதம் அவளின் கையை மெதுவாக கீழே வைத்து விட்டு... அவன்

**இப்போது தங்கி இருக்கும் அறையில் சென்று படுத்துவிட்டான்.**

**முரளி... கார்த்திக்கை அவனுடன் படுக்க சொல்லிவிட்டு அவனது அறைக்கு சென்றான். நடு இரவில் கார்த்திக் வந்து முரளியை எழுப்பியவன்... கௌதமுக்கு காய்ச்சல் அடிக்கிறது என்று சொல்ல... முரளி அவனுடன் வேகமாக கௌதம் அறைக்கு சென்றான்.**

**கௌதமிற்கு உடம்பு நெருப்பாக சுட்டது... தூக்கத்தில் இருந்தவன் ஏமாத்திட்டா... ஏமாத்திட்டா... என்று மட்டுமே திரும்ப... திரும்ப புலம்பி கொண்டிருந்தான்.**

**முரளி அவனுக்கு ஊசி போட்டுவிட்டு... அங்கேயே ஒரு சேரில் அமர்ந்தான். கொஞ்ச நேரத்தில் கௌதமின் காய்ச்சல் குறைய... அவன் புலம்பாமல் தூங்க தொடங்கியதும். முரளியும், கார்த்திக்கும் வெளி ஹாலில் இருந்த சோபாவில் சென்று உட்கார்ந்திருந்தனர்.**

**விடியற் காலையில் கண் முழித்த ப்ரியா... தன் அருகில் தூங்கி கொண்டிருந்த ஷ்ருதியை தாண்டி... மெதுவாக கீழே இறங்கியவள்... பக்கத்தில் இருக்கும் அறைக்கு சென்று பார்க்க... அங்கே கௌதம் மட்டும் தூங்கி கொண்டிருந்தான். ப்ரியா கட்டிலில் அவன் அருகில் சென்று... அவனை அனைத்து கொண்டு படுத்து தூங்கினாள்.**

**முரளி... கௌதமை பார்க்க அவன் அறைக்குள் வர.... அங்கே ப்ரியா அவனோடு படுத்திருப்பதை பார்த்து தயங்கி நிற்க... கார்த்திக்கும் உள்ளே வந்தவன்... திரும்பி வெளியே சென்றான். கௌதம்**



Ramya Rajan

***தானாகவே கண் விழித்தவன் தன் மீது கை போட்டு தூங்கும் ப்ரியாவை பார்த்து... ஒரு கணம் நெகிழ்ந்தாலும்.... நேற்று அவள் செய்தது நியாபகம் வர முகம் மாறியவன்... அவளை விலக்கி படுக்க வைத்துவிட்டு வெளியே எழுந்து சென்றான்.***

***முரளி வந்து ப்ரியாவை எழுப்பியவன்... அவளை பரிசோதித்து பார்த்துவிட்டு "ப்ரியா... நேத்து நைட் கௌதமுக்கு ரொம்ப காய்ச்சல். நீ செஞ்சது அவனோட மனச ரொம்ப பாதிச்சிடுச்சுன்னு நினைக்கிறேன்..."***

***ப்ரியா "இப்ப என்ன அண்ணா... பண்றது"***

***"அவன் மனசுல இருக்கிறது... வெளிய வந்துட்டா பெட்டெர். அதனால அவன் உன்னை திட்டினாலோ இல்லை... எதாவது சொன்னாலோ... நீ பதில் பேசமா இரு... அவன் மனசுல இருந்து எல்லாம் வெளிய வந்துட்டா... அப்புறம் பயம் இல்லை" என்று முரளி சொல்ல... ப்ரியா சரி என்று தலை ஆட்டினாள்.***

36

Ramya Rajan

காலை உணவு முடியும் வரை... கௌதம் எதுவும் ப்ரியாவிடம் பேசவில்லை...

அதன் பிறகு ப்ரியாவை மாடிக்கு அழைத்து கொண்டு சென்றவன் " நீ எனக்கு வேண்டாம் ப்ரியா... " என்று சொல்ல...

அவன் திட்டுவான் அமைதியாக இருப்போம் என்று நினைத்த ப்ரியா அவன் வேண்டாம் என்று சொன்னதும் அதிர்ந்தாள்...

"ஏன் கௌதம்...

"இப்படி நம்ப வச்சு ஏமாத்திட்டியே... உனக்கு மட்டும் எதாவது ஆகி இருந்தா.... என்னோட நிலைமை ! அதை பத்தி கொஞ்சமாவது யோசிச்சு பார்த்தியா... நான் தெரு தெருவா பைத்தியக்காரன் மாதிரி திரிய... நீ நிம்மதியா போய் சேர்ந்திருப்ப... அப்படிதான" என்று கௌதம் ஆத்திரமாக கேட்க...

"சத்தியமா... இல்லை கௌதம். அப்போதைக்கு நிச்சயம் நிக்கணும்ன்னு தான் அப்படி பண்ணேன்"

"உனக்கு அந்த விஷ்வாவை... எவ்வளவு நாளா தெரியும் ?"

***"அண்ணா... கல்யாணத்தின் போது பார்த்திருக்கேன்... அப்புறம் அடிக்கடி வீட்டுக்கு வந்திருக்கான்."***

***"ஏன் என்கிட்டே சொல்லலை?"***

***ப்ரியா அமைதியாக இருந்தாள்.***

***"சரி... இத்தனை நாள் சொல்லலை... உங்க பாட்டி அவன பத்தி பேசின பிறகாவது சொல்லி இருக்கலாம் இல்லை... ஏன் சொல்லலை?"***

***"உங்களை.. டென்ஷன் பண்ண வேண்டம்ம்னு நினைச்சேன்"***

***கௌதம் "ரொம்ப தான் அக்கறை" என்றவன் தொடர்ந்து,***

***"நேத்து... நீ உங்க அப்பாகிட்டே... பாட்டிகிட்ட நிச்சயம் வேண்டாம்ன்னு சொன்னியா...."***

***ப்ரியா இல்லை... என்று தலை ஆட்ட...***

Ramya Rajan

***"எந்த முயர்ச்சியும் செய்யாம.... கைய மட்டும் அருத்துகிட்டா... பிரச்சனை தீர்ந்திடுமா. உனக்கு ஷ்ருதி எவ்வளவோ பரவாயில்லை அவளாவது நமக்காக போராடினா... நீ என்ன செஞ்ச" என்ற கௌதம்,***

***"நீயெல்லாம்... காவ்யாவுக்கு புத்தி சொல்ற... காவ்யா வேண்டாம்ன்னு சொல்லிட்டா... கார்த்திக் என்ன ஆவான்னு யோசிச்சவ... உனக்கு எதாவதுனா... என்னோட நிலைமைய யோசிக்கலை இல்லையா..."***

***ப்ரியா "நான்... தான் சொல்றேண்ணே கௌதம், நான் சாகனும்ன்னு நினைக்கலை.."***

***"உங்க அண்ணன் மட்டும் சரியான நேரத்துக்கு வந்திருக்கலைனா உன்னை எப்ப மத்தவங்க பார்த்து... எப்ப ஹாஸ்பிடல் போய் அதுக்குள்ள உனக்கு அதாவது ஆகி இருந்தா... உயிர் உனக்கு விளையாட்டா போய்டுச்சு இல்லை....எனக்கு உன்கிட்ட எந்த விளக்கமும் வேண்டாம். நான் காதலிச்ச ப்ரியா... நீ இல்லை, அவ என்னை பத்தி தான் நினைப்பா... எனக்காக வாழ்வா... இப்படி கோழை மாதிரி யோசிக்க மாட்டா... அதனால இன்னையோட எல்லாத்தையும் முடிச்சிக்கலாம்" என்று கௌதம் சொல்ல...***

***"கௌதம்..." என்று ப்ரியா கதறியவள் "அப்படி சொல்லாதீங்க கௌதம் நான் பண்ணது தப்பு தான்... மன்னிக்க கூடாதா..." என்று ப்ரியா அழுதுகொண்டே கேட்க...***

"மன்னிக்கிற மாதிரி தப்ப நீ செய்யலை... உனக்கு எதாவது ஆகி இருந்தா உன்னை பெத்தவங்களும் உன்னோட அண்ணனும் என்னை மன்னிச்சிருக்க மாட்டாங்க... ஒரு சின்ன பொண்ண காதல் என்ற பேர்ல நான் சாகடிசிட்டேன்னு தான் சொல்லி இருப்பாங்க" என்ற கௌதம் "நீ போய்டு ப்ரியா..." என்று சொன்னவன்,

"நீ போறது... எனக்கு தண்டனை தான். ஆனா... உன்னை மாதிரி ஒரு சுயநலவாதியோட... என்னால வாழ முடியாது. உன்னை பத்தி யோசிச்ச நீ... உனக்கு எதாவது ஒண்ணுன்னா... நான் தாங்கு வேன்னான்னு... என்னை பற்றி நினைச்சு பார்த்தியா... இல்லை உன்ன பெத்தவங்களை பத்தி நினைச்சு பார்த்தியா....நீ உங்க வீட்டுக்கு போ...." என்றான்.

ப்ரியா... கௌதமை ஏக்கமாக பார்க்க....

"இந்த பார்வை எல்லாம் வேண்டாம்... கிளம்பு"

"நான் இந்த வீட்டைவிட்டு தான் போறேன்.... உங்களை விட்டு இல்லை. நீங்க என்னை கூப்பிடுவீங்கன்னு நம்பிக்கைல.... நான் காத்திருப்பேன்" என்று சொல்லிவிட்டு ப்ரியா சென்றாள்.

கீழே ப்ரியா இறங்கி வர.... சாருமதி ப்ரியாவிடம் "என்ன

Ramya Rajan

சொன்னான் ?" என்று மெதுவாக கேட்க....

கௌதம் இறங்கி வருபதை பார்த்த ப்ரியா... சத்தமாக "நான் படிச்சு முடிக்கிற வர... என்னை எங்க அம்மா வீட்ல இருக்க சொல்லி இருக்காங்க அத்தை" என்றாள்.

அவள் சொல்வது பொய் என்று அங்கிருந்த எல்லோருக்கும் தெரியும். ஆனால்... காலம் கௌதமின் மன வேதனையை ஆற்றி இருவரையும் சேர்த்து வைக்கட்டும் என்று நினைத்து... எல்லோரும் அவள் சொன்ன பொய்யை நம்பியது போல் காட்டி.... அவர்கள் போக்கிலேயே போக நினைத்து... அதுவும் சரி தான், நீ படிப்ப முடிக்கணும் இல்ல என்று சொல்லி அவரவர் வேலையை பார்க்க....

ப்ரியா கடவுளே... என் கௌதம் மனசை சீக்கிரமா மாத்தி.... என்னை இங்க திரும்பி... என் கௌதமோட வாழ வச்சிடுங்க என்று வேண்டிக்கொண்டே வந்த அழுகையை அடக்கி கொண்டு தன் அண்ணனுடன் சென்றதும், தன் அம்மாவின் மடியில் முகம் புதைத்து கௌதம் அழுதான் "ஏன்மா... இப்படி பண்ணா ? அவளுக்கு எதாவது ஆகியிருந்தா...." என்று அவன் சொல்லும் போதே.... அவன் உடல் நடுங்குவதை பார்த்து சாருமதி "அதெல்லாம் எதுவும் ஆகாது அவ நல்லா இருப்பா.... அவ படிப்ப முடிச்சிட்டே வரட்டும்" என்று சொல்லி கௌதமை தேற்றினார்.

கௌதம்.... வேலையில் கூட கவனம் இல்லாமல் இருக்க... முரளியும், கார்த்திக்கும்... வசந்திடம் சொல்லி... வில்லாவை சீக்கிரம் கட்ட வேண்டும் என்று முடுக்கியதால்.... கௌதமின் கவனம் அதில்

***சென்றது.***

***இன்றோடு கௌதமிற்கும்... ப்ரியாவிற்கும் திருமணமாகி ஒரு மாதம் முடிந்துவிட்டது. கௌதம், ப்ரியாவை அன்றைக்கு பிறகு இன்று கல்லூரியில் வைத்து தான் பார்த்தான். எவ்வளவு கொழுப்பு இருந்தா ஹே துஷ்யந்தா.... ஹே துஷ்யந்தா.... உன் சகுந்தலா தேடி வந்தான்னு பாடுவா என்ற நினைத்தவன், பழைய நினைவுகளில் இருந்து மீண்டு எழுந்து குளிக்க சென்றான்.***

***கௌதமும்..... ப்ரியாவும் ஒருவரை ஒருவர் அதிகம் விரும்பியது தான் இந்த பிரிவுக்கு காரணம்.... அவர்கள் மீண்டும் எப்போது சேர்வார்கள்....?***

37

***ப்ரியாவிற்கு... கௌதம் அவளை வேண்டாம் என்று சொன்னது மனம் முழுக்க ரணமாக இருந்தாலும்... கௌதம் தன்னை ரொம்ப விரும்புவதால் தான் அப்படி சொன்னான் என்பதை உணர்ந்து இருந்ததால்.... அவனே தன்னை ஒரு நாள் வந்து அழைத்து செல்வான் என்ற நம்பிக்கையில் காத்திருந்தாள்.***

Ramya Rajan

**ப்ரியா கையை அறுத்து கொண்டதை அப்பத்தாவிடம் ஜானகி சொன்ன போது... அவர் துடித்துவிட்டார். தான் வறட்டு கௌரவத்துக்காக செய்த செயல்... ப்ரியாவின் உயிரையே பறித்திருக்குமே என்ற எண்ணமே அவரை நடுங்க செய்தது.**

**அதற்கேற்றாற்போல் அடுத்த நாளே... ப்ரியா வீட்டுக்கு வந்தவள்... ஆளே வாடி இருந்தாள். ஏன் வந்துட்டே ? என்று கேட்டதற்கு "கௌதம்... என்னை படிப்பு முடிச்சிட்டு வர சொல்லி இருக்கார்" என்று சொன்ன போது... அதை அப்பத்தாவால் நம்ப முடியவில்லை.... ஏனென்றால் அவருக்கு கௌதம் பற்றி நன்றாகவே தெரியும். நேத்து அவ்வளவு ஆசையா கூடிட்டு போயிட்டு... இணைக்கு ஏன் திருப்பி அனுப்பினான் ? என்று யோசித்தவர்... ஒரு வேலை ப்ரியா செஞ்ச வேலையில கோபப்பட்டு திருப்பி அனுபிட்டான்னோ என்று ப்ரியாவை திரும்பி திரும்பி கேட்க, அவள் "அதெல்லாம் இல்லை.... அவர் படிச்சு முடிச்சதும் சேர்ந்து இருக்கலாம்ன்னு சொன்னார். அதனால தான் நானும் வந்துட்டேன்" என்றாள்.**

**ப்ரியா காலேஜ்ல் காவ்யாவிடம் மட்டும் தனக்கு திருமணம் ஆனதை சொன்னவள்... கௌதம் அவளை வேண்டாம் என்று சொன்னதை சொல்லாமல்... படிப்பு முடியும் வரை... தான் அம்மா வீட்டில் இருக்க போவதாக மட்டும் சொன்னாள்.**

**"உன்னோட... கல்யாணத்தில எந்த பிரச்சனையும் இருக்காதுன்னு நினைச்சா... கடைசியில உன் கல்யாணம் தான் பரபரப்பா... விருவிருப்பா... நடந்திருக்கு. கௌதம் கில்லாடி தான்... எப்படியோ.... நீ ஆசைப்பட்ட கௌதமோடவே உனக்கு கல்யாணம்**

***ஆச்சே" என்று சந்தோஷபட்ட காவ்யா, ப்ரியாவை அனைத்து வாழ்த்து சொன்னாள்.***

***அப்பத்தா இரண்டு நாள் கழிச்சு "உன் புருஷன் ஏன் உன்னை பார்க்க வரலை?" என்று கேட்க...***

***"என்கிட்டே போன்ல பேசிட்டு தான் இருக்கார்... காலேஜ்ல வந்து என்னை பார்கிறார்..." என்று சொல்லி... அப்பத்தா வாயை ப்ரியா அடைத்து விட்டாள்.***

***பகலில் சாதாரணமாக இருப்பது போல்... ப்ரியா இருந்தாலும். இரவின் தனிமையில் கௌதமை நினைத்து கண்ணீரில் கரைந்தாள்.***

***அப்பத்தா... கௌதமை உன் புருஷன் என்று சொல்வது ப்ரியாவிற்கு ரொம்ப பிடிக்கும். அவர் அப்படி சொல்லும் போது... தான் கௌதமோடு இருப்பதாகவே உணர்வாள். அதனால் அவள் அப்பத்தாவிடம் முன்பு போல் இல்லாமல்... சரளமாக பேச ஆரம்பித்தாள். அப்பத்தாவும் ஒரு நாளைக்கு பத்து முறையாவது... அவளிடம் உன் புருஷன் என்று கௌதமை பற்றி எதாவது கேட்பார்.***

***அப்பத்தா "நான் உன் புருஷன்... உன்னை பத்தாவது மாசம் பிரசவத்துக்கு தான்... இங்க அனுப்புவான்னு நினைச்சேன்" என்று சொன்னதும்... கேட்ட ப்ரியாவிற்கு... கண்கலங்கி விட்டது.***

முரளியும், ஷ்ருதியும் வெளியில் அந்யோன்யமாக நடந்து கொண்டாலும்.... அவர்கள் தனிமையில் இருக்கும் போது விலகி தான் இருந்தனர்.

எல்லோரும் ப்ரியாவின் மேல் இருக்கும் வருத்தம் குறைந்தால்... கௌதம் அவனே அவளை வந்து அழைத்து செல்வான் என்று நினைக்க... ஒரு மாதம் ஆகியும் எந்த முன்னேற்றமும் இல்லாததால் இனியும்... அவன் விருப்பத்துக்கே விட முடியாது என்று நினைத்தனர்.

முரளியும், ஷ்ருதியும் இன்னும் இரண்டு மாதத்தில் ப்ரான்ஸ் செல்வதாக இருந்தது. அதனால்... அவர்கள் கிளம்புவதற்கு முன் கௌதம், ப்ரியா வரவேற்ப்பை வைத்துவிடுவோம் என்று கிருஷ்ணகுமார் சொல்ல....

கௌதம் "எதற்கு அதெல்லாம்....? வேண்டாம்" என்றான்.

கிருஷ்ணகுமார் "நீ... ஒரு பொண்ணுக்கு தாலி கட்டி... அதை சட்டப்படி பதிவும் பண்ணிட்டு... உன் வேலையை பார்த்திட்டு இருந்தா மட்டும்... நீ செஞ்சது எல்லாம் சரின்னு ஆகிடுமா... அந்த பொண்ணுக்கு நீ தாலி கட்டினது... நம்ம ரெண்டு பேர் குடும்பத்தை தவிர வேறு யாருக்குமே தெரியாது... நாளைக்கு அந்த பொண்ணு கழுத்தில தொங்கற தாலியை பார்த்து... இந்த ஊர் கேள்வி கேட்குமே... உன் புருஷன் யார் ? உனக்கு எப்ப கல்யாணம் ஆச்சுன்னு ? அதுக்கு அந்த பொண்ணு ஒவ்வொருத்தர்கிட்டயும் போய் விளக்கம் சொல்ல முடியுமா...இன்னார் தான் என் புருஷன்

**என்று" என்றவர் தொடர்ந்து,**

**"அதுக்கு நாமலே... வரவேற்ப்பு வச்சிட்டா... எல்லோருக்கும் தெரிஞ்சிட்டு போது, உங்களுக்கு கல்யாணம் ஆகிடுச்சுன்னு. உனக்கு ப்ரியாவோட வாழ இஷ்டம் இல்லைனா... நீ அவளை விவாகரத்து பண்ணிடு... அவளாவது கொஞ்ச நாள்ல வேற கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருக்கட்டும்" என்று கௌதமையே அதிர வைத்து... தான் அவனின் அப்பா என்பதை அவனுக்கு காட்டினார்.**

**அதிர்ச்சி அடைந்த கௌதம்... இப்ப இவர் சொன்னதை மட்டும் ப்ரியா கேட்டா... உயிரோடையே இருக்கா மாட்டா... எவனோ பொண்ணு பார்க்க வந்ததுக்கே... கைய அறுத்தா... வேற கல்யாணம் பண்ண சொன்னா... அவ்வளவு தான் என்று நினைத்தவன்,**

**"இப்ப என்ன ? உங்களுக்கு வரவேற்ப்பு வைக்கணும்.... அவ்வளவு தானே இதுக்கு போய்... ஏன் ? அப்படி எல்லாம் பேசுறீங்க ...சரி வைங்க" என்றான்.**

**கௌதமிடம் எப்படி சொன்னால்... அவன் இந்த வரவேற்ப்புக்கு ஒத்து கொள்வான் என்பதை அறிந்தே... அவனிடம் இப்படி பேசி சம்மதம் வாங்கினார் கிருஷ்ணகுமார்.**

**ஒரு நாள் முரளியை தனியாக சந்தித்து பேசிய கார்த்திக் "நீங்க...**

ப்ரியாவோட அண்ணன் தான... கௌதம்கிட்ட என் தங்கச்சிக்கு என்ன தான் வழின்னு... நீங்க கேட்கலாம் இல்ல... அதவிட்டுட்டு நீங்க பேசாம இருந்தா... அவனும் இது தான் சாக்குன்னு... ப்ரியாவை திரும்பி கூட பார்க்காம இருக்கான்" என்று சொல்ல...

முரளி "தப்பு செஞ்சது ப்ரியா.. அப்படி இருக்கும் போது... நான் கௌதம

என்ன... ? சொல்ல முடியும். அவனோட கோபம் நியாமானது"

கார்த்திக் "போச்சு... நீங்களே இப்படி பேசினா... கௌதம பத்தி சொல்லவே வேண்டாம்"

"அவன் என் தங்கச்சிய வரதட்ச்சனை கேட்டு... எங்க வீட்டுக்கு அனுப்பினாலோ...இல்லை என் தங்கச்சிய பிடிக்காம அனுப்பி இருந்தாலோ... நான் அவன்கிட்ட சண்டை போடலாம். ஆனா அவன் ப்ரியாவை அளவுக்கு அதிகமா விரும்புறான். அதனால... தான் அவ செஞ்சத தாங்க முடியாம இருக்கான். இதுல நான் வேற அவனை கஷ்ட்டபடுத்த விரும்பல... அதனால... அவன் மனசு எப்போ சமாதானம் ஆகுதோ... அப்ப அவனே வந்து ப்ரியாவை கூடிட்டு போகட்டும்" என்றான் முரளி முடிவாக.

"என்னால உங்களை மாதிரி பொறுமையா... இருக்க முடியாது. இப்படியே எல்லோரும் பேசாம இருந்தா... அவனுக்கு ப்ரியாவை அவங்க வீட்டுக்கு கூடிட்டு போகணும்ன்னு தோனாது... அதனால நீங்க ஒரு உதவி பண்ணுங்க... இனிமே நீங்க ப்ரியா மேல் அக்கறை

**இல்லாத மாதிரி நடந்துக்கோங்க... அப்ப கௌதமே ப்ரியாவை பார்த்துக்க ஆரம்பிப்பான்" என்று கார்த்திக் சொல்ல...முரளிக்கும், கார்த்திக் சொல்வது சரி என்றே தோன்ற... அவன் சொன்னதற்கு ஒத்துக்கொண்டான்.**

**வரவேற்ப்புக்கு மண்டபம் எதுவும் கிடைக்காததால்... ஒரு பெரிய ஹோட்டலில் ஹால் ஏற்பாடு செய்யப்பட்டது.**

**வரவேற்ப்புக்கான உடைகள் வாங்க... கடைக்கு கிளம்ப... எப்போதும் போல் இரு வீட்டின் தலைவர்கள் வரவில்லை. முரளிக்கு அதிகமான வேலை இருந்ததால் அவனும் வரவில்லை. கௌதம் வர மாட்டேன் என்று சொல்லிவிட பெண்கள் நால்வரும் சென்றனர்.**

**அங்கே அவர்கள் கடையில் வரவேற்ப்புக்கான புடவைகள் பார்க்க... ப்ரியா மட்டும் புடவையை பார்க்காமல்... அங்கே புடவை வாங்க வந்த மற்றவர்களை பார்த்து கொண்டிருந்தாள். எல்லோரும் அவரவர் ஜோடியுடன் திருமண புடவை வாங்க வந்திருக்க... தான் மட்டும் தனியாக வந்திருப்பதை நினைத்து வருந்தியவள், புடவை எடுக்க பிடிக்காமல்..." நீங்களே எடுங்கம்மா..." என்று சொல்லி ஓரமாக சென்று அமர்ந்துவிட்டாள்.**

**ஷ்ருதிக்கு அவளை பார்த்து கண்கலங்கிவிட்டது. தன்னுடைய திருமணத்தின் போது எல்லோரும் சேர்ந்து வந்து புடவை எடுத்தது அப்போது அவளுக்கு நியாபகம் வர... கௌதமுக்கு போன் செய்தாள்.**

Ramya Rajan

கௌதம் "என்னடி... புடவை வாங்கிடீங்களா..."

ஷ்ருதி "இல்லை... இப்பதான் ரெண்டு அம்மாவும் பார்கிறாங்க"

கௌதம் அப்ப ப்ரியா என்ன பண்றா என்று யோசித்தவன், ப்ரியாவை பற்றி எதுவும் கேட்கவில்லை....

"ப்ரியா... புடவை செலக்ட் பண்ணாம... அவ அம்மாவை செலக்ட் பண்ண சொல்லிட்டு உட்கார்ந்திருக்கா...இதெல்லாம் என்னால தான். என்னோட கல்யாணத்துக்கு... எல்லோரும் சேர்ந்து வந்து வாங்கினோம். ஆனா உங்களுக்கு கல்யாணம் தான் அவசரமா நடந்தது, அதனால உங்க வரவேற்ப்பாவது கிராண்டா பண்ணலாம்னா.... நீங்க யாரும் ஒத்து வர மாட்றீங்க... முரளிக்கு வேலை இருக்குன்னு சொல்லிட்டார்... நீயும் வரலை, ப்ரியா அவ கல்யாணத்தை பற்றி எவ்வளவு கனவு கண்டிருப்பா எல்லாமே என்னால தான் மாறிடுச்சு... ப்ரியா வெளிய கான்பிக்களைனாலும் மனசுக்குள்ள வறுத்தபடுவா இல்ல" என்று ஷ்ருதி புலம்ப....

கௌதம் "இப்ப நீ எதுக்கு புலம்புற....சரி நான் கார்த்திக்கோட அங்க வரேன், ஆனா... உனக்காக தான்" என்று சொல்லி போன்னை வைத்தான்.

ஷ்ருதி சென்று ஜானகியிடமும், சாருமதியிடமும் கௌதம் வருவதை

சொல்ல.... அவர்கள் சரி என்று மற்றவர்களுக்கு புடவை பார்க்க ஆரம்பித்தனர்.

ஒரு மணி நேரம் கழித்து கார்த்திக்கோடு கௌதம் கடைக்குள் நுழைந்தான். ப்ரியாவிற்க்கு கௌதம் வருவது தெரியாது... அவள் அங்கு விளையாடி கொண்டிருந்த குழந்தைகளை வேடிக்கை பார்த்து கொண்டு அமர்ந்திருந்தாள்.

உள்ளே வரும்போதே கௌதம் ப்ரியாவை பார்த்துவிட்டான், ஆனால் பார்க்காதது போல்.... அவளை கடந்து சென்று ஷ்ருதியின் அருகில் நின்றான். அவனோடு வந்த கார்த்திக் "என்ன ப்ரியா...? புடவையை பார்க்காம... உட்கார்ந்து வேடிக்கை பார்த்திட்டு இருக்க, இன்னைக்கு ஒன்னும் தீனி கொண்டு வரலையா..." என்று கேட்க...

ப்ரியா லேசாக சிரித்து கொண்டே இல்லை என்று தலை ஆட்டியவள் "நீங்க எப்ப வந்தீங்க ?" என்று கேட்க...

"இப்பதான்... நான் மட்டும் இல்லை.... கௌதமும் கூட வந்திருக்கான்" என்று கார்த்திக் சொல்ல... ப்ரியா வேகமாக திரும்பி பார்த்தாள்.அங்கே கௌதம் புடவைகளை பார்த்து கொண்டிருந்தான்.

"ஹப்பா... வந்துட்டான்" என்று நிம்மதி அடைந்த ப்ரியா... கார்திக்கோடு அங்கே செல்ல...

கௌதம் ப்ரியாவை திரும்பியும் பார்க்கவில்லை... அவன் புடவை எடுப்பதிலேயே கவனமாக இருக்க... ப்ரியா அவனையே பார்த்து கொண்டிருந்தாள்.

இவர்கள் இருவரையும் கவனித்த கார்த்திக் இருடா மகனே... உன்னை கதற விடுறேன் என்று நினைத்தவன்.... அங்கே பெண்களுக்கு புடவையை கட்டி காண்பித்து கொண்டிருந்த ஆளிடம் ஒரு புடவையை கொடுத்து ப்ரியாவிற்கு கட்டிவிட சொன்னான்.

ப்ரியா வேண்டாம் என்று மறுக்க... கார்த்திக் "இல்லை ப்ரியா... இப்படி கட்டி பார்த்தாதான்... எந்த புடவை நல்லா இருக்குன்னு தெரியும்" என்று சொல்லி... கட்டிவிட சொல்ல... அவன் ஏதோ காரணமாக தான் அப்படி சொல்கிறான் என்று புரிந்து கொண்ட ஷ்ருதி "ஆமா ப்ரியா... கார்த்திக் அண்ணா சொல்றது தான் கரெக்ட்" என்று சொல்ல...

ப்ரியா மறுக்க முடியாமல் நின்றாள். கடையின் ஊழியர் புடவையை ப்ரியாவிற்கு கட்ட ஆரம்பிக்க... கௌதமுக்கு கோபம் வந்தது... அவன் அந்த புடவை வேண்டாம் என்றான்.

அப்படி வாடா... வழிக்கு என்ற நினைத்த கார்த்திக் "அப்ப நீயே... வேற புடவை செலக்ட் பண்ணி குடு... கட்டி பார்க்கலாம்" என்றான்.

கௌதம் ரொம்ப நேரம் தேர்வு செய்தவன், ஒரு அழகான புடவையை எடுத்தான். அந்த புடவை எல்லோருக்கும் ரொம்ப பிடித்தது... கடை ஊழியர் "குடுங்க சார்... மேடம்க்கு கட்டி பார்க்கலாம்" என்று கேட்க...

"அதெல்லாம் நான் மனசுக்குள்ள கட்டி பார்த்திட்டேன். நல்லாயிருக்கு... அதனால நீங்க கட்டி காட்ட வேண்டாம்" என்ற கௌதம், ப்ரியாவிற்கு இன்னும் இரண்டு புடவைகள் தேர்வு செய்தவன், ஷ்ருதிக்கும் ஒரு அழகான புடவை தேர்வு செய்து கொடுத்தான்.

கௌதம்... ப்ரியாவிடம் உனக்கு புடவை பிடித்திருக்கிறதா என்று கேட்கவுமில்லை... ப்ரியா அதை எதிர்பார்க்கவும் இல்லை... அவளுக்கு கௌதம் வந்து புடவையை தேர்வு செய்ததே மகிழ்ச்சியை கொடுக்க அவள் சந்தோஷமாக இருந்தாள்.

இதையெல்லாம் பார்த்த ஜானகியும், சாருமதியும் மனதிற்குள் மகிழ்ந்தவர்கள்... வெளியே ஒன்றும் காண்பிக்கவில்லை.

சாருமதி, ஜானகியை அழைத்து கொண்டு வேறு ஒரு கடைக்கு சென்றவர்... ஷ்ருதியிடம் ஆண்களுக்கு உடைகள் வாங்கிவிட்டு அவர்களையும் அங்கே வரும்படி சொல்லிவிட்டு சென்றார்.

ஆண்களுக்கான உடைகள் வாங்கியதும்... சாருமதி சொன்ன கடைக்கு சென்றனர்... அந்த கடை இருப்பது ரொம்ப

Ramya Rajan

**நெருக்கடியான தெருவில்... ஏற்கனவே அது கல்யாண மாதம் என்பதால்.... எல்லா கடைகளிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது, வழியெல்லாம் ஜனத்திறல் தான்.**

**கார்த்திக்கும், ஷ்ருதியும் பேசிக்கொண்டே வேகமாக நடந்தனர். கௌதம் அவர்களோடு சேர்ந்து நடந்தான். ஆனால் ப்ரியாவால் அவர்கள் வேகத்திற்கு நடக்க முடியவில்லை... அதனால் அவள் பின்தங்கி நடந்தாள்.**

**கார்த்திக்கும், ஷ்ருதியும் ப்ரியாவை திரும்பி பார்க்காமல் நடக்க... கௌதம் மட்டும் வேடிக்கை பார்ப்பது போல்... அவள் வருகிறாளா என்று பார்த்து கொண்டே வந்தான்.**

**ஒரு திருப்பத்தில் ப்ரியா முன்னே சென்றவர்களை தவறவிட.... கூட்டத்தில் ஆளுக்கு ஒரு புறம் அவளை தள்ள... இப்போது அவளுக்கு எந்த பக்கம் செல்வது என்று தெரியவில்லை... அங்கே ஒதுங்கி நிற்கவும் இடம் இல்லை.**

**அவள் மேலே வந்து இடிப்பவர்கள் தெரியாமல் இடிகிறார்களா... இல்லை வேண்டும் என்றே இடிகிறார்களா என்று புரியாமல்... கூட்டதில் யாரவது தாலி செயின்னை பிடித்து இழுத்து விடுவார்களோ என்று பயத்தில்.... தாலியை கையில் இறுக்கமாக பிடித்து கொண்டு... எந்த பக்கம் போவது என்று தெரியாமல் ப்ரியா நின்றாள்.**

**அப்போது யாரோ அவள் கையை பிடிக்க.... பயத்தில் கத்த பார்த்தவள் கையை பிடித்தது கௌதம் என்று தெரிந்ததும் நிம்மதியாக மூச்சு விட்டாள். அவன் கையை இறுக்கி பிடித்து கொண்டு "கௌதம்..." என்று ப்ரியா அழைக்க...**

**"என்கிட்டே ...நீ பேசின... இங்கயே உன்னை விட்டுட்டு போய்டுவேன்" என்றவன், அவள் கையை பிடித்து தரதரவென்று இழுத்து கொண்டு சென்றான்.**

**கடைக்குள் வந்ததும் ப்ரியாவின் கையைவிட்ட கௌதம், ஷ்ருதியிடம் "நீங்க வாங்கிட்டு வாங்க... நான் கிளம்பறேன்" என்று சொல்லி... கார்த்திக்கை அவர்களுக்கு துணைக்கு விட்டுவிட்டு.... ப்ரியாவை திரும்பி பார்க்காமல் சென்றான்.**

**கௌதம் செல்வதை பார்த்து கொண்டிருந்த ப்ரியாவின் கண்கள் கலங்க அதை கவனித்த கார்த்திக் "எங்க போய்ட போறான் ப்ரியா... அவன் உன்னை பார்க்காம பேசாம இருக்கான்னே தவிர... உன்னை மறந்திட்டு இருக்கலை... அதனால கவலைபடாதே... சீக்கிரம் சரி ஆகிடுவான்" என்று சொல்ல...**

**ப்ரியா "நானும்... அந்த நம்பிக்கையில தான் இருக்கேன்" என்றாள்.**



Ramya Rajan

லண்டனில் இருந்து போன் செய்த வாசுகி... தனது அம்மாவிடம் அருணுக்கு திருமணம் நிச்சயம் ஆக போவதை சொன்னதும்,

அப்பத்தா "என்னடி... இப்படி திடிர்ன்னு சொல்ற... யாரு பொண்ணு" என்று கேட்க...

"உங்க பேரன்... அஞ்சு வருஷமா... ஒரு பொண்ண விரும்பி இருக்கான். சுமி கல்யாணம் முடிந்ததும் சொல்லலாம்ன்னு சொல்லாம இருந்திருக்கான்.... அதனால தான் வந்த வரன் எல்லாம் வேண்டாம்ன்னு சொல்லி இருக்கான் போல... போன வாரம் தான் எங்களிடம் விஷயத்தை சொன்னான். பொண்ணு தமிழ் பொண்ணு தான் ஆனா இங்கயே செட்டில் ஆன குடும்பம்" என்று வாசுகி விவரம் சொல்ல.....

அப்பத்தா "எப்படியோ... அவனுக்கும் நல்லபடியா கல்யாணம் முடிஞ்சா சரி... திருமணத்தை மூன்று மாச கழித்து வை... அப்ப தான் இங்க ப்ரியா வரவேற்ப்பு முடிஞ்சு... நாங்க எல்லாம் அங்க வர முடியும்" என்றார்.

வாசுகி "கண்டிப்பாமா... இங்க சுமி தான் வரவேற்ப்புக்கு வர துடிச்சிட்டு இருக்கா..." என்று சொல்லி போன்னை வைத்தார்.

அப்பத்தாவிற்கு ரொம்ப சந்தோஷம், தான் இருக்கும் போதே... தனது பேரன்... பேத்தி கல்யாணத்தை பார்க்க முடிந்ததை நினைத்து மகிழ்ந்தவர், ப்ரியாவும் அவ புருஷன் வீட்டுக்கு போய்ட்டா நல்லா இருக்கும்... அதுக்கு எதாவது செய்யணும் என்று யோசித்தார்.

அப்பத்தா.... கௌதம், ப்ரியா வரவேற்ப்புக்கு முன் குல தெய்வ கோவிலுக்கு சென்று... பொங்கல் வைத்துவிட்டு வருவோம் என்று சொல்ல.... ஜானகியும், சாருமதியும் கோவிலுக்கு போய்விட்டு வந்தாலாவது பிரச்சனை தீருமா என்ற ஆசையில் சரி என்றனர்.

பத்திரிக்கை அடித்து வந்ததும்... அதை எடுத்துக்கொண்டு இரு குடும்பமும்... தங்களின் குல தெய்வ கோவிலுக்கு கிளம்பியது.

கௌதம் "நீங்க எல்லாம் போயிட்டு வாங்க... நான் வரலை" என்று சொல்ல....

"நம்ம வழக்கப்படி கல்யாணத்துக்கு முன்னாடி குல தெய்வ கோவிலுக்கு பத்திரிக்கை வச்ச பிறகு தான்... நாம மத்தவங்களுக்கு கொடுக்க ஆரம்பிப்போம். ஆனா... உங்க கல்யாணம் திடிர்னு நடந்ததால எதுவும் செய்ய முடியல... இப்பவாவது ரெண்டு ஜோடியும் சேர்ந்து போய் பொங்கல் வைக்கிறது தான் நல்லது, அதனால நீ கண்டிப்பா வரணும்" என்று கிருஷ்ணகுமார் உறுதியாக சொல்லி... தனது பேச்சை முடிக்க... அதற்கு மேல் கௌதமால் அவரது பேச்சை தட்ட முடியாமல் அவனும் ஊருக்கு கிளம்பினான்.

Ramya Rajan

கௌதம்... கார்த்திக்கையும் தங்களோடு வர சொல்ல....

"நீங்க... எல்லோரும் இந்த தடவை ஊருக்கு போகும் போது... எங்க அப்பா அம்மாவையும் கூடிட்டு போய்... அங்க வச்சே மிதுவ அவங்க அப்பாவிடம் பொண்ணு கேட்கலாமா..." என்று கார்த்திக் கேட்க...

"நல்ல யோசனை... அப்படியே பண்ணலாம். எல்லோரும் சேர்ந்து போய் உனக்கு பொண்ணு கேட்டா... மிதுவோட அப்பா கண்டிப்பா ஒத்துக்குவாரு" என்றான் கௌதம்.

மிதுவிடம் கார்த்திக் விஷயத்தை சொல்ல... அவள் இவர்கள் வருவதற்கு முன்பே ஊருக்கு கிளம்பி சென்றாள்.

அப்பத்தா.... ஷ்ருதியையும், ப்ரியாவையும் ஊருக்கு போகும் போதும் புடவை தான் கட்டனும், அங்க இருக்கும் போதும் புடவை தான் கட்டனும் என்று சொல்ல....

முரளி "ஏன் அப்பத்தா.... நான் நல்லா இருக்கிறது உங்களுக்கு பிடிக்கலையா.... என் பொண்டாட்டி கொஞ்ச நேரம் புடவை கட்டினாலே அது எப்போ அவிழ்ந்து விடுமோன்னு பயமா இருக்கும். இதுல உங்களுக்கு ட்ரைன்ல வேற அவ புடவை கட்டிட்டு வரணுமா" என்று கிண்டலாக கேட்க...

***"ஏன் ? உன் பொண்டாட்டிக்கு வாய் மட்டும் கிழியுது... ஒரு புடவை கூட ஒழுங்கா கட்ட தெரியாதா...." என்று அப்பத்தா ஆரம்பிக்க...***

***"இப்ப என்னை எதுக்கு வம்புக்கு இழுக்றீங்க... நான் சொன்னேன்னா எனக்கு புடவை கட்ட தெரியாதுன்னு..." என்று ஷ்ருதி எகிற....***

***"அப்ப ஒழுங்கா புடவை கட்டிட்டு வா... அது நம்ம சொந்த ஊரு... ஞாபகம் இருக்கட்டும்" என்றவர் முரளியிடம் "நீ... உன் பொண்டாட்டி கூடவே இரு... அவ புடவை அவிழ்ந்தா.. நீ கட்டிவிடு..." என்று சொல்லிவிட்டு அப்பத்தா உள்ளே சென்றார்.***

***அப்பத்தாவும், ஷ்ருதியும் இன்னும் சண்டை போட்டு கொண்டு தான் இருந்தனர். ஆனால்... அவர்களுக்கு நடுவே யாரையும் இழுப்பது இல்லை... அதே போல் வேறு யாரும் அவர்களுக்கு நடுவே செல்வதும் இல்லை... அவர்கள் சண்டை அவர்களுக்குள்ளேயே முடிந்து விடும்.***

***நடந்த அனைத்தையும் பார்த்து கொண்டிருந்த ப்ரியா... அடக்க முடியாமல் வாய்விட்டு சிரிக்க...ரொம்ப நாள் கழித்து ப்ரியா சிரிப்பதை பார்த்து முரளியும், ஷ்ருதியும் மகிழ்ந்தனர். ப்ரியா கௌதமோடு நான்கு நாட்கள் இருக்க போகும் சந்தோஷத்தில் இருந்தாள்.***

Ramya Rajan

மூன்று குடும்பமும்... ரயிலில் ஊருக்கு செல்வதற்காக ரயில் நிலையம் வந்திருந்தனர். கௌதம் மட்டும் இன்னும் வரவில்லை... ப்ரியா ரயில் நிலைய வாசலையே பார்த்து கொண்டிருந்தாள். ஏதோ வேலையாக சென்றிருந்த கௌதம் ரயில் கிளம்ப பத்து நிமிடங்கள் இருக்கும் போது தான் வந்தான்.

ஹப்பாடா... வந்துட்டான் என்று ப்ரியா நினைக்க... வந்தவன் வந்ததில் இருந்து... வெளியே நின்று செல்லில் பேசி கொண்டிருந்தான். நாளை ஒரு கட்டிடத்திற்கு தளம் போடுவதால்... அதற்க்கு தேவையான ஏற்பாடுகளை சூப்ரவைசரிடம் சொல்லி கொண்டிருந்தான்.

கௌதம் பேசிக்கொண்டே... சற்று தள்ளி சென்றுவிட ...ப்ரியாவிற்கு ரயில் கிளம்பிவிடுமோ என்று பயம். அவள் ட்ரைன் உள்ள வந்து பேசினா... என்னவாம், ட்ரைன் கிளம்பிட்டா... என்ன பண்றது என்று புலம்ப... முரளியும், கார்த்திக்கும் அவள் சொல்வது காதில் விழாத மாதிரி இருந்தனர்.

ப்ரியா ஜன்னலையே தவிப்புடன் பார்க்க... பக்கத்தில் இருந்த ட்ரைன் கிளம்பியது... கார்த்திக் "ட்ரைன் கிளம்பிடுச்சு..." என்றதும், ப்ரியா எழுந்து வாசலுக்கு வேகமாக ஓடியவள்... வாசலில் நின்று "கௌதம்... ட்ரைன் கிளம்பிடுச்சு... சீக்கிரம் வாங்க..." என்று கத்தினாள்...

திரும்பி நின்று போன் பேசி கொண்டிருந்த கௌதமும்... ட்ரைன் கிளம்பிவிட்டது என்று நினைத்து... வேகமாக ஓடி வந்து ட்ரெயினில்

**ஏறினான். கௌதம் ஏறிய பின்பு தான் கவனித்தான்... ட்ரைன் அதே இடத்தில் நிற்ப்பதை... ப்ரியாவை பார்த்து முறைத்த கௌதம் அப்போது தான் அவளை நன்றாக பார்த்தான்.**

**ப்ரியா புடவை கட்டி... கழுத்தில் வெறும் தாலி செயின்னோடு... நெற்றி வகிட்டில் குங்குமமும், தலையில் பூவும் வைத்து... பார்த்தவுடன் கல்யாணம் ஆன பெண் என்று சொல்லும்படி இருந்தாள்.**

**ப்ரியாவை பார்த்த கௌதமிற்கு தங்களுக்கு திருமணம் ஆகிவிட்டது அவள் இப்போது தன் மனைவி என்ற நினைப்பு மட்டும் இருக்க... உள்ளே சென்ற ப்ரியாவின் கையை பிடித்து இழுத்து நிறுத்திய... கௌதம் அவளை உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்த்து ரசிக்க... ப்ரியா வெட்கத்தில் சிவந்து நின்றாள்.**

**ப்ரியா கௌதமிடம் இருந்து தன் கையை உருவ பார்க்க... அதை விடாமல் இறுக்க பிடித்த கௌதமின் பார்வை... அவளது கைக்கு சென்றது... ப்ரியா கையை அறுத்து கொண்டதால்... ஏற்பட்ட தழும்பு அவளது வெள்ளை நிற சருமத்தில் பளிச்சென்று தெரிய... அதை பார்த்த கௌதமின் முகம் மாறியது...**

**அவன் பார்வை சென்ற இடத்தை பார்த்ததுமே ப்ரியாவிற்கு உதறல் எடுத்தது... அவள் எதிர் பார்த்தது போலவே... தீ சுட்டது போல் ப்ரியாவின் கையை உதறிய கௌதம்... அவளை தள்ளிவிட்டு உள்ளே சென்றான்.**

Ramya Rajan

கௌதம் அதை மறக்கும் வரை... தாங்கள் சேரப்போவது இல்லை என்று ப்ரியாவிற்கு உறுதியாக தெரிந்தது.

கௌதம் பின்னே உள்ளே வந்த ப்ரியா கார்த்திக்கை பார்த்து முறைக்க... கார்த்திக் "என்ன ப்ரியா ? உன் புருஷனுக்காக... ட்ரைன் செயின்னை பிடிச்சு இழுத்து... ட்ரைன்னை நிறுத்திட்ட போலருக்கு" என்றான்.

"நான் எங்க நிறுத்தினேன்... ட்ரைன் தான் கிளம்பவே இல்லையே.... நீங்க தான ட்ரைன் கிளம்பிடுச்சுன்னு சொன்னீங்க"

"நான் எப்ப இந்த ட்ரைன் கிளம்ப்பிச்சுன்னு சொன்னேன், பக்கத்து ட்ரைன் கிளம்பிடுச்சுன்னு சொன்னா... நீ எந்திருச்சு ரேஸ்ல ஓடற மாதிரி ஓடின..." என்று கார்த்திக் சொல்ல... கேட்ட அனைவரும் சிரிக்க ப்ரியா சென்று ஷ்ருதி அருகில் அமர்ந்தாள்.

முரளியும், ஷ்ருதியும் சேர்ந்து அமர்ந்திருக்க... கௌதம், ப்ரியா எதிரில் கூட அமராமல்... தள்ளி அமர்ந்தான்.

எல்லோரும் சேர்ந்து அமர்ந்து வரவேற்ப்பு பற்றியும்... கார்த்திக், மிது கல்யாணத்தை பற்றியும் பேசி கொண்டு வந்தனர்.

அப்போது அப்பத்தா கௌதமிடம் "உன்னோட பொண்டாட்டிய... இன்னும் எத்தனை நாள்... எங்க வீட்ல ஓசி சோறு சாப்பிட விடுவ... எப்பதான் ? உங்க வீட்டுக்கு கூடிட்டு போவ..." என்று கேட்க...

எப்பவும் கூடிட்டு போக போறது இல்லைன்னு... கௌதம் சொல்லிடுவானோன்னு பயந்த ப்ரியா வேகமாக "நான் இன்னும் படிச்சு முடிக்கலையே அப்பத்தா..." என்றாள்,

"ஆமா... இந்த காலத்தில பொண்ணுங்க கல்யாணம் முடிஞ்சாலும் அதுங்க பாட்டுக்கு மேல படிச்சிட்டே இருக்குதுங்க... இவ எதோ கதை சொல்றா..." என்ற அப்பத்தா,

"நீ... உங்க வீட்ல எப்படியும் இரு. ஆனா... இப்ப நாம போறது என்னோட வீடு... அங்க நீ வரணும்னா... உன் புருஷனோட வா... அதே மாதிரி.. நீ உன் புருஷனோட அவங்க வீட்டுக்கு தான் போகணும், அது கிராமம் கல்யாணம் ஆகிட்டு பொண்ணும்... மாப்பிள்ளையும், ஏன் தனியா ? இருக்காங்கன்னு யாரவது கேட்ப்பாங்க..." என்று அழுத்தமாக சொன்னவர்... அடுத்து வேறு பேச்சு பேச ஆரம்பித்தார்...

ப்ரியாவிற்கு அழுகையாக வந்தது. மேல் சீட்டில் ஏறி... திரும்பி படுத்து அழுக ஆரம்பித்தாள். தாலி கட்டிய புருஷன் வீட்ட விட்டு போன்னு சொல்லிட்டார், அப்பத்தாவும் என்னை அவங்க வீட்டுக்கு வர கூடாதுன்னு சொல்றாங்க... இப்ப நான் எங்க போறது... ஏன்..? இந்த அம்மா, அப்பா, அண்ணா கூட எதுவும் சொல்ல மாட்றாங்க. நான் எல்லோருக்கும் பாரம் ஆகிட்டேன்னா என்று நினைத்து அழுது

கொண்டே படுத்திருந்தாள்.

இரவு உணவிற்கு ப்ரியாவை, ஜானகி அழைக்க... அவள் பசிக்கவில்லை என்றதும், அதன் பிறகு யாரும் அவளை அழைக்கவில்லை. முரளியும், ஷ்ருதியும் பேசி கொண்டே சாப்பிட்டனர்.

கௌதம் வாசலில் நின்று போன் பேசிவிட்டு உள்ளே வந்ததும், ஜானகி அவனிடம் ஒரு பார்சலை கொடுத்தது, சாப்பிட சொல்ல... அவன் ப்ரியாவை பார்த்தான். அவள் சாப்பிடாமல் தூங்குவதை பார்த்தவன், தனக்கும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு... அவனும் ப்ரியாவிற்கு எதிரில் இருந்த மேல் சீட்டில் ஏறி படுத்துவிட்டான்.

இவர்கள் இருவரையும் பார்த்த... மற்றவர்கள்... ரெண்டு பேரும் ஒருத்தர் மேல ஒருத்தர்... உயிரையே வச்சிக்கிட்டு... எதுக்கு இப்படி பிரிஞ்சி இருக்காங்களே என்று வருத்தம் அடைந்தனர்.

## 39

காலையில் எழுந்த ப்ரியா... யாரிடமும் பேசாமல் இருந்தாள். முரளி அவளிடம் காபி குடிக்கிறியா என்று கேட்டதற்கும் பதில்

***சொல்லவில்லை... அவளுக்கு நேற்று தன் அண்ணன் தன்னை சாப்பிடு ப்ரியான்னு கூட சொல்லலியே... அவங்க பொண்டாட்டி சாப்பிட்டா போதும்ன்னு தானே இருந்தாங்க, கல்யாணம் ஆகிட்டா... நாம வேற வீட்டு பொண்ணு போல என்று நினைத்தாள்.***

***எல்லோரும் கௌதமே ப்ரியாவை அழைக்கட்டும் அதுதான் நல்லது என்று பேசாமல் இருக்க... ப்ரியா தன்னை எல்லோரும் கைவிட்டுவிட்டதாக நினைத்து... மனதிற்குள் குமுறி கொண்டு இருந்தாள்.***

***ரயில் நிலையத்தில் வந்து ரயில் நின்றதும், எல்லோரும் இறங்கி வெளியே நடக்க... சிறிது தூரம் சென்றதும் தான், கௌதம்... ப்ரியா தங்களுடன் வரவில்லை என்பதை கவனித்தான், கார்த்திக்கிடம் சொல்லிவிட்டு வேகமாக ப்ரியாவை தேடி சென்றான்.***

***ப்ரியா ரயில் நின்ற இடத்தில் இருந்த பெஞ்சிலேயே அமர்ந்திருந்தாள். அது விடியற்காலை என்பதால்... அந்த இடம் ஆள் நடமாற்றமின்றி இருந்தது.***

***கௌதம் ப்ரியாவை நோக்கி சென்றான்.***

***"இங்க எதுக்கு உட்கார்ந்திருக்க ?..."***

***"நான் சென்னைக்கு போறேன்..."***

Ramya Rajan

***"சென்னைக்கா... ஏன் ?"***

***"உங்களுக்கு தெரியாதா... எங்க பாட்டி... என்னை அவங்க வீட்டுக்கு வர கூடாதுன்னு சொன்ன போது... நீங்க அங்க தானே இருந்தீங்க..."***

***"அவங்க உன்னை தனியா தான்... வர கூடாதுன்னு சொன்னாங்க..."***

***கௌதம் சொன்னதை புரிந்து கொள்ளாத ப்ரியா "நம்மளோட இந்த நிலைமைக்கு காரணமான ஷ்ருதியிடமும்... எங்க பாட்டியிடமும் உங்களால பேச முடியுது. ஆனா... என்னிடம் மட்டும் உங்களால பேச முடியலை இல்லை... நான் எல்லோருக்கும் வேண்டாதவளா ஆகிட்டேன்... இப்ப எங்க அண்ணனுக்கு கூட என் மேல அக்கறை இல்லை... " என்று அவளது பெரிய கரு விழிகளை உருட்டி பேச அதை கௌதம் ரசிக்க... அவனை கவனிக்காத ப்ரியா தொடர்ந்து,***

***"நீங்க... எல்லாம் என்னை உதைச்சு தள்ற பந்து மாதிரி நான் இருக்கேன். நீங்க உதைக்கிற பக்கம் எல்லாம் போயிட்டு... இதுக்கு நான் அன்னைக்கே செத்து போயிருக்கலாம்" என்று சொல்லி முடிக்கவில்லை... அவள் கன்னத்தில் கௌதம் பளார்.... என்று அறைந்தான்.***

***ப்ரியாவிற்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை... பின் நிமிர்ந்து கௌதமை பார்க்க... அவன் கோபத்தில் கண்கள் சிவக்க***



Ramya Rajan

நின்றிருந்தான்.

"ஷ்ருதியும்... உங்க பாட்டியும் செஞ்சது தப்பு தான், ஆனா... அத திருத்திக்க முடியும். ஆனா... அன்னைக்கு முரளி மட்டும் சரியான நேரத்துக்கு வந்திருக்கலைனா.... உன்னோட தப்ப திருத்தியிருக்க முடியாது..." என்ற கௌதம் தொடர்ந்து,

" நான் நேத்து ராத்திரி தான்... ரொம்ப நாளைக்கு அப்புறம் முழு இரவும் தூங்கி இருக்கேன். நீ பக்கத்தில இருந்ததுனால தான், இல்லைனா பாதி ராத்திரியில எழுந்ததுக்கு அப்புறம் தூங்கவே முடியாது... மனசுக்குள்ள ப்ரியாவுக்கு ஒன்னும் இல்லை... அவ நல்லா இருக்கான்னு திரும்ப திரும்ப சொல்லிட்டு தான் தூங்குவேன். ஆனா... உனக்கு அதை பத்தி எல்லாம் அக்கறை கிடையாது. நீ இன்னும் திருந்தலை... இன்னும் நீ செஞ்சது தப்புன்னு உணரலை... என் கோபம் எதனாலன்னு நீ புரிஞ்சிக்கவும் இல்லை... நீ இல்லாம உன்னோட காதல்ல மட்டும் வச்சு நான் என்னடி பண்றது" என்று கௌதம் கோபமாக கத்த....

ப்ரியா பயந்து விட்டாள். இப்ப என்ன சொல்ல போறான்னோ என்று கௌதம் முகத்தையே பார்க்க....

"இதுக்கு மேலையும் நாம பிரிஞ்சி இருந்தா... நீ எதாவது முட்டாள் தனமா யோசிப்பே... உனக்கு என்னோட இருக்கணும், அவ்வளவு தானே சரி இனிமே... நீ என்னோடவே இருக்கலாம்" என்று கௌதம் சொன்னதும்,

**ப்ரியா முகம் தாமரையாய் மலர.... அதை பார்த்த கௌதம் "நான் ஒன்னும் உன்னை ஆசையில கூப்பிடல... அதை ஞாபகம் வச்சுக்கோ. உன் தொல்லையும், உன்னோட பாட்டி தொல்லையும் தாங்காம தான் கூப்பிடுறேன்" என்றவன் ப்ரியாவின் பாகை எடுத்து தோளில் மாட்டி கொண்டு... அவள் கையை பிடித்து எழுப்பி நிறுத்தி... அவளோடு நடந்து கொண்டே "நான் நேத்து... உங்க பாட்டி பேசினத வச்சே... இனிமே உன்னை உங்க வீட்ல இருக்க விட கூடாது... நம்ம வீட்டுக்கு கூப்பிடனும்ன்னு தான் இருந்தேன்" என்று சொல்லிக்கொண்டே வாசலுக்கு சென்றான்.**

**அவன் சொன்னதை கேட்ட ப்ரியா.... கடவுளே ! கௌதமே கூப்பிடனும்ன்னு தான் இருந்தாங்களா.... நான் தான் இப்ப தேவை இல்லாம வார்த்தைய விட்டேனா.... திரும்பி மலை ஏறிட்டாங்க.... எப்ப இறங்க போறாங்களோ என்று நினைத்து கொண்டே அவனுடன் சென்றவள் "சாரி கௌதம்..." என்று சொல்ல....**

**அவள் புறம் திரும்பி நின்ற கௌதம், ப்ரியாவிடம் "இதை... நீ உணர்ந்து சொல்றியா ப்ரியா... எனக்கு தெரியும் இல்லைன்னு... நீ அன்னைக்கு செஞ்சது சரின்னு தான்... இப்பவரை உன் மனசுல நினைச்சிட்டு இருக்க... அது எப்ப உனக்கு உண்மையாவே தப்புன்னு தோணுதோ... அப்ப நீ சாரி கேளு..." என்றவன் அவளோடு வெளியே வர...**

**அங்கே ரயில் நிலைய வாசலில் முரளியும், கார்த்திக்கும் மட்டும் நின்று கொண்டிருந்தனர். மற்றவர்கள் எல்லாம் சுமோவில் சென்று விட்டதாகவும், இவர்களுக்கு அதில் இடம் இல்லை என்று**



Ramya Rajan

சொல்ல.... ஒரு டாக்ஸி அழைத்து அதில் இவர்கள் நால்வரும் ஏறி கிராமத்துக்கு சென்றனர்.

முரளிக்கும், கார்த்திக்கும்... கௌதமும், ப்ரியாவும் என்ன பேசினார்கள் என்று தெரியாது, கௌதம் முகத்தில் இருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை, ப்ரியா முகத்தை பார்த்தால் அவள் சந்தோஷமாக இருப்பது போலவும் இருந்தது... வருத்தமாக இருப்பது போலவும் இருந்தது... என்ன முடிவு செய்தனர் என்று கண்டுபிடிக்க முடியாமல் இருவரும் குழப்பத்தில் இருந்தனர்.

டாக்ஸி சென்று ராமமூர்த்தியின் வீட்டில் நிற்க... முரளியும், கார்த்திக்கும் அங்கே இறங்கி கொண்டனர். அப்பத்தா தான் கிருஷ்ணகுமார் வீடு கூட்டு குடும்பம்... ஆட்கள் அதிகம் என்று கார்த்திக் குடும்பத்தை அவர்கள் வீட்டில் தங்க சொல்லி இருந்தார். அதனால் கார்த்திக்கும் முரளியுடன் இறங்க... கௌதமும், ப்ரியாவும் இறங்கவில்லை.... வெளியில் நின்ற அப்பத்தா ப்ரியாவை பார்க்க...

கௌதம் "பாட்டி.... நீங்க என் பொண்டாட்டிய ஓசி சோறுன்னு சொல்லிடீங்க அதனால நான் இனிமே என் பொண்டாட்டிய... உங்க வீட்டுக்கு அனுப்ப மாட்டேன்" என்றான்.

அப்பத்தா "நல்லா... நீயே வச்சுக்க உன் பொண்டாட்டிய... இங்க யாரு கேட்டா.... ஆனா இன்னைக்கு ராத்திரி உங்க ரெண்டு பேருக்கும் இங்க விருந்து... அதுக்கு கண்டிப்பா வந்துரனும்" என்றார்.

***கௌதம் சரி என்று ப்ரியாவுடன் அவனது வீட்டுக்கு கிளம்ப... எல்லோரும் அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் விடை கொடுத்தனர்.***

***கௌதமும், ப்ரியாவும் அவர்கள் வீட்டின் முன்பு சென்று இறங்கியதும் சின்ன தாத்தாவின் மருமகள் அவர்களுக்கு ஆரத்தி எடுத்தே உள்ளே விட்டார். கௌதமும், ப்ரியாவும் சேர்ந்து வந்ததை பார்த்து கிருஷ்ணகுமாரும், சாருமதியும் சந்தோஷபட்டனர்.***

***கௌதம் கீழே அமர்ந்து வீட்டினருடன் பேசி கொண்டிருக்க... ப்ரியா மாடிக்கு சென்று குளித்து... புடவை கட்டி... அளவான நகைகள் அணித்து கீழே இறங்கி வந்தாள்.***

***அவள் முகத்தில் இருந்த ஒளி வட்டத்தை பார்த்து... எல்லோரும் கல்யாண கலை என்று நினைக்க... அது இன்று காலை கௌதம் என்னோட நம்ம வீட்லயே இரு என்று சொன்னதால் என்பது ப்ரியாவுக்கு மட்டுமே தெரியும். அவளுக்கு கௌதம் கோபமா சொன்னானா அல்லது விருப்பபட்டு சொன்னானா என்பதில் கவலை இல்லை.... அவன் தன்னோடு இரு என்று சொன்னதே போதும் என்ற மகிழ்ச்சியில் இருந்தாள்.***

***ப்ரியா தனது கணவனின் சின்ன தாத்தா வீட்டினருடன் நன்றாக ஒன்றி விட்டாள். அவர்களுடன் சேர்ந்து சிரித்து... பேசி அரட்டை அடிப்பதும், சமையல் செய்வதுமாக இருந்தாள். அவள் கௌதமை கண்டு கொள்ளவே இல்லை.***

Ramya Rajan

கௌதம்... கொஞ்சமாவது நம்மள கண்டுகிறாளா பாரு, ஆனா... உயிரை கொடுக்க மட்டும் ரெடியா இருப்பா என்று நினைத்தவன் எழுந்து குளிக்க சென்றான்.

கௌதமின் சின்ன தாத்தாவின் மருமகள் ப்ரியாவிற்கு அத்தை முறை அவர் ப்ரியாவிடம் "உன் புருஷன் குளிக்க போய் இருக்கு... நீ போய் டிரஸ் எடுத்து கொடு..." என்று சொல்ல...

ப்ரியா... கௌதம் இருந்த அறைக்கு செல்லாமல் சாருமதி இருந்த அறைக்கு சென்று உட்காரந்து விட்டாள். அவளுக்கு கௌதம் அறைக்கு செல்லவே பயமாக இருந்தது, அவன் இருக்கும் கோபத்தில் நாம மட்டும் அவன் கையில மாட்டினோம் கடிச்சு வச்சிடுவான் என்று நினைத்தாள்.

கௌதம் குளித்து வந்ததும்... அனைவரும் சேர்ந்து ஒன்றாக உணவு அருந்தினார்கள். பின்பு ரயிலில் வந்த அலுப்பு இருந்ததால் எல்லோரும் தூங்க செல்ல... கௌதமின் சித்தி ப்ரியாவை கௌதமோடு சென்று சிறிது நேரம் தூங்க சொன்னார்.

இவங்க எதுக்கு என் மேல இவ்வளவு கொலை வெறியில இருக்காங்க என்று நினைத்த ப்ரியா "நான் ட்ரைன்ல நல்லா தூங்கிட்டேன்... எனக்கு தூக்கம் வரலை" என்று அவர்களுடன் சேர்ந்து மதியம் சமையல் செய்தாள்.

மதியம் சாப்பிட்டதும் கௌதம், கார்த்திக்கோடு வெளியே சுற்ற செல்ல ப்ரியா அவன் இல்லாத நேரம் தூங்கி எழுந்தாள். சாயந்திரம் கௌதமோடு ப்ரியா கோவிலுக்கு சென்றாள். இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசவில்லை வழியில் பார்த்த... அந்த ஊர்காரர்கள் அவர்கள் கல்யாணத்தை பற்றி விசாரிக்க... ப்ரியா இப்ப தான் அண்ணன் கல்யாணம் முடிஞ்சதால... எங்க கல்யாணம் சிம்பிள்லா பண்ணோம் என்று சொல்ல... அவர்கள் அவளை நம்பாத பார்வை பார்த்தனர்.

கௌதம் "உன்னை யாரு...? விளக்கம் எல்லாம் சொல்ல சொன்னா... பேசமா வா..." என்று சொல்ல... ப்ரியா அதன்பிறகு கேட்டவர்களிடம் வெறும் சிரித்து மழுப்பினாள்.

கோவிலில் இருந்து திரும்பி வரும் போது... ப்ரியா அங்கிருந்த வளையல் கடையை பார்த்து... தனக்கு கண்ணாடி வளையல் வேண்டும் என்று கேட்க....

கௌதம் "சரி...வாங்கிக்கோ" என்றான்.

ப்ரியா தங்க நிற கண்ணாடி வளையல்கள்... இரு கையிலும் ரெண்டு டசென் வாங்கி போட்டு கொண்டாள்.

இவ எதுக்கு இப்ப வளைகாப்பு மாதிரி கையில வளையல் அடுக்குறா என்று நினைத்த கௌதம், ப்ரியாவிடம் ஒன்றும் கேட்கவில்லை....

இரவு ப்ரியா அவர்கள் வீட்டுக்கு விருந்துக்கு சென்ற போது முரளியும், கார்த்திக்கும் ப்ரியாவை மாடிக்கு அழைத்து சென்று... காலையில் ரயில் நிலையத்தில் என்ன நடந்தது என்று கேட்க....

ப்ரியா நடந்ததை சொல்ல.... தலையில் அடித்த கார்த்திக் "இப்படியா பேசி வைப்ப... அவன் இப்ப தான் சரி ஆகிட்டு இருந்தான்... மறுபடியும் அவனுக்கு எத சொன்னா கோபம் வருமோ... அதை சொல்லி வச்சிருக்க... உன்னை என்ன பண்றது ?" என்று கோபபட...

முரளி "உன்னோட... கௌதம் சேரனும்ன்னு தான், நாங்க எல்லாம் சரியா பேசாம இருந்தோம். என்னை வேற என்ன பண்ண சொல்ற ப்ரியா ? கௌதமோட சண்டைக்கு போக சொல்றியா... நீ என் தங்கச்சியோட இல்லைனா... எனக்கும் உன்னோட தங்கச்சி வேண்டாம்ன்னு சொல்லி இருக்கனுமா நான், நீயே சொல்லு...." என்று கேட்க....

ப்ரியா "இல்லைணா... நீங்க செஞ்சது சரி தான். நான் தான் தெரியாம பேசிட்டேன்" என்றாள்.

"உனக்கு ஒன்னும் தெரியாது... பக்கம் பக்கமா மத்தவங்களுக்கு அட்வைஸ் பண்ண மட்டும் தெரியும்" என்று கார்த்திக் திட்டினான்,

முரளி "கௌதம்... சொன்ன மாதிரி, நீ செஞ்சது தப்புன்னு... நீ



Ramya Rajan

இன்னும் உணரலை ப்ரியா, நீ செஞ்சது நினைச்சு... அவன் எவ்ளோ வேதனை பட்டான்" என்று சொல்ல...

ப்ரியா கண் கலங்கி நின்றாள். அப்போது கீழே இருந்து கௌதம் "ப்ரியா..." என்று குரல் கொடுக்க.... ப்ரியா கண்ணை துடைத்துவிட்டு கீழே இறங்கி சென்றாள்.

"வா... நம்ம வீட்டுக்கு போகலாம்" என்று கௌதம் ப்ரியாவை அழைக்க ப்ரியா அவனோடு சென்றாள்.

கௌதம் கீழே அமர்ந்து பேசிக்கொண்டு இருக்க... ப்ரியா அவன் வருவதற்குள் தூங்கி விட வேண்டும் என்று வேகவேகமாக உடைகளை மாற்றிவிட்டு... கட்டிலில் தள்ளி சென்று படுத்தாள்.

கௌதம்... மாடிக்கு வந்த போது ப்ரியா நன்றாக உறங்கி கொண்டு இருந்தாள். கதவை தாளிட்ட கௌதம் ப்ரியாவை பார்க்க... ப்ரியா நைட்டி அணிந்து இருந்தாள். அவள் கால் பகுதியில் உடை லேசாக தூக்கி இருக்க... அவள் உள்ளே பான்ட் அணிந்து இருப்பது தெரிந்தது. ஒரு பக்கமாக திரும்பி படுத்திருந்தவள்... ரொம்ப வெக்கையாக இருந்ததால்... போர்வையால் மூடாமல்.... அவள் மேல் ஒரு துண்டை போட்டிருந்தாள்.

ப்ரியா எப்போதும் உடைகள் விஷயத்தில் மிகவும் கவனமாக இருப்பாள். கௌதம் இத்தனை ஆண்டுகளில் ஒரு முறை கூட அவள் உடை விலகி பார்த்தது இல்லை... எப்போதும் ஒரு நேர்த்தியுடன்

**உடை அணிவாள். அவள் இப்போது தனி அறையில் தூங்கும் போதும் அப்படியே இருப்பதை பார்த்து கௌதமிற்கு வியப்பாக இருந்தது.**

**தானும் உடை மாற்றிவிட்டு கட்டிலில் வந்து ப்ரியாவின் அருகில் படுத்த கௌதம், அவள் இடது கையை எடுத்து காயத்தை பார்க்க... அவள் நிறைய வளையல்கள் போட்டிருந்ததாள் காயத்தை பார்க்க முடியவில்லை....**

**கௌதமிற்கு இப்போது புரிந்தது... அவள் எதற்கு இவ்வளவு வளையல்கள் வாங்கி கையில் அடுக்கினாள் என்று, தான் அந்த காயத்தை பார்க்க கூடாது என்று தான் வளையல் போட்டிருக்கிறாள் என்று நினைத்தவன் "நீ செய்த செயல் என் மனசுல பெரிய காயமா இருக்கே... அதுக்கு என்ன ப்ரியா செய்ய போற ?"என்று தனக்குள் கேட்டு கொண்டே தூங்க தொடங்கினான்.**

40

**நடு இரவில்... சில நாட்களாக விழிப்பு வருவதை போல்... கௌதமிற்கு அன்றும் விழிப்பு வர...எழுந்து அமர்ந்தவன்... பக்கத்தில் படுத்திருந்த ப்ரியாவை பார்க்க... அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.**

Ramya Rajan

படுத்த போது... எப்படி படுத்திருந்தாளோ..... அதே போல் இப்போதும் படுத்திருந்தாள். சிறிது நேரம் கௌதம் அவளையே பார்த்து கொண்டிருந்தான். தூக்கத்தில் லேசாக சிரித்த ப்ரியா... சிறிது நேரத்தில் அழுதாள்... அவள் அழுதவுடன் கௌதம் பதறி ப்ரியா என்று அழைத்து அவள் மீது கை வைத்ததும்... ப்ரியாவின் அழுகை நின்றது ஆனால் சிறிது நேரம் தேம்பிக்கொண்டே இருந்தாள். அவள் தூக்கத்தில் இருந்து விழிக்கவில்லை அதை பார்த்த கௌதம் தன்னுடைய கோபம் அவளை ரொம்ப பாதிக்குதோ என்று யோசித்தான்.

இவளை கோபப்பட்டு வருத்துவதால் மட்டும் நடந்தது இல்லை என்றாகிவிடுமா... இன்னும் இருவரின் நிலைமையும் மோசமாக தான் ஆகும்... ப்ரியா ரொம்ப உடைந்து விடுவாள். இப்பவே ஆள் ரொம்ப இளைத்து விட்டாள் என்று வருந்தினான்.

ப்ரியாவுக்கு எதுவும் ஆகலைன்னு சந்தோஷ படாம... எதுக்கு நடக்காத ஒன்ன நினைச்சு... நாமும் வருந்தி... ப்ரியாவையும் வருத்தனும், அதற்க்கு இனி அவளுடன் இயல்பாக நடந்து... அவளுக்கு அவள் செய்தது தப்பு என்று புரியவைக்க வேண்டும் என்ற நினைத்தான். அதை பற்றியே சிறிது நேரம் யோசித்து விட்டு மீண்டும் தூங்கினான்.

கௌதம் இதுவரை ப்ரியா எப்படி தன்னை பற்றி நினைக்காமல் இப்படி ஒரு முடிவு எடுத்தாள் என்று மட்டும் யோசித்தவன், இப்போது தான் அதிலிருந்து வெளி வந்து வேறு மாதிரி சிந்திக்க ஆரம்பித்தான்.

Ramya Rajan

***மறு நாள் காலையில் குல தெய்வ கோவிலுக்கு போவதால் விடியற்காலை 5 மணிக்கு எழுந்த ப்ரியா.... தன் அருகில் தூங்கும் கௌதமை பார்த்தவள்... தூங்கும் போதும் அழகா இருக்கான் ரவுடி ! என்று மனதிற்குள் தன் கணவனை கொஞ்சியவள்... நல்லவேளை நேத்து எழுப்பி திட்டலை என்று நினைத்து கொண்டே... அவனை தாண்டி செல்ல... தடுக்கி அவன் மேலேயே விழுந்தாள்.***

***திடுக்கிட்டு விழித்த கௌதமிற்கு... அவன் மேல் திருட்டு முழியுடன் படுத்திருக்கும் ப்ரியாவை... பார்த்ததும் சிரிப்பு வந்தது... ஆனால் அதை மறைத்து கொண்டு "என்னடி பண்ற ? ஒரு வயசு பையனுக்கு இந்த நாட்ல பாதுகாப்பே இல்லை...." என்றதும்,***

***அவன் மேல் இருந்து வேகமாக எழுந்த ப்ரியா "தெரியாம விழுந்திட்டேன்..." என்றவள் இரவே எடுத்து வைத்துவிட்டு படுத்திருந்த உடைகளை எடுத்து கொண்டு குளிக்க சென்றாள்.***

***கௌதம் கீழே வந்த போது ப்ரியா வாசலில் கோலம் போட்டு கொண்டிருந்தாள். அவன் சென்று சின்ன தாத்தா பக்கத்தில் அமர... அங்கே வந்த அவனது சித்தி "நீ... லவ் பண்ணி கல்யாணம் பண்ணாலும் சூப்பரான்ன... பொண்ண தான் கல்யாணம் பண்ணி இருக்க... அழகு இருக்கிற இடத்தில அடக்கம் இருக்காது... ஆனா... உன் பொண்டாட்டியிடம் ரெண்டுமே இருக்கு... எல்லோர்கிட்டயும் பிரியமா இருக்கா" என்று ப்ரியாவை பற்றி புகழ....***

***அவர் சொல்வதை புன்னைகையுடன் கேட்ட கௌதம் ப்ரியாவை மாட்டிவிட எண்ணி "என்ன இருந்து என்ன... புருஷன ஒழுங்கா***



Ramya Rajan

**கவனிக்க மாட்றாளே..." என்றதும்,**

**"என்ன கவனிக்கலை....?" என்று அவனது சித்தி கேட்க....**

**"பாருங்க... நான் தூங்கி எழுந்து எவ்வளவு நேரம் ஆகுது... ஒரு காபி குடுத்தாளா... நேத்து நான் மாடிக்கு போறதுக்கு முன்னாடியே மேடம் தூங்கிட்டாங்க... இது தான் புருஷனை கவனிக்கும் லட்ச்சனமா" என்று கௌதம் ப்ரியாவை போட்டு கொடுக்க....**

**அப்போது கோலம் போட்டு விட்டு உள்ளே வந்த ப்ரியாவிடம் கௌதமின் சித்தி "நேத்து... உன்கிட்ட கௌதமுக்கு பால் குடுத்து விட்டேனே... அத அவனுக்கு குடுக்கலையா..." என்றதும்...**

**"அவங்களுக்கா குடுத்தீங்க.... எனக்குன்னு நினைச்சு... நான் குடிச்சிட்டேன்" என்று ப்ரியா பாவமாக சொல்ல...**

**இவளிடம் குடுத்துவிட்டீங்களா... நல்லா குடுப்பாலே என்று நினைத்த கௌதம், அவன் சித்தியிடம் பார்த்துக்கோங்க என்று ஜாடை காட்ட....**

**அவர் ப்ரியாவிடம் "சரி நீ போய்.... கௌதமுக்கு குடிக்க காபி போட்டு கொண்டு வா" என்று அவளை உள்ளே அனுப்பியதும்....**

சின்ன தாத்தா அவரது மருமகளிடம் "வேண்டாம்.... இவன் பேச்சை நம்பாத... இவன் எனக்கே தண்ணி காட்னவன்" என்று சொல்ல....

கௌதம் "என்ன தாத்தா...? அன்னைக்கு நடந்ததையே நினைச்சிட்டு இருக்கீங்க நான் ரொம்ப நல்ல பையன்" என்றான். அப்போது ப்ரியா கையில் காபியுடன் வந்தவள், அதை கௌதமிடம் கொடுக்க.... அதை அவன் ரசித்து குடித்தான்.

கௌதம் காபி குடித்துவிட்டு குளிக்க செல்ல... அவனது சித்தி ப்ரியாவை கூட போ என்று பிடித்து தள்ள... இவன் கூட நான் எதுக்கு போகணும் என்று நினைத்து கொண்டே சென்றவள்... நைசாக சாருமதியின் அறைக்குள் நுழைய... கீழே இருந்து அவளை பார்த்து கொண்டிருந்த சித்தி "ப்ரியா எங்க போற...?" என்றதும் ப்ரியா வேகமாக கௌதம் இருந்த அறைக்குள் சென்றாள்.

கௌதம் சிரித்து கொண்டே குளிக்க சென்றான். அவன் குளித்துவிட்டு வருவதற்குள் ப்ரியா பட்டு சேலை கட்டி... தலைவாரி கோவிலுக்கு செல்ல ரெடியாக இருந்தாள். எப்போதும் போல் அவளது அழகு மனதை கொள்ளை அடிக்க... அவளை குளியல் அரை வாசலில் நின்று கௌதம் ரசித்து கொண்டு இருந்தான்.

ப்ரியா கௌதமை பார்த்ததும் வெளியே செல்ல பார்க்க.... அவளை நில் என்ற கௌதம் "என்ன...? நேத்துல இருந்து ஓடிட்டே இருக்க.... இதுக்கு முன்னாடி.... நாம தனியா இருந்ததே இல்லையா.... அப்ப

Remya Rajan

எல்லாம் நொச்சு நொச்சுன்னு எத்தனை முத்தம் குடுத்திருப்ப... இப்ப என்ன புதுசா..." என்றவன், இரு சேர்ந்து போகலாம் என்று உடைகளை எடுத்து அணிந்தான்.

அவன் பேசியதில் முகம் சிவந்த ப்ரியா... இவன் எப்ப எந்த மூட்ல இருக்கான்னே தெரிய மாட்டேங்குது என்று நினைத்து கொண்டு அமர்ந்திருந்தாள்.

கௌதம் ரெடி ஆனதும்... இருவரும் சேர்ந்து கீழே சென்றனர். அங்கே ப்ரியாவின் குடும்பத்தினர் வந்திருந்தனர். சிரித்த முகமாக கௌதமும், ப்ரியாவும் சேர்ந்து வருவதை பார்த்ததும் எல்லோரும் சந்தோஷபட்டனர்.

கோவிலுக்கு இரண்டு வேன்னில் கிளம்ப... ப்ரியா தன்னுடைய புகுந்த வீட்டினர் இருந்த வேன்னில் சென்று ஏறினாள். சின்ன தாத்தாவின் மூன்று பிள்ளைகள்... மறுமகள்கள்... பேர பிள்ளைகள் என்று வேன்னே நிரம்பி வழிய... கடைசி சீட்டில் ப்ரியா கௌதமோடு நெருங்கி அமர்ந்திருந்தாள்.

கௌதம் அவளது இடையை சுற்றி கையை போட... ப்ரியா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளை பார்த்து கண் சிமிட்டியவன் " என்னடி பார்க்கிற... நீ தான... என் கூட இருக்க ஆசைபட்ட... அப்புறம் கல்யாணம் பண்ணா... இதெல்லாம் இல்லாமையா... கல்யாணம் பண்ணி உன்னை பக்கத்தில வச்சு... சும்மா பார்த்துகிட்டு மட்டும் இருக்க முடியுமா..." என்றான்.

Ramya Rajan

***குண்டும்... குழியுமாய் இருந்த ரோட்டில்... வேன் சென்றதால் எல்லோரையும் தூக்கி போட... ப்ரியா சீட்டில் உட்கார முடியாமல் நழுவி விழ... கௌதம் அவளை தூக்கி தனது மடியில் உட்கார வைத்து இறுக்கி பிடித்து கொண்டான்.***

***ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் ராகவனை குடும்பத்துடன் தங்களுடன் கோவிலுக்கு வரும்படி அழைத்து இருந்ததால் அவர்களும் வந்திருந்தனர். கார்த்திக்கும், மிதுவும் பார்வையாலயே தங்கள் காதலை பரிமாறிக்கொள்ள... அதை பார்த்து முரளியும், ஷ்ருதியும் கேலி செய்தனர்.***

***அனைவரும் கோவிலுக்கு சென்று சேர்ந்ததும்.... அங்கே கௌதமையும், ப்ரியாவையும் சாமி முன்பு மனையில் உட்கார வைத்து... மாலை மாற்ற சொல்லி... கௌதமை ப்ரியாவின் தாலியிலும்...நெற்றியிலும் குங்குமம் வைக்க சொல்ல... அவனும் அவர்கள் சொன்னபடி செய்தான்.***

***பெரியவர்கள் அனைவருக்கும் இவர்கள் கல்யாணம் நல்ல நாளில் நடவில்லையோ... அதனால் தான் இருவருக்கும் பிரச்சனை வருகிறதோ என்று நினைத்ததால்... நல்ல முகுர்த்த நாளான இன்று குல தெய்வ கோவிலில் வைத்து மாலை மாற்ற வைத்தனர்.***

***கௌதம் பட்டு வேஷ்ட்டி சட்டையிலும், ப்ரியா பட்டு புடவையிலும் எல்லோரது கண்களையும் நிறைக்க... கார்த்திக் அவர்களை***

போட்டோ எடுத்து கொண்டிருந்தான்.

நல்லபடியாக இரு குடும்பத்தின் குல தெய்வ கோவிலிலும் பொங்கல் வைத்து சாமி கும்பிட்டுவிட்டு... அங்கே அமர்ந்து பேசும் போது கிருஷ்ணகுமார், ராகவனை தனியாக அழைத்து சென்று கார்த்திக்கும், மிதுவும் விரும்புவதாக சொன்னவர், கார்த்திக்கின் பெற்றோர் மிதுவை பெண் கேட்கவே வந்திருப்பதாக சொல்லவும்... ராகவன் யோசிக்க ஆரம்பித்தார். அவர் யோசிக்கட்டும் என்று அவரை தனியாக விட்டு விட்டு சென்றார் கிருஷ்ணகுமார்.

ராகவன் அருகில் ப்ரியாவோடு சென்ற கௌதம் "என்ன மாமா யோசிக்ரீங்க...?" என்றதும் "எனக்கு கார்த்திக்கை பிடிக்கும் தான்... ஆனா என் பொண்ண அவனுக்கு கொடுக்கும் அளவுக்கு பிடிக்குமான்னு தெரியலை..." என்றார்...

ப்ரியா முகம் வாடிவிட்டது. அவள் கையை பிடித்து அழுத்திய கௌதம் ராகவனிடம் "இதே மிதுவ... எனக்கோ... முரளிக்கோ... கேட்டிருந்தா கொடுத்திருப்பீங்களா..." என்று கேட்க...

"கண்டிப்பா..." என்றார் ராகவன்.

"அப்ப... நீங்க தாராளமா கார்த்திக்கு கொடுக்கலாம். அவன் எங்க ரெண்டு போரையும் விட நல்லவன். மிதுவ ரொம்ப நல்லா பார்த்துக்குவான். நல்ல குடும்பம்... உங்க பொண்ணுக்கு வர்ற நல்ல

**வாழ்க்கைய வேண்டாம்ன்னு சொல்லிடாதீங்க" என்று கௌதம் கார்த்திக்காக வாதாடினான்.**

**"கார்த்திக் அண்ணா... மாதிரி ஒரு மாப்பிள்ளை உங்களுக்கு தேடினாலும் கிடைக்காது. ப்ளீஸ்... வேண்டாம்ன்னு சொல்லாதீங்க" என்று ப்ரியா அவரிடம் கெஞ்ச....**

**ராகவன்... திரும்பி மிதுவையும், கார்த்திக்கையும் பார்த்தார். இருவரும் அவர் என்ன சொல்ல போகிறார் என்று தவிப்புடன் காத்திருப்பது தெரிந்தது. அப்போது அங்கே வந்த ஷ்ருதி "பேசாம... கேட்க்கும் போதே பொண்ண குடுத்திடுங்க, இவனுங்க ரெண்டு பேரும் கேடிங்க... நீங்க மாட்டேன்னு சொன்னா... இப்பவே கல்யாணத்தை முடிச்சிடுவாங்க. நாம கோவில்ல வேற இருக்கோம்" என்றாள்**

**"எப்படி ஷ்ருதி ! இப்படி புத்திசாலியா இருக்க..." என்ற கௌதமின் பேச்சில் இருந்தே... தான் கல்யாணத்துக்கு மறுத்தால் ஷ்ருதி சொல்லறது போல் தான் நடக்கும் என்று மறைமுகமாக கௌதம் சொன்னதை புரிந்து கொண்ட ராகவனுக்கு, ஏற்கனவே கௌதம், ப்ரியா கல்யாணத்தை பற்றி தெரியும் என்பதால்.... நாம நம்ம மரியாதையை காப்பாத்திக்க்வோம் என்று நினைத்தவர்,**

**நேராக கார்த்திக்கின் அப்பா ரவியிடம் சென்று தனக்கு இந்த கல்யாணத்தில் சம்மதம் என்று சொல்ல.... எல்லோரும் சந்தோஷ கூச்சல் போட்டனர்.**

Ramya Rajan

கார்த்திக் வேகமாக வந்து கௌதமை தூக்கி சுற்றினான்.

ஷ்ருதி "இவனுகளுக்கு... இதே வேலையா போச்சு... நாம சந்தேக பட்டது சரி தான் போல... இவங்க ரெண்டு பேரு அவங்க தான் போல..." என்று சத்தமாக புலம்ப... அதை கேட்ட முரளி ஷ்ருதியின் காதை பிடித்து திருகினான்.

ஷ்ருதி "விடுங்க வலிக்குது..." என்று சொல்ல... "இனிமே உன்னை விடவே மாட்டேன்" என்ற முரளி... ஷ்ருதியை தோளோடு சேர்த்து அனைத்து கொண்டான்.

நாளை மறு நாள் கார்த்திக்கும், மிதுவுக்கும் நிச்சயம் என்று முடிவு செய்தனர். கல்யாணம் பெண் ஊரிலேயே நடத்துவது தான் வழக்கம் என்று கிராமத்தில் கல்யாணம் செய்ய முடிவு செய்தவர்கள், ஷ்ருதி தானும், முரளியும் கார்த்திக் கல்யாணத்திற்கு கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று ஆசைபட்டதால்அவர்கள் ப்ரான்ஸ் போவதற்குள் வைக்க வேண்டும் என்று அடுத்த மாதத்திலேயே அதாவது கௌதம் ப்ரியா வரவேற்ப்புக்கு மறு வாரத்தில் இருந்த தேதியை கார்த்திக் மிது திருமணத்திற்காக குறித்தனர்.

எல்லாம் பேசி முடித்து தெளிவான சந்தோஷத்தில் மனதில் நிம்மதியுடன் அனைவரும் வீட்டுக்கு திரும்பினர்.

அன்று முழுவதும் கௌதமையும், ப்ரியாவையும் கவனித்து கொண்டிருந்த கௌதமின் சித்தி, சாருமதியிடம் பேச்சு கொடுக்க அவர் நடந்த விஷயத்தை சொன்னார்.

கௌதம்... ப்ரியா... இருவரும் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கும் அன்பை பற்றி தெரிந்து கொண்டவரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. இவர்கள் துன்பத்தை இன்றோடு ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று நினைத்தவர்.

"நீ தான் இந்த குடும்பத்தோட மூத்த பேரன்... உன்னோட வாரிசு நம்ம வீட்ல உருவாகனும் கௌதம்" என்று சொல்ல... கௌதமிற்கு அவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரிந்தது.

அன்று இரவு ப்ரியாவிற்கு தலை நிறைய பூ வைத்து... அவள் கையில் ஒரு பால் டம்ளரை கொடுத்து... இது உங்க ரெண்டு பேருக்கும்... நீ மட்டும் குடிச்சிடாத என்று சொல்லி கௌதமின் சித்தி ப்ரியாவை அவர்கள் தங்கி இருந்த அறைக்கு அனுப்பினார்.

உள்ளே வந்த ப்ரியா கதவை தாளிட்டுவிட்டு கௌதமை தேட... அவன் ஜன்னல் அருகில் நின்று வெளியே வேடிக்கை பார்த்து கொண்டிருந்தான். ப்ரியாவிற்கு கௌதம் எந்த நினைப்பில் இருக்கிறான் என்று தெரியாததால்... பால் டம்ளரை டேபிளில் வைத்துவிட்டு மெதுவாக கட்டிலில் ஏறி படுத்தாள்.

சிறிது நேரம் கழித்து திரும்பிய கௌதம்... ப்ரியா அங்கே கட்டிலில்

படுத்திருப்பதை பார்த்தான்.

"ஹலோ மேடம்... என்ன பண்றீங்க ?.."

"தூங்குறேன்..."

அவள் சொன்ன பதிலில் சிரித்த கௌதம் "உங்களை... இந்த ரூம்குள்ள அனுப்பினவங்க... ஒழுங்கா உங்களுக்கு விதி முறை சொல்லி அனுப்பலைன்னு நினைக்கிறன், நீ... எத்தனை சினிமால பார்த்திருக்க போ... போய் முதல்ல இருந்து வா..." என்றான்.

ப்ரியா எழுந்து கதவின் அருகே செல்ல, கௌதம் "மேடம் பால் டம்ளரை எடுத்திட்டு போங்க..." என்றான்.

ப்ரியா டம்ளரோடு மறுபடியும் கதவின் அருகே சென்று திரும்பி வந்தவள்... கௌதமின் அருகே சென்று நின்று... அவன் கையில் பால் டம்ளரை கொடுத்துவிட்டு... அவன் கால்களில் விழ... அவள் பாதி விழும் போதே.... அவளை தூக்கி பிடித்தவன்... டம்ளரை வைத்துவிட்டு அவளை இறுக அணைத்துக்கொண்டான்.

இருவரும் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை, கௌதம் அவளை முத்தமிட ஆரம்பித்ததும் ப்ரியா "நீங்க கோபமா இருந்தீங்களே..." என்று கேட்க...

***"இப்பவும் கோபமா தான் இருக்கேன்... இனிமே சண்டைய பகல்ல வச்சுக்கலாம்... நைட் வேண்டாம்" என்றவன் அவளோடு கட்டிலில் சரிய... அப்போது தான் ப்ரியாவிற்கு ஆயிரம் சந்தேகம் வந்தது,***

***"நான் இன்னும் படிச்சு முடிக்கலையே...கௌதம்."***

***"இன்னும் ரெண்டு மாசம் தான ப்ரியா இருக்கு... அதுவும் இப்ப இண்டர்ஷிப் தான் நடக்குது.... இனிமே நீ பரிட்ச்சைக்கு போனா போதும் அப்புறம் என்ன ?.... மூன்னு வருஷம் வாங்காத கோல்ட் மெடல்ல... நீ இந்த வருஷமா வாங்க போற... எப்பவும் போல பர்ஸ்ட கிளாஸ் வாங்கு போதும்..."***

***"நம்ம வீட்ல போய்..." என்று ப்ரியா இழுக்க...***

***"இது தாண்டி நிஜமாவே நம்ம வீடு... இது நம்ம முன்னோர்கள் வாழ்ந்த வீடு... எங்க அப்பா பிறந்த வீடு..." என்ற கௌதம் ப்ரியாவை தழுவிக்கொண்டான்.***

***"எனக்கு பயம்மா இருக்கு கௌதம்."***

***"நாம எட்டு வருஷமா லவ் பண்றோம்.... எதோ இப்ப தான் என்னை புதுசா தெரியிற மாதிரி பயமா இருக்காம், ஓத வாங்க போற ப்ரியா..." என்ற கௌதம் அவள் இதழ்களில் அழுந்த***



Ramya Rajan

முத்தமிட்டான்.

"ஜன்னல் திறந்திருக்கு..." என்று ப்ரியா அடுத்து ஆரம்பிக்க, கௌதம் "அந்த பக்கம் வீடே இல்லடி... அதுவும் இல்லாம திரை தான் போட்டிருக்கே..." என்றான். ஆனால் ப்ரியா சிணுங்க... கௌதம் சென்று ஜன்னலை சாத்திவிட்டு வந்தவன்... அவளிடம் தன் தேடலை தொடங்க...

அடுத்து லைட் வேண்டாம் என்று ப்ரியா சொல்ல... கௌதம் சென்று லைட்டை ஆப் பண்ணிவிட்டு இரவு விளக்கை போட.... அதற்கும் ப்ரியா சிணுங்க... கௌதம் அவளுக்கு சமாதானம் சொன்னான். இப்படியே கௌதம் ஒவ்வொன்றுக்கும் அவளிடம் போராடி களைத்தவன்...

"ப்ரியா... எனக்கும் இது தாண்டி முதல் ராத்திரி... எதோ எனக்கு மட்டும் முன்னாடியே அனுபவம் இருக்கிற மாதிரி... என்னை போட்டு படுத்துற, இதுக்கு மேல எதாவது படுத்தின... நீயும் வேண்டாம் முதல் ராத்திரியும் வேண்டாம்ன்னு போயிடுவேன்" என்று கௌதம் மிரட்ட....

ப்ரியா அவனிடம் அடங்கினாள். விடியற்காலையில் தான் இருவரும் தூங்கினர்.

ப்ரியாவும், கௌதமும் காலை உணவிற்கு பிறகு அப்பத்தா வீட்டிற்க்கு சென்றனர், அங்கே ப்ரியா முகத்தில் இருந்தே

எல்லோருக்கும் விஷயம் புரிந்தது.

கௌதம், ப்ரியாவின்... பெற்றோர்கள் வரவேற்ப்பு பத்திரிக்கையை சொந்தங்களுக்கு கொடுப்பதற்காக சென்றிருந்தனர்.

மாடியில் இருந்த அறையில் கௌதம், முரளி மற்றும் கார்த்திக் அமர்ந்து பேசி கொண்டிருந்த போது "உன்னோட கோபம் போயிடுச்சா... நீ... ப்ரியாவ மன்னிச்சிட்டியா..." என்று கார்த்திக் கௌதமிடம் கேட்க....

"கோபம் மன்னிக்கிறது அதெல்லாம் விடு... வாழ்கையில எந்த பிரச்சனை வந்தாலும் அத பாசிடிவ்வா யோசிக்கிறது தான் எனக்கு பிடிக்கும்.... இப்பவும் என்னால ப்ரியா செஞ்சத ஒத்துக்க முடியாது எதோ அவ தெரியாம செஞ்சது... நல்லவேளை வினையா முடியல... அவ செஞ்சது தப்புன்னு அவ உணர்ந்து... வருங்காலத்தில அவ யோசிச்சு முடிவு எடுத்தா... எனக்கு அதே போதும்" என்று கௌதம் சொல்ல... முரளியும் அதை ஆமோதித்தான்.

அப்போது ப்ரியாவும், ஷ்ருதியும் வர... ப்ரியாவை பார்த்ததும் கௌதமின் பார்வை மாறியது. சிறிது நேரம் எல்லோரும் சேர்ந்து அரட்டை அடித்தனர்.

கௌதம் ஷ்ருதியிடம் மெதுவாக "உன் புருஷனை கூடிட்டு இடத்தை காலி பண்ணு..." என்று சொல்ல...

ஷ்ருதி... கௌதமை முறைத்தவள் "வாங்க முரளி... உங்களை கீழ கூப்பிட்டாங்க" என்று முரளியை இழுத்து கொண்டு வெளியே சென்றாள். முரளி ஷ்ருதியை சந்தேகமாக பார்க்க ....ஷ்ருதி கௌதமை ஜாடை காட்ட.... புரிந்து கொண்ட முரளி ஷ்ருதியுடன் கீழே செல்லாமல் அடுத்த அறைக்குள் சென்று கதவை சாற்றினான்.

கௌதம் கார்த்திக்கிடம் "மிது... உன்னை போன் பண்ண சொன்னா..." என்றதும்

"உனக்கு போன் பண்ணி.... என்னை போன் பண்ண சொன்னாளா... இந்த ரீல் சுத்துற வேலை எல்லாம் வேற எங்கையாவது வச்சுக்கோ..." என்ற கார்த்திக் வேண்டுமென்றே அங்கேயே இருக்க...

கௌதம் "அப்பத்தா... எதோ கடைக்கு போனும்ன்னு சொன்னீங்களே கார்த்திக் ப்ரீயா தான் இருக்கான்... கூடிட்டு போங்க..." என்று சத்தமாக குரல் கொடுக்க...

"ஆள விட்ரா சாமி..." என்று கார்த்திக் அலறி கொண்டு வெளியே ஓடியவன்... இருங்கடா அடுத்த மாசத்தில இருந்து நானும் பிஸியா இருப்பேன் என்றான்.

கதவை சாற்றிவிட்டு வந்த கௌதம் "நான் உன்னை கூடிட்டு

**கொடைக்கானல் போகலாம்ன்னு நினைச்சேன், ஆனா... உன்னோட வீட்லயே நான் போராட வேண்டியதா இருக்கு... இதுல ஹோட்டல் ரூம்ல உன்னை வச்சு சமாளிக்க முடியாது..." என்றவன் ப்ரியாவை தன் அருகில் இழுக்க....**

**ப்ரியா "இப்பவா.... ரொம்ப வெளிச்சமா இருக்கே..." என்று ஆரம்பிக்க... கௌதம் மீண்டும் ஒவ்வொன்டிர்க்கும் அவளிடம் போராடி.... கடைசியில் அவனே வெற்றி பெற்றான்.**

41

**மூன்று ஆண்டுகளுக்கு பிறகு...**

**சென்னை விமான நிலையம், ப்ரான்சில் இருந்து வந்து தரை இறங்கிய விமானத்தில் இருந்து வெளியே வந்த...முரளியின் கையில் அவனுடைய மகன் சித்தார்த் இருக்க... அவன் அருகில் ஏற்கனவே பார்பி டால் மாதிரி இருக்கும் ஷ்ருதி... மூன்று ஆண்டுகள் வெளிநாட்டில் இருந்ததால்... இன்னும் மெருகேறி இருந்தவள் ஸ்டைலாக நடந்து வந்தாள்.**

**அவர்களின் பெட்டிகளை எடுத்து கொண்டு திரும்பியவர்கள், அங்கே இருக்கையில் தனியாக அமர்ந்து பிஸ்கட் சாப்பிட்டு கொண்டு இருந்த பெண் குழந்தையை பார்த்ததும், எங்கையோ பார்த்தது போல் இருக்கே என்று அதன் அருகில் சென்றனர்.**

***பால் போல் வெள்ளை நிறமும், குண்டு கண்ணமும், அழகான வட்ட முகத்தில் பெரிய கண்களுமாக, கொழுக் மொழுக் என்று அழகுக்கே இலக்கணமாக இருந்தது அந்த குழந்தை.***

***அந்த குழந்தைக்கு பக்கத்து இருக்கையில் வேறு ஒரு பெண் அமர்ந்து இருந்ததால் குழம்பியவர்கள்.... சிறிது நேரம் அந்த குழந்தையே பார்த்து கொண்டிருக்க, சாப்பிடுவதிலேயே தீவிரமாக இருந்த குழந்தை, தன் அருகில் யாரோ நிற்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்க்க...அங்கே நின்ற முரளியை பார்த்ததும் குழந்தை "மாமா "என்று மழலையில் கூப்பிட்டது...***

***தன்னுடைய மகனை ஷ்ருதியின் கையில் கொடுத்துவிட்டு குழந்தையை, வாரி அணைத்து கொண்டான் முரளி. தன் தங்கையையே உரித்து வைத்து பிறந்திருக்கும்... அந்த குட்டி தேவதையை பார்த்ததும், அவன் உள்ளம் பாசத்தில் நெகிழ... அவனையுமறியாமல் கண்கள் கலங்கியது...***

***"கிருஷ்ணி பாப்பா" என்று ஷ்ருதி கூப்பிட்டதும், அவளிடம் "அத்தை..." என்று குழந்தை தாவ, ஷ்ருதி அதை கொஞ்சி மகிழ்ந்தாள். இதை எல்லாம் மறைந்து நின்று வேடிக்கை பார்த்து கொண்ருந்த கௌதம், சிரித்தபடி வந்தவன், தன்னுடைய மருமகனை தூக்கி சுற்றினான்.***

***"கௌதம் மாமா" என்று சித்து அவன் கழுத்தை கட்டி கொள்ள...***

Ramya Rajan

***தன் தங்கையும் அவளது கணவனையும் அனைத்து வரவேற்ற கௌதம். தன் தங்கையின் செல்ல மகனின் இரண்டு கண்ணத்திலும் முத்தம் கொடுக்க... அதை பார்த்த க்ரிஷ்ணிகா(தன் அப்பா தனக்கு அவருடைய அப்பாவின் பேரானா வாசுதேவ்வை வைத்தது போல் கௌதம் தன் மகளுக்கு தன்னுடைய அப்பாவின் பெயரையே வைத்திருந்தான்)***

***ஷ்ருதியிடம் இருந்தவள் "என்னோட அப்பா... கிருஷ்ணி பாப்பாவோட அப்பா..." என்று சொல்லிக்கொண்டே கிழே இறங்கியவள், கௌதம் கால்களை கட்டி கொண்டு அழ....***

***தன் செல்ல மகளின் அழுகையை பொருக்க முடியாத கௌதம், அவளையும் தன் இன்னொரு கையில் தூக்கி கொண்டான். அப்பவும் அழுகையை நிறுத்தாமல் சித்தார்த்தை பிடித்து தள்ளியவள் "நீ... உங்க அப்பாகிட்ட போ" என்றாள்.***

***"அப்படியே அம்மா மாதிரி" என்ற ஷ்ருதி "ஏய் ...உனக்கு அப்பான்னா அவனுக்கு மாமா அவன் எதுக்கு போகணும், நீ... உங்க மாமாகிட்ட போ" என்றதும்,***

***"சாரும்மா சொல்வா ஷ்ருதி பாட் கேர்ள், உன் பேச்சு கா" என்று கிருஷ்ணி மழலையில் சொல்ல.... முரளியும், கௌதமும் சிரித்தனர்...***

***"ஷ்ருதி எங்க அம்மா தான் எனக்கு வில்லி இருக்கட்டும் போய் பார்த்துகிறேன்" என்றாள்.***

Ramya Rajan

**முரளி "வந்ததும் அவகிட்ட எதுக்கு சண்டைக்கு போற என்றவன்" கௌதம் கையில் இருந்து சித்தார்த்தை வாங்க, கிருஷ்ணி தன் மாமனை பார்த்து அழகாக சிரித்தாள்...**

**"இப்ப மட்டும் சிரிக்கிறத பாரு" என்ற ஷ்ருதி, கிருஷ்னியின் குண்டு கன்னத்தை பிடித்து கிள்ள...**

**"அப்பா ஷ்ருதி என்ன கிள்றா" என்று கௌதமிடம் கிருஷ்ணி புகார் சொல்ல...**

**"இத்தனை நாள் உனக்கும் உங்க அம்மாவுக்கும் பஞ்சாயத்து பண்ணேன். இனிமே உனக்கும் உங்க அத்தைக்கும்மா, எனக்கு முடியாது... நீ உங்க அத்தைய பத்திய கம்ப்ளைன்ட், உங்க மாமாகிட்ட சொல்லு" என்று கௌதம் சொல்ல...**

**கிருஷ்ணி திரும்பி முரளியிடம் "மாமா ஷ்ருதி அத்தை கிள்றா" என்றாள்,**

**"நீ என்கிட்டே வந்தினா... நான் உங்க அத்தைய கிள்ளுவேன்" என்றதும் கிருஷ்ணி பாய்ந்து முரளியிடம் சென்றாள்.**

சித்துவை கௌதமிடம் குடுத்துவிட்டு முரளி கிருஷ்ணியை தூக்கினான்.

முரளி மருமகளிடம் சொன்னது போல் ஷ்ருதியை கிள்ள, கிருஷ்ணி அழகாக கைதட்டி சிரித்தாள்.

கௌதம் போலாமா என்றவன், அங்கே இருக்கையில் இருந்த சின்ன பாகை எடுத்ததும்... ஷ்ருதி "இது எதுக்கு ?.." என்று கேட்க, கௌதம் கிருஷ்ணியோட ஸ்நாக்ஸ் என்றான்.

ஷ்ருதி "இதுலயும் உங்க அம்மா மாதிரியா" என்றதும்,

"எங்க அப்பா சொல்லுவார், நீ... எல்லாத்லையும் உங்க அம்மா மாதிரி இருக்க குட், ஆனா.... உங்க அம்மா மாதிரி எல்லாத்தையும் மனசுக்குள்ள வச்சிக்காத, எதுனாலும் உங்க அத்தை மாதிரி வெளிய சொல்லுன்னு சொல்வாரு" என்று தன் மழலையில் நிறுத்தி... நிறுத்தி கிருஷ்ணி சொல்ல...

அவள் சொன்னதை கேட்ட முரளி முகம் மாற... ஷ்ருதியின் கண்கள் கலங்கியது, அவள் "நீ மறக்கவே மாட்டியா கௌதம்" என்று கேட்க...

கௌதம் "என்னால மறக்க முடியல ஷ்ருதி, ஆனா... நான் எப்பவும்

அத பத்தி பேச மாட்டேன், எதாவது ஒரு நேரம் கிருஷ்னிகிட்ட உளறிடுவேன், அவ ஒரு வார்த்தை மாறாம மனப்பாடம் பண்ணி வச்சிருக்கா" என்றான்.

எல்லோரும் சென்று காரில் ஏற ஷ்ருதி "ஆமா ப்ரியா... ஏன் வரலை" என்றதும்

"அவ என்கிட்டே ஒரு பந்தயத்தில தோத்துட்டா... அதுக்காக மேடம் தீவிரமா உழைச்சாங்க... இப்ப முடியல... அதனால வரலை" என்று கௌதம் புதிராக சொல்ல...

ஷ்ருதி புரியாத பார்வை பார்த்தவள் "புரியற மாதிரி சொல்லு..."என்றாள்.

"கிருஷ்ணி... ப்ரியா வயற்றில் இருக்கும் போது... நான் சும்மா அவகிட்ட நான் உன்னை லவ் பண்றதைவிட... நீ என்னை அதிகமா லவ் பண்றியான்னு...நமக்கு குழந்தை பிறந்ததும் தெரியும்" என்றேன்

அவ உடனே எப்படின்னு ஆர்வமா கேட்டா...நான் சொன்னேன் "குழந்தை என்னை மாதிரி இருந்தா... நீ என்னை அதிகமா லவ் பண்றேன்னு அர்த்தம். அதே உன்னை மாதிரி இருந்தா... நான்தான் உன்னை அதிகமா லவ் பண்றேன்னு அர்த்தம்" என்று சொன்னேன்னா என்ற கௌதம் தொடர்ந்து

**"கிருஷ்ணி அவளை மாதிரி பிறந்ததும், மேடம் ரொம்ப பீலிங்க்ஸ்ல இருந்தாங்க, எப்ப கிருஷ்ணிக்கு ரெண்டு வயசு ஆகும்ன்னு இருந்தா, இப்ப திரும்பி கர்ப்பமா இருக்கா... நேத்து தான் உறுதி ஆச்சு. அதனால தான் மேடம் வரலை" என்று கௌதம் சிரித்து கொண்டே சொல்ல...**

**கேட்ட முரளியும், ஷ்ருதியும்... இன்னொரு குட்டீஸ் வர போகுதா என்று சந்தோஷ பட்டனர்.**

**"டேய்... நாங்க கிருஷ்னிய ஆறு மாசமா இருக்கும் போது போட்டோல பார்த்தது... அதுக்கப்புறம் உன் பொண்ண எங்க கண்ல காட்டினியா கேட்க்கும் போது எல்லாம் நேர்ல வந்து பாருன்னு சொல்லிட்டே" என்று ஷ்ருதி அலுத்துக்கொள்ள...**

**அது அம்மா தான் சொன்னாங்க வேண்டாம்ன்னு என்றான் கௌதம்.**

**ஷ்ருதி இங்கிருந்து ப்ரான்ஸ் குஷியாக தான் கிளம்பி சென்றாள். ஆனால் மூன்று மாதம் சென்ற பிறகு அவளுக்கு ரொம்ப வீட்டு நினைப்பாக இருந்தது, முரளி காலையில் கிளம்பி ஹாஸ்பிடல் சென்றாள், வருவதற்கு இரவு ஆகும். அதனால் வீட்டை நினைத்து அழுது கொண்டே இருப்பாள்.**

**இத்தனைக்கும் முதல் ஆறு மாதம் தான் தனியே இருந்தாள். அதன் பிறகு யாரவது அவளோடு இருப்பார்கள். முதலில் சிறிது நாள்**

அப்பத்தா இருந்தார்... அடுத்து ஷ்ருதி கர்ப்பம் ஆனவுடன் ஜானகி சென்று இருந்தார். பிறகு குழந்தை பிறந்த சமயம் சாருமதி சென்று இருந்தார், பிறகு திரும்பவும் அப்பத்தா என்று ஒருவர் மாற்றி ஒருவர் இருந்தாலும், அவளுக்கு வீட்டு நினைப்பு அதிகமாக இருந்தது.

கிருஷ்ணி பிறந்த சமயம்... ஷ்ருதி கர்ப்பமாக இருந்தாள். அதனால் அவளால் வர முடியவில்லை, முரளியை பற்றி கேட்கவே வேண்டாம் ஹாஸ்பிடல், படிப்பு என்று அவனுக்கு, வேறு எதையும் பற்றி நினைப்பதற்கே நேரம் இல்லை, ஷ்ருதியோடு கூட அவனால் நேரம் செலவழிக்க முடியவில்லை.

இதில் ஷ்ருதி கிருஷ்ணியை பார்த்தாள், இன்னும் அதிகமாக ஏங்க போகிறாள் என்று நினைத்து தான், சாருமதி கிருஷ்ணியை அவள் கண்ணில் காட்ட வேண்டாம், நேரிலேயே வந்து பார்க்கட்டும் என்றார்.

ராமமூர்த்தியின் வீட்டின் முன்பு கௌதம் காரை நிறுத்த, காரில் இருந்து வேகமாக இறங்கிய கிருஷ்ணி, ஓடி சென்று சாருமதியை தூக்க சொன்னாள். அவளுக்கு பயம்... எங்கே சாருமதி சித்தார்த்தை தூக்கி விடுவாரோ என்று... சாருமதியுடன் தான் கிருஷ்ணி இரவில் தூங்குவாள். அவரும் அவர் செல்லும் இடங்களுக்கு எல்லாம் கிருஷ்ணியை தூக்கி செல்வார்... அதனால் சாருமாவிடம் கிருஷ்ணிக்கு ரொம்ப பாசம்.

வீட்டில் இருக்கும் அனைவருக்கும் அவள் குணம் தெரியும்

Ramya Rajan

***என்பதால் சிரிக்க... உள்ளே வந்த முரளியும், ஷ்ருதியும் மூன்று வருடம் கழித்து தங்கள் வீட்டுக்கு வந்த மகிழ்ச்சியில்.... அனைவரையும் பார்த்த சந்தோஷத்தில் எல்லோரிடமும் பேசிக்கொண்டு இருந்தனர்.***

***வீட்டிற்க்குள் வந்ததும் கௌதம் ப்ரியாவை தேட.... அவள் அங்கு இல்லை. அவங்க அண்ணன் வர்றாருன்னு ஆர்வமா இருந்தா... இப்ப எங்க போனா என்ற நினைத்தவன், வேகமாக மாடியில் இருந்த அவர்கள் அறைக்கு செல்ல... ப்ரியா அங்கே குளியல் அறையில் வாந்தி எடுத்து கொண்டு இருந்தவள், முகத்தை கழுவி கொண்டு வெளியே வந்தாள்.***

***மசக்கையின் காரணமாக சோர்ந்து இருந்தாள். கௌதம் அவளருகில் சென்று, அவளை அழைத்து வந்து படுக்கையில் அமர வைத்தவன், ப்ரியாவை தன் தோளில் சாய்த்து கொண்டு " இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்ம்னு சொன்னா கேட்டியா... பாரு இப்ப எவ்வளவு கஷ்ட்டபடற" என்று அவள் நெற்றியை வருட...***

***நிமிர்ந்து தன் கணவனை புன்னகையுடன் பார்த்தவள் "அண்ணனும்... ஷ்ருதியும் வந்துட்டாங்களா... வாங்க கீழ போகலாம்.." என்று பேச்சை மாற்ற....***

***"நீ... திருந்த மாட்டடி...." என்றவன், அவள் நெற்றியில் முத்தம் வைத்து "சரி... வா போகலாம்" என்று ப்ரியாவுடன் கீழே சென்றான்.***

Ramya Rajan

ஏற்கனவே முரளியும், ப்ரியாவும் பாச மலர்கள், இப்போது கேட்கவா வேண்டும்.

முரளி... ப்ரியா முதல் குழந்தை உண்டாகி இருந்த போதே... தன் தங்கை இன்னும் கொஞ்ச நாள் கழித்து உண்டாகி இருக்கலாமோ... சின்ன வயது தானே வலி தாங்குவாளா என்று பயந்து கொண்டே இருந்தான்.

அவன் ப்ரான்ஸ் கிளம்பும் போது, ப்ரியாவை விட்டு செல்ல மனமே இல்லாமல் தான் கிளம்பி சென்றான் "உன்னோட பிரசவ நேரத்தில வந்துடறேன் ப்ரியா..." என்று சொல்லிவிட்டே சென்றான்.

ஆனால் அப்போது ஷ்ருதி உண்டாகிவிட... அவனால் அவளை தனியாகவிட்டு கிளம்ப முடியவில்லை. யாரையாவது துணைக்கு வைத்துவிட்டு வருகிறேன் என்று முரளி சொன்ன போது... கௌதம் அதற்க்கு ஒத்துக்கொள்ளவில்லை."ப்ரியாவுக்கு இங்கே நாங்க நிறைய பேர் இருக்கோம். ஷ்ருதிக்கு அங்க நீங்க மட்டும் தான் இருக்கீங்க, அதனால வரவேண்டாம்" என்றான்.

ப்ரியாவுக்கு வலி வந்து ஹாஸ்பிடல் அழைத்து செல்லும் போது முரளிக்கு சொல்ல வேண்டாம் என்று மற்றவர்களை தடுத்தவன், அவள் குழந்தை பெற்று நலமாக இருக்கிறாள் என்று தெரிந்த பிறகு தான் முரளிக்கு அழைத்து சொன்னான்.

ப்ரியா எந்த உணவையும் பிடிக்காது என்று எப்போதும் தள்ள

***மாட்டாள் எந்த உணவாக இருந்தாலும் விரும்பி சாப்பிடுவாள். அதற்காக குண்டாகவும் இருக்க மாட்டாள். தினமும் காலையில் எழுந்து ஒரு மணி நேரம் செய்யும் யோகாவால், அவள் உடம்பில் தேவை இல்லாத சதை இல்லாமல், அவர் உயரத்துக்கு ஏற்ற எடையுடன் இருப்பாள். அதனால் அவளுக்கு பிரசவம் எளிதாகவே இருந்தது.***

***அதுமட்டும் இல்லை கௌதம் என்ன தான் ப்ரியாவை கண்ணே மணியே என்று அவர்கள் அறைக்குள் கொஞ்சினாலும், வெளியே சாதாரண குடும்பத்தில் ஒரு கணவன் மனைவியிடம் எப்படி இருப்பானோ அப்படி தான் இருப்பான்.***

***கௌதம் எப்போதுமே உடல் ஆரோகியத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவன். அதனால் ப்ரியா உண்டாகி இருக்கிறாள் என்று அதையும் இதையும் திணிக்காமல், அளவான,அதே சமயம் சத்தான உணவுகளை சாப்பிடுகிறாளா என்று எப்போதும் கவனிப்பான்.***

***அவர்கள் வீட்டின் அருகில் இருக்கும் பார்க்குக்கு தினமும் வாக்கிங் அழைத்து செல்வான், அதோடு இயல்பிலேயே ப்ரியா சுருசுருப்பானவள். இதெல்லாம் சேர்ந்து தான் ப்ரியாவுக்கு முதல் பிரசவம் எளிதாக இருந்தது.***

***இப்போது அடுத்த குழந்தை ப்ரியா உண்டாகி இருக்க... கேட்கவா வேண்டும்... முரளி அவளை ரொம்ப தாங்கினான். ப்ரியாவின் அருகில் அமர்ந்து முரளி அவளுக்கு அறிவுரை சொல்லி கொண்டு இருக்க, ப்ரியா அவனின் தோள் சாய்ந்து கேட்டு கொண்டு***

இருந்தாள்.

அதை பார்த்த கிருஷ்ணி தன் அம்மாவின் மடியில் வந்து அமர்ந்தவள், ப்ரியாவின் தலையை முரளியின் தோளில் இருந்து நிமிர்த்தினாள்.

ப்ரியா "உனக்கு என்னடி வந்துச்சு... இவங்க என்னோட அண்ணன்... நான் சாஞ்சுப்பேன், நீ மட்டும் உங்க அப்பா பக்கத்தில என்னை உட்காரவிடாம பிடிச்சு தள்ளுவ இல்ல... இப்ப நான் ஒன்னும் உங்க அப்பா மேல சாஞ்சுக்கள, என்னோட அண்ணன் மேல தான் சாஞ்சிருக்கேன். நீ உங்க அப்பாகிட்ட போ" என்று சொன்னவள் கிருஷ்ணியை கீழே இறக்கி விட்டாள்.

கிருஷ்ணியின் உதடு அழுகையில் பிதுங்கியது... கௌதமிடம் சென்று தன் அம்மாவை பற்றி புகார் சொல்ல...

ப்ரியாவை பார்த்து முறைத்த கௌதம் "இருக்கட்டும்டா... நீ என்னிடம் வா" என்று சொல்ல... க்ரிஷ்ணியால் அதை ஒத்துக்ககொள்ள முடியவில்லை.

கிருஷ்ணிக்கு விவரம் தெரிந்ததில் இருந்து வீட்டில் அவர்கள் மட்டும் இருக்கும் போது ப்ரியாவை கௌதம் பக்கத்திலேயே உட்காரவிட மாட்டாள்... ஒன்று நடுவில் வந்து உட்காருவாள், இல்லை என்றால் ப்ரியாவை பிடித்து தள்ளுவாள்.

Ramya Rajan

எல்லா குழந்தைகளும்... அந்த வயதில் அப்படிதான் இருக்கும். ஆனால் ப்ரியா... தன் மகளுக்கு தன்னை பிடிக்கவில்லையோ என்று நினைத்து இரவில் அழுவாள். கௌதம் அவளை சமாதனம் செய்வான் "நான் நாள் முழுக்க வெளிய போய்டறேன், வீட்ல கொஞ்ச நேரம் தான் இருக்கேன். அதனால அவ என்கிட்டே பாசத்தை வெளிய காட்றா... ஆனா நீ நாள் முழுக்க அவளோடவே இருக்கிறதுனால, உன்கிட்ட உரிமையா சண்டைக்கு வரா... இது புரியாம அழறியே... நீ குழந்தையா... அவ குழந்தையா" என்பவன்...

மகளிடமும் மனைவியை விட்டுக்கொடுக்க மாட்டான். "அம்மா தான் உன்னை நாள் முழுக்க பார்த்துகிறாங்க, நான் கொஞ்ச நேரம் தான் பாப்பாவோட இருக்கேன், அதனால கிருஷ்ணிக்கு அம்மா தான் பிடிக்கும் இல்லை" என்று கேட்டால்,

கிருஷ்ணி இல்லை என்று தலை ஆட்டும் "எனக்கு உங்களை தான்பா பிடிக்கும்" என்று சொல்லி... ப்ரியாவை வெறுப்பேற்றும்.

ஆனால் இன்று... தன் அன்னை தன் மாமாவின் அருகில் உட்கார்ந்து இருப்பதை பொருக்க முடியாமல்... ப்ரியாவின் கையை பிடித்து இழுத்து வந்து, கௌதம் அருகில் அமரவைத்து... தானும் அவள் மடியில் ஏறி உட்கார்ந்து, அவள் கழுத்தை கட்டி கொண்டது.

கௌதம் "பார்த்தியா... இப்ப உனக்கு சந்தோஷமா... எப்பவும் என் பொண்ண போட்டு திட்டுவியே" என்று கேட்க... ப்ரியா

**மகிழ்ச்சியுடன் தன் மகளை கட்டி பிடித்து முத்தம் கொடுத்தாள்.**

**மதியம் அனைவரும் உணவு அருந்தும் போது ப்ரியா "நான்... இப்ப தான் ஜூஸ் குடிச்சேன் அப்புறம் சாப்பிடுறேன்" என்றதால் மற்றவர்கள் சாப்பிட, அவள் சித்தார்த்துக்கு ஊட்டுவதற்கு சாதம் கொண்டு வந்தாள்.**

**ப்ரியா இயல்பிலேயே மென்மையானவள், அதே போல் முரளியின் மகன் சித்தார்த்தும் மென்மையான குணம் கொண்டவன். அதனால் அவனுக்கு ப்ரியாவை பார்த்ததும் பிடித்தது, அதுவும் தான் சாதம் வேண்டாம் என்றதும் திட்டாமல், தனக்கு தோசை ஊற்றி கொண்டு வந்து ஊட்டும், ப்ரியா அத்தையை அவனுக்கு ரொம்பவும் பிடித்தது.**

**எல்லோரிடமும் தன் ஷ்ருதி அத்தை போல் சண்டைக்கு செல்லும் கிருஷ்ணி, ப்ரியா... சித்துவை மடியில் வைத்து ஊட்டுவதை பார்த்தும், பேசாமல் கௌதம் மடியில் அமர்ந்து சாப்பிட்டு கொண்டு இருந்தாள். அதை பார்த்து முரளி ஆச்சர்யப்பட....**

**"அதுக்கு காரணம் ஒருத்தன்... இப்ப வருவான் பாருங்க...வந்ததும் என் பொண்டாட்டிய தான் தேடுவான், இத்தனை நாள் ஒருத்தன் தான் எனக்கு போட்டியா இருந்தான், இப்ப இன்னொருத்தன்" என்று சித்துவை காட்டி கௌதம் சிரித்துக்கொண்டே சொல்ல....**

**முரளியும்... ஷ்ருதியும் அது யார் என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தார்கள்.**

## 42

சிறிது நேரத்தில் வாசலில் ஒரு பைக் வந்து நிற்க, அதிலிருந்து இறங்கிய கார்த்திக், முன்னாடி அமர்ந்திருந்த தன்னுடைய மகன் ப்ரேமை தூக்கி கொண்டு மிதுவோடு உள்ளே வந்தான்.

கௌதம் ப்ரியாவை உள்ளே போ என்று சொல்ல அவளும் உள்ளே சென்று ஒளிந்து கொண்டாள்.

கார்த்திக்கையும், மிதுவையும், முரளியும், ஷ்ருதியும் வரவேற்க அங்கே மீண்டும் ஒரு நெகிழ்ச்சியான சூழ்நிலை உருவானது.

கார்த்திக்கின் கைகளில் இருந்து இறங்கிய ப்ரேம், ப்ரியாவை தேடினான் அவளை காணோம் என்றதும், கௌதமிடம் வந்தவன் "ப்ரியா அத்தை எங்கே" என்று கேட்க...

வந்த சிரிப்பை அடக்கி கொண்ட கௌதம் "எதுக்குடா என் பொண்டாட்டிய தேட்ற" என்று கோபமாக கேட்பது போல் நடிக்க...

"அவங்க என்னோட அத்தை. அவங்க எங்க ?" என்று அதிகாரமாக பிரேம் கேட்க....

"உனக்கு என்னைவிட அதிகமா கோபம் வருதுடா" என்ற கௌதம் "உங்க அத்தை வரலை, அந்த வீட்ல இருக்காங்க" என்று சொல்ல...

உடனே ப்ரேம் "அத்தை இங்க இல்லையா" என்று கை,காலை ஆட்டி குதிக்க ஆரம்பித்தவன் அங்கிருந்த பொருட்களை எல்லாம் இழுத்து கீழே போட கார்த்திக் அவனை தூக்கினான். "ப்ரியா அத்தைட்ட போகலாம்ன்னு சொல்லி தான கூடிட்டு வந்தீங்க, அவங்க இங்க இல்லை" என்று அழ...

ப்ரியா வெளியே வந்து "ப்ரேம் இங்க தான் இருக்கேன்" என்றதும் கார்த்திக்கிடம் இருந்து இறங்கிய ப்ரேம் ப்ரியாவிடம் ஓட...ப்ரியா அவனை குனிந்து தூக்குவதற்குள், அவனை தூக்கிய கௌதம், அவனுக்கு ஒரு முத்தத்தை கொடுத்து, ப்ரியாவை உட்கார சொல்லி அவள் மடியில் ப்ரேமை வைத்தவன்

"நீ இனிமே இந்த அரிசி மூட்ட என்று ப்ரேமை காட்டியவன், புளி மூட்டை என்று கிருஷ்ணியை காட்டினான் இதெல்லாம் தூக்காத,வேணா இந்த பஞ்சு மூட்டையை மட்டும் தூக்கு என்று எல்லோருக்கும் இளையவனான சித்துவை காட்டி" கௌதம் சொல்ல...

"அப்பா என்னை புளி மூட்டை சொல்லாதீங்க" என்று அவனிடம் கிருஷ்ணி சண்டைக்கு வந்தாள்

"ஏன்டா செல்லம், நீங்க புளி மூட்டை மாதிரி தான இருங்கீங்க" என்று கௌதம் சொன்னதும்...

"நான் உங்க பொண்டாட்டி மாதிரி இருக்கேன்னு சொல்லு" என்று ஷ்ருதி சொல்லி கொடுக்க, அதை கிருஷ்ணியும் சொல்ல....

"நீ என் பொண்டாட்டி மாதிரி ஸ்லிம்மாவா இருக்க "என்று கிருஷ்ணி தொப்பையை கௌதம் தொட்டு காட்ட....

"உங்க பொண்டாட்டியும் இன்னும் கொஞ்ச நாள்ல என்னை மாதிரி தான் இருப்பாங்கன்னு சொல்லு" என்று ஷ்ருதி மீண்டும் சொல்லி குடுக்க, அதை கிருஷ்ணியும் அப்படியே தன் மழலையில் திரும்ப சொல்ல....

அவள் சொன்னதை கேட்டு கௌதம் சத்தமாக சிரிக்க, ப்ரியா வெட்கப்பட்டாள். உடனே ப்ரேம் அவன் அத்தைக்கு வரிஞ்சு கட்டியவன் "எங்க அத்தை ஒன்னும் உன்னை மாதிரி குண்டு இல்லை, எங்க அத்தை ரொம்ப அழகு" என்று சொல்ல....

"ஆரம்பிச்சுட்டான்டா, இனிமே நிறுத்த மாட்டான். டேய் கார்த்திக் துரோகி, நீ இப்படி எனக்கு போட்டியா ஒரு பையன பெருவேன்னு தெரிஞ்சிருந்தா, அன்னைக்கு உங்க மாமனாரிடம் உனக்கு சப்போர்ட் பண்ணி பேசி இருக்கவே மாட்டேன்" என்றான் கௌதம்.

"நீ என் மாமனாரிடம் என்னை சப்போர்ட் பண்ணியா பேசின,அவரை மிரட்டின அவரும் பாவம் பயந்து ஒத்துக்கிட்டாரு, ஆனா என் பையன் சிங்கம். உன்னையே மிரட்டறான் பாரு, எனக்கு ரொம்ப சந்தோசம்" என்று கார்த்திக் பெருமை பட....

மிது கார்த்திக்கோடு நடந்த கல்யாணத்தை நினைத்து பார்த்தாள்.

அவர்கள் திருமணம் அந்த கிராமத்திலேயே திருவிழா போல் மூன்று நாட்கள் விருந்துடன் நடந்தது. ராகவன், கார்த்திக் குடும்பத்திற்கு என்று தனியாக ஒரு வீட்டை ஏற்பாடு செய்திருந்தார். அதில் கார்த்திக்கின் குடும்பமும் திருமணத்திற்கு வந்த உறவினர்களும் தங்கி கொண்டனர்.

நகரத்திலே பிறந்து வளர்ந்து, பெற்றோர்கள் இருவரும் வேலைக்கு செல்லும் குடும்பத்தில் இருந்து வந்திருந்தாலும் கார்த்திக் அங்கிருந்த கிராமத்து மனிதர்களிடம் நன்றாக பழகுவதை பார்த்து ராகவனுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. வெளிநாட்டில் வேலை பார்க்கும் அவரது மகன் ஊருக்கு வந்தால் கூட இப்படி யாரிடமும் பேச மாட்டான் என்று நினைத்தவர் தன் மாப்பிள்ளையை நினைத்து பெருமை பட்டார்.

அந்த கிராமத்தில் இருந்த அனைவரும் ராகவனிடம் நீ நல்ல குணம் உள்ள மருமகனை தான் உன் பெண்ணுக்கு பார்த்திருக்க என்று சொன்னதை கேட்ட ராகவன் மிகவும் மகிழ்ந்தார்.

அது கிராமம் என்பதால் திருமணத்திற்கு முன்பு கார்த்திக்கால்

மிதுவை பார்க்க முடியவில்லை. முகுர்த்த நேரத்தில் தான் பார்க்க முடிந்தது. அதுவரை எப்போது மிதுவை பார்ப்போம் என்று தவித்து கொண்டிருந்தவன் தாமரை வண்ண புடவையில், அவளே ஒரு தாமரை பூ போல வந்து பக்கத்தில் அமர்ந்ததும் கார்த்திக் அவளையே பார்க்க...

கௌதம் "டேய் முன்னாடி பாருடா, யாரும் அவளை தூக்கிட்டு போய்ட மாட்டாங்க" என்று சொல்ல அதை கேட்டு அங்கே நின்ற அனைவரும் சிரித்தனர்.

கார்த்திக் மிருதுள்ளாவின் கழுத்தில் தாலி கட்ட, அங்கிருந்த அனைவரும் அட்ச்சதை தூவி வாழ்த்தினார்கள்.

கார்த்திக் அவர்கள் வீட்டுக்கு ஒரே பிள்ளை ஆனால் அது குறையாக தெரியாமல் கௌதம், ப்ரியா, முரளி மற்றும் ஷ்ருதி திருமணத்தில் செய்த கலாட்டவில் அந்த ஊரே அதிர்ந்தது.

ப்ரியா அப்போது கர்பமாக இருந்தாள். அதனால் ஜானகியும், சாருமதியும் ப்ரியாவை கல்யாணத்திற்கு அழைத்து செல்ல யோசிக்க, ப்ரியாவிட்ட கண்ணீரையும்,கார்த்திக்கின் கோபத்தையும் பார்த்து கௌதம் அவளை திருமணத்திற்கு அழைத்து சென்றான்.

ட்ரைன்னில் அழைத்து சென்றவன், ரயில் நிலையத்தில் இருந்து ஒரு ஏசி காரை ஏற்பாடு செய்து, அதை அவனே உருட்டி கொண்டு சென்றான். அதிலும் ரோட்டில் எதாவது பெரிய பள்ளம் வந்தால் ப்ரியாவை இறங்கி சிறிது தூரம் நடக்க வேறு சொல்வான். அவனை

***சொல்லியும் குற்றம் இல்லை அந்த ரோடு அப்படிதான் இருந்தது. ஆனால் கூட சென்ற முரளி, ஷ்ருதி மற்றும் கார்த்திக் தான் பாவம்.***

***"டேய் என்னோட கல்யாணத்துக்கு என்னை கண்டிப்பா கூடிட்டு போய்டுவ இல்லை" என்று கார்த்திக் புலம்பியபடி வந்தான்.***

***கௌதம் "டேய்,உனக்கு நாளைக்கு தானடா கல்யாணம்,போய்டலாம்" என்றவன் இரண்டு மணி நேரத்தில் செல்ல வேண்டிய ஊருக்கு, நான்கு மணி நேரம் கழித்து கொண்டு போய் விட்டான்.***

***கல்யாணம் முடிந்ததும் கார்த்திக்கும் தீவிரமாக உழைக்க, அதன் பலனாக மிதுவும் அடுத்த மாதமே கருவுற்றாள். அதனால் கிருஷ்ணிக்கும், ப்ரேம்முக்கும் இரண்டு மாதம் தான் வித்யாசம். முரளி கொஞ்ச நாள் கழித்து பெற்றுகொள்வோம் என்று நினைத்ததால் அவன் மகனுக்கு இப்போது தான் ஒன்னரை வயது ஆக போகிறது.***

***ப்ரேமுக்கு ஒரு வயது ஆகும் வரை,வீட்டினரே ஆளுக்கு சிறிது நாள் அலுவலகத்திற்கு லீவ் போட்டு பார்த்து கொண்டனர். ஒரு வயது முடிந்ததும் காலையில் மட்டும் குழந்தைகளை பார்த்து கொள்ளும் இடத்தில் விடுவது என்றும் மதியம் கார்த்திக் ப்ரேம்மை வீட்டுக்கு அழைத்து சென்றால், ரவி வந்து பார்த்து கொள்வார் என்றும் முடிவு செய்யபட்டது.***

***அதை கார்த்திக் கௌதமிடம் சொல்ல அவள் குதி குதி என்று***



Ramya Rajan

***குதித்தான் "உனக்கு அறிவு இல்லை குழந்தைய போய் வெளி ஆளுங்ககிட்ட விடுவியா" என்ற கோபபட...***

***கார்த்திக் "அப்பா ரிடையர் ஆகிட்டார் ஆனா... வேற இடத்தில வேலைக்கு போறார், அவருக்கும் பொழுது போகணும் இல்ல, அம்மா ரிடையர் ஆக இன்னும் ஒரு வருஷம் தான் இருக்கு, அது வரை சமாளிக்கணும்" என்று சொல்ல...***

***"நீ ப்ரேம எங்க வீட்ல விடு. அம்மா, ப்ரியா ரெண்டு பேரும் பார்த்துக்குவாங்க" என்றான் கௌதம்.***

***கார்த்திக் தயங்கினான் "எதுக்குடா அவங்களுக்கு கஷ்ட்டம்" என்று சொல்ல...***

***"அதெல்லாம் அவங்க கஷ்ட்ட பட மாட்டாங்க சந்தோஷமா பார்த்துவாங்க" என்ற கௌதம் சாருமதியிடம் சொல்ல அவர் "கார்த்திக்கிடம் நீ உன் மகனை இங்க விடு, அவன் கிருஷ்ணியோட விளையாடிட்டு இருப்பான். பாதி நாள் தானே நாங்க பார்த்துக்குறோம், எப்படியும் கௌதம் ப்ரியாவை இப்ப வேலைக்கு வர வேண்டாம்ன்னு சொல்லிட்டான். நாங்க ரெண்டு பேர் இருக்கோம் அப்புறம் என்ன" என்று சொல்ல....***

***கார்த்திக்கும் ஒத்து கொண்டான்.***

***அன்றிலிருந்து ப்ரேமை, கார்த்திக் வேலைக்கு போகும் போது***

கௌதம் வீட்டில் விட்டுவிட்டு செல்வான். ப்ரேமும், கிருஷ்ணியும் சேர்ந்து விளையாடுவார்கள், சில நேரம் சண்டையும் போடுவார்கள்.

ப்ரியா ப்ரேமை நன்றாக பார்த்து கொள்வாள். அவனுக்கு ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்வாள். மதியம் கார்த்திக் அவனை அழைக்க வருவதற்கு முன் சாப்பாடும் கொடுத்து விடுவாள். அதனால் சிறு வயதில் இருந்தே ப்ரேம் அவர்கள் வீட்டிற்க்கு வருவதும், ப்ரியா அவனை கவனித்து கொள்வதும் கிருஷ்ணிக்கு பழகியது தான்.

அதோடு ப்ரேமிற்க்கும் கௌதமிற்க்கும் எப்போதும் சண்டை தான். அதனால் அவன் ப்ரியாவிடம் தான் இருப்பான். தன் அப்பாவிடம் இருந்து விலகி இருக்கும் ப்ரேம்மை,கிருஷ்ணியும் எதுவும் சொல்லவதில்லை. அதே போல் சித்துவையும் நினைத்ததால் சண்டைக்கு செல்லாமல் இருந்தாள்.

வெகு நாட்கள் கழித்து எல்லோரும் சேர்ந்து ஒரே இடத்தில் இருந்தது பெரியவர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியை கொடுத்தது. இரவு வரை எல்லோரும் கூடி இருந்தவர்கள், பிறகு அவரவர் வீட்டுக்கு சென்றனர்.

கிருஷ்ணி வரும் போதே காரில் தூங்கிவிட, கௌதம் அவளை தூக்கி சென்று தனது பெற்றோர் அறையில் படுக்க வைத்துவிட்டு தங்கள் அறைக்கு சென்றவன் உடை மாற்றி விட்டு ப்ரியாவை அனைத்து கொண்டு படுத்தான். அப்போது ப்ரியா எழுந்து அமர

Ramya Rajan

கௌதம் என்ன ப்ரியா என்றதும் வாந்தி வருது என்றவள் வேகமாக எழுந்து வாஷ் பேசின் அருகில் சென்று வாந்தி எடுத்தாள். கௌதம் அவள் பின்னே வந்து அவளை தாங்கி கொள்ள, இரவு உண்டது அத்தனையும் வெளியே வந்து விட்டது.

ப்ரியாவை வாய் கொப்பளிக்க வைத்து, குடிக்க தண்ணீர் கொடுத்து கட்டிலுக்கு அழைத்து வந்தவன் எதாவது சாப்பிடுறியா என்று கேட்க அவள் வேண்டாம் என்றதும், கட்டிலில் சாய்ந்து அமர்ந்து ப்ரியாவை தன் மேல் சாய்த்து கொண்டு அவள் நெஞ்சை கௌதம் வருடி கொடுத்தான்.

"நீ கிருஷ்ணி வயிற்றில் இருக்கும் போது இப்படி வாந்தி எடுக்கலையே, இந்த தடவை என் இப்படி வாந்தி எடுக்கிற, தேவை இல்லாம நீயே வீம்புக்கு இழுத்துகிட்ட" என்று கௌதம் சொல்ல...

"ரெண்டு வருஷம் கழிச்சுன்னா மட்டும் வாந்தி வராதா" என்ற ப்ரியா, நான் என் காதலை நிருபிக்க வேண்டாமா என்றாள்.

"அது தான் உன் கைய அறுத்து நிருபிச்சியே பத்தாதா" என்று கௌதம் கேட்க....

ப்ரியா தன் கணவன் கோபமாக சொல்கிறானோ என்று நினைத்து, அவன் முகத்தை பார்க்க, அவன் சாதரணமாக தான் இருந்தான்.

"என்ன ப்ரியா கோபமா இருக்கேனான்னு பார்க்றியா... அதெல்லாம்



Ramya Rajan

எதுவும் இல்லை. அது தான் நீ செஞ்சது தப்புன்னு நீ உணர்ந்திட்டியே அப்புறம் என்ன" என்று கௌதம் சொன்னதும்,

ப்ரியா தாங்கள் ஊரில் இருந்து வந்த ஒரு வாரம் கழித்து நடந்தை நினைத்து பார்த்தாள்.

ஒரு நாள் வெளியே போய் இருந்த கௌதம் மதியம் சாப்பிட வீட்டுக்கு வரவில்லை. அன்று கல்லூரியிலிருந்து மாலை தான் வருவேன் என்று சொல்லி சென்ற ப்ரியா மதியமே வந்து விட்டவள், தன் கணவனுக்காக சாப்பிடாமல் காத்திருக்க அவன் ரொம்ப நேரமாகியும் வரவில்லை. ஏன் என்று கேட்க அவன் செல்லுக்கு ப்ரியா அழைத்தாள். அது சுவிட்ச் ஆப் என்ற சொன்னது.

சாருமதி தன் கணவரிடம் கௌதம் எங்கே என்று கேட்க, எங்கையோ கிளம்பி போனான் எதுவும் சொல்லிட்டு போகலை, வந்துடுவான் என்றவர். நேற்று கௌதம் சொன்னதை மறந்துவிட்டார்.

அவன் எங்க போனான் என்று தெரியாமல் இருந்தவள், மாலையும் கௌதம் வரவில்லை என்றதும் கார்த்திக்கை கேட்க, அவனுக்கும் தெரியவில்லை.

நாலு மணி நேரம் கூட கௌதம் இல்லாமல் ப்ரியாவால் இருக்க முடியவில்லை, அவள் அவன் எங்கே சென்றான் என்று தெரியாமல் தவித்தவள் கதறி அழ ஆரம்பித்தாள். அதை பார்த்த சாருமதி கார்த்திக்கை உடனே வர சொன்னார்.

***கார்த்திக் வந்து பார்த்த போது, ப்ரியா அழுது அழுது ஓய்ந்து போய் அமர்ந்திருந்தாள். கார்த்திக்கிடம் சாருமதி ப்ரியா அழுவதற்கு காரணம் சொல்ல....***

***"பாருங்க அண்ணா, எங்க போறேன்னு சொல்லாமையா போவாரு, எனக்கு தெரியாத எனக்கு இப்பவே கௌதம் வேண்டும்" என்று ப்ரியா கோபமாக கத்த....***

***கார்த்திக் "ஒரு நாலு மணி நேரம் உன் புருஷன் எங்க இருக்கான்னு தெரியாம இப்படி தவிக்கிறியே, இதே மாதிரி தான அன்னைக்கு அவன் தவிச்சிருப்பான். நீ மட்டும் அவனை காலமெல்லாம் தவிக்க விட பார்த்தியே, அது நியாயமா" என்று கேட்டவன்.***

***"உன் புருஷன் எங்கையும் போகலை, இன்னைக்கு பில்டர்ஸ் மீட்டிங் அதுக்கு தான் போனான், என்கிட்டே சொல்லிட்டு தான் போனான், மீட்டிங்ல இருக்கும் போது செல்ல ஆப் பண்ணி இருப்பான்" என்றவன்***

***"சாருமா எனக்கு போன் பண்ணி இருந்தா நான் சொல்லி இருப்பேன், நீ போன் பண்ணதும் கொஞ்ச நேரம் உன்னை தவிக்க வைக்கலாம்ன்னு தான் சொல்லலை, ஆனா நீ இப்படி ஆர்ப்பாட்டம் பண்ணுவேன்னு தெரியாது" என்று கார்த்திக் சொல்ல....***

***அப்போது கௌதம் வீட்டுக்குள் நுழைந்தான். ப்ரியா தன் கணவனை***

***பார்த்ததும் ஓடி சென்றுஅவனை அனைத்து கொண்டு கண்ணீர் விட்டவள் "சாரி கௌதம் நான் செஞ்சது ரொம்ப தப்ப, எனக்கு புரிஞ்சிடுச்சு" என்று திரும்ப திரும்ப சொல்ல....***

***கௌதமிற்கு ஒன்றும் புரியவில்லை அவன் குழப்பமாக பார்க்க சாருமதி நடந்தை சொன்னார்.***

***கௌதம் கார்த்திக்கை பார்த்து முறைத்தவன் "இப்படியா பயம் பொருத்துவ" என்றதும்,***

***"எனக்கு என்ன தெரியும் ப்ரியா உன்னை மதியத்துல இருந்து தேட்றான்னு. எனக்கு சாயங்காலம் தான் போன் பண்ணா, நான் கொஞ்ச நேரம் தானேன்னு நினைச்சு, என்ன பண்றான்னு பார்க்கலாம்ன்னு தெரியாதுன்னு சொன்னேன்" என்றான் கார்த்திக்.***

***"என்ன தான் இருந்தாலும் நீ செஞ்சது தப்பு, அவ எப்படி பயந்திட்டா பாரு" என்ற கௌதம் "சாரி ப்ரியா இனிமே எங்க போனாலும் உனக்கு மெசேஜ் பண்ணிட்டு போறேன். நீ காலேஜ்ல இருப்பேன்னு தான் போன் பண்ணலை" என்று தன் மனைவியை தேற்றியவன், அவளை சாப்பிட வைத்து அவனும் சாப்பிட்டான்.***

***கார்த்திக் "சாரி ப்ரியா, நீ இவ்வளவு டென்ஷன் ஆவேன்னு எதிர்பார்க்கலை" என்றான்.***

***அன்று இரவு ப்ரியா கௌதமிடம் அதிகம் நெருக்கம் காட்ட,***

Ramya Rajan

கௌதமிற்கு புரிந்தது. அவள் ரொம்ப பயந்து விட்டாள் என்று, அதனால் மேலும் அவளை நோக வைக்க விரும்பாமல் கௌதம் அவளிடம் அதை பற்றி பிறகு பேசவில்லை. அவள் செய்த்தது தப்பு என்று அவள் உணர்ந்தாலே போதும் என்று நினைத்தான்.

ப்ரியா மறு நாள் காலை எழுந்து சென்று குளித்துவிட்டு வந்து விளக்கேற்றி சாமி கும்பிட்டவள், தன் கணவன் பத்திரமாக வந்ததற்கு நன்றி சொல்லி, நான் செஞ்சது தப்பு தான் என்று கடவுளிடமும் மன்னிப்பு கேட்டதும் தான் அவள் மனது நிம்மதி ஆனது. அவளுக்கு இப்போது நன்றாக புரிந்தது கௌதம் ஏன் தன் மேல் அவ்வளவு கோபம் கொண்டான் என்று.

அன்று நடந்ததை நினைத்து பார்த்து கொண்டே ப்ரியா, கௌதம் மார்பிலேயே தூங்கிவிட, கௌதம் ப்ரியாவை தலையணையில் படுக்க வைத்து, போர்த்தி விட்டு அவளை அனைத்து கொண்டு படுத்தான்.

## 43

இந்த வருடம் *R.K.Constructions* பத்தாவது ஆண்டில் அடி எடுத்து வைப்பதால், அதை சிறப்பாக கொண்டாட நினைத்தனர். காலையில் ஆபீஸ்ல் பூஜை செய்து தொழிலாளர்களுக்கு போனஸ் பணம், உடை மற்றும் உணவு வழங்குவது என்றும். மாலையில் இவர்கள் தொழில் துறையை சேர்ந்தவர்கள், வாடிக்கையாளர்கள், கட்டுமான



Ramya Rajan

**பொருட்டகள் வாங்கும் டீலர்கள் மற்றும் நண்பர்களை அழைத்து ஒட்டலில் விருந்து வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.**

**எல்லோரும் அதற்க்கு தேவையான வேலையை ஆரம்பிக்க, கௌதமும், கார்த்திக்கும் அடுத்த வாரத்தில் நடக்கும் விழாவுக்கான பத்திரிகையில் பேர் எழுதி கொண்டிருந்தனர்.**

**கார்த்திக் "டேய் இந்த தடவையாவது எத்தனை பேர் வருவாங்கன்னு கரெக்ட்டா கணக்கு பண்ணுங்க, அப்புறம் உன்னோட வரவேற்ப்புல நடந்த கதை ஆகிட போகுது" என்று சொன்னதும்,**

**ப்ரியா கார்த்திக்கை முறைத்தாள். அவளுக்கு இது ஒன்பது மாதம் என்பதால் வயிறு ரொம்ப பெரிசாக இருந்தது. "கார்த்திக் அண்ணா எதுக்கு இப்ப என்னை வம்புக்கு இழுக்குறீங்க" என்றவள், கிருஷ்ணி என்னோட சார்பா உங்க கார்த்திக் மாமாவுக்கு ஒரு அடி போடு என்று மகளை ஏவ....**

**கிருஷ்ணியும் கார்த்திக்கை அடிக்க ஓடி வர, கார்த்திக் அவளை தூக்கி தன் தோளில் உட்காரவைத்து "நீங்க மாமாவ அடிப்பீங்களா" என்று கேட்க.... கிருஷ்ணி இல்லை என்று சொல்லி அவன் கன்னத்தில் முத்தம் வைத்தது.**

**அவளை கீழே இறக்கிவிட்ட கார்த்திக் "உண்மைய சொன்னா வம்புக்கு இழுகிறதா" என்று சொல்ல, கௌதம் தங்கள்**



Ramya Rajan

வரவேற்ப்பின் போது நடந்ததை நினைத்து பார்த்தான்.

கௌதம், ப்ரியா வரவேற்ப்புக்கு பதினைந்து நாட்கள் முன்பு எல்லோரும் பத்திரிகை கொடுப்பதில் பிஸியாக இருக்க, கௌதம் தன் கல்லூரியின் முதல்வருக்கு சென்று பத்திரிகை கொடுத்துவிட்டு வந்தான்.

அன்று அவர் எப்போதும் வருவது போல் கல்லூரியில் வலம் வந்தார். ப்ரியாவின் நேரம் அன்று பார்த்து அவளுக்கு கல்லூரியில் வகுப்பு இருந்தது. ப்ரியாவின் வகுப்பறைக்கு வந்த முதல்வர் ப்ரியாவிடம் "உனக்கும் கௌதமுக்கும் கல்யாணம் முடிஞ்சிடுச்சாமே, இப்ப தான் கௌதம் வந்து வரவேற்ப்புக்கு பத்திரிகை கொடுத்திட்டு போறான் ரொம்ப சந்தோசம்" என்று சொல்லிவிட்டு செல்ல....

வகுப்பில் இருந்த மொத்த மாணவர்களும் ப்ரியாவை சூழ்ந்து கொண்டு அப்படியா கல்யாணம் ஆகிடுச்சா, கௌதமா உன்னோட ஹஸ்பெண்ட் என்று வித விதமாக கேள்வி கேட்டவர்கள், எங்களுக்கு எல்லாம் வரவேற்ப்புக்கு பத்திரிகை கொடுப்ப இல்ல என்று கேட்க, ப்ரியா குத்து மதிப்பாக தலை ஆட்டிவைத்தாள்.

வகுப்பு இடைவேளையில் ப்ரியா காவ்யாவிடம் "இப்ப என்னடி பண்றது ?" என்று கேட்க....

மேதாவி காவ்யா "எல்லோருக்கும் தனித்தனியா பத்திரிகை கொடுத்தா கட்டுபடி ஆகாது, நீ பேசாம உங்க டிபார்ட்மென்ட் நோட்டீஸ் போர்ட்ல போட்டுட்டு" என்று ஐடியா கொடுக்க,

ப்ரியாவும் காவ்யா சொல்வது தான் சரி என்று நினைத்தாள்.

கௌதம், ப்ரியா திருமணம் அந்த காலேஜ் முழுவதும் பரவிவிட, அன்று காலேஜ் முடிந்து வெளியே வந்த ப்ரியாவை எல்லோரும் திருமதி கௌதம் என்று அழைத்து ஒரு வழி ஆக்கினார்கள்.

அன்று வீட்டுக்கு சீக்கிரம் வந்த ப்ரியா தான், கௌதமை காணோம் என்று ஆர்ப்பாட்டம் செய்தாள். அதனால் ப்ரியாவின் உற்சாகம் குறைந்து விட்டது. அவள் கல்லூரியில் தங்கள் கல்யாணம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது பற்றி கௌதமிடம் சொல்லவில்லை.

கௌதமுக்கும் கட்டிட வேலை, பத்திரிகை கொடுக்கும் வேலை என்று நிறைய வேலை இருந்ததால் அவளுடன் அமர்ந்து பேச நேரமில்லாமல் இருந்தான். இரவில் புதிதாக கல்யாணம் ஆனவர்கள் செய்யும் வேலையை செய்ததால் அவனும் அவளிடம் வரவேற்ப்பு பற்றி எதுவும் பேசவில்லை.

மறுநாள் ப்ரியா கல்லூரிக்கு கிளம்பும் போது கார்த்திக்கும் அங்கிருந்தான். ஏற்கனவே ப்ரியா குற்ற உணர்வில் இருந்தாள், இதில் கார்த்திக்கை வேறு பார்த்ததும் அவள் குற்ற உணர்வு அதிகமாக எதுவும் பேசாமல் கல்லூரிக்கு கிளம்பினாள்.

அப்போது கௌதம் "நீ இன்னைக்கே காலேஜ்ல பத்திரிகை கொடுத்திடு எத்தனை வேண்டும்" என்று கேட்க, ப்ரியா இரண்டு என்று சொல்ல, இரண்டு போதுமா என்று கௌதம் சந்தேகமாக

கேட்க, ப்ரியா போதும் என்று சொன்னவள், இரண்டு பத்திரிக்கையை மட்டும் வாங்கி கொண்டு ஆளை விட்டால் போதும் என்று அந்த இடத்தை விட்டு ஓடி விட்டாள்.

கல்லூரியில் காவ்யாவிடம் ஒரு பத்திரிக்கையை கொடுத்தவள், இன்னொரு பத்திரிக்கையை அவர்கள் டிபார்ட்மென்ட் நோட்டீஸ் போர்டில் போட்டுவிட்டு அதோடு அதை மறந்தும் விட்டாள்.

ஒரு பெரிய நட்ச்சத்திர ஓட்டலில் கௌதம், ப்ரியா வரவேற்ப்பு நடந்தது. அங்கே இருந்த மேடையில் கௌதமும், ப்ரியாவும் வானத்தில் இருக்கும் நட்ச்சத்திரங்கள் போல தான் ஜொலித்தார்கள். அவர்கள் அணித்திருந்த உடைகளால் அல்ல, அவர்கள் காதல் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில். காதலித்தவரையே திருமணம் செய்த,நிறைவு கொடுத்த பொலிவு, அவர்கள் முகத்தில் தனிக்கலையை கொண்டு வந்திருந்தது.

கௌதம் முகத்தில் புன்னகை நிரந்தரமாக குடியேற, அவன் பக்கத்தில் ப்ரியா வெட்கத்துடன் நின்றிருந்தாள். இருவரும் பொருத்தமான ஜோடி வேறு, பின் கேட்கவா வேண்டும் வரவேற்ப்புக்கு வந்திருந்த அனைவரும் அதையே சொல்லி சென்றனர்.

இரவு ஒன்பது மணி வரை கட்டுகடங்காத கூட்டம். கௌதமும், ப்ரியாவும் வந்த விருந்தினர்களுடன் பேசுவதிலும் போட்டோ எடுப்பதிலுமே களைத்து விட்டனர். இப்போது கூட்டம் கொஞ்சம் குறைந்து இருந்ததால், இருவருக்கும் உட்கார முடிந்தது இருவரும் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தனர்.

Ramya Rajan

***மேடையில் இருந்த கௌதம், முரளியும், கார்த்திக்கும் ஹோட்டல் மனேஜருடன் பேசுவதை பார்த்து எதோ பிரச்சனை என்று கீழே இறங்கி சென்று என்னவென்று கேட்க....***

***முரளி "நாம ஆயிரத்து இரநூறு பேருக்கு தான் சாப்பாடு சொல்லி இருந்தோம், ஆனா ஆயிரத்து ஐநூறு பேர் வந்திருக்காங்க. இப்ப நூறு பேருக்கு தான் சாப்பாடு இருக்கு, ஆனா சாப்பிட இன்னும் முன்னூறு பேர் இருக்காங்க, சாப்பாடு பத்தாது என்ன பண்றதுன்னு தெரியலை" என்று சொல்ல....***

***கௌதம் நாம அவ்வளவு பேரை தான கூப்பிட்டிருந்தோம், பின் எப்படி முன்னூறு பேர் அதிகமா வருவாங்க என்று குழம்பியவன், கூட்டத்தை சுற்றி பார்க்க,நிறைய கல்லூரி மாணவர்களாக இருந்தனர். அதில் பத்து பேர் தான் கௌதமின் நண்பர்கள் மற்றவர்கள் எல்லாம், கௌதம் குழப்பத்துடன் கார்த்திக்கை பார்க்க, அவன் ப்ரியா என்றான்.***

***"ரெண்டு பத்திரிகை தானடா வாங்கிட்டு போனா" என்றவன் ப்ரியாவை அழைத்து கேட்க அவள் "ஆமா... ரெண்டு தான் வாங்கிட்டு போனேன் ஆனா அதுல ஒன்னு நோட்டீஸ் போர்ட்ல போட்டேன்" என்று சொன்னவள் "ஏன் கௌதம் எதாவது பிரச்சனையா ?" என்று வேறு கேட்டாள்.***

***ப்ரியா சொன்னத்தை கேட்ட கௌதமிற்கு, அன்று அவள் மேல் கோபமே வரவில்லை. என் செல்லம் இப்படி அப்பாவியா இருக்கே***

என்று தான் நினைத்தான். ஆனால் கோபமே வராத முரளிக்கு அன்று கோபம் வந்துவிட்டத "உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா?.... நோட்டீஸ் போர்ட்ல பத்திரிகை போட்டா மட்டும் போதுமா, அத வீட்ல சொல்ல வேண்டாமா, இப்ப சாப்பாடுக்கு என்ன பண்றது?" என்று கேட்க....

ப்ரியா பயந்து விட்டாள். "எனக்கே தெரியாதுண்ணா இதனை பேர் வருவாங்கன்னு" என்று பாவமாக சொல்ல....

"ப்ரியா வர வர நீ பண்றது எல்லாம் தெரிஞ்சு செய்றியா இல்லை தெரியாம செய்றியான்னு புரியவே மாட்டேங்குது, எங்களை குணா கமல் மாதிரி ஆக்கிடுவ போல" என்று கார்த்திக் புலம்ப, ப்ரியா அழுவதற்கு தயார் ஆனாள்.

அப்போது ஹோட்டல் மேனேஜர் "ஒரு ஒரு மணிநேரம் கிடைச்சா எங்களால எங்களோட இன்னொரு ஓட்டலில் இருந்து, இன்னும் இரநூறு சாப்பாடு கொண்டு வர முடியும்" என்று சொல்ல...

வந்தவர்களை ஒரு மணி நேரம் எப்படி காக்க வைப்பது என்று வீட்டின் பெரியவர்களும் திகைக்க, அங்கே மேடையில் கௌதம் மைக் பிடித்து இருந்தான்.

மற்றவர்கள் கல்யாணத்தில் பாடியவன், இன்று அவன் வரவேற்ப்பிலேயே பாட வேண்டிய கட்டாயத்தில் இருந்தான். கல்யாண மாப்பிள்ளையே பாடினால் கேட்கவா வேண்டும், அதுவும் அப்போது இருந்தவர்கள் எல்லாம் கல்லூரி மாணவர்கள், அவர்கள்

**அனைவரும் உற்ச்சாகமாக உட்கார்ந்து கவனிக்க ஆரம்பித்தனர்.**

**மேனேஜர் சாப்பாடுக்கு ஏற்பாடு செய்ய செல்ல, முரளி முக்கிய விருந்தினர் யாரவது இருந்தால் அவர்களை மட்டும் முதலில் சாப்பிட வைத்து விடுவோம் என்று சென்றான்.**

**கார்த்திக் சென்று வினோத்திடம் விவரத்தை சொல்லி அவனை கௌதமுடன் சென்று பாட சொல்ல....**

**வினோத் கவலைபடாதே கலக்கிடலாம் என்று சொல்லி மேடை ஏற.... அடுத்த ஒரு மணி நேரம் எப்படி போனது என்றே யாருக்கும் தெரியவில்லை. கௌதம் விருப்பம் இருப்பவர்கள் வந்து பாடலாம் என்று சொல்ல, சில பேர் வந்து பாடினார்கள்.**

**ப்ரியா கீழே உட்கார்ந்து பார்த்து கொண்டிருந்தாள். அவளுக்கு தூக்கமாக வந்தது, அதனால் இமையை கொட்டி தூங்கிவிடாமல் இருக்க முயற்சி செய்து கொண்டிருந்தாள். அவளை பார்த்த கௌதமிற்கு பாவமாக இருந்தது ரொம்ப களைப்பா இருக்கா என்று நினைத்தான்.**

**மேனேஜர் வந்து சாப்பாடு வந்து விட்டது இனிமேல் பிரச்சனை இல்லை என்று சொன்னதும் தான் கௌதமும், வினோத்தும் பாடுவதை நிறுத்தினார்கள்.**

**அதை இப்போது நினைத்து பார்த்த கௌதமிற்கு சிரிப்பு வர,**



Ramya Rajan

***அடக்க முடியாமல் வாய்விட்டு சிரித்தான். ப்ரியாவிற்கு அவன் எதை நினைத்து சிரிக்கிறான் என்று தெரியும் என்பதால் அவனை பார்த்து முறைத்து விட்டு உள்ளே சென்றாள்.***

***R.K.Constructions பத்தாம் ஆண்டு விழா வெகு சிரிப்பாக நடந்து கொண்டிருந்தது. கௌதம் தொழிலாளர்களுக்கு பணம், உடை, உணவு மட்டும் கொடுக்கவில்லை, தொழிலாளர்களின் குழந்தைகளை தத்தெடுத்து தானே அவர்களின் படிப்புக்கு முழு பொறுப்பையும் ஏற்று கொண்டான்.***

***ஒருவருக்கு பணமோ, பொருளோ கொடுப்பதை விட கல்வி கொடுப்பது அவரை மட்டும் அல்ல, அவர் குடும்பத்தை, சமுதாயத்தை, நாட்டையும் உயர்த்தும் என்று புரிந்து வைத்திருந்த கௌதம் தங்கள் கம்பெனியின் பத்தாம் ஆண்டின் சிறப்பாக அதை எல்லோருக்கும் அறிவிக்க, அங்கே மகிழ்ச்சி ஆரவாரம் பெருகியத. அதோடு முரளி தான் அந்த குழந்தைகளின் மருத்துவ உதவிகளை ஏற்பதாக சொன்ன போது அந்த மகிழ்ச்சி இன்னும் பெருகி அங்கிருந்த அனைவரின் மனதையும் குளிர செய்தது.***

***ராமமூர்த்தியும், கிருஷ்ணகுமாரும் தங்கள் பிள்ளைகளை நினைத்து பெருமை பட்டனர்.***

***விழா முடிந்து எல்லோரும் உணவு அருந்த செல்ல, கௌதம் ப்ரியாவின் அருகில் வந்தவன் "வா வீட்டுக்கு போகலாம்" என்றதும்***

***ப்ரியா "இப்ப எதுக்கு ?" என்று கேட்க...***

***"எனக்கு தெரியும் உன்னால உட்கார முடியலைன்னு" என்றவன் ப்ரியாவை அழைத்து கொண்டு வீட்டுக்கு சென்றான்.***

***வீட்டுக்கு சென்றதும், ப்ரியாவிற்கு சாப்பாடு போட்டு கொண்டு வந்து கொடுத்தவன், அவள் சாப்பிட்டதும், சிறிது நேரம் அவளுடன் பேசி கொண்டு இருந்தான். பின் அவளை மாடிக்கு அழைத்து சென்று படுக்க வைத்தவன், சாருமதி வரும் வரை அவள் கூடவே இருந்தான். சாருமதி வீட்டுக்கு வந்ததும் தான் கிளம்பி சென்றான்.***

***கட்டிலில் படுத்திருந்த ப்ரியாவிற்கு கௌதமை நினைத்தால் ஆச்சர்யமாக இருந்தது. இவனுக்கு எப்படி தான் நாம சொல்லாமையே நம்ம கஷ்ட்டம் தெரியுதோ, இப்ப என்று இல்லை கல்யாணம் ஆன புதிதிலேயே அப்படி தான் இருப்பான் என்று அப்போது நடந்ததை நினைத்து பார்த்தாள்.***

***வரவேற்ப்பு அன்று நடந்த குளறுபடியால் எல்லோரும் டென்ஷனாக தான் இருந்தனர். ஆனால் ப்ரியாவிற்கு சற்று அதிகமாக இருந்தது. அது வரவேற்ப்பில் சாப்பாடு பத்தவில்லை என்பதனால் இல்லை, அவளுக்கு தெரியும் கௌதம் எப்படியும் சமாளித்து விடுவான் என்று வேறு எதோ அவளுக்கு சொல்ல தெரியவில்லை, அவளுக்கு எல்லாவற்றிற்கும் எரிச்சலாக வந்தது. எல்லோர் மீதும் கோபமாக வந்தது, ஏன் என்று தெரியாமல் எரிச்சலில் இருந்தாள்.***

***கார்த்திக் முரளியின் வரவேற்ப்பின் போது ஆடின மாதிரி***

Ramya Rajan

ஆடுவோமா என்று கேட்க, ப்ரியா முடியவே முடியாது எனக்கு தூக்கம் வருது வீட்டுக்கு போகணும் என்றாள்.

கார்த்திக் "அன்னைக்கு நானும் மிதுவும் சேர்ந்து ஆடலை இன்னைக்கு ஆடலான்னு பார்த்தா வேண்டான்னு சொல்றியே" என்று சொல்ல "நீங்க எல்லாம் ஆடுங்க, எனக்கு தூக்கம் வருது வீட்டுக்கு போகணும்" என்றாள் ப்ரியா.

கௌதம் "அடுத்த வாரம் உன் கல்யாணத்தில் ஆடலாம்டா" என்றான்.

போட்டோ எடுப்பவர் வந்து கௌதமையும், ப்ரியாவையும் தனி படங்கள் எடுக்க அழைக்க, ப்ரியா வேண்டாம் தூக்கம் வருது வீட்டுக்கு போகணும் என்றாள்.

"இது என்ன பதினாறு வயசு சப்பாணி 'ஆத்தா காசு கொடு சந்தைக்கு போகணும்ன்னு' சொல்ற மாதிரி, 'எனக்கு தூக்கம் வருது வீட்டுக்கு போகலாம்ன்னு' திரும்பி திரும்பி அதையே சொல்ற" என்று கார்த்திக் கிண்டல் செய்ய....

ப்ரியா "போங்க கார்த்திக் அண்ணா..." என்று எரிந்து விழுந்தாள்.

கௌதம் "சரி அவ ரொம்ப களைப்பா இருக்கா, சாப்பிட்டு கிளம்பலாம்" என்று சொல்ல... அனைவரும் சாப்பிட சென்றனர். ப்ரியா எப்போதும் ஒழுங்காக சாப்பிடுபவள், அன்று சாப்பிடாமல்

உட்கார்ந்து இருந்தாள். கௌதம் சாப்பிடு ப்ரியா என்று சொல்ல, பேருக்கு நாலு வாய் சாப்பிட்டாள் அதோடு போதும் என்று வைத்துவிட்டு வாசலில் போய் நின்று விட்டாள்.

வீட்டுக்கு கிளம்பும் போது ப்ரியா ஜானகி கையை பிடித்து கொண்டு "நீங்களும் கூட வாங்க" என்று அழ.... இவ இன்னைக்கு ஏன் இப்படி நடந்துக்குறா என்று எல்லோரும் நினைக்க....

அப்பத்தா "அவ ரொம்ப களைப்பா இருக்கா, நீ கூட வந்தா உதவியா இருக்கும்ன்னு கூப்பிடுறாலோ என்னவோ" என்றதும், அப்பத்தா மட்டும் உறவினர்களுடன் தங்கள் வீட்டுக்கு செல்ல, மற்ற எல்லோரும் கிருஷ்ணகுமார் வீட்டுக்கே சென்றனர்.

ஜானகி ப்ரியாவிற்கு உடை மாற்ற உதவி செய்தவர், அவளை குளிக்க சொல்லி பால் குடிக்கவைத்து "சரி நான் நம்ம வீட்டுக்கு கிளம்பறேன், நீ தூங்கறையா" என்றதும், ப்ரியா சரி என்று தலை ஆட்ட, ப்ரியா வீட்டினர் தங்கள் வீட்டுக்கு சென்றனர்.

கௌதம் குளித்து விட்டு வந்தவன், விடி விளக்கை போட்டுவிட்டு கட்டிலில் படுத்திருந்த ப்ரியாவை தன் பக்கம் திருப்பியவன், அவளை முகமெங்கும் முத்தமிட ஆரம்பித்தான். தூக்கம் கலைந்ததால் ப்ரியா சிணுங்க,கௌதம் "ப்ரியா இன்னைக்கு எவ்வளவு முக்கியமான நாள் இன்னைக்கு போய் தூங்குறியே" என்றவன் அவளை இன்னும் அதிக தாபத்தோடு நெருங்க....

ப்ரியா "தள்ளி போங்க என்று கௌதமை தள்ளிவிட்டாள்."

கௌதம் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான். ப்ரியா "போச்சு திட்ட போறான்" என்று நினைக்க, கட்டிலில் சாய்ந்து அமர்ந்தவன், ப்ரியாவை தூக்கி தன் மேல் போட்டு கொண்டு "இன்னைக்கு என்ன ஆச்சு மேடம் கோபமாவே இருக்காங்க" என்று கேட்க.....

ப்ரியா "எனக்கு ரொம்ப கால் வலிக்குது, கீழ் முதுகு வலிக்குது" என்று தூங்கி கொண்டே சொல்ல....

கௌதம் சென்று லைட்டை போட்டவன், தைலத்தை எடுத்து அவள் இரண்டு கால்களிலும் தேய்த்தான். "ரொம்ப நேரம் நின்னதுனாலையா"என்று கேட்க....

ப்ரியா "இல்லை எனக்கு பிரியட்ஸ் வரும் போது இப்படி தான் வலிக்கும்" என்றாள்.

லைட்டை ஆப் பண்ணிவிட்டு வந்த கௌதம், கட்டிலில் படுத்து கொண்டு அவள் முதுகை தடவி விட்டபடியே "பிரியட்ஸ் வந்துடுச்சா" என்று கேட்க....

"இல்லை....போன வாரமே வரணும் இன்னும் வரலை" என்று சொல்லிவிட்டு ப்ரியா தூங்கிவிட....

கௌதமிற்கு சிறிது நேரம் கழித்து தான் ப்ரியா சொன்னது புரிந்தது.

***திரும்பி ப்ரியாவை எழுப்ப அவள் அசந்து தூங்கினாள். கௌதம் அவள் வயிற்றில் கை வைத்தான்.***

***கௌதம் தனது லேப்டாப்பை கொண்டு வந்து கட்டிலில் உட்கார்ந்தவன், சிறிது நேரம் கூகுள்லில் எதையோ தேடினான், பின் வேறு உடை அணிந்து வெளியே சென்றுவிட்டு வந்தவன், ஐந்து மணிக்கு அலாரம் வைத்துவிட்டு தூங்கினான்.***

***காலையில் அலாரம் அடித்ததும் ப்ரியாவை எழுப்பினான். ப்ரியாவும் எழுந்து கொண்டாள். கௌதம் அவளிடம் கர்பத்தை உறுதி செய்யும் ப்ரெக்னன்சி டெஸ்ட்டை கொடுத்து, எப்படி பார்க்க வேண்டும் என்று சொல்லி கொடுக்க....***

***கௌதமை ஆச்சரியமாக பார்த்த ப்ரியா, நமக்கு இது தோனலையே என்று நினைத்தவள், அவனிடம் எதுவும் சொல்லவில்லை ஆனால் அவன் சொன்னபடி செய்து விட்டு அவனை அழைக்க, கௌதம் சென்று ஆவலாக பார்த்தான், அதில் முதலில் ஒரு கோடு விழ அடுத்து இன்னொரு கோடும் விழுந்தது.***

***கௌதம் ப்ரியாவை சந்தோஷத்துடன் அணைத்துக்கொண்டான்.***

***அவளை கட்டிலுக்கு அழைத்து சென்றவன், அவளை தன் மடியில் படுக்க வைத்து "செல்லம் நமக்கு ஒரு குட்டி பாப்பா வர போதா, நாம அம்மா, அப்பா ஆக போறமா, எனக்கு எப்படா நம்ம பாப்பாவ பார்ப்போம்ன்னு இருக்கு" என்றவன்,***

"நானே எதிர் பார்க்கலை ப்ரியா, இவ்வளவு சீக்கிரம் நமக்கு ஒரு குழந்தை வரும்ன்னு ஆனா எனக்கு சந்தோஷம் தான். எனக்கு எப்படா நம்ம குழந்தைக்கு ஒரு வயசு ஆகும் பைக்ல முன்னாடி உட்கார வச்சு கூடிட்டு போவோம்ன்னு இருக்கு. இன்னும் நம்ம பேபிய பார்க்க பத்து மாசம் வெயிட் பண்ணனுமா ரொம்ப ஜாஸ்த்தி இல்ல" என்று கௌதம் இன்னும் பிறக்காத தன் குழந்தையை நினைத்து உருக....

ப்ரியா இவன் அதிகமா அன்பை காட்டியே என்னை அடிமை ஆக்கிடுறான் என்று நினைத்தவளுக்கு, அவன் பாசத்தில் கண்கள் கலங்கியது.

கௌதம் "இனிமே உனக்கு காலேஜ் இல்லைல அதனால ரெஸ்ட் எடுத்திட்டே படி" என்றதும் ப்ரியா சரி என்று தலை ஆட்டினாள்.

காலையில் சாருமதியிடம் கௌதம் விஷயத்தை சொல்ல, அவர் ரொம்ப சந்தோஷ பட்டார். உடனே கிருஷ்ணகுமாருக்கு சொன்னவர் ப்ரியாவின் வீட்டுக்கும் போன் செய்து ப்ரியா கர்பமாக இருப்பதை சொன்னார். இரு குடும்பமும் தங்களுக்கு முதல் பேர குழந்தை வரப்போவதை நினைத்து சந்தோஷபட்டனர்.

ப்ரியாவுக்கு படிக்க புத்தகம் எடுத்தால் தூக்கம் தான் வந்தது. அவளுக்கு வாந்தி எப்போதாவது ஒரு முறை தான் வந்தது ஆனால் எப்போதும் தூக்கம் வந்தது.

Ramya Rajan

**அதை பார்த்த கௌதம் தினமும் காலையில் இரண்டு மணி நேரம், மாலையில் இரண்டு மணி நேரம், ப்ரியா படிக்கும் போது அவனும் கூட இருப்பான். அவளோடு கூட படித்து, அவளையும் படிக்க வைத்து பரிட்ச்சைக்கும் அழைத்து சென்று, திரும்ப கூட்டி வந்து, அவளை நல்ல படியாக படிப்பை முடிக்க வைத்தான்.**

**ப்ரியா கருவுற்றிருந்த முதல் மூன்று மாதங்கள், தன் ஆசையை அடக்கி ப்ரியாவை நெருங்காமல் தான் இருந்தான். இத்தனைக்கும் அப்போது அவர்கள் புதிதாக திருமணம் ஆனவர்கள்.**

**குழந்தை பிறந்ததும் எல்லோருக்கும் இனிப்பு கொடுத்து, தன் செல்ல மகள் பிறந்ததை கொண்டாடினான். அவனுக்கு கிருஷ்ணி ப்ரியா மாதிரி இருப்பத்தில் ரொம்ப பெருமை. நான் உன்னோட முதல் பதினான்கு வருஷம் இருந்ததில்லை, அந்த குறையை என் பொண்ணு மூலமா தீர்த்துகிறேன் என்பான்.**

**குழந்தை பிறந்த பின் ப்ரியா தாய் வீட்டில் இருக்கும் போது, விடியற்காலையில் கௌதம் வந்து விடுவான். காலை பத்து மணிவரை ப்ரியாவுடனும்,குழந்தையுடனும் இருந்து விட்டு தான் கிளம்பி செல்வான்.**

**அப்போது அப்பத்தா குழந்தையை குளிக்க வைக்கும் போது, அவனும் சென்று பார்ப்பான். அதனால் ப்ரியா குழந்தையை தூக்கி கொண்டு முப்பதாம் நாள் புகுந்த வீட்டுக்கு வந்த போது, மூன்று மாதம் வரை கௌதம் தான் குழந்தையை குளிப்பாட்டினான்.**

Ramya Rajan

சாருமதிக்கு குழந்தையை குளிப்பாட்ட தெரியவில்லை, அவருக்கு மட்டும் இல்லை ஜானகிக்கும் தெரியாது. ஏன் என்றால் அவர்கள் குழந்தைகளை பார்த்து கொள்ள மாமியார் இருந்ததால், அவர்கள் கற்று கொள்ளவில்லை. ப்ரியா தண்ணீரில் கை வைக்க வேண்டாம் என்று கௌதம் தான் குளிப்பாட்டினான்.

அதன் பிறகும் குழந்தை வளர வளர அதன் தேவைகளை, எதிர்ப்பர்ப்புக்களை சரியாக கவனித்து செய்தான். அதனால் தான் இந்த கிருஷ்ணி "என் அப்பான்னு" அவன் மேல உயிரா இருக்கு என்று நினைத்தாள்.

அதையெல்லாம் இப்போது நினைத்து பார்த்த ப்ரியாவிற்கு தான் அவன் மேல் வைத்துருக்கும் காதலை விட, அவன் தன் மேல் வைத்திருக்கும் காதல் அதிகமானது மட்டும் இல்லை தூய்மையானது என்பதை உணர்ந்தவள் இதில் தான் அவனிடம் பந்தயத்துக்கு சென்றது ரொம்ப முட்டாள் தனமாகவே பட்டது. தான் ஏன் இத்தனை நாள் இதை யோசிக்கவில்லை, நானும் தான் அவனுக்கு ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்கிறேன் ஆனால் அவன் என்னைவிட எல்லாவற்றிலும் உயர்ந்து இருக்கிறான் என்று பெருமையாக தன் கணவனை பற்றி நினைத்தவள் மெல்ல கண்ணுறங்கினாள்.

விருந்து முடிந்து நள்ளிரவில் வந்த படுத்த கௌதம் காலையில் எப்போதும் எழும் நேரத்திற்கு எழுந்திருக்காமல் தூங்கி கொண்டு இருந்தான். கிருஷ்ணியை காலையில் கௌதம் தான் எழுப்புவான், இன்று தன் அப்பா வந்து தன்னை எழுப்பவில்லை என்றதும் கிருஷ்ணியே கௌதமை தேடி அவன் அறைக்கு வந்தவள், தன் அப்பா இன்னும் தூங்குவதை பார்த்து, அவன் மேல் ஏறி படுத்து

கொண்டது.

தன் மகள் வந்து தன் மேல் படுத்ததும் தூக்கம் களைந்து எழுந்த கௌதம் "பேபி... அப்பாக்கு முன்னாடி எந்திரிச்சிடாங்களே" என்று அதிசய பட, கிருஷ்ணிக்கு பெருமை தாங்கல "ஆமாபா நான் தான்பா பர்ஸ்ட்" என்று சந்தோஷமாக சொன்னது.

கௌதம் "அடுத்த மாசம் உங்க அம்மா இன்னொரு குட்டி பேபி ரிலீஸ் பண்ணுவா, நமக்கு ரொம்ப ஜாலிடா, அதை நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து குளிப்பாட்டுவோம், தூங்க வைப்போம் அதுக்கூட விளையாடுவோம்" என்று சொல்ல....

கிருஷ்ணி நாமே சாப்பாடும் கொடுப்போம் என்றதும், அங்கே உட்கார்ந்து துணி மடித்து கொண்டிருந்த ப்ரியா சிரிக்க....

கௌதம் "உங்க அம்மாக்கு ஒரு வேலையும் இல்லையே அதனால அவ ஒரு வயசு வரை குட்டி பேபிக்கு சாப்பாடு கொடுக்கட்டும் சரியா" என்றதும்.

கிருஷ்ணி சரி என்று தலை ஆட்ட, ப்ரியா "ஏன் அதுக்கு மட்டும் நான், அதையும் நீங்களே கொடுங்க" என்றாள்.

கௌதம் ப்ரியாவை பார்த்து கண் சிமிட்டி "கொடுக்க முடிஞ்சா கொடுக்க மாட்டோமா" என்றான்.

கௌதம், ப்ரியா அடுத்த குழந்தை உண்டானதில் இருந்து, டெய்லி கிருஷ்ணிக்கு குட்டி பேபி பற்றி பாடம் எடுக்க ஆரம்பித்தான். அவனுக்கு எங்கே அடுத்த குழந்தை வந்தவுடன், கிருஷ்ணி ஏங்கி விடுவாளோ என்று கவலை, அதனால் எல்லாவற்றிற்கும் அவளையும் இப்போதே கூட்டு சேர்த்து கொள்வான்.

கௌதம் "பேபி, குட்டி பேபி வந்ததும், உனக்கு எதாவது வருத்தம்னா அப்பாகிட்ட கண்டிப்பா சொல்லிடனும், மனசுக்குள்ளையே வச்சுக்க கூடாது சரியா, நம்ம பாப்பாடா, நாம தான் நல்லா பார்த்துக்கணும் அதுக்கு தான் கடவுள் நம்மகிட்ட அனுப்பி இருக்கார் சரியா" என்றதும்,

கிருஷ்ணி "எத்தனை வாட்டிபா இதையே சொல்லுவீங்க, ப்ரேம் என்னோட ப்ரிண்ட், சித்து என்னோட தம்பி, இனிமே வர போற குட்டி பாப்பா தம்பியா, தங்கச்சியான்னு தெரியாது வந்ததும் தான் தெரியும் அந்த குட்டி பாப்பாவ நாம நல்லா பார்த்துக்கணும், இதே சொல்லி சொல்லி ஒரே போர்பா" என்று சொல்ல....

கௌதம் அசடு வழிய, ப்ரியா தலையில் அடித்தாள்.

கிருஷ்ணி "எனக்கு ஒரு டவுட் நீங்க சொல்லுங்க" என்றதும் கௌதம் ஆர்வமாக என்னவென்று கேட்க....

கிருஷ்ணி "இந்த குட்டி பேபி நமக்கு தெரியாம அம்மா

***வயத்துக்குள்ள எப்படிபா போச்சு சொல்லுங்க" என்றதும்....***

***ப்ரியா தன் கணவன் சொல்ல போகும் பதிலை ஆர்வமாக கவனித்தாள்.***

***கௌதம் "அது உனக்காக நானும் அம்மாவும் கடவுள்கிட்ட கேட்டோம் எங்க பாப்பாவுக்கு விளையாட ஒரு பாப்பா தான்னு அதனால நாம தூங்கும் போது, கடவுள் வந்து உங்க அம்மா வயத்துக்குள்ள வச்சிட்டு போய்ட்டார்" என்று கதை சொல்ல.... அதை அந்த குழந்தையும் நம்பியது.***

***ப்ரியா பரவாயில்லை நல்லாவே சமாளிச்சிட்டான் என்று நினைத்தாள்.***

***கிருஷ்ணி கீழே இறங்கி சென்றதும், ப்ரியாவை தன் மேல் சாய்த்து கொண்ட கௌதம் "என்னடி, என்ன பதில் சொல்ல போறேன்னு ரொம்ப ஆர்வமா கேட்ட போலிருக்கு, குழந்தையிடம் போய் சொல்ல முடியுமா, உங்க அம்மா என்னை மாதிரி பாப்பா வேணும்ன்னு, என்னை ...." என்று ஆரம்பிக்க, ப்ரியா அவன் இதழ்களை தன் இதழ்களால் மூடினாள்.***

***சிறிது நேரம் கழித்து இருவரும் விலக, ப்ரியா அவன் மார்பில் தலை சாய்த்தாள். கௌதம் "ப்ரியா அடுத்த குழந்தையும் உன்னை மாதிரி பிறந்தா நீ வருத்தபடுவியா" என்று கேட்க....***

Ramya Rajan

***ப்ரியா "என்ன இதுவரை உங்க பொண்ணுக்கு பாடம் எடுத்தீங்க, அடுத்து எனக்கா" என்றவள் "எனக்கு இப்ப தெரிஞ்சிடுச்சு, நான் உங்களை விரும்புறதைவிட, நீங்க தான் என்னை அதிகம் விரும்புறீங்கன்னு அதனால வருத்தபட மாட்டேன்" என்று சொல்ல....***

***கௌதம் "நீ தான் ப்ரியா என்னை அதிகமா விரும்புற, நீ உன் உயிரையும் பெருசா நினைக்காம என்னக்காக தான அப்படி செஞ்ச, உன்னளவுக்கு நான் வர முடியாது ப்ரியா. அப்புறம் குழந்தை யாரு மாதிரி இருக்குன்னு உருவத்தை வச்சு மட்டும் சொல்ல முடியாது" என்ற கௌதம் தொடர்ந்து,***

***"இப்போ உதரணத்துக்கு நம்ம கிருஷ்ணியே எடுத்துக்கோ, பார்க்க உன்னை மாதிரி இருக்கா ஆனா அவளுக்கு என்னை மாதிரி ரொம்ப கோபம் வருது, அப்புறம் என் பொண்ணு என்னை மாதிரியே நல்லா பாடுறா, நீயும் காலேஜ்ல பாட்டுன்னு ஒன்னு பாடினியே, அன்னைக்கு எல்லோரும் ரொம்ப பாவம்" என்றவன் ப்ரியா முறைப்பதை பொருட்படுத்தாமல் "அதுக்கெல்லாம் மேல என் பொண்ணு என்னை மாதிரி ரொம்ப புத்திசாலி. இப்ப நீயே சொல்லு கிருஷ்ணி உன்னை மாதிரியா என்னை மாதிரியா" என்றதும்,***

***ப்ரியா அங்கிருந்த தலையணையை எடுத்தவள் "நானா சொன்னேன் குழந்தை என்னை மாதிரி இருந்தா நீ தான் என்னை அதிகமா லவ் பண்றேன்னு" என்றவள் கௌதமை அடிக்க அவனும் சிரித்து கொண்டே அடி வாங்கினான்.***

***ப்ரியா கௌதமை தொடர்ந்து அடித்து கொண்டே இருந்தவள்***

அவள் அடி வயிற்றில் சுள்ளென்று வலிக்கவும் அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

கௌதம் பதறி எழுந்தவன் என்ன என்று கேட்க, ஒன்னும் இல்லை வலிக்கிற மாதிரி இருந்துச்சு, இப்போ இல்லை என்றாள்.

கௌதம் அவளை சந்தேகமாக பார்க்க, ப்ரியா "நிஜமா வலிக்கலை, நீங்க போய் குளிங்க" என்றாள்.

கௌதம் வேகமாக சென்று குளித்துவிட்டு வந்தவன், கீழே இறங்கி செல்ல, அங்கே அவனுக்கு ப்ரியா டிபன் எடுத்துவைத்துவிட்டு அவளும் சாப்பிட்டாள். கௌதம் வேகமாக சாப்பிட்டவன், காரை வெளியே எடுத்து நிறுத்தி விட்டு வந்ததும் "ப்ரியா வா ஹாஸ்பிடல் போலாம், எனக்கு தெரியும் உனக்கு வலிக்குதுன்னு, நீ நான் சாப்பிடற வரை வர மாட்டேன்னு தான் நான் பேசாம இருந்தேன்" என்றவன், குளித்து சாப்பிட எடுத்து கொண்ட நேரம் பத்து நிமிடம் தான்.

சாருமதி "வலிக்குதா ஏன் ப்ரியா சொல்லலை ?" என்றவர் ஹாஸ்பிடல் செல்ல தயார் ஆக, கௌதம் "நீங்க கிருஷ்ணியோட இருங்க அம்மா, நான் உங்களுக்கு போன் பண்ணும் போது கிளம்பி வாங்க" என்று சொன்னவன் ப்ரியாவை அழைக்க, அவள் சாமி கும்பிட்டு கொண்டிருந்தாள்.

சாமி கும்பிட்டு விட்டு ஹாலுக்கு வந்த ப்ரியாவின் முகத்தில் பயம் வெளிப்படையாக தெரிந்தது. க்ரிஷிணியின் அருகில் வந்த ப்ரியா



Ramya Rajan

***அவளை கட்டிபிடித்து அழ, கிருஷ்ணியும் தன் அம்மா அழுவதை பார்த்து அழுதது "அம்மா ஏன்மா அழறீங்க ? எனக்கு உங்களையும் பிடிக்குமா" என்று தன் தாய் எதற்கு அழுகிறாள் என்று தெரியாமல் சமாதானம் சொல்ல, அதை பார்த்து சாருமதியும் அழுதார்.***

***கௌதம் "ரெண்டு பேரும் சேர்ந்து குழந்தைய பயப்பட வைக்ரீங்க" என்று தன் தாயையும், மனைவியையும் கடிந்தவன். க்ரிஷ்ணியிடம் "ஒன்னும் இல்லைடா, அம்மாவுக்கு குட்டி பேபி வர போகுது, நாங்க ஹாஸ்பிடல் போயிட்டு சீக்கிரம் வந்திடுறோம். அம்மா ஊசிக்கு பயந்து அழறா வேற ஒன்னும் இல்லை, உனக்கு கூட ஊசினா பயம் தான அதனால நீ வீட்ல இரு சரியா" என்று சொல்ல....***

***அவள் "சரிப்பா சீக்கிரம் வாங்க" என்று சொல்ல, ப்ரியா தன் மகளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு ஹாஸ்பிடல் கிளம்பினாள்.***

***காரில் ஏறியதும் ப்ரியாவை அணைத்த கௌதம் "ஒன்னும் இல்லைடா சீக்கிரம் குழந்தை பிறந்திடும் பயப்படாத" என்று காரை எடுத்தான்.***

***காரில் ஏறியதில் இருந்து வலி அதிகமாக, ப்ரியா பல்லை கடித்து வலியை பொறுத்து கொண்டிருந்தாள். ஹாஸ்பிடலில் சோதித்து பார்த்துவிட்டு பிரசவ வலி தான் அட்மிட் பண்ணுங்க என்று சொல்ல....***

***கௌதம் அதற்க்கான ஏற்பாடுகள் செய்ய, ப்ரியாவிற்கு தனி அறை கொடுக்க பட்டது. ப்ரியாவிற்கு உடை மாற்றி, ட்ரிப்ஸ்***

போட்டுவிட்ட நர்ஸ் "தொடர்ந்து வலி வந்த உடனே சொல்லுங்க",என்று சொல்லி அறையை விட்டு செல்ல....

கௌதம் ப்ரியாவின் பக்கத்தில் அமர்ந்தவன், அவள் வலியோடு போராடும் போது எல்லாம், அவனும் அவளோடு போராடினான்.

சாருமதி போன் செய்து சொன்னதால் உடனே ப்ரியா வீட்டினர் அனைவரும் ஹாஸ்பிடல் வந்தனர். ஒருவர் மாற்றி ஒருவர் ப்ரியாவுடன் இருந்தனர், மூன்று மணி நேர போராட்டத்திற்கு பிறகு கௌதம் ப்ரியாவின் மைந்தன் வெளி உலகை எட்டி பார்த்தான்.

ப்ரியா குழந்தை பெற்ற அசதியில் தூங்கி விட, கண் விழித்து பார்த்த போது அறையில் இருந்தாள். கௌதம் ப்ரியா முழித்ததை பார்த்து அருகில் வந்தவன் "ப்ரியா நீ இன்னொரு பேபி சீக்கிரம் ரிலீஸ் பண்ணனும், இதுவும் உன்னை மாதிரி தான் இருக்கு" என்றதும்,

ப்ரியா திரும்பி தொட்டிலை பார்க்க, அங்கே நின்ற கிருஷ்ணி "அம்மா.... அப்பா பொய் சொல்றாங்க, தம்பி பாப்பா அப்பா மாதிரியே இருக்கு, அப்பா மாதிரி இருக்கிறதுனால எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு" என்று சொல்ல....

ப்ரியா அடக்கி வைத்திருந்த மூச்சை விட்டவள், கௌதமை பார்த்து முறைக்க....

கௌதம் "எப்படி ப்ரியா இப்படி, செராக்ஸ் எடுத்த மாதிரி

பெத்திருக்க, வயித்துக்குள்ள செராக்ஸ் மெஷின் வச்சிருக்கியா என்ன" என்றவன் ப்ரியாவை தூக்கி சாய்ந்து உட்கார வைத்து, குழந்தையை கொண்டு வந்து அவள் மடியில் வைத்தான்.

அது அச்சு அசல் குட்டி கௌதமே தான், குழந்தையை கொஞ்சிய ப்ரியா கடவுளுக்கு நன்றி சொன்னாள்.

கௌதம் ப்ரியா எதிரில் அமர்ந்தவன், கிருஷ்ணியை தூக்கி மடியில் வைத்து கொண்டு "இப்ப நாம ரெண்டு பேரும் சமமா இருக்கோம், இப்ப எப்படி யாரு அதிகமா லவ் பண்றதுன்னு கண்டு பிடிக்கிறது" என்று ஆரம்பிக்க...

ப்ரியா "போதும்,இன்னைக்கு காலையில என்னை குழப்பி, டென்ஷன் ஆக்கி, பத்து நாள் கழிச்சு பெற வேண்டிய பிள்ளைய, பத்து நாள் முன்னாடியே பெத்துக்க வச்சிடீங்க இனிமே எதாவது பேசினீங்கன்னா அவ்வளவு தான்" என்று சொல்ல...

அதை கேட்டு கொண்டே அனைவரும் உள்ளே வர "அடப்பாவி... நீ தான் ப்ரியாவுக்கு சீக்கிரம் பிரசவம் ஆக காரணமா" என்று கார்த்திக் கேட்க....

"நீயே நியாத்தை சொல்லு கார்த்திக்" என்றவன் அவனை பார்த்து கண் சிமிட்டிவிட்டு "கிருஷ்ணி யாரை மாதிரி இருக்கா" என்று கௌதம் கேட்க....

Ramya Rajan

***"ஏன் உன்னை மாதிரி தான் இருக்கா" என்று கார்த்திக் சொல்ல....***

***"நானும் அதே தான் சொன்னேன், கிருஷ்ணி என்னை மாதிரி கோபபடுறா, பாடுறா, புத்திசாலின்னு, இவ டென்ஷன் ஆகிட்டா, நான் என்ன பண்றது, நீயே சொல்லு" என்று கௌதம் கேட்டதும்,***

***"வேற எதுல ஒத்துக்கலைனாலும் கண்டிப்பா பாடுறதுல உன்னை மாதிரி தான். நான் தான் ப்ரியா பாடினத கேட்டிருக்கேன்னே, என்ன கொடுமைடா சாமி, நீ உன் பொண்டாட்டி வேற வழி இல்லாம உட்கார்ந்து கேட்ட, நானும் இல்ல கேட்க வேண்டியதா போச்சு" என்று கார்த்திக் வருத்தப்பட....***

***"நல்ல வேலை எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆனது அப்ப காலேஜ்ல யாருக்கும் தெரியாது. இல்லைனா இப்படி பாடற பொண்டாட்டிய வச்சிக்கிட்டு, நீயெல்லாம் பாட்டு போட்டிக்கு ஜட்ஜா வரியான்னு, என் மண்டைய உடைச்சிருப்பானுங்க" என்று கௌதம் சொல்ல...***

***ப்ரியா அவள் பக்கத்து டேபிளில் இருந்த ஆரஞ்சுஜை எடுத்து கார்த்திக் மேலும், கௌதம் மேலும் எறிந்தாள்.***

***சாருமதி "இப்ப தான் பிள்ள பெத்திருக்கா, அவளை போட்டு ரெண்டு பேரும் படுத்தறீங்களே வெளிய போங்கடா, அவளை பார்க்க நீங்க ரெண்டு பேரும் இனிமே ஹாஸ்பிடல் பக்கமே வரகூடாதுன்னு" சொல்லி இருவரையும் வெளியே தள்ள, ப்ரியா சிரித்தாள்.***

உடனே கிருஷ்ணி "எங்க அப்பா இல்லைனா நானும் வெளியே போறேன்" என்று வெளியே செல்ல, ப்ரேமும் "நானும் எங்க அப்பா கூட தான் இருப்பேன்" என்று சொல்லி வெளியே செல்ல, சித்து அவர்கள் எல்லோரும் வெளியே சென்றதும், தன் அப்பா உள்ளேயே சிரித்து கொண்டு நிற்ப்பதை பார்த்து "வாங்கப்பா நாமும் போகலாம்" என்று முரளியை அவனே அழைத்து கொண்டு வெளியே சென்றான்.

ஷ்ருதி ப்ரியாவிடமும், மிதுவிடமும் "வலிச்சு பெத்து போடறது நாம ஆனா அவங்க அப்பா தான் உசத்தின்னு போறத பார்த்தீங்களா" என்று சொல்ல...

ப்ரியா தன் மடியில் இருந்த மகனை காட்டி சொன்னாள் "இதுவும் நடக்க முடிஞ்சிருந்தா அவங்க அப்பா பின்னாடி தான் போகும்" என்று, அதில் துளியும் பொறாமை இல்லை பெருமையே இருந்தது.

ஒரு பெண் தன் வயிற்றில் குழந்தையை சுமக்கிறாள் என்றாள், ஆண் தன் நெஞ்சில் சுமக்கிறான். இதில் யாரும் உயர்வு இல்லை தாழ்வு இல்லை, அன்பு எந்த நிலையிலும் அன்பு தான்.

ஒரு வருடம் கழித்து…

Ramya Rajan

***அன்று கௌதமிற்கும், ப்ரியாவிற்கும் திருமண நாள் குடும்பத்துடன் கோவிலுக்கு வந்திருந்தனர். சாமி கும்பிட்டதும் கிருஷ்ணகுமாரும், சாருமதியும் குழந்தைகளுடன் அங்கேயே உட்கார்ந்தவர்கள் "நீங்க ரெண்டு பேரும் போய் கோவில் சுத்திட்டு வாங்க" என்று சொல்ல....***

***கௌதமும், ப்ரியாவும் கோவிலை சுற்றினார்கள். அப்போது ஒரு தூன்னுக்கு பின்னாடி இருந்து வர்ஷா போன்னில் யாருடனோ பேசி கொண்டிருந்தாள் "ஹேய் நம்ம காலேஜ்ல படிச்சாங்கள கௌதம், ப்ரியா அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆகிடுச்சு போல, இப்ப தான் ரெண்டு போரையும் கோவில்ல பார்த்தேன்" என்று சொல்ல...***

***"பார்த்தீங்களா நான் அன்னைக்கே சொன்னேன்ல இவ இப்படி தான் சொல்வான்னு" என்று ப்ரியா பொங்கி சிரிக்க....***

***கௌதம் "யாரு என் பொண்டாட்டி புத்திசாலி ஆச்சே" என்று சொல்லி ப்ரியாவை தோளோடு சேர்த்து அணைக்க....***

***ப்ரியா "நமக்கு அறுபதாம் கல்யாணம் நடக்கும் போது தான் இவள் நமக்கு ரெண்டு குழந்தை இருக்குன்னு சொல்வா" என்று சொல்ல... அப்போது கோவில் மணி அடித்தது.***

***நாமும் அப்படியே நடக்கட்டும் என்று கௌதமையும், ப்ரியாவையும் வாழ்த்தி விடை பெறுவோம்.***

Ramya Rajan

# நன்றி

Ramya Rajan